
சிவாஜி



23-வது
ஆண்டுமலர்

ரூ. 0=50



சிவாஜி 23-வது ஆண்டு மலர்

பொருள் அடக்கம்

தலைப்பு			பக்கம்
1 தலையங்கம்	....	ஆசிரியர்	3
2 வழிப்போக்கன்	....	கலைவாணன்	5
3 வில்லுப்பாட்டு	....	எஸ். மகராஜன்	6
4 கோயில்	...	சக்திசரணன்	8
5 வெள்ளைக் காக்காய்	....	ந. சிதம்பர சுப்ரமணியன்	9
6 போக்கு வரத்து	....	எஸ். ஆரோக்கியசாமி	11
7 மனப் பொட்டல்	...	வேணி	12
8 பருவகால எழுத்தாளன்	....	எம். வி. வெங்கட்ராம்	13
9 நிலவு நங்கை	....	சோமு	15
10 லதா எழுதுகிருள்	....	லதா	16
11 நரகாசுரன் எங்கே?	....	சுத்தானந்த பாரதி	17
12 பாரதியும் டாகூரும்	....	கி. சந்திரசேகரன்	18
13 திருமணம்	...	சுகி	20
14 சுடர் வீசும் ஜோதி	..	என். எஸ். சிதம்பரம்	24
15 வாழ்வும் தாழ்வும்	....	ப. தனுஷ்கோடி	25
16 அந்தி மந்தாரை	....	டி. எம். வாசுதேவன்	29
17 உள்ளம் குளிர்ந்தது	....	எம். எஸ். கமலா	31
18 நாயும் கல்லும்	....	டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி	36
19 கௌரவம்	....	வி. லக்ஷ்மி நரசிம்மன்	37
20 எங்கள் முருகன்	....	சன் மிஷ்டை	39
21 அஞ்சுகுழி	....	துறைவன்	40
22 ஊர் அறிந்த கேடு	....	நாவற்குழியூர் நடராஜன்	44
23 நான்—சில பேட்டிகள்	....	"மஹி"	45
24 அஞ்சப் பிள்ளை	....	ந. பிச்சமூர்த்தி	47
25 தெய்வம் மன்னிக்குமா?	....	டி. எஸ். கோதண்டராமன்	50
26 அபய குசலோபாக்கியானம்	....	ஏ. எஸ். ராகவன்	56
27 பழங்கால நினைவுகள்	...	ரா. நா.	59
28 தீபாவளி எக்ஸ்பிரஸ்	..	லால்குடி கிருஷ்ணமூர்த்தி	61
29 கோஷங்கள்	..	நெரூர் சிவசுப்ரமணயம்	65
30 பாரதியின் சொல்	....	தம்பி ஸ்ரீநிவாசன்	67
31 தியாகம்	....	விஜயன்	68
32 ஜடாயு	...	சிவகுமாரன்	70
33 கபிலரது பாட்டு	...	வித்வான். வி. துரைசாமி	73
34 கயவனு—கணவனு	....	ராதிகா	75
35 கருணைநிதி	....	ஸத்ஸங்கி	77
36 பூலோகமா பூசனிக்காயா?	....	பூரம்	78
37 தேர்தல் எதிரொலி	...	பரதேசி	79
38 விநாயகர் பூஜை	....	ரஸிகா	82
39 உடையவர்	....	திருலோக சீதாராம்	83
40 நல்ல வெளிச்சத்தில்	....	க. அமுதன்	89
41 வெண்ணிலா	....	பிருந்தாவனன்	92
42 வர்த்தகத் தமிழ்	....	டி. துரைராஜ் பிள்ளை	93
43 புகழறியாத புண்ணியன்	....	கே. நடராஜன்	96
44 இலக்கியம் வளர	....	அகிலன்	99
55 விளம்பரம் ஏன்?	....	ரா. பார்த்தசாரதி	101
46 திருவள்ளுவர்	....	கே. ஆர். பசுபதி	103
47 கருத்தரங்கம்	....	ரெட்டியார்	108

1957

Index to Advertisers.





வணக்கம்

மலரை உருவாக்கிய பிறகு நிமிர்ந்து பார்த்தால் எதிரே அழகிய கோபுரம் தெரிகிறது. ஆமாம் இன்னும் இரண்டு கல் தாண்டி விட்டால், வெள்ளி விழா மண்டபம் தான்.

கடந்து வந்தது இரண்டு காவதங்களும் மூன்று கற்களும். நெடிய பாதைதான். எவ்வளவோ இடர்ப்பாடுகளையும் கடந்து வெகு தொலை முன்னேறி விட்டோம் என்பதில் ஒரு நிறைவு! எதிரே வெள்ளிக் கோபுரத்தின் கனவு! உற்சாகத்திற்கு வேறு என்ன வேண்டும்? எனவே வழிநடைச் சிரமம் தெரியாமற் போகிறது.

வாழ்க்கையே இப்படித்தான். சென்ற நாட்களின் நினைவுகளும், இனிச் சேரு நாட்களின் கனவுகளுமாக இருபுறமும் நம்மைக் காத்து நிற்காவிட்டால் நடைமுறையின் ஒவ்வொரு கணமும் நம்மை நலிவுறத்தான் செய்துவிடும். சென்றுவிட்ட செய்திகளில் துயரங்கள் இருக்கலாம். ஆனால் அவை எப்படியோ மறந்துபோய் விடுகின்றன. பழைய ஏடுகளில் பதிந்து ஒளிர்பவை நாம் பெற்றுய்ந்து விட்ட ரஸானுபவங்களே. எதிரே எட்டாத உயரத்தில் நின்று நம்மைக் கைகாட்டி அழைப்பது இன்பம் ஒன்றுதான்.

வாழ்ந்து விட்ட வாழ்வின் ரஸப்பெருக்கு நமது கலைகளாகவும் பண்பாடாகவும் அமைந்து மானுஷிகம் என்ற தத்துவத்திற்கு மெருகேற்றிக் கொண்டே இருக்கின்றன. தேவலோகத்து ஏங்குகின்ற ஏக்கம்தான் மானுஷிகம் என்ற ரகசியம் எப்படி வெளியாகி விடுகிறது!

நமது மொழி, நாடு, சமுதாயம், வாழ்வமைதி, வளர்ச்சி, பரிணாமம், வெற்றி, என்றெல்லாம் சொல்லும் போது, தோன்றி மறைந்த தனி மனிதர்கள் — என்றும் மறையாத மானிடமென்னும் ஜீவ நதியாகப் பெருக்கெடுத்த விந்தையைத்தான் குறிப்பிடுகிறோம்.


இந்த ஓய்வற்ற பரிணாமத்தை, எடுத்தியம்பும் இலக்கியம் அல்லவோ நமது உயிர்ப்புச் சக்தி. தமிழ் இலக்கியம் தலைசிறந்து விளங்குகிறதென்றால் தமிழ் வாழ்வு அத்துணைச்சிறப்புடையது, தொன்மையுடையது என்றுதான் பொருள்.

'மாறி மாறிப்பின்னும் மாறி மாறிப் பின்னும் மாறி மாறிப்போம் வழக்கமே தானுவாள்' என்று பராசக்தியைப் பரவித் துதிக்கின்றார் பாரதி. சக்தி எதுவுமே மாறுதல்களினால்தான் இயக்கம் பெறுகின்றது, இயக்குகின்றது. வேகம் பெறுகின்றது, வேகம் தருகின்றது, ஒளி பெறுகின்றது, ஒளி தருகின்றது.

நமது ஜீவ சக்தியின் பெயர் தமிழ், புதுப் புது உயிர்கள், புப்புது வியப்புகள், புதிய புதிய அனுபவங்கள், புதிய தமிழின் ஆக்கம், புதுமை, குன்றாத இயக்கம். எனவே தமிழும் தேங்கி நிற்காது புதுமையுடன் கணங் கணமும் பொலிவுற்று ஓங்கும்.

பாசி படிந்த குட்டையன்று தமிழ். வற்றாது ஓடும் ஜீவ நதி. இந்தத் தலைமுறையின் சிந்தனை அதில் தெளிந்து, நிறைந்து ஓடும் நீரோட்டம். இந்த மலரில் புது வெள்ளம் — பழைய மாமழையின் புதிய ஓட்டம் — சலசலத்துப் பாய்கிறது. கரையருகிலிருந்தவாறே கண்டு ரஸிக்கலாம், புனலாடலாம், செய் விளைக்கலாம். வாழலாம். வாழ்க தமிழ். வளர்க தமிழ்.

——திருலோக - சீதாராம்.





"கலைவாணன்"



மங்குகின்ற மாலை எழில்
மஞ்சள் வெயில் பட்டதெலாம்
தங்கமென மாற்றிவிடத்
தாமுயலும் நேரமிது.
எங்கிருந்தோ தோன்றி வளைந்
தெப்புறமோ போய்முடியும்
அங்கதுவோர் வீதியதில்
அவன் மட்டுஞ் செல்லுகிறான்.

திடங்குலைந்த மேனியனைத்
தெருவழியே திறங்கியதன்
குடங்கையிலோர் மூட்டையுடன்
கோலூன்றித் தாள் துவளத்
தொடர்ந்து வரும் கரு நிழலே
துணையாகத் தனிமையிலே
நடந்து செலும் அவன் யாரோ?
நாம் யாரோ? கண்டவரார்.

தெருவதற்கு எல்லை எது?
திரும்பி எங்கே செல்வதது?
வருமவனுக் கிளைப் பாற
வாய்த் திருக்கும் இல்லமெது?
அருமையுடனே சுமக் கும்
அவன் சுமையில் உள்ளதெது?
கரு நிழலும், கைக் கோலும்
காற் சுவடும் குறிப்பதெது?

இப்படி . எல்லாம் எனது
இருதயத்து வான்வெளியில்
கப்புகின்ற சந் தேகக்
கார் முகில்கள் தம்மிடையே
ஒப்புற வில்லா திடித்து
ஓலமிட நானி தற்கு
அப்புறந்து நின் றிருந்து
அதிசயத்தைப் பார்க்கின் றேன்.



எஸ். மகராஜன்

“Africa Speaks” என்ற பேசும் படத்திலே ஒரு காட்சி ஞாபகத்துக்கு வருகிறது. நேரம் நடுநிசி; பிறைச் சந்திரனின் மங்கிய ஒளி இருளின் பயங்கரத்துக்கு அழுத்தம் கொடுக்கிறது. அகண்ட புதர் நிறைந்த ஒரு பாலைவனம். வான் கோழியின் சிறகைத் தலையிலே சூடிக்கொண்டு, முகத்திலும் உடம்பிலும் மாந்த்ரீக எழுத்துகளை எழுதிக்கொண்டு சில ஆப்ரிக்க வேடர்கள் யுத்த சன்னதராய் சிங்கக்கூட்டம் ஒன்றைத் தாக்குகிறார்கள். ஏதோ ஒரு விசித்ரமான வாத்தியம் முழங்குகிறது: மயிர்சிலிர்க்கிறது. ஹோ ஹோ என்று ஆரவாரித்துக்கொண்டு வேடர்கள் உறுமி நிற்கும் சிங்கம் ஒன்றை வேல்கொண்டு தாக்குகிறார்கள். ஒரே அமர்க்களம். சில விநாடிகளிலே கர்வத்தோடு கர்ஜித்துப் போராடிய மிருகராஜனை பல ஈட்டிகள் தாக்கி வீழ்த்துகின்றன. இந்தப் பயங்கர சாஹசத்துக்கெல்லாம் உள்த்துணையாக நின்று இயக்குவது அந்த விபரீதமான, மயிர்க்கூச்சலெடுக்கும் வாத்தியகோஷம்.

இந்தக் காட்சியைப் பார்த்தபோது வில்லுப்பாட்டு ஞாபகம் தன்னறியாமலேயே வந்து விடுகிறது. ஆதி மனிதன் வாழ்ந்த உலகமானது, பயம் நிறைந்த உலகம், பேய்வடிவான உலகம். புளியமரத்தடியிலே பூதம் இருக்கும். சந்தியிலே முக்கடிக்கருப்பன், வேங்கை மரத்திலே வேதாளம்; எதைப்பார்த்தாலும் மனிதனுக்கு மருட்சி, சொல்ல முடியாத பீதி; ஈரலைக்கலக்கி ஆன்மாவையே கலக்கும் எல்லையற்ற பயங்கரம். இந்த உணர்ச்சியைச் சமாளிப்பதற்காகவேதான் ஆதி மனிதன் ஒரு விசித்திரமான சங்கீதத்தை சிருஷ்டிக்க ஆரம்பித்தான். இந்த சங்கீத ரகத்தைச் சேர்ந்ததுதான் நாம் திருநெல்வேலி ஜில்லாவில் கேட்கக்கூடிய வில்லுப்பாட்டு.

மனிதனுடைய உள் மனசிலே (Sub Conscious) பல்லாயிரக்கணக்கான வருஷங்களாகக் குடிகொண்டுவருகிற உருவில்லாத, இன்னதென்று கணிக்கமுடியாத, பைசாச பயமிருக்கிறதே, அதன் எதிரொலியை வில்லுப்பாட்டிலே நாம் நிச்சயமாகக் கேட்க முடியும். அது மாத்திரமல்ல, எல்லையற்ற பயங்கரத்திலிருந்து பிறக்கும் அமானுஷியமானவெறியையும், ஆவேசத்தையும், திமிரையும் வில்லுப்பாட்டிலே உணரமுடியும். மனிதனுக்குப் பிதிரார்ஜிதமாக ஏற்பட்ட அகண்டமான, பயங்கர உணர்ச்சியை மிருது பாஷையிலே புல்லாங்குழலை வைத்து ஊதிக்காட்டிவிட முடியாது. தாளலயத்துக்குக்கட்டுப்பட்டு அடக்கி வாசிக்கும் வாத்தியங்களைக்கொண்டு கூட இந்த உணர்ச்சிகளை வருத்த முடியாது. ஆனால் சக்தியும், வேகமும், கரடுமுரடான கம்பீரமும் கூடிய வாத்தியத்திலேதான் இந்த உணர்ச்சிகளைச் “சாதிக்க” முடியும்.

தொல்லை மனிதனுடைய மனோபாவத்தை எப்படி வில்லுப்பாட்டிலே வண்ணார்பேட்டை வடிவேலுப் புலவர் தட்டி எழுப்புகிறார்? சுமார் 10, 15 அடி நீளமுள்ள ஒரு வில். நாண் பூட்டிய வில். அந்த வில்லிலே பலவித ஓசைகளை எழுப்பக் கூடிய மணிகள் தொங்கவிட்டிருக்கும். வில்லின் முதுகு தரையைத் தொட்டுக் கொண்டிருக்கும். வில்லின் இரண்டு நுனியிலும் மண் குடம் ஒன்று சேர்த்துக்கட்டப்பட்டு வில்லைத்தாங்கி நிற்கும்; வீணையின் குடத்தைப்போல. வீணையிலே நரம்பு செய்கிறவேலையை வில்லில் நாண் செய்கிறது. இருபக்கமும் இருக்கும் மண் குடத்தின் வாயிலே பனை மட்டையைக்கொண்டு தட்டி, பலவித ஒலிகளை எழுப்பலாம். வில்லின் நாணைக்கையால் தட்டினால் ஒரு ஓசை கிளம்பும். கம்பினால் தட்டினால் இன்னொரு விதமான ஓசை; இரும்பு வளையத்தைக்கொண்டு தட்டினால் மற்றொரு விதமான ஓசை. ஹோ ஹோ என்று ஆரவாரித்துக்கொண்டு வில் பாட்டுக்காரரும், பக்கப்பாட்டுக்காரர்களும், வளையமும், கம்பும், கையும், நாணும், குடமும் குமுறும்போது ஒரு ஒலிப்பிரளயமே ஏற்பட்டுவிடும். கேட்போர் மனமும், உணர்ச்சியும் கட்டழிந்து அந்த ஒலிப்பிரளயத்திலே லயித்து அத்வைத நிலையிலே சொக்கிவிடும். இந்த நிலையில்தான் மனது காளி வழிபாட்டிலே ஈடுபடுகிறது. தேவதைகளுக்குக் கொடை

கொடுக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர மற்ற சந்தர்ப்பங்களில் வில்லுப்பாட்டுக் கச்சேரி நடப்பதேயில்லை.

சாதாரணமாக் ஊரிலே வியாதி, பஞ்சம் ஏற்படும் போதுதான் அம்மன் கோயிலிலே கொடை நடத்துவதுண்டு. சிதபேதியினால் பலர் மாண்டனர், அம்மை விளையாடுகிறாள். உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. காரணம் என்ன? அன்னை பயங்கரி, ஆயிரம் சிரஸுடையாள் கோபவெறி கொண்டு விட்டாள். அவளைச் சாந்தி செய்யவேண்டும். எருமைக் கடாவை பலி கொடுத்தாக வேண்டும். அம்மன் கோவிலுக்கு முன்னால் கொடியேற்றி, பந்தல் போட்டு கொடைக்கு நாள் குறிப்பிடுவார்கள். காளி துடிப்பாக இருக்கும் நாள் செவ்வாய்க்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை அன்று மாலை 9 மணிக்கே வில்லுப்பாட்டு ஆரம்பித்து விடும். பூசாரியும், அம்மன் கொண்டாடிகளும் மஞ்சள் வேட்டியுடுத்தி 7 நாள் கொடிய உண்ணாவிரதம் இருந்து நடுராத்திரியில் காவு கொடுப்பதற்குத் தயாராயிருப்பார்கள். ஆண்களும் பெண்களும் கும்பல் கும்பலாகக் கூடிவிடுவார்கள். "அவள் வைசூரியிலே இறந்துவிட்டாள். இவன் சிதபேதி கண்டு வதைத்துக் கொண்டிருக்கிறான்" என்ற பயங்கரப் பேச்சுக்கிடையிலே வில்லுப் பாட்டு துவங்குகிறது.

"எனக்குச் சத்துரு வானபேரை
ஈரலெடுத்து மாலைபோட்டு
குத்திரெத்தம் குடித்திடுவாய்
குமரிநல்லோ பகவதியே"

ரத்த வெறிகொண்டு ஈரல் மாலைபணிந்த காளிதான் மரண பயத்தைத் தணிக்க முடியும். அவளுடைய கூத்தைக் கேட்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்திருக்கிறார்களே. திறந்த வெளியிலே மேளங்கட்டுமா? ஆகவே தான், ஒற்றைக் காதை ஒரு கையால் அடைத்துக் கொண்டு, வில்லுப்பாட்டுக்காரர் விண்ணப்பம் செய்கிறார்.

"நாவு நல்லோ தடுமாறாமல்
நற்குரலோ மங்காமே
ஆறுபிழை நூறு குத்தம்
ஆதரிக்கவேணும் தாயே"

நாவு தடுமாறாமல் மணிக்கணக்கிலே பாடுகிறது. மங்காத குரலிலே. பாட்டிலே நூற்றுக் கணக்கான இலக்கணக் "குத்தம்" இருக்கிறது. கேவலம் இலைத்து'ப்போன கொச்சை வார்த்தைகளிலே செய்யப்பட்ட பாட்டுதான், ஆனால் அந்த வார்த்தைகள் வில்லின் நாணிலிருந்து தெறித்து விழும்போது சுயமாக இல்லாத சூடும், வேகமும் அந்த வார்த்தைகளுக்கு ஏற்பட்டுவிடுகின்றன.

வில்லுப் பாட்டிலே எத்தனையோ கதைகள் உண்டு. சின்னத் தம்பி கதை, சங்கிலி பூதத்தார் கதை, முத்து மாரியம்மன் கதை, கட்டபொம்மு கதை, சொரிமுத்தய்யன் கதை என்று எத்தனை, எத்தனையோ கதைகள். அநேகமாக ரத்தம் தோய்ந்த கதைகள்; எல்லாமே புல்லரிக்கும் கதைகள். George Arliss பாணியிலேயுள்ள கதைகள். கதைப்போக்கிலேயே பல லௌகிக உண்மைகள் சொல்லப்படும். ஆத்ம விசாரணை நடக்கும். வர்ணனைகள் உதிரும்.

"இஞ்சிபிச்சி பூக்கும் நாடு
இருவாக்ஷிபூக்கும் நாடு"
கோடை நல்லோ மழைபொழியும்
குளிர்ந்த தென்றல் வீசும் நாடு"

சின்னத்தம்பி யென்ற கதாநாயகன் வேட்டைக்குப் போகும் வேளையில் சில அபசகுனங்கள் ஏற்படுகின்றன.

மஞ்சளரைத்துக் குளித்துக் கொண்டிருக்கும் சில பெண்கள் பல்லி சாஸ்திர ரகஸ்யத்தை அறிந்தவர்கள். சின்னத்தம்பிக்கு நேரிடப்போகும் ஆபத்தை யுணர்ந்து அநுதாபப்படுகிறார்கள்.

"அழகை எழுதினவர் ஆயுசை
எழுதலையோ"

என்று சொல்லி மஞ்சள் குளிப்போடு தத்துவத்தைக் கலக்கிறார்கள். எதிர்பார்த்தபடி சின்னத்தம்பி வெட்டுண்டு இறக்கிறான். அவன் விழ்ந்திருக்கும் நிலையைக்கண்டு அவன் தாய் அழுகிறாள்.

"வரப்போ தலைகாணி, சின்னத்தம்பி
வாய்மடையோ பஞ்சுமெத்தை"

பின்னால் பூதகணமாக மாறி சின்னத்தம்பி கொலையாளியைப் பழிவாங்கும் கட்டம் வருகிறது.

இரவு மணி 12 ஆகப்போகிறது. காளிக்காக நேந்து விட்ட எருமைக்கடா பலிபீடத்தில் உள்ளக்கிளர்ச்சியோடு ஏறி நிற்கிறது. அம்மன் கொண்டாடியின் அரிவாள் பளபள வென்று மின்னி ஓங்கித் தன் கழுத்திலே விழுவதைப் பார்க்கிறது. எருமையின் கண்ணிலே ஏதோ சாந்தி ஒளி அடிக்கிறது. பலி முடிந்தது. காளி ஏற்றுக்கொண்டாள் என்ற கோர முழக்கமும், ஆவேசத்தில் தீப்பந்தத்தை வைத்து ஆடுகிற மக்கள் முழக்கமும் வில் முழக்கத்தில் கலக்கிறது. ரத்தக் களறியிலே வில் ஒலி உச்சத்தை அடைகிறது. அன்னை பயங்கரியின் வெறி தாளம் கடந்து ஒலிக்கிறது. கேட்டுக்கொண்டிருக்கும் கவிஞன் சொல்லுகிறான்.

"வெடிபடுமண்டத்திடி பலதாளம்போட—வெறும்
வெளியில் இரத்தக் களியொடு பூதம்பாட"
பாட்டின்
அடிபடுபொருளுன் அடிபடுமொலியிற் கூடக்-களித்
தாடுங்காளீ, சாமுண்டீ; கங்காளீ!
அன்னை, அன்னை
ஆடுங்கூத்தை நாடச்செய்தாய் என்னை"

ஏதோ திருநெல்வேலியில் வாழ்ந்து வில்லுப்பாட்டை யனுபவித்த கவிஞன் மனசிலேதான் இந்த எண்ணங்கள் தோன்றும் என்றில்லை. எல்லாம் பைத்தியக்காரத் தனம் என்று ஏளனம் செய்யும் இங்கிலீஷ் படித்த நாகரிக மனசுகூட அந்த உணர்ச்சிச் சூறாவளியிலே அகப்பட்டு வசமிழந்து போகிறது. ஏன், வில்லுப்பாட்டு வெறியானது ஒட்டுவாரொட்டி வெறி.

பலி முடிந்ததும் வில்லுப்பாட்டுக் காரனுடைய ஆவேசம் குறைகிறது. மயக்கம் தெளிகிறது. வாழிபாடுகிறான்.

"ஆல்போல் தளிர்த்து, அறுகதுபோல வேரூன்றி, மூங்கில் போலன்ன சுத்தம் முசியாமல் வாழியவே" — என்று முடிக்கிறான். எங்கு பார்த்தாலும் ஓர் சாந்தம் பரவுகிறது. ஊசி மருந்து குத்தினவுடன் ஓரளவு திருப்தி ஏற்படத்தான் செய்கிறது. ஆனால் கொடை முடிந்தவுடன் ஒருநம்பிக்கை பிறக்கிறது. மரணபயம் நீங்கி ஜனங்களுக்கு புத்தம் புதிய மனோ வன்மை ஏற்படுகிறது. என்ன காரணத்தாலோ, ஊரில் அம்மன் விளையாட்டு நின்று விடுகிறது. சிதபேதி ஒடுங்கி விடுகிறது.

வில்லுப்பாட்டின் மூலம் பிறக்கும் மனோ வன்மையையும், உற்சாகத்தையும், வீரத்தையும் பாரதியார் கண்டார்





"சக்திசரணன்"

ஞானமெனும் குன்றேறிச் சென்றீராகில்
நன்மைதரும் வாய்மையெனும் குளத்தைக்காண்பீர்
ஆனவதில் அகங்குளிரச் சோர்வுதீர
அழுக்கெல்லாம் அகன்றிடவே ஆடிஏறி
மானமெனும் நல்லாடை உடுத்திப் பின்னர்
மனமகிழச் சான்றாண்மை வழியில் ஏறீர்!
தேனருமயும் அருட்கனிசேர் அன்புச்சோலை
தெய்விகப் பெருவழியைக் காட்டாநிற்கும்.

அருமையெனக் கருதாமல் அயராதேகில்
ஆகாகா அங்குள்ள அழகென் சொல்வேன்
கருமமெனும் நெடும்படிகட் கப்பாற் றோன்றும்
காட்சிதனைக் கண்ணாலே காண்பீரன்றோ
பெருமிதமாம் கோபுரமும் வானம்காட்டிப்
பேரின்பப் படிபோல அழையாநிற்கும்
தருமமெனும் பெருமுரச ஒலியும் வந்து
தவமுனிவன் திருவடிகள் சாரீரென்னும்.

இழுக்கறியாத் தவவாழ்வின் மேலோருள்ளம்
எடுத்திட்ட மனவலிமை மதில்கள் சுற்றி நோக்கி
அழுக்குடையார்க் கென்றியென்றும் அமையாதாகும்
அஞ்சாமை என்கின்ற வாயில் புக்கங்(கு)
ஒழுக்கமெனும் திருச்சுற்றல் பலகால் சுற்றி
உணர்வூறி மெய்ப்பொருளை நெஞ்சுள் கூட்டி
பழுக்கின்ற நல்வினையின் பயனைக்காண
பதம்பெயர்த்து மென்மெலவே செல்வீராயின்

இன்னாசெய் யாமையெனும் உலகோர் போற்ற
எழுகின்ற கொடிமரத்தின் அடியைச் சார்வீர்
தனதென் உடமையெலாம் தியாகம் செய்யும்
தகுந்திரு பலிபீடம் தன்னைக் காண்பீர்
பொன்னொத்த மாண்பென்னும் நல்லாளாடும்
பொதுமையெனு மண்டபத்தில் பொருந்தி அப்பால்
என்றுமுள சனது நாமம் போற்றும்
இசைதங்கும் உணர்வூறி அடைவீரன்றே!

வித்தகமாம் திருவிளக்கின் திரியைத்தூண்டீர்.
விழைவினையே நெய்யாக்கி அதனில் வார்ப்பீர்.
மெய்த்தவமாம் குங்கிலிய தூபம் சேர்ப்பீர்
மெய்ஞ்ஞான வர்த்திகளைக் கொளுத்திவைப்பீர்.
உத்தமனின் திருவுருவை உற்று நோக்கீர்
உண்மைக்காம் திருமேனி உவந்து காணீர்
பத்திமலர் கொண்டவன் தன் பாதம் போற்றீர்.
பரவுகரம் தம்மையவன் பணிக்கே ஆக்கீர்.

சித்தத்தின் அருளினிமை சிரிப்பால் காட்டி.
செய்தொழிற்கு இராட்டினமாம் கரத்தைக் காட்டி
முத்தியுறப் பற்றறத்தன் ஆடை காட்டி
முயன்று செயும் தொண்டுக்குத் திருத்தாள் காட்டி
சத்துவத்தின் ஒருவடிவாய் சமயம் யாவும்
சமரசமாய் கண்டதனி முடிவாய் நின்றங்(கு)
எத்திக்கும் தனைவணங்க இருக்கும் தேவன்
எழில் பருகித் திருவடிவில் இறைஞ்சுவீரே!

நஞ்சனைய கொடியரையும் நல்லாராக்கி
நானிலத்தை வானகமாய் மாற்றவந்தோன்
வஞ்சனையை வேரறுத்துப் பொய்மைச்சுட்டு
மாநிலத்தில் தெய்விகம் வளரச் செய்தோன்
அஞ்சினவர் அனைவருக்கும் அபயம் தந்தே
அகிம்சையெனும் பேராண்மை நல்கி நின்றோன்
கஞ்சமலர்த் தாளிணைகள் கருதினோர்க்குக்
காசினியில் துயரமெதும் இல்லையன்றோ?

அலகைகளின் குலம்நலியும்; அழிக்கத் தோன்றும்
அகங்கார நச்சரவம் ஒழிந்துபோகும்.
விலகிவிடும் வறுமைப்பேய் சோம்பல் தீயும்
விரிவடைந்த நெஞ்சினிடை அமைதி தங்கும்
கலகமெலாம் முடிவமையும் கடும்போர் நீங்கும்
காருண்ய அரசாட்சி நிலத்தில் ஓங்கும்
உலகமெலாம் பொதுமையிலே இன்பம் காணும்
உயிர்களிடை புதுவாழ்வு உதயமாகும்.

வில்லுப்பாட்டு பொது ஜனங்களைத் தட்டியெழுப்புவதற் கென்றே ஏற்பட்ட அருமையான கருவியென்று கண்டு, வில்லுப்பாட்டின் தோரணையிலே பல கவிகள் இயற்றினர்.

"பிணிகளுக்கு மாற்றுண்டு—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பேதமைக்கு மாற்றில்லை—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
அடைக்கலமிங்குனைப் புகுந்தோம்—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

அவருடைய 'பாஞ்சாலி சபதத்தில்' வில்லுப்பாட்டின் சிங்காரத்தைக் கேட்கலாம். காலத்துக்கொவ்வாத சில அம்சங்களை நீக்கிவிட்டு, வில்லுப்பாட்டை ஒரு கலைக்கருவியாய் அமைக்கவேண்டியது தமிழர் கடமை. இந்தக் கடமையைத் திறமையுடன் செய்து வருகிறார் சாத்தூர் வில்லிசைப் புலவர் பிச்சக்குட்டி.

வெள்ளைக் காக்காய்

நா. சிதம்பரசுப்ரமண்யன்.

"ஏன்னடா, வெள்ளைக்காக்காயைப் பார்த்தாப் போல் மலைத்து நிற்கிறாய்" என்கிறான் நண்பன்.

"ஏண்டா வெள்ளைக்காக்காயைப் பார்த்தேன்னு சாதிப்பாய் போலிருக்கிறதே. கஜப்புளுகா" என்று திட்டுகிறார் வாத்தியார்.

"ராவணனுக்குப் பிரஹஸ்தன் அகப்பட்ட மாதிரி 'இது வெள்ளைக் காக்காயா' என்றால் ஆமான்னு சொல்லுவாய் போலிருக்கிறதே" என்கிறார் அடுத்து வீட்டு வாயாடி.

இப்படி நம் பேச்சிலேயும், வாழ்க்கையிலும், பழகிப் போன பக்ஷி இந்த வெள்ளைக்காக்காய். நமக்குத் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் அறிந்தவர்கள் அறியாதவர்கள் எல்லோரும், இந்த வெள்ளைக்காக்காயை "இல்லாத ஒன்று" என்று முடிவுகட்டி விட்டார்கள்.

ஒருவரும் பார்த்ததில்லை வெள்ளைக்காக்காயை அதனாலே, அது இருக்கமுடியாது. பகுத்தறிவு, விஞ்ஞானம் இதைக்கொண்டு வெள்ளைக்காக்காய் இல்லை என்று முடிவுகட்டிவிடலாம். ஆனால், விஞ்ஞானத்தையும் பகுத்தறிவையும் பரிகசிப்பதுபோல், சில மாதங்களுக்குமுன் மிருகக்காட்சிசாலையில், ஒரு வெள்ளைக்காக்காயைக் கொண்டு வந்து வைத்தார்கள். ஆனால், விஞ்ஞானத்திற்கும் பகுத்தறிவுக்கும் அதிருஷ்டம்! அது சென்னையின் சூடு தாங்கமாட்டாமல் இறந்து விட்டது. வெள்ளைக்காரக்காக்காய் போலும்!

இந்த வெள்ளைக்காக்கா, ஆட்டுத் தலையுடைய குழந்தை போல, ஏதாவது விபரீதப் பிறவியாக இருக்கலாம். ஆனால், ஒன்றை மாத்திரம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். விஞ்ஞானம், அறிவு, இவையெலாம் மனிதனுடைய அனுபவ ஆராய்ச்சிக்கும், அவனுடைய ஆறறிவுக்கும் உட்பட்ட விஷயங்களைத்தான் ஆராய முடியும். ஆனால், அவனுடைய அறிவுக்கு எட்டாத விஷயங்கள் எத்தனையோ யிருக்கின்றன. அதற்கு, விஞ்ஞானமும் பகுத்தறிவும் உதவுபடியாகாது.

பகுத்தறிவிலே மிகுந்த நம்பிக்கைகொண்ட நண்பர் ஒருவர் சொன்னார். "ஐயா, நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். மதுரைக்கு ரயில் எத்தனை மணி நேரத்திற்குப் போய்ச் சேரும் என்பதை ரயில்வே அட்டவணையில் பார்க்க வேண்டும்; பஞ்சாங்கத்தில் பார்க்க முடியாது" என்றார். வாஸ்தவம்தான். நண்பர் சொன்னது முற்றிலும் உண்மையே. மதுரைக்குப் போகவேண்டுமென்றால் அதில் தேடலாம். டில்லிக்கு எத்தனை மணிக்குப் போகுமென்று பார்த்தால் அதில் இருக்காது. சிங்கப்பூரைத் தேடினாலும் அதில் அகப்படாது. செப்டம்பர் மாதத்து அட்டவணைக்குப் பதிலாக, மார்ச்சு மாத அட்டவணையில் பார்த்தாலும் காலம் தவறிப்போக வேண்டியதுதான். கைலாசத்திற்கோ, வைகுண்டத்திற்கோ, வழி தேடினாலும், அதில் நிச்சயமாகப் புலப்படாது. ஒருக்கால் பஞ்சாங்கத்தில் புலப்படலாம்.

கொலம்பஸ், அட்லாண்டிக் வழியாக இந்தியாவிற்குப் புது வழியிருப்பதாகச் சொல்லி மன்னரிடம் அதைக் கண்டுபிடிப்பதற்கு ஸாதனமும் பொருளும் வேண்டி நின்றார். அப்பொழுது உயர்ந்த பதவியிலிருந்த பாதிரியிடம் அந்த மனுவை அனுப்பினார் அரசர். கொலம்பஸ் பாதிரியிடம் சென்றார். பாதிரிக்கு அத்திட்டத்தில் நம்பிக்கையில்லை. அவரை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், சொன்னார் "என்ன மிஸ்டர் கொலம்பஸ், நீங்கள் அவ்வளவு நிச்சயமாக இந்த வழி போனால், குறிப்பிட்ட இடத்திற்குப் போகலாம் என்று சொல்லுகிறீர்களே. நீங்கள் அங்கு போய்வந்திருக்கிறீர்களா?" என்றார். கொலம்பஸ் ஒரு விநாடிகூடத் தயங்கவில்லை. "சுவாமிகளே, நீங்கள் சுவர்க்கத்தையும் நரகத்தையும் பற்றி வெகு நேரம் பிரசங்கிக்கிறீர்களே. நீங்கள் எப்பொழுதாவது என்றாவது அங்கு சென்றிருக்கிறீர்களா" என்றார். பாதிரி வாய் திறக்கவில்லை.

அறிவு ஒரு அளவுதான் நமக்கு உபயோகப்படும். அதற்கு அப்பால் நமக்கு நம்பிக்கைதான் வேண்டும்.

அமெரிக்க நாட்டுக்கவியரசி ஒருவர் சொல்லுகிறார்.


காட்டை நான் கண்டதில்லை
கடலையும் நான் கண்டதில்லை — ஆனால்
கட்டுமரம் நானறிவேன்
கடலலையும் தானறிவேன்
வானுலகம் சென்றதில்லை
வார்த்தையுரை யாடவில்லை — ஆனால்
நாதன் இருக்குமிடம்
நன்றாக நானறிவேன்.

அறிவினாலும், விஞ்ஞானத்தாலும் மாத்திரம் மனிதன் மனிதனாக வாழமுடியாது. அவன் மனிதனாக வாழ்வதற்கு இதயத்தோடு வாழவேண்டும். நம்பிக்கையோடு வாழவேண்டும். அறிவு எவ்வளவு முக்யமோ, அவ்வளவு முக்யத்வம் இதயத்திற்கும் உண்டு. இதயம் சொல்லும் வழிதான் சரியான வழி என்பதற்கு ஒரு அருமையான கதையை புல்டான் ஊர்ஸ்லர் (**Fulton oursler**) சொல்கிறார். நல்ல நீதிக் கதைகள் என்பதில் வாழ்க்கையிலே நடந்த சில கதைகளைத் தொகுத்துக் கொடுக்கிறார். அதில் ஒன்றின் சாராம்சம் இது.

ரால்ப் என்ற வைத்தியக் கல்லூரி மாணவனும், ஸ்டெல்லாவும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். ரால்பின் தாயாருக்கு இந்தச் செய்தி தெரிந்ததும், ஸ்டெல்லாவிடம் சென்று சொன்னாள். "அம்மா நீ என் பையனை மணக்க விரும்புவது எனக்குச் சந்தோஷம்தான். இருந்தாலும் உனக்கு நான் இதைச் சொல்லவேண்டியதும், என் கடமை. ரால்ப், மூன்று வருஷங்கள் வைத்திய ஆஸ்பத்திரியில் இருந்தான். இன்னும் முழுவதும் குணமடைந்து விட்டான் என்று டாக்டர்கள் நினைக்கவில்லை" என்றாள்.

ஸ்டெல்லா திடுக்கிட்டு நின்றாள். அவள் இப்பொழுது என்னசெய்வது? இதயமோ அவனை நாடுகிறது. ஆனால் விதி குறுக்கே நிற்கிறது. கல்யாணமானதற்குப் பின் அவனுக்குப் பைத்தியம் ஏற்பட்டால் அவள் என்ன செய்யமுடியும்? ஆனாலும் தெரிந்து ஒரு படுகுழியில் விழலாமா? இப்படி அவள் அறிவோடும், இதயத்தோடும் போராடினாள். கடைசியில் அந்தக் கல்யாணம் நின்றது. வேறு ஒருவனை மணந்து சுகமாக இருந்தாள். சில வருஷங்கள் கழித்து ஒரு நாள் இரவில் எழுந்த பொழுது படுக்கையில் புருஷனைக் காணவில்லை. எழுந்து தேடிச் சென்ற பொழுது கொல்லைப் பக்கத்தில், ஒரு கோடாலியை வைத்துக்கொண்டு, "நான் அழிக்க வந்திருக்கிறேன். இவைகளை யெல்லாம் பிளந்து தள்ளுவேன்" என்று பேத்திக்கொண்டிருந்தான். அவனுக்கு நல்ல பைத்தியம் பிடித்திருந்தது. தன் புருஷனைக் கூட்டிக்கொண்டு, வைத்திய சிகிச்சையில் பேர் போன டாக்டரிடம் அழைத்துச் சென்றாள் ஸ்டெல்லா. அந்த டாக்டரைப் பார்த்தவுடன் திடுக்கிட்டாள். அந்த டாக்டர்தான் ரால்ப். அவன் குழந்தைகளுடன் சௌக்கியமாக, பிரபல பைத்திய சிகிச்சையில் நிபுணனாகிக் காலங்கழித்து வந்தான். அவனுக்குப் பைத்தியநோய் வரவேயில்லை.

அறிவினால் மாத்திரம் நாம் வாழமுடியாது. இதயத்தையும் நாம் உபயோகப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். கடவுள்கூட இதயக் கமலத்தில்தானே இருக்கிறார்.



போக்குவரத்து

எஸ். ஆரோக்கியசாமி.
(நிர்வாகி, எஸ். ஆர். வி. எஸ். குடந்தை)

ஒருதேசத்தின் முற்போக்கு அதனுடைய போக்கு வரத்து நிலையைப்பொருத்தேயாகும். போக்கு வரத்து வசதிகள் எவ்வளவுக்கவ்வளவு மலிகின்றனவோ அவ் வளவுக்கவ்வளவு, பொருளாதாரம், செல்வம், வியாபாரம் தொழில் முதலியன அபிவிருத்தியடைகின்றன. போக்கு வரத்து வசதிகள் தெற்கே சரியாக இல்லை என்ற காரணத் தினால் தான், அநேக தொழிற்சாலைகள் வடபாகத்தில் ஆரம்பிக்கப்படுகின்றன என்ற உண்மையை யாவரும் அறிந்ததே.

போக்குவரத்தை மூன்று தலைப்பின் கீழ் பிரிக்கலாம். ஆகாய மார்க்கம், கடல் மார்க்கம், தரை மார்க்கம். தரை மார்க்கத்தை இரண்டாகப் பிரிக்கலாம்—ரயில்வே, ரஸ்தா. இந்தக் கட்டுரை முற்றிலும் ரஸ்தா போக்கு வரத்தைக் குறித்தது.

ரஸ்தா போக்குவரத்தில் பிரயாணிகளை ஏற்றிச்செல் லும் 'பஸ்'களும், பண்டங்களை ஏற்றிச்செல்லும் 'லாரி' களும் பிரதானமானவைகள். சென்ற முப்பதாண்டு களாக எனக்குப் பஸ் போக்குவரத்தில் அனுபவம் உண்டு. ஆரம்பகாலத்தில், 'பஸ்' தொழில், ஒரு தொழிலாக கருதப் படாமல், சில்லரை முதலாளிகள் அங்கும் இங்கும், இஷ் டப்பட்ட ரஸ்தாக்களில், இப்பொழுதிருக்கும் கட்டுப் பாடு, சட்டதிட்டம் இவைகளால் பாதிக்கப்படாமல், சர்வீஸ் நடத்திவந்தார்கள். அநேகமாக மோட்டார் தொழிலாளிகளே ஆளுக்கொரு பஸ் அல்லது இரண்டு பஸ்கள் விதம் வைத்துக்கொண்டு பிரயாணிகளின் அபி லாஷைகளை முடிந்த வரையில் பூர்த்தி செய்து வந்தார்கள்.

காலக்கிரமத்தில் புதிய சட்ட திட்டங்கள் அமுலுக்கு வர, வரிகள் அதிகரிக்க, அவசியம் ஏற்பட, அங்கும் இங் கும் ஸ்தாபன ரீதியாக போக்கு வரத்து சர்வீஸ் அமைக்கப் பட்டது. ஸ்தாபனரீதியாக அமைக்கப்படுவதில் பல்வேறு நன்மைகள் இயங்குகின்றன. பொது ஜனங்களுடைய நலன் நன்கு கவனிக்கப்படுகிறது. தட்டுக்கெடாமல் சரி வர, சர்வீஸ் நடக்கிறது. தொழில் அபிவிருத்தி அடை கிறது. தொழிலாளிகளுக்கு பல விதத்தில் நன்மைகள் புரிய வசதி ஏற்படுகிறது. கல்வி வளர்ச்சி அதிகம் இல் லாமல், ஆங்காங்கு கூட்டம் கூட்டமாக வீண்காலம் கழித்துக்கொண்டு சட்டவிரோதமான செயல்களைப் புரிந்து கொண்டோ புரிய எத்தனித்துக்கொண்டோ இருந்த, பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இன்று ஸ்தாபனரீதியாக அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளில் சிறந்த தொழிலாளி களாக விளங்குவதுமன்னியில், திறன்பட வாழ்க்கையை நடத்திக்கொண்டு நம் பாரத தேசத்தின் முக்கிய புதல்வர் களாகவும் விளங்குகிறார்கள்.

'சோஷலிஸ்ட் பாட்டர்ன்' என்ற கொள்கைகளை குறிக்கோளாகக்கொண்டு, தொழிற் ஸ்தாபனங்களை வளர விடாமல் செய்தாலோ அல்லது சிறிய சிறிய சில்லரை முதலாளிகளாக ஆக்கினாலோ, நாட்டின் பொருளாதாரம் முறிபடுவதுடன், ஊக்கமும் ஆர்வமும் மிகுந்து திறன் பட தொழில் நுட்பங்களை அறிந்து சேவை செய்யும் தொழிலாளிகளுக்கு இடம் இல்லாமல்போக வழிகோலும். பொருளாதார தத்துவ சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட உண்மைகளைப் பிரயோகம் செய்யும் பொழுது, ஒவ்வொரு தொழிலையும் தனித்தனியே பரிசீலனை செய்து, அவைகள் எப்படி ஆரம்பிக்கப்பட்டன, எப்படி வளர்ச்சி யடைந் தன, எப்படி தற்சமயம் இயங்குகின்றன என்ற விபரங் களை நன்கு அறிந்து கொண்டபின் 'சோஷலிஸ்ட் பாட் டர்ன்' அல்லது 'நாஷனலிசேஷன்' முதலிய ஆயுதங்களைப் பிரயோகம் செய்ய வேண்டும்.

சென்னை ராஜ்யத்தில் விதிக்கப்படும் மோட்டார் வாகன வரி உலகிலேயே மிகப் பளுவானது என்று சொல் லப்படுகிறது. ஆனால் இங்குள்ள ரஸ்தாக்களோ பிறதேசத் திலுள்ள ரஸ்தாக்களைவிட மிகவும் கீழான நிலையிலிருக் கின்றன. ரஸ்தாக்கள் சரியாக அமைக்கப்பட்டு அவ்வப் போது பழுது பார்க்கப்பட்டு சீரான நிலையிலிருந்தால், பஸ்களுக்கு ஏற்படும் ரிப்பேர், தேய்மானம், முக்கி யமாக டயர் தேய்மானம் இவைகளைத்தடுக்க முடியும். அதனால் செலவு மிகமிகக் குறையும். ஆகையினால் புதிய ரஸ்தாக்களை அமைக்குமுன், ஏற்கனவே யுள்ள ரஸ்தாக்களை சரிபார்த்துச் செப்பனிடுவது, அதிக பளுவான வரி வசூல் செய்யும் சர்க்காரின் நியாயமான கடமையாகும்.

பர்மிட்டுகள் வழங்கும் விஷயத்தில், சர்க்கார் கை யாண்டுவரும் ஒரு கொள்கையின் நிமித்தம், அவசரப்

பட்டு சிறிய பஸ் ஓனர்களை ஆதரிக்கும் விஷயத்தில் சற்று நிதானம் வேண்டும். ஒரு பஸ் சர்விஸ் வெற்றிகரமாக நடக்க, தக்க யந்திர ஸ்தாபனங்களுடன் கூடிய தொழிற்சாலை, ஸ்பேர் பஸ், அநுபவம் வாய்ந்த நிர்வாகிகள், திருப்தியுடன் வேலை பார்க்கும் தொழிலாளிகள் தேவை. இந்த அம்சங்கள் ஒன்றும் பொருந்தாத, சிறிய முதலாளிகளுக்கு சலுகை காண்பிப்பது விஷப்பரிசை யாகும். பொருளாதார தத்துவம், தனிப்பட்ட ஒருவரை அளவுக்கு மீறி வளரவிடக் கூடாது என்று சொல்கிறது என்பதற்காக பொது ஜன நலனைப் புறக்கணித்து கண்டவாறு பர்மிட் வழங்குவது சரி அல்ல. இதனால் தொழில் அபிவிருத்திக்கு இடமில்லை. ஆனால் சிறிய ரஸ்தாக்களில், அதாவது இருபது மைலுக்குட்பட்ட ரூட்டுகளில் அவர்களுக்கு பர்மிட் வழங்கிப் பரிசை செய்யலாம். நீண்ட ரூட்டுகளில் பர்மிட் வழங்குவதினால் ஒரு பஸ் உள்ளவர், அந்த பஸ் பழுதடைந்து நடுப் பிரயாணத்தில் நின்று விட்டால், எப்படிப் பிரயாணிகளின் மேற்கொண்டு செல்ல வேண்டிய பிரயாணத்திற்கு வகைசெய்வார்? ஒரு பஸ், இரண்டு பஸ்களுக்காக ஒரு ஸ்பேர் பஸ் வைத்துக்கொள்ள முடியுமா? இருந்தாலும் கட்டுமா? ஆகையினால் பர்மிட் வழங்கும் விஷயத்தில் சர்க்கார் சற்று நிதானமாக நடந்து கொள்வது அவசியம்.

பஸ் சர்விஸ் மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்றால், சர்க்கார் அவ்வப்போது கொள்கைகளை மாற்றும்பொழுதோ சட்டதிட்டங்களைத் திருத்தும்பொழுதோ ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கமிட்டியுடன் ஆலோசித்தபின்னே நடவடிக்கை எடுத்துக்கொள்வது சம்பந்தப்பட்டயாவருக்கும் பலனளிக்கும்.

மனப் பொட்டல்

"வேணி"

பொட்டல் மனமாம் பாழ்வெளியில்
பொசுக்கும் வெய்ய சிந்தைகளால்
பட்டுப் போன ஆன்மாவாம்
பயிரும் தளிர்த்தல் சாத்தியமோ ?
பட்டுப் போன ஆன்மாவாம்
பயிரும் தளிர்த்து விட்டாலோ
பொட்டல் வெளியும் அங்கேது ?
பொன்னி பெருகும் புதுப்பூமி !

வெட்ட வெளியில் கங்கைத்தாய்
விரிந்து அருளைச் சொரிகின்றாள் !
சுட்டுத் தகிக்கும் வெம்மைக்குள்
சுரக்கும் அருளைத் தருகின்றாள்
சுட்டுத் தகிக்கும் சிந்தைகளில்
சீலம் சேர்ந்து விட்டதனால்,
வெட்ட வெளியும் மாறியதோ
மேன்மை யுறுவதைக் காணீரே !

பருவகால எழுத்தாளன்



எம். வி. வெங்கட்ராம்.

தான் மனத்தில் தானே பூரிக்கும் புது மலர் போல், காலையில் கண்விழிக்கும் போதே என் மனம் மலர்ந்திருந்தது. காரணம் கூற முடியாத இந்த மலர்ச்சியை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எண்ணிப் புத்தகசாலைக்குப் போனேன்.

சிறிது காலமாகவே எனக்கு ஒரு கற்பனைக் கவலை இருந்து வருகிறது. 'இலக்கியம் செய்கிறேன்' என்று நினைத்து, கற்பனை செய்வதிலும் கருத்தை வளர்ப்பதிலும், பாத்திரங்களை உருவாக்குவதிலும் ஈடுபட்டு, எழுதிய பிறகும் அதைத்திருத்திச் செதுக்கித் தபாலில் சேர்ப்பதற்குள்—காலம் எனக்கு ஸ்தம்பித்திருந்தாலும் வெளி உலகத்தின் கணக்கில் பல மாதங்களும் வருஷங்களும் கழிந்திருக்கும். பழைய வாசகர்கள் என்னைப் பெரும்பாலும் மறந்திருப்பார்கள்; புதிய வாசகர்கள் என் அடுத்த சிருஷ்டியை ஆவலுடன் எதிர்பார்த்து, ஏமாற்றம் அடைந்து மறந்து போகும் தறுவாயில் என் புது இலக்கியம் வெளிவரும் தேதி தவறாமல் வெளிவர வேண்டிய பத்திரிகைகள் என்னைப் போன்றவர்களின் எழுத்தை நம்பி எப்படி நடக்க முடியும்?

இப்படி "திடீர்" எழுத்தாளனாக இருப்பதால் இரு நஷ்டங்கள்: பணம், புகழ். அதிகமாய் எழுதாதவனைப் 'புதிய' எழுத்தாளனாகப் பாவித்து, முடிந்தவரை குறைவான சன்மானம் அளிக்கின்றன நம் பத்திரிகைகள். இது பண நஷ்டம்; வாசகர்களுக்கு ஞாபக சக்தி குறைவு; தினம் கண்ணால் பார்ப்பவைகளையே இக்காலத்தில் ஞாபகம் வைத்துக்கொள்ள முடிவதில்லை. கண்ணுக்கு அவ்வளவு விருந்துகள் இருக்கும்போது, என்றோ ஒரு நாள் எழுதுகிறவனை யார்தான் நினைவில் வைத்துக் கொள்ள முடியும்? அதுவும், மூன்று வர்ணங்களில் பளிச்சென்று விளம்பரம் செய்யப்படாத ஆசிரியனை மக்கள் எப்படி மறக்காமல் இருக்க முடியும்? இது புகழ் நஷ்டம்.

என் நண்பன் ரகுநாதனும் எழுத்தாளன் தான், என்னைப்போன்ற 'பருவகால' எழுத்தாளன் அல்ல. அவன் எழுதாத நேரம் எது என்பதுதான் கணக்கில் அகப்படாது. இரவு பன்னிரண்டு மணிவரை என்னுடன் அரட்டை அடித்துவிட்டுப் படுக்கச் செல்கிறவன் காலையில் ஒரு கதையோடு நிற்பான்; மத்தியானம் சாப்பிட்டு வரும்போது ஒரு கட்டுரை கொண்டுவருவான்; மாலை காப்பி சாப்பிடுமுன் ஒரு கதை தபாலுக்குத் தயாராக இருக்கும்; இவ்வளவும் போக தொடர்கதைகளும், மகாகாவியங்களும் குவியலாக வீட்டுப் பரணில் குவித்து வைத்திருக்கிறான். இருபது வருஷங்களாக நான் எழுதிய பக்கங்கள் அவ்வளவும் அவன் ஆறு மாதத்தில் எழுதுவதற்கு ஈடாகாது. பத்திரிகைகள் விஷய தானம்கோரி அவன் வீட்டு வாசலில் தவம் கிடக்கின்றன.

இவ்வளவு விரைவாக எழுத அவனால் எப்படி முடிகிறது என்ற சூக்குமத்தை அவனிடமே கேட்டேன்.

"எழுதுவது என்று நினைத்தாலே—மூளைக்கு வேலை என்று நினைக்கிறீர்கள். அதுதான் உங்கள் தவறு" என்றான் அவன்.

"கருத்து, பொருள், நடை இல்லாமல் எழுத எனக்குப் பிடிக்கவில்லை. மூளைக்கு வேலைதராமல் இவை எப்படிச் சாத்தியம்?"

"புதிதாகச் சிந்தனை செய்வதற்கு என்ன இருக்கிறது? எவ்வளவு கடுமையாகச் சிந்தித்தாலும், அதன் முடிவை நமக்குமுந்தித் யாரோ ஒருவன் கண்டு எழுதிவைத்திருப்பான்........உண்டா, இல்லையா?"

"அதற்காக—நாம் சிந்தனை செய்யாமல் எழுத வேண்டும் என்கிறாயா?"

"சிந்தனை செய்ய நமக்குத் தகுதி இல்லை என்கிறேன். எழுதுவதற்காக நான் மூளையைக் குழப்பிக்கொள்வதே கிடையாது. உட்காருவதற்கு நேரமும் பேனா பிடிக்கச்சுறுசுறுப்பும் இருந்தால் எழுதிக் குவித்து விடுவேன்."

"எழுதிக் குவிப்பதற்கு விஷயம் வேண்டாமா?"

"விஷயம் இல்லாமல் என்ன? சாது சேஷய்யா, கோபால் ராவ், காலேஜ் புஸ்தகசாலைகள், பழைய புஸ்தகக் கடைகளுக்குப் போனால் நமக்கு விஷயம் கொடுக்கிற சிந்தனையாளர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்களே! இந்த ஆயுள் முழுவதும் எழுதினாலும் முடியாதே! எனக்கு இங்கிலீஷும், தமிழும் தான் தெரியும். உங்களுக்கு ஹிந்தியும் தெரியும். உங்களுக்கு அதிக விஷயம் கிடைக்கும்!"—ரகுராமன் இவ்வளவு வெளிப்படையாகப் பேசியதைக் கேட்க எனக்குச் சிறிது திருப்தியாக இருந்தது; 'அப்படி' எழுதியும் விட்டு அதைச் சொந்தச்சரக்கு என்கிற பொய்வேறு அவன் சொல்லவில்லை அல்லவா?

"நான் ஏதாவது ஒரு ஆங்கிலக் கதை படித்து அதன் போக்கை ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறேன். பிறகு அந்தக் கதைக்கு இந்த நாட்டு மூக்கு, முழி, சடை, உடை கொடுத்து எழுதிவிடுகிறேன்", என்றான் ரகுராமன்.

"அது என்ன சின்ன வேலையா? அதற்கு மூளை வேண்டுமே!"

"உங்களுக்குப் பிழைக்கத் தெரியவில்லை. தமிழ் நாட்டில் பத்திரிகைகள் அதிகம் ஆகிவிட்டன. 'அசல்' சரக்கை நம்பி இவ்வளவும் நடக்க முடியுமா? நாள் வாரம், மாதம் தவறாமல் வெளிவர முடியுமா? அதற்கு உதவி செய்யமுடியாவிட்டால் எழுத்தாளர்களால் என்ன பிரயோசனம்? பழைய தமிழ் இலக்கியம் நமக்குத் தங்கச் சுரங்கம்; அந்தக் காலத்தில் அவர்கள் இரண்டு வரிகள் எழுதினால் அதற்கு இரண்டு நூறு பக்கத்தில் விளக்கம் இப்போது எழுதலாம். இங்கிலீஷ் இலக்கியமோ வைரச் சுரங்கம்; மதிப்பு அதிகம்; அந்தப் பாஷை தெரியாதவர்களுக்கு நாம் அதிலுள்ள சரக்கை எடுத்துக் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது!"

நண்பனின் இந்த அறிவுரை என் சிந்தனையைத் தூண்டிவிட்டது. சிந்தனை செய்யக்கூடாது என்பது அவன் போதனை ஆனால் சிந்தனை இன்றி இலக்கியம் பண்ணும் வித்தையைத், தெரிந்துகொள்ள நான் சிந்தனை செய்ய வேண்டியிருந்தது. முடிவில் நண்பனின் யோசனை அதிக்கிரமமானது என்று தோன்றியது. ஆனால் 'இலக்கிய வானில் சூரியர்களாக ஒளிவீசுகிறவர்களைப்'பற்றி எண்ணியது எனக்கும் சபலம் தட்டத்தொடங்கியது. கடைசியில், 'அப்படியும் செய்யலாம் இப்படியும் செய்யலாம்,' என்கிற முடிவுக்கு வந்தேன்: அதாவது முடியும் போது சொந்தமாக எழுதுவது; முடியாதபோது பழைய சிந்தனையாளர்களின் உதவியை நாடுவது—என்பது தான் அந்த முடிவு.

அந்த முடிவை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதற்காகத்தான் அன்று புஸ்தக சாலையை நாடினேன். பிரபல ஆசிரியர்களின் எழுத்துக்களில் கைவைத்தால் எளிதில் மாட்டிக்கொள்ள நேரும் என்ற நண்பரின் எச்சரிக்கையை நான் மறக்கவில்லை. ஆகையால் ஊர் பேர் தெரியாத ஓர் ஆசிரியன் புத்தகத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு ஒரு மூலையில் அமர்ந்தேன். பதினெட்டு பக்கங்களுக்கு மேல் அதை என்னால் வாசிக்க முடியவில்லை. கொட்டாவிமேல் கொட்டாவி படையெடுத்தது; தூக்கம் கூட வந்துவிடும் போல் இருந்தது.

அப்போது என் பெஞ்சில் யாரோ உட்காருவதை அறிந்து திரும்பினேன்.

"புஸ்தகசாலையில் புதிய இலக்கியத்துக்குத் தாய்ச் சரக்கு தேடுகிறாயா?" என்று சிரித்தான் சதாசிவம்.

அங்கே எங்கள் இருவரைத் தவிர வேறுயாரும் இல்லை என்றாலும் என் 'ரகசியத்தை' அவ்வளவு உரத்துப் பேசியது எனக்குப் பிடிக்கவில்லை.

"இது புஸ்தகசாலை. கத்தக்கூடாது," என்று அவனைக் கடிந்து கொண்டேன்.

"புஸ்தகசாலை என்பதால் உரத்துப் பேசக்கூடாது என்கிறாயா? அல்லது நீ திருடப்போவது யாருக்காவது தெரிந்து விடப்போகிறதே என்று பயப்படுகிறாயா?"

எனக்குக் கோபம் வந்தது: "சதாசிவம், நான் உன் உபதேசத்தைக் கேட்கவில்லை."

யார் இந்த சதாசிவம்? அவன் வேறு யாரும் அல்ல; என்னுடைய சொந்த இலக்கிய சிருஷ்டி. என் அழகான சிருஷ்டிகளில் ஒருவனாகவே நான் அவனைப் பற்றிக் கர்வம் கொள்ளுகிறேன். சுமார் ஐந்து வருஷங்கள் அவனை என் கருத்துக் கருப்பத்தில் சுமந்தேன்; அவனுக்கு நோய் நொடி நெருங்கவும் முடியாத உடல் அழகு கொடுத்தேன். பண்பட்ட உள்ளம் கொடுத்தேன்; அழகான மொழியை அவன் வாயில் வைத்தேன்; அது மட்டுமா? பிறவியை ஒழித்துக்கொள்ளப் பிறந்த உயர்ந்த ஆன்மாவாக அவனை நான் சிருஷ்டித்தேன். முழுவடிவத்தோடு அவன் என் எதிரில் நின்றபோது—எனக்கு அவன் மேல் பொறாமையாக இருந்தது. காலம் என்கிற பொய்மை கடந்து நின்ற அவனைப் பார்த்து காலத்தில் கிடந்துழலும் என்னால் பொறாமைப் படாமல் இருக்க முடியவில்லை.

"ராமு, நான் உன் சிருஷ்டி. உனக்கு நான் கடமைப்பட்டவன். நீ தவறு செய்தால்—எடுத்துக் காட்டியவன் நான்."

"நான் ஒரு தவறும் செய்யவில்லை. எத்தனையோ பேர் செய்வதை நானும் செய்கிறேன்."

"பலர் செய்வதால்—ஒரு காரியம் நியாயம் ஆகிவிடுமா?"

"சதாசிவம், உன்னை சிருஷ்டிக்க நான் ஐந்து வருஷம் சிரமப்பட்டேன். உன் தோற்றத்தைப் பார்த்துப் பெருமிதமடைந்தேன். உன்னை ஏறெடுத்துப்பார்க்கவும் அஞ்சிப் பலர் ஒதுங்கி விட்டார்கள். நீ புரியாதவனென்று பலர் உன்னை விட்டு ஓடினார்கள். நீ பெரியவனென்று பலர் குனிந்துகொண்டு நடந்தார்கள். உன்னைப்போல் உயர்ந்த மற்றொரு சிருஷ்டியை நான் உற்பத்தி செய்வதற்குள்—எல்லோரும் உன்னை மறந்து விட்டார்கள்."

"பணமும் புகழும் கிடைக்கவில்லை என்கிறாயா?"

"அவைகளை வேண்டுவது தவறா?" என்றேன்.

"எனக்கு அது தவறு; உனக்கு அது தவறு இல்லை. ஆனால் பணமும் புகழும் வேண்டும் என்பதற்காக எதையும் செய்யலாம் என்கிற சிறந்த முடிவிற்கு வந்து விட்டாயா?"

"எதுவும் செய்ய நான் தயாராக இல்லை; இதைச் செய்தால் என்ன?

சதாசிவத்தின் முகத்தில் துன்பம் நிறைந்தது.

"ராமு, ஆதிமனிதப் பிறவியாக என்னைப் படைத்த உன் அறிவும் நெஞ்சும் இப்படிக் குழப்புவதைக்காண எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. கன்னம் வைக்கப்பழகினால் பணம் கிடைக்கும். சத்தம் போட்டால் புகழ் கிட்டும்."

"இரண்டும் எனக்குத் தெரியாது."

"அதனால் இந்தக் கருத்துத் திருட்டுக்குத் துணிகிறாயா? கன்னம் வைத்துப் பிடிபட்டால் சிறை வாசம் கிட்டும்; சத்தத்தை ஜனங்கள் விரும்பாவிட்டால் புகழ் மங்கும்; ஆனால் கருத்துத்திருட்டால் உன் ஆன்மாவே வீழ்ச்சி அடைகிறது என்பதை ஏன் மறக்கிறாய்?"

நான் சிந்தனையில் ஆழ்ந்தேன்.

"இலக்கிய சிருஷ்டி என்பது எவ்வளவு சிரமமான வேலை என்பது உனக்குத் தெரியும். பிறர் சிருஷ்டியை உன் உடைமை ஆக்கிக்கொள்வது கேவலத்திலும் கேவலமான பாவம். நான் உன்னை எச்சரிக்க வந்தேன்; அப்புறம் உன் விருப்பம்!"

அவன் வெளியேறினான். கையில் இருந்த புஸ்தகத்தை 'லைப்ரேரியனி'டம் கொடுத்துவிட்டு வீடு திரும்பும் போது என் மனம் தன் வாசனையில் தானே பூரித்துக் கொண்டிருந்தது.

* * *

நிலவு நங்கை.

"சோமு"

1 வான நதியில் நீந்தும் நிலவே
வண்ண முகத்தை மறைத்திட லாமோ ?
—வான நதியில் நீந்தும் நிலவே !

2 பொன்னி நதியின் புனலின் மீது
பொன்னை உருக்கிப் பொழிந்திடும் பெண்ணே
கன்னி உனது கள்ள முகத்தில்
கள்வெறி கொண்டு களித்திட நின்றேன்
—வான நதியில் நீந்தும் நிலவே !
வண்ண முகத்தை மறைத்திட லாமோ !

3 நிலவுக் கைகளை நெடிது பரப்பி
நீலக் கருமுகிற் பாசி விலக்கிக்
குலவு விண்மீன் நங்கையர் சூழக்
குதித்துக் குதித்துக் குறுநகை செய்தே
—வான நதியில் நீந்தும் நிலவே !
வண்ண முகத்தை மறைத்திட லாமோ !

4 நீல வானில் நீந்தும் அரசி
நித்திலப் பெண்ணே இரத்தினக் குமரி !
காலனை வென்றோன் கற்றைச் சடையில்
காலம் எல்லாம் தவழும் கன்னி !
—வான நதியில் நீந்தும் நிலவே !
வண்ண முகத்தை மறைத்திட லாமோ !

5 வானும் வையமும் நின்வர வாலே
வாசி பயின்ற யோகியைப் போலே
மோனத் தவத்தில் மூளும் லயத்தில்
மோகன மாகி நின்றன கண்டாய்
—வான நதியில் நீந்தும் நிலவே !
வண்ண முகத்தை மறைத்திட லாமோ !



க்ஷேமம். டில்லி

14-10-57

ஸச்சு சித்திக்த நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு கடிதம் எழுதவும்.

இத்தனை நாழி சைக்கிள்விட்டுக் கொண்டிருந்து இப்பொழுதுதான் ஓய்ந்து போயிருக்கிறேன். எனக்கு ரொம்ப நன்றாக சைக்கிள்விட வருகிறது. பாதி வேளையும் இதே வேலையாகத்தானிருக்கிறேன். ஆனால் எனக்கு சைக்கிள் வாங்கித்தரும் யோசனை விட்டிலேயே யாருக்கும் இல்லைபோலிருக்கிறது. எனக்கோ சொல்லவும் முடியவில்லை.

பல விஷயங்களுக்கும் இதே கஷ்டமாகத்தானிருக்கிறது. நான் சொல்வது அவர்களுக்குப் புரியவில்லை அல்லது பிடிப்பதில்லை. "ஏன் கத்தரே, ஏன்கத்தரே" என்று அம்மா அடக்கிக்கொண்டே இருக்கிறாள்.

நானும்முடிந்த வரையில் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு விதமாய்த்தான் சத்தம் போடுகிறேன். பசித்தால் ஒருவிதம், படுக்கவைக்க வேண்டுமென்றால் ஒருவிதம், படுக்க வைத்தால் ஒரு விதம், ஆத்திரத்துக்கு ஒரு விதம், அழுகைக்கு ஒருவிதம் என்று அழுகிறேன். ஆனால் அவர்களுக்கெல்லாம் ஒரே அழுகையாகத்தான் தெரிகிறது. ஒரு வேளை, நான் ஹிந்தியில் அழுவதால் தான் அவர்களுக்குப் புரியவில்லையோ வென்று கூட நினைப்பதுண்டு. என்ன செய்வது? தமிழ்க் குழந்தைகளை பழக்கமில்லாததாலும், நான் பிறந்த இடத்தில் மற்ற குழந்தைகளெல்லாம் ஹிந்தியிலேயே அழுது தொலைத்ததினால்தான், எனக்கும் அந்த பாஷையிலேயே அழும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது.

என்னைத் தூக்கி வைத்துக் கொள்வதற்கே எல்லோரும் பயப்படுகிறார்கள். வேஷ்டி வீணாகி விடும், சட்டை வீணாகிடும், புடவை வீணாகிவிடும் என்று ஒதுக்கி விடுகிறார்கள். அம்மா மட்டுந்தான் ஒன்றுஞ் சொல்லாமல் பொறுமையாய் எடுத்து வைத்துக் கொள்கிறாள். "எல்லாப் புடவைகளையும் நாசம் பண்ணு; அப்படியாவது புதுப்புடவை கிடைக்குமோ பார்க்கிறேன்" என்று சொல்லி என்னைத் "தூண்டி விடுகிறாள்"

நான் ரொம்ப படுத்துகிறேனும்! பிரமாதமாகச் சொல்லி குறைப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால் இவர்கள் என்னைப் படுத்துவதோ! தினம் மாற்றி தினம் விளக்கெண்ணையை வெள்ளிச் சங்கில் ஊற்றி தொண்டையில் கொட்டுகிறார்கள். வேண்டாமென்று அழுது கை கால்களை உதறினால், அப்பா என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள, அம்மா மென்னியை அழுக்கி எண்ணையைப் போட்டி விடுகிறாள். புழுக்கம் பிடுங்கித் தின்னும் வேளையில் தலையில் குல்லா, காலில் "ஸாக்ஸ்", மேலுக்கு "ஸ்வெட்டர்" எல்லாம் மாட்டி வேகவைக்கிறார்கள், குளிப்பாட்டுகிறேனென்று சொல்லி இருவரும் சேர்ந்து கொண்டு கொம்மாளம் அடிக்கிறார்கள். குளிப்பாட்டியவுடன், புகையைப் போட்டு என்னை வாட்டுகிறார்கள். மூக்கில் துணியைத் திரித்து விட்டு வேடிக்கைப் பார்க்கிறார்கள்.

இவர்கள் புத்திசாலித்தனம் பார்க்கவேண்டுமே! முதுகு அரிக்கிறதென்று அழுதால், தொடையில் போட்டுக் கொண்டு ஆட்டுகிறார்கள். பால் வேண்டுமென்று அழுதால் பாட்டுபாடுகிறார்கள். பாட்டுவேண்டுமென்று அழுதால் பாட்டிலை வாயில் திணிக்க விட்டுத் தினற அடிக்கிறார்கள். சட்டை நனைந்திருக்கிறதென்று அழுதால் தொட்டிலில் போட்டு ஆட்டுகிறார்கள். இன்னமும் அழுதால் தூளியில் போட்டதுடன் துணியைப் போர்த்து மூடி விடுகிறார்கள்.

சின்ன வயதில் நீங்களும் இப்படித்தான் படுத்தினீர்களென்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆகையால் நீங்களாவது என் மேல் அனுதாபப்படுவீர்களென்று உங்களுக்கு எழுதியிருக்கிறேன். அம்மா, அப்பாவுக்குத் தெரிவித்து விடாதீர்கள்.

இப்படிக்கு,
லதா

—*—

நரகாசுரன் எங்கே!

சுத்தானந்த பாரதி.





எங்கே கண்ணன் ? எங்கே நரகன் ?
எங்கே யென்றே இரவின் இருளில்
தேடினேன் ; மத்தாப்பு சிரித்தது ; வெடிகள்
கட கட நகைப்புடன் கைகள் அடித்தன !
மாப்பிள்ளை யுண்ணும் மாப்பணிகாரம்
வெள்ளையப்பம் விம்மிய வடைகள்
ஒன்றிலும் அரக்கன் ஒளியக் காணேன்
பட்டும் சரிகையும் பகட்டும் கோலம்
எதிலும் அரக்கன் இருப்பதைக் காணேன்.
ஆங்கொரு சண்டை ; ஆத்திரச் சண்டை
"சீர் செனத்தியிற் சிறுமை செய்தீர்
வரதட்சிணையில் வரட்சி செய்தீர்
ஏலோம் பெண்ணை யென்றொரு கூச்சல்"
பணப்பேய் வடிவாய்ப் பகாசுர நரகன்
அங்கே ஓடி ஆடிடக் கண்டேன்
எனதியான் என்னும் இறுமாப் பாலே
மனிதனை மனிதன் மதியாது தெம்புப்
பேச்சிலும் வீச்சிலும் மூச்சிலும் அரக்கன்
பிரியமாய் வாழும் உரிமையைக்கண்டேன்
அணுகுண்டுடனே ஆணவக் குண்டன்
உலகை அழிக்கும் ஊழிக் கூத்தைக்
கண்டேன்-கண்ணனைக் காணத் தவித்தேன்
அன்புக் கலையில் ஆழ்ந்த கவிகளின்
இன்பவுள்ளத்தில் இருக்கிறேன் என்றென்
யோகக் கனவில் மோகனக் குழலிசை
கேட்டேன் உள்ளக் கிளர்ச்சி கொண்டேனே.
தீபத் திருவிழா திருவுற வேண்டின்
அறிவுந் தொழிலும் அன்பும் அருளும்
ஒருமையும் குலவும் பெருமையிற்கூடி
ஒன்றே யுலகம் ஒன்றே உயிரினம்
ஒன்றே கடவுள் என்றே வாழும்
பொன்னுள் அதுவே நன்றாகப்
போற்றி முயலுக பூவுல கிரே !



பாரதியும் டாகூரும்

கி. சந்திரசேகரன்

சில ஆண்டுகளுக்கு முன்வரையிலும்கூட பாரதியார் மகா கவியா இல்லையா என்ற சந்தேகத்தைச் சிலர் கிளப்பிக்கொண்டு விவாதித்த விவரம் பலருக்கு ஞாபகமிருக்கலாம். தாங்களே அமரத்துவம் அடையத்தயாராகிக்கொண்டிருக்கையில், பாரதியாரை அமரத்துவம் படைத்த மகாகவி வரிசையில் வைக்க அவர்கள் தயங்கினார்கள். பாரதியாரை மகாகவிதான் என்று உறுதி மொழி தந்தவர்களும், சமீபத்தில் உள்ள மற்றக் கவிகளெல்லாம் அநேகமாய் சாதாரண மானவர்கள்தாம், பாரதியார் மட்டும் உண்மையான கவி பரம்பரையைச் சார்ந்தவர் என்று மிகுதிப் படுத்தியே வாதாடினர்.

இதனிடையில் மகா கவியின் லட்சணங்கள் யாவை என்பதை விளக்கிக் கூறவும் முற்பட்டனர் இரு தலைச் சேர்ந்தவர்களும். ஆனால் பாரதியார் தமது கவிப்பெருக்கை உலகிலே விழ்ச்சியைப்போல் பொழியத் தொடங்கியகாலம் முதல் துளியும் சந்தேகமின்றி ரவீந்திரநாத டாகுருக்கு அஞ்சலி செய்து மகா கவி என்றே அவரைத் தொழுது வந்தார். பாரதியாருக்கு ரவீந்திரரைக்கண்டு அவ்விதம் மகாகவிதானு அவர் இல்லையா என்ற சந்தேகம் முளைக்காததோடு, தமது பாட்டுகள் ஒன்றிலும் டாகுருடைய கவி வன்மையை அழகாய் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

பாரதியாருக்கு ரவீந்திரநாத டாகுரிடம் மகாகவி என்ற மதிப்பு ஏற்பட்டதற்காக நாம் பாரதியாரை மகாகவி என அழைப்பதா என்று மேலும் ஓர் சந்தேகம் எழலாம். அவர்களில் இருவரும் மகா கவி தாமா என்பதல்ல இங்கு குறிப்பது. ஒருவரை மகாகவி என்று உணருவதற்கு மற்றொருவரிடம் கவிப்பண்புகள் முதலில் இருக்கவேண்டும். இல்லையேல், தங்கள் சொந்த அளவுகோலைக்கொண்டுதான் பிறரையும் அளந்துபார்க்கத் துணிவார்கள். அவ்வித சந்தேகப் பிராணிகள். இன்று காடு அடைந்துள்ள முன்னேற்றம் இவரிடையே வேற்றுமைகளை மட்டும் புகுத்தி இருக்கிறது. அவர்கள் சந்தேகிப்பது யாதெனில்: "டாகுரை,— ஓர் வங்காள தேசத்து கவியை,— பாரதியார் புகழ்ந்தாரே, டாகுர் பாரதியைப்பற்றி எங்காவது இதே விதம் கூறி இருக்கிறாரா? பாருங்கள்" என்றுதான். டாகுருக்குப் பாரதியை அறிமுகம் செய்விக்கும் மொழி பெயர்ப்பு இல்லாத குறைவேதான். முக்கியமாய் டாகுருக்குப் பாரதியின் கவிச்சிறப்பை அறியவோ அல்லது அறிந்தபின் தமது புகழுரையைப்பலர் அறியப்பிரகடனம் செய்யவோ வாய்ப்பு ஏற்படவில்லை. டாகுருடைய உயர்வை விளக்கும் பல ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் பாரதிக்குக் கிடைத்ததால், அவர் கவிப்பண்புகளின் மேன்மைகளைக்கண்டு மகாகவி ஒருவனுடைய வரம்பற்ற சக்தச்செறிவை டாகுரிடம் உணர்ந்தார். எதிலும் கலபமாய் வேற்றுமை கொண்டாடுகிறவர்களால் காரணம் தேடி சமாதானம் அடைய இயலுவதில்லை. அவர்கள் சதா, "பார், தமிழன் பிற மொழியிலுள்ள டாகுரை அனுப்விக்கவும், புகழவும் தொடங்குகிறான். ஆனால் வங்காளி தமிழனிடம் சீக்கிரம் தன் மனத்தைப்பறிகொடுக்க இணங்குகிறதில்லை. எல்லாம் தமிழனிடமுள்ள பிற தேசத்தவரின் பால் மோகம்" என்றே வழக்காடுவார்கள்.

தமிழனிடம் காணும் பெரும் குறைவாய் இக்குணத்தை எதனால் எடுத்துக்காட்டவேண்டுமோ தெரியவில்லை. ஏனெனில், தமிழனுடைய அழியாச் சிறப்புக்கு இக்குணமே ஓர் எடுத்துக்காட்டாகலாம் அல்லவா? பரந்த மனப்பான்மை யாருக்கு இருக்குமோ இருக்காதோ, கவி எனக் கருதப்படுபவனிடம் இருந்துதான் ஆகவேண்டும். பரந்த மனமில்லாதவனிடம் கவிதைக்காதலி துளியும் ரகசிய சந்திப்பை விரும்பாள். கவிதை வளருவது அறிவுக்கண்ணை உபயோகிப்பதொன்றாலேயே. அறிவுக்கண் என்பது வெறும் கண் மட்டுமல்ல. எதிரே காணப்படுவதை 'போட்டோ' வைப்போல் தன் வசம் வைக்கும் கருவியல்ல கண். இன்னும் கூர்ந்து உள்ளே பார்த்து மேலுள்ளவற்றையும் விலக்கி உட்கருத்தின் அடிப்படையை அணைய முற்படுவது ஒன்றே திருஷ்டி எனப்படும். கவி திருஷ்டி என்பதை இவ்விதமே உலகம்—அதிலும் ரசிக–உலகம் வெகுகாலந்தொட்டு உணர்ந்து வந்துள்ளது.

ரவீந்திரர் பாரதிக்கு முன்னும் வாழ்ந்தவர், பின்னும் வாழ்ந்தவர். எண்பதாண்டுகள் முடிவடைவதற்காகக் காத்திருந்து யமன் அவரைத்தன் பாசக்கயிற்றுக்கு இரையாக்கினான். பாரதியை நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்குள் விதி வழிமறித்துக் கொள்ளைகொண்டது. இருவரிடையேயும் வித்தியாசங்கள் இல்லாமலில்லை. ஒற்றுமைகளும் சில இருந்தன. வேற்றுமைகளில், வயசு, சூழ்நிலை, வாழ்க்கை ஸ்திதி இவை இருவருக்கும் வெகுவாய் வித்தியாசமாயுள்ளன. ஒருவர் பெரிய குடும்பத்தைச் சார்ந்தவராய், வறுமையைச்சிறிதும் அறியாதவராய் வாழ்ந்தார். மற்றவர் வறுமையிலும் வறுமையில் திண்டாடிவிட்டு, தன்னைக்கேட்ப்பாரற்ற ஓர் விவரிக்கவொண்ணாத சூழ் நிலையில் அகால மரணமடைந்தார். ஆயினும் கவி இதயம் மட்டில் இருவரிடமும் ஒன்றுபோல் குமுறி இடத்தான் செய்தது. டாகுருக்கு மட்டும் புகழ்மாலைகளே வந்து விழுந்தனவா? இல்லை; புகார் கூறுபவர்களும், விரோதிகளும் மண்டிக்கிடந்தனர் அவர் வயசு ஐம்பது நிறையும் வரையில் .ஒன்றையுமே அவர் பொருட்படுத்தவில்லை. பிற்பாடு புகழ் பாக்கள் அவரைச் சதா தாலாட்டுகையில் ஹாஸ்யச் சுவைமிலவ அவர் கூறினார் "என் கவிதையைப்பாராட்டும் பகுதியும், இகழும் பகுதி

யும், உண்மையில் இந்த பூகோளத்தில் காணும் நில நீர்ப் பரப்புகளின் அளவிலேயேதான் வெகுகாலம் வரையில் காணப்பட்டன'' என்றார்; அதாவது நிலத்தைப்போல் கால் பாகமே பாராட்டு வந்ததாம். உலகில் முக்கால் பாகம் நீரைப்போலவே அவரிடம் குறைகளையே காட்டியவர்தாம். ''ஆனால் இன்று மண்ணை வாரி இறைப்பவனே நாளை மாலைகளுடன் வீட்டு வாசலில் காத்திருப்பான். இன்று தவித்து தூர நிற்பவர்களே நாளை கூட்டத்துடன் சேர்ந்து மண்டியிட்டு வணங்குவர்'' என்றொரு கவியில், வெகு ஆழமான உட்பொருள் பதுங்கியபடி பாடினார்.

அவ்வித உரம் நெஞ்சில் இருப்பவனே மகாகவி ஆகிறான். தான் அழியாதவன் என்ற நம்பிக்கை இல்லையேல், அவன் பாலாரிஷ்டங்களுக்கு இறையாகிவிடுவான். பாரதி யாரிடமும் டாகுரைவிடத் துளியும் குறைந்த தைரியம் சுய மதிப்பில் இல்லை. தன் பாட்டுக்களை அச்சிட முடியாத சமயத்திலும் அவர் நா பாடிக்கொண்டே பல செவிகளில் அவைகளை நிரந்தரமாய்த் தேக்கிவிட்டது. தமிழை அவர் நேசித்த முறையே தனி. தமிழின் இனிப்பைப்பருகுவார். ஆனால் ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு, வங்காளம் எதுவும் அவருடைய நாவின் ருசியை சப்பென ஆக்கிவிடவில்லை. தேன் பாகை விரும்பும் நாக்கு, சுவையூட்டும் எத்தனையோ இதர பண்டங்களை விரும்பாதா? ஓரளவில் டாகுரை விடவும் பாரதிக்குத்தான் இதர பாஷைகளில் பிரவேசம் எனலாம். ஆங்கிலமும், ஸம்ஸ்கிருதமும், வங்காளமும் டாகுருக்கு உணவூட்டின. பாரதிக்கு அவைகளுடன் நில்லாமல், இன்னும் ஒன்றிரண்டு இதர பாஷைகளும் சேர்ந்தே விருந்தோம்பின. மேலும் தென்னாட்டு மரபின்படி பாரதியார் தமது அநுபவங்களை பல்வேறு இலக்கியங்களிலிருந்தும் விரிவாக்கிக்கொண்டே போனார். தமிழிலே காணாதவைகளை ஸம்ஸ்கிருதத்திலும், இரண்டிலும் பார்க்கப்படாத அதிசயங்களை ஆங்கிலத்திலும் பாரதியார் உணர்ந்து உற்சாகமடைந்தார். டாகுருக்கு அறிய இயலாத வறுமையையும் பாரதியார் அடைந்ததால், இன்னும் சீக்கிரமே அனுபவங்களைத்திரட்டும் உழைப்பில் ஈடுபட முடிந்தது.

இருவருக்குமுள்ள வித்தியாசங்களை நினைத்தால் சில விஷயங்கள் தெளிவாகின்றன. டாகுருடைய கலை அம்சங்கள் ஓர் எல்லைக்குள் அடங்கா. இலக்கியம், சங்கீதம், நாடகம், நாட்டியம், ஓவியம் எல்லாமே டாகுரிடம் அடிபணிந்தன. பாரதியின் வசம் சங்கீதமும், இலக்கியமும் அடைக்கலம் புகுந்த அளவு இதர கலைகள் நெருங்கவில்லை. அதனால் பாரதிக்கு இதர கலைகளில் ருசியில்லை என்பதற்கில்லை. ஒரே ஒரு பாட்டின் இடையேயும் தமது கலை ஞானத்தை அவர் வெளியிடும் சாமர்த்தியம் படைத்தவர். ஓவியமும் நாட்டியமும் அவரிடம் தங்கள் சரக்குகளை மறைக்கவா முடியும்? இருப்பினும், பாரதியாருக்கு சூழ்நிலையும், ஆயுளும் மிகமிக மட்டுக் கட்டிவிட்டதால், பூர்ண பொலிவுடன் தமது கவிதையிலுள்ளதைப்போல் மற்றவைகளிலும் தம் சக்திகளை உருவாக்க இயலவில்லை. காவியங்களிலும் எல்லாவித வகைகளையும் அவரால் நிருமாணிக்க இயலவில்லை. டாகுருடைய வியாபித்த அறிவும், பல தேசங்களைச்சுற்றிவந்த பண்பாட்டின் பயனும் பாரதிக்கு இல்லைதான். கற்பனையினால் முழுவதுமே பாரதி அளந்தார் தமது கவி உலகை. டாகுர் கற்பனையைச்சிறிதும் குறைக்காவிட்டாலும், வாழ்க்கையின் பல தரப்பட்ட அநுபவங்களையும் பெருக்கியவர். ஈசன் அருளிய பல சௌகரியங்களும் அவருடைய மேதையை விகசிக்க வைத்தன.

மகாகவியொருவன் பாஷைக்கு அடிமையாகமாட்டான் என்பதை இருவரும் நிரூபித்துள்ளார்கள். பாஷைக்கூட்டில் உள்ளத்தின் உவகை பூக்கும் அனுபவங்களை அடைப்பது அவ்வளவு சுலபமல்ல. கவிகள்தாம் இதனை நன்கு உணர்ந்தவர். கற்பனை எழில் பாஷைக்கும் தாண்டி நிற்பது. அநுபவம் என்ற பாலில் தேரும் திரட்டிப்பால் அது. உண்மைக் கவிதை அநுபவத்துக்கு வாழ்க்கை ஒன்றே இருப்பிடம். கேவலம் பாஷையல்ல. பாஷை செய்யக்கூடியது ஒரே ஒரு சேவைதான். சட்டியில் உள்ள வெண்ணெயை எடுத்து வழங்கும் ஆப்பையை ஒத்தது பாஷை. ஆப்பை மரத்தினாலுமிருக்கலாம், தங்கஸ்பூனாகவும் இருக்கலாம். வெண்ணெ சுத்த வெண்ணெயாய்த்தான் இருக்கும். அன்றொருநாள் கண்ணன் ஆயர்பாடியில் தேடிய வெண்ணெ தங்கச்சட்டிகளில் அகப்படவில்லை என்பதை நினைந்தால், வெண்ணெயை வைக்கும் பாத்திரம் அவ்வளவு முக்கியமல்ல என்பதை உணர முடியும். எளிமையும், இனிமையும் கூடிய பாஷை எதனால் உலக மக்களனைவரையும் ஒன்றாக்கி விடுகிறதென்பதை தீர விளக்கப் புகுந்தால், அப்பொழுது அறியலாம் கருத்து விரிய விரிய படாடோபமான உடையை அது விரும்பாது என்பது. கதிரவன் ஒளி சுத்த தேஜோ மயமாய்க் காண்கிறது. மேகங்கள்தாம் பல வண்ணங்களை அணிகின்றன. மேகங்களையா சூரியனுடன் ஒப்பிட முடியும்? ஒளி திகழும் எண்ணம், உள்ளத்தின் ஒளியை நம்பி வாழ்கிறது. உள்ளம் வெளியாவதும் அதிகமான ஆடை அலங்காரங்களால் அல்ல. அகத்தின் அழகு முகத்தில் தெரிவதை ஒத்ததே கருத்தின் ஆழம் பாஷையின் எளிமையில் புலனாவதும். பாரதியும், டாகுரும் பாஷை வரம்பைக் கடந்தவர்களாவதன் சூட்சுமம், உள்ளத்தின் உண்மையை மட்டும் அவர்கள் வெளியிட உபயோகித்த சொற்செட்டும், உவமை ஊன்று கோலுமேயாம். ★



டாகுரைப்பற்றி—பாரதி

....உலகெல்லாம் புகழ

இன்ப வளஞ் செறி பண்பல பயிற்றும்

கவீந்திர முகிய ரவீந்திர நாதன்.

திருமணம்

திருமணம் ஒத்த நலனும், ஒத்த அறிவும், ஒத்த அன்பும் உள்ள இரு மனங்களின் பிணைப்பு—இது இன்றையக் கொள்கை.

திருமணம் ஆண்—பெண் இரு பாலரின் வம்ச வளர்ச்சிச் சடங்கு—இது முன்னாள் கொள்கை.

வம்ச வளர்ச்சிக்காகத்தான் திருமணம் அன்றும், இன்றும், என்றுமே நிகழும் சடங்கு. காலம் என்னும் சங்கிலியில் மனித உயிர்கள் பிறந்து பிறந்து ஒட்டியும் வெட்டியும் வாழ்ந்துகொண்டே இருக்கும் மகத்தான வாழ்வுக்கு ருசி தருவது, பற்றுக்கோடாக விளங்குவது திருமணம்.

ஆடவனுக்காகவும் அழகு நங்கைக்காகவுமுள்ள, உடற் தோற்றமே திருமணம் என்ற நினைப்புத் தவறானது: காதல் இன்பத்தை அணையிட்டு வாழும் மார்க்கம், இச்சையைப் பூர்த்தி செய்யும் சுருக்கு வழி, உலகம் என்றும் உய்யத் திருமணம் என்றெல்லாம் எண்ணலாம். திருமணம் ஆடவன்-நங்கை என்ற இருவர்கள் நலனுக்காக அல்ல. பெற்றோராக வாழ்வதற்குப் பிள்ளைகளைப் பெற்றெடுக்கத் திருமணச் சடங்கை நியமித்தார்கள். மனித வர்க்கம் அழிந்து விடாதபடி ஆறறிவு மங்கிவிடாதபடி சுடர் தெறிக்கும் அழகும் சுற்றஞ்சூழ வாழும் அறிவும் பெறுவதற்குத் திருமணம் முதற் படி. மனித வர்க்கத்தின் நலனும், சமுதாயத்தின் கவலையும் பின்னிப் பிணைந்த காரணத்தால் திருமணத்தைப் பற்றிய சட்டதிட்டங்கள் எழுந்தன. தனி மனிதர்களின் ஆனந்தப் பூர்த்தியாக இருந்தால், சட்டங்கள் பிறவா.

காலச்சுழலில், திருமணம், உடற் சிக்கனத்தின் காரணத்தை உணர்த்தி, சிந்தையின் விரிவைத் தெளிவாக உயர்த்திச் சொல்லிற்று. மனிதன்—நாகரிகமற்று நாடோடியாய் வாழ்ந்த காலத்தே, கூட்டங் கூட்டமாய் மனித மந்தை திரிந்த காலத்தில், திடகாத்திரமும் திண்தோளும் நிறைந்த வலுவுள்ள தலைவன் பிற கூடத்திலே புகுந்து, அழகென மதிக்கும் ஆரணங்கை, கோழியைக் கவ்வியோடும் நரிபோல தூக்கிப் போனான்.

காலம் ஓடிற்று.

பூமியும், மழையும் அருள் சுரக்கச் சுரக்கச் செல்வங்கள் குவிந்தன. மனித மனத்திலும் காருண்யம், நேர்மையென்ற பண்புகள் அரும்பின. மிருகத்தைப் போல அழகியை இழுத்துச் செல்லாமல், காலவளர்ச்சி தந்த மனப் பண்பு பேசிற்று: தான் பெற்ற மலை படு பொருள்கள், விளைபொருள்கள், ஆடு மாடு இவை கொணர்ந்து குவித்து, பெண்ணைப் பெற்ற தந்தையிடம் காணிக்கை தந்து நின்றான், ஆண் மனம் வலிமையிலிருந்து வன்மைக்கு வந்தது. பெண்ணை வாங்கும் பொருளாக எண்ணிற்று, சூறையாடப்பிடிக்கும் பொருளல்ல பெண். கேட்டு வாங்கும் பொருள் என்ற அறிவு ஆண் மனதில் பிறந்தது.



"சுகி"

யார் யாரிடம் செல்வச் செழிப்பான நிலபுலங்கள், ஆடுமாடுகள், ஆட் படைகள் உண்டோ அங்கே அழகிய மங்கைகள் குவிந்தனர். பல தாரக் கொள்கைக்கு அவசியம் செல்வச் செழிப்பாயிற்று. அதே சமயம், பெண்களை விட ஆண்களுக்குச் சாவு அதிகம்; பிறருடைய படையெடுப்பு, சண்டை, கலவரம், ஆண்கள் அழிவிற்கு வழிகள். இனவிருத்தி யென்ற காரணத்தாலும். பதி-இழந்தவர்கள் என்ற அனுதாபத்தாலும் முடிந்தவரை அதிகமான திருமணங்கள் ஆடவர்களுக்குள் படிப்படியாக அவசியமாகவும், ஆடம்பரமாகவும், அலங்காரமாகவும் கொள்ளப்பட்டன.

பிள்ளைப்பேறு தந்த நோய்மை-பலவீனமுள்ள—பெண் உடம்பைக்கண்டபோது, தன் இச்சைக்கு வாகுள்ள உடம்பு தேடியும், ஆண்மனம் பல பெண்களைக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றது. பலரக மாதர் அழகும், அனுபவமும் ஆண் மனத்துள் அடங்காத போதையை வளர்க்க வளர்க்க, பின்னிட்டு போதை ஆண்களை வளர்க்கத் தொடங்கிற்று.

பலதாரத்தால் நிறையக் குழந்தைகள் என்ற மகிழ்ச்சி. ஒரு தாரத்தைவிட நிறையக் குழந்தைகள் பெற ஒரே வழி பலதார மணம். காரணம், போர் வெறியும் வியாதிச்சூறையும் விழுங்கியவை போக, எஞ்சக் கூடிய அளவு பலதாரங்களே மக்கள் தந்தனர்.

வரவர, மனித அறிவு வளர வளர, இயற்கையின் கோர தாண்டவம், பிற மனிதனின் அறியாமைத் தாண்டவம் இரண்டையும் எதிர்க்கும் ஆற்றல், சிந்திக்கும் பழக்கம் ஏற்பட்டது. நோய் நொடியும், போர்த்தொல்லையும் மங்கின. அவ்வமயம் பல தாரங்கள் தேவையற்றுப் போய் ஒரு தாரமே வாழ்வுக்குப் போதும்; அவள் வழி மக்களே உலக வாழ்வுக்கு ஏதேஷ்டம் என்னும் உண்மையை அறிந்தனர்.

தேவையுள்ள குழந்தைகள், குழந்தைகளைப் பராமரிக்கப் போதுமான ஆட்கள், நிறைந்த செல்வத்தைப் பங்கிட்டு உண்ணும் குறைவான வயிறுகள், இவை கிடைத்ததும் மனிதன் கூட்டங் கூட்டமாக வாழ்வதைவிடத் தனித் தனியே கூட்டத்திலிருந்து பிரிந்தான். குடும்பங்கள் பிறந்தன. வீட்டுக்கு வெளியே கூட்டத்தினர் சொத்தாக பொதுமை நிலவிற்று. தான் தனது என்ற உடைமைகள் வீட்டுக்குள்ளே வந்துவிட்ட சொத்துக்கள்—அச்சொத்துக்களுக்கு உரிமை என்ற நியதிகள் ஒருசிலருக்குள் பிறந்தன. முக்கியமாகப் பெண்ணினத்திற்கு ஒரு தாரத்தால் மனநிம்மதி பிறந்தது. தனக்கும், தன் குழந்தைக்கும் உடைமை என்ற திருப்தி பிறந்தது. ஒருகாலத்தில் வலிமைக்கு வணங்கும் பொருளாக இருந்த பெண்மை, கேட்டு வாங்கும் பொருளாக வந்து, கால வெள்ளத்தில் ஆண்மைக்குச் சரிநிகர் சமானம் என்ற அந்தஸ்தையும் வீட்டுக்குள் அடைந்தது.

ஆண் மனத்துத் தினவுகள் உடல் வலுவின் மூர்க்கப் பண்புகள், பெண் உள்ளத்து உடலின் வேட்கையால் திருந்தின. மிருகமாக வாழ்ந்த ஆண் உள்ளத்தைப் புனிதமாக்கி, பூப் போன்ற வனமாய் வளர்த்தது பெண் உள்ளம். இந்நிலையிலும் வீரத்தையும், தன்னுடைமையைக் காட்டுவதற்கும், பிறரைத் தொடாதே என்று சுட்டுவதற்கும், கொன்று வந்த புலியின் நகத்தையும் பற்களையும் கோத்து முடிச்சுப் போட்டான். ஆதியில் தன் செல்வத்தை, வீர சௌந்தர்யத்தைத் காட்டுவதற்குப் பிறந்த புலிப்பல் சின்னக் கயிறு பிற்றைநாளில் வழக்கம் காரணமாகத் தாலிச் சரடாகி மணவினைக்குச் சின்னமாயிற்று. மேலை நாட்டிலே கல்யாணச்சின்னம் விரல் மோதிரமாக நிற்க, மற்றைய நாடுகளில் தாலிச்சரடாக இருக்கிறது. புலிப்பல்லும் நகமும் மறைந்து மறைந்து வெள்ளியும் தங்கமும், வைரமும் கூட தாலியிலே ஏறிக்கொண்டன.

பெண்ணுக்குத் தாலி அவள் கற்பின் வேலியாகப் பிறர் கண்ணில் பட்டன. போர் காரணமாகவோ பிழைப்பின் பொருட்டோ ஆடவன் போய்விட்டால் தனித்து வாழும் பெண்ணைக் கண்ட ஆண் மனம் அடங்கி நடக்க, விஷப் பாம்புக்கு வேர் போல தாலி புத்தி சொல்லிற்று. பெண் மனத்தின் நேர்மைக்கு அடிமைத் தளையாகத் தாலி தொங்கவில்லை. ஆண் மனத்தின் விலங்கு மனத்திற்கு அது விலங்காகத் தோற்றம் தரவே பின்னாளில் வளர்ந்தது.

இந்நிலை தமிழகத்தைப் பொறுத்தவரை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் நாகரிகம் அடைந்துவிட்ட நிலையாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம். உடற் கவர்ச்சி ஒன்றே உயிர் நாடி எனப்பிறந்த ஆண் உள்ளத்தே, பண்பட்டு பண்பட்டு, உன்னத எண்ணங்கள் வளர்ந்தன. உடல் நாகரிகத்தின் வழியே உள்ளத்தின் நாகரிகங்கள் பல பிறந்தன. பச்சை ரத்த உடம்பிலே பசுமையான கனவுகளைக் கண்டார்கள், ஆண் மனத்து மல்லர்கள்.

வீரமும் காதலும் வேறு வேறு அல்ல, ஒன்றென்ற உண்மையும்; வாலிபமும் வயதும் சந்திக்கும் பருவத்துச் சொல்லுக்கும் அடங்காத சொகுசுச் சுடர் தெறிப்பதையும்; உடல் இன்பத்திற்கு அப்பால், வேறு சில மனத்தின்பங்கள் வேண்டியும், பெண்ணை வாழ்த்தி வணங்கவும் தாழ்ந்து தலை குனியவும் ஆண் குலம் ஆரம்பித்தது.

என்றோ ஒரு காலத்தில், ஒரு கிழங்கை உண்ண மனிதப் பிண்டம் ஒன்று, மற்றொரு மனிதப் பிண்டத்தோடு குஸ்தி செய்ததுபோல, பெண்ணின் காரணமாக யுத்த களங்களே பிறந்தன. பூ முகத்துப் புன் சிரிப்புக்காக, பூமியிலே மடிந்தார்கள். பெண்ணின் கடைக்கண் மணியைக் காவியமாகப் பாடினார்கள். உடல் வளமும், மென்மையும் தவிர ஏதும் அறியாப் பெண்ணின் காலடியில், எல்லாம் அறிந்த பலிஷ்டர்கள், பராக்கிரமர்கள், பணிந்து தாழ்ந்து பதம் பாடி வணங்கி நின்றார்கள்.

அழகு, ஆண்மையை அடிமைப்படுத்திற்று. மென்மை வன்மையை வளைத்துப் பதியம் போட்டது; அன்பு, அறிவை வென்றது. அழகும் மென்மையும் அழியும்வரை அடிமையாகவும் பணிவாகவும் இருப்பது ஆண் மனம். நடைமுறையில் இருந்து வந்த பழக்கம். அன்பின் செழுமை அறிவிலே கூர் திட்டித் திட்டி அழகும் மென்மையும் மறைந்த பின்னும் தன்னைத் தள்ளாதபடி அன்பு வலையில் பிடித்து வைத்து வளர்க்கவே, ஆண்மகன் பிறபெண்ணை ஏறிட்டுப்பார்க்காத பெரு உள்ளம் பெற ஆரம்பித்தான். திருமணத்தின் வெற்றி அதன் சிகரம் ஒளிவிடும் காலம் பிறந்தது. பயனும் பருவமும், அழகும் மென்மையும் தாண்டி, உடலை உடல் மறந்து மனப் பக்குவம் பெற்றது. காட்டுமிராண்டித்தனத்தில் பிறந்த திருமண வாழ்க்கை, உள்ளம் உள்ளத்தை விரும்பும் காதல் அன்பின் வழி நிற்கும் இடமே ஒரு தார உள்ளமாய்ப் பரிமளித்தது. ஒருவரை விட்டு ஒருவர் இறந்தால் கைம்மை நோற்பது மறு மணம் செய்வதில்லை யென்ற மனத்திட்பம், அன்பினால் வந்தது. நாளாவட்டத்தில் சமுதாய சம்பிரதாயமாகவும் எழுதாச் சட்டமாகவும் வேரூன்றி விட்டது.

2

திருமணத்தில் பெண்மையின் பங்கை அவள் மனம் வழியே அறியலாம். இன்று சரிநிகர் சமானமாக வாழ விரும்பும், வாழும் பெண்ணினம் ஆதி வாசியாக வாழ்ந்த காலத்து இரும்புக் கரத்துக்குப் பயன்படும் ஈயாகத்தான் வாழ்ந்தாள்.

கால வெள்ளத்தில் பெண் செய்யக்கூடிய பேறு மகப்பேறு ஒன்றையே அவள் செய்தாள். பொருள் ஈட்டுதல் போர் புரிதல், சாவின் பயங்கரம், இயற்கையின் நோய் நொடி விஷத்தன்மைப் போராட்டங்கள் அவளைப் பாதிக்காது நிற்பன. வீடு அவளுக்கும், வெளியுலகம் அவனுக்கும் என்ற பிரிவினை கூட நிகழ்ந்துவிட்டது.

பொருள் தேடுவது ஆண். போற்றித் தருவது பெண். தான் உண்டு. தன் வீடு உண்டு. தன்னொத்த தோழியர் உண்டெனை இருந்தார்கள். இவ்வாறு பெண்களுக்குப் போதும் அவகாசமும் இருந்த காரணத்தால், விளையாட்டுகளும் சிறு சிறு பாடல்களும், உல்லாசப் பேச்சுகளும்-இவையெல்லாம் கலையின் தளிர்கள் — பிறந்தன. ஆதிப் பெண்ணே சங்கீதம், சிற்பம், ஓவியம் வரைந்திருக்க முடியும். அறிவின் திறமும் உலகத்தோடு அலைந்து அநுபவமும் பெற்ற ஆண்; கலை விருத்தி செய்து தொழிலாக்கி இருந்தல் சாலும். கல்வியைப் பொறுத்தும் கொலைக்கருவி அல்லாத துணைக் கருவிகளும் கூட பெண் மனத்து இயல்பால் வளர்ந்திருக்கலாம். மனை நலங்கள், மக்கள் சமுதாய

நலங்களுக்குப் பெண் மனமும் நலமுமே. பொறுப்பு, போர்க் கருவிகள், கொலைக் கருவிகள், வாழும் வகைகள் ஆண் மனத்து வளர்ச்சிச் சரக்குகள்.

நிறையப் பொழுதும் படைப்பிலே இளகிய மனமும் இருந்த காரணத்தால் ஆய கலைகளுக்கு அடிகோலிய பெண்ணே, நாகரிகம் வளர வளர மேலை நாட்டில் சென்ற நூற்றாண்டு யந்திர பூதத்தின் சிரிப்பிலே பங்கு பெற்றார்கள். இந்தியா போன்ற நாட்டிலே மனை விளக்காய் இருந்தார்களே தவிர, தெரு விளக்காக மாறத் தைரியமில்லை. இந்த நூற்றாண்டில் இங்கும் மனைவிளக்குகள் நடுவீதிக்கு வந்து விட்டனர்.

யந்திர நாகரிகம் வளர வளர, உணவுத் தட்டுப்பாடு நெருங்க நெருங்க, பெண்ணும் உழைக்க வேண்டிய, உடலைப் பிழிய வேண்டிய வகைக்கு இலக்கானாள். பொருளாதாரச் சிக்கல், அரசியல் ஞானம், வாழ்க்கைப் பிரச்னை யென்ற அறிவுப் பெருக்கம் ஏற்பட ஏற்பட பெண்ணும் ஆண் மகனாக உழைக்க, ஊர் சுற்ற, உள்ளம் நைய ஆரம்பித்தாள். வீட்டிலும், தோட்டத்திலும், தோப்புத் துரவிலும் உடன் உதவியகாலம் போய், பட்டறைகளில் செமெண்டுச் சாலைகளில் ஆண் மகனோடு சுமை தூக்கும் யந்திரமானாள். எம்மையும் கைகோத்துச் சேர, நடுவீதியில் உழைக்கும் ஆணோடு சகல தொழிலுக்கும் போட்டியிட்டாள்.

கிராமத்துப் பரப்பிலே வாழ்ந்த காலத்து குழந்தைகள் செல்வமாக மதிக்கப்பட்டன. நெருங்கிய பட்டணத்திலே தரையிலாவது மாடிக்கு மாடி ஆகும் காலத்து, குழந்தைகள் தொல்லைதரும் பொருள்: இடவசதி எமனாய்ப்போயிற்று. எங்கே பார்த்தாலும் மனித யந்திரங்கள் வேலை வேலையென அலைய ஆரம்பித்தன. பொருளாதாரச் சிக்கலினால் மனித குலம் என்னதான் அறியாமைச் சுழலிலிருந்து தப்பினாலும், அறிவை பெற்றாலும், வறுமைச் சுழலிலிருந்து தப்ப முடியாமல் தனக்கும் நிலையை எவ்வாறோ நிலைக்க வைத்து விட்டனர். அரசியல் வாதிகள், எங்கும் வறுமை வறுமை, ஏழ்மை ஏழ்மை. பசி பசி.

மேனாட்டுக் கல்வி முறையின் துணையும், சமுதாய வளர்ச்சியின் பாங்கும், சமத்துவம் என்ற மனப் பக்குவமும் இன்றைய நாளில் சேர்ந்து, குமஸ்தா வேலைக்கு உடன் கற்கிறார்கள். மோட்டாரிலும், ரயிலிலும் ஓடி வருகிறார்கள். கடைகளிலும், அலுவலகங்களிலும் ஆணோடு தோள் இடித்து அணங்குகளும் வருகிறார்கள். நாகரிகத்தின் கன்மை நிலைகளில் விழ்ந்து விட்ட ஆண் குலத்தை, பெண் குலமும் காப்பியடிக்கிறது, மேலை நாட்டிலே சிகரெட்டும், கால்சராயும் கூட பெண்களின் உடைமைகள், இந்தியாவில் ஆடை வேஷத்தில் அல்ல, ஆண் மகனின் மனத்துடைமைகள் அத்தனையும் பெண் குலத்துக்குப் பரவுகிறது.

ஆதி காலில் உணவு உடை கிடைப்பது எளிது: நோய் கொடிய பயம் அதிகம்: பிறந்தடைய திங்குகள் தொல்லைகள் அதிகம். இன்றைய வாழ்வில் பிறர் தொல்லைகள் திங்குகள் கொடிய கொடிய பயங்கரங்கள் குறைவு. ஆனால் உணவுக்கும் உடைக்கும் படாதபாடு படவேண்டும் என்ற நிலைமையாக மாறிவிட்டது. ஒவ்வொரு நாளும் பொழுது விடிந்து அடைவதற்குள் பொருளாதாரப் பிசாசு ஆயிரம் தடவை விழுங்கித் துப்புகிறது. அறிவின் பெருக்கம் வந்தும், விஞ்ஞானச் சூழல் நிறைந்தும், மக்கட் பண்பு வளர்ந்தும் பொருளாதார [illegible] வளர விடவில்லை. வனப்பு [illegible] விடவில்லை.

காதல் அரும்புகிறது. கனவு காண்கிறார்கள். அன்பு பிறக்கிறது. ஆர்வம் துடிக்கிறது பணப்பையில் கனமில்லை. திருமணத்திற்கும் அதன்பின் தொடரும் இன்ப துன்பங்களுக்கும் பணம், பணம், பணம் தேவை. காதல் அரும்பினாலும், கடமை உன்னித் தள்ளினாலும், பணக்குறைவு முளையிலேயே கிள்ளிவிடுகிறது. காலஞ் செல்லவேண்டும். காசு பணம் சேர்த்துக் கல்யாணம் செய்யவேண்டுமென்ற கடின உழைப்புக்குள் விழுகிறார்கள். அப்போதும் போதிய பணமில்லை, பண்புள்ளவர்கள் உள்ளம் நைந்து உடல் குன்றி மெலிந்து சோகை பிடித்தவர்களாக வாழ்கிறார்கள். பண்பை மறந்தவர்கள், கொண்டதே கோலமாய் வாழ முயற்சி செய்து, தன் வழியில் உலகம் வர ஆட்கள் சேர்கிறார்கள். வயது ஏற ஏற பண பலம் ஒருவாறு நிலைக்கிறது. காசு பணம் சேரும்போது கட்டழகு குறைந்து, ரத்த நாளங்களின் இனிய துடிப்பும் போய் பசையற்ற உடலுக்கு பஞ்சணை மெத்தை போடுகிறார்கள். கல்யாணத்தைப்போல காலமறிந்து செய்ய வேண்டிய சடங்குகள் வாழ்க்கையில் வேறு இருக்கவே முடியாது. பருவ மழை பெய்து பால் பிடித்து வாழ வேண்டிய பயிருக்கு, காலந்தவறி மழை பெய்தால் பலன் சாவி ஆவது போல, குழந்தைகளின் திடனும் திறமும் பாதிக்கப்படுகின்றன.

திருமணமின்றி மனித வர்க்கத்தில் எத்தனை சதவிகித வயது வந்தவர்களால் வாழ முடியும்? மிகவும் அற்ப சொற்பமான நபர்களால்தாம் இது முடியக்கூடிய காரியம். இயற்கை அத்தனை வலுக்கொண்டது. எவ்வாறு வயது தாண்டியும் திருமணக் கவலையின்றி வாழ்கிறார்கள் என்றால், அது சமுதாயத்தின் சீர்கேடு. விபசாரத்திற்கு உரிய வழி வகைகள் பெருத்துப் போய்விட்டதால், சட்டத்திற்கும் மனச்சாட்சிக்கும் கண்ணைக் கட்டிவிட்ட புல்லுருவிகள் இருக்கும்வரை, திருமணத்தின் தேவை கூட கசப்பாகும்; தவறான பாதையே தன்மையான மார்க்கமாக்கப்படும்,

ஜனப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த, விஞ்ஞானத் துணைச் சரக்குகளை, திருமணம் ஆகாத, விரும்பாத கல்விமான்கள் பயன் செய்து பொருளாதார விடுதலை பெற்றுக் கொண்டதாக எண்ணுகிறார்கள். அதை மதவாதிகள் ஆத்ம துரோகம் என்றும், சயன்சு நிபுணர்கள் உடற் குற்றம் என்றும், சமுதாயப் பாதுகாப்பாளர்கள் பண்பின் தவறு என்றும், ஒழுக்கத்தின் காவலர்கள் தீங்கென்றும் பல வாறாகச் சொல்லுவார்கள். குடும்பக் கட்டுப் பாட்டுச் சாதனங்களை, குடும்பத்தை விரும்பாதவர்கள் கையாள்வது அரசாங்க துவேஷம் என்று வந்தால்? கடின தண்டனைகள் கொடுத்தால்?

ஒழுக்கம், உயிர் வாழும், சமுதாயத்தில் நேர்மையுள்ள வம்சங்கள் பிறக்கும், வருங்காலத்தில், மனிதர்கள் எத்தனையோ நூற்றாண்டுகளாக அறிவின் கனியாய், அன்பின் உருவாய் மாறிவந்தவர்கள் மீண்டும் குகைவாழ் மிருகப் பண்பிற்குப் போகமாட்டார்கள். இதற்கெல்லாம் நன் மருந்து திருமணம்,

தக்க வயதில் தக்க தருணத்தில் திருமணம் செய்வதைப்போல, செய்வித்து வைப்பதைப்போல உலகம் போற்றுஞ் செயல் வேறு எதும் இல்லை.

3

பொருள் ஒன்றே வாழ்க்கை வாழ்விப்பதற்கன்று, வாழவொட்டாமல் செய்வதற்கு இன்று துணை நிற்கிறது, வரதட்சணை என்ற பிசாசினால் வாழ்க்கையை இழந்தவர்கள் அதிகமானவர்களே தவிர, வாழ்ந்தவர்கள் வெகு சிலரே. சமீப காலம் வரை 75 வருடங்களுக்கு முன்னதாக—ஆணுக்குப் பணம் கொடுத்துப் பெண்ணைத் தள்ளிவிடும் பழக்கம் வரவில்லை. ஒரு சில சமூகத்தில் நல்ல இடத்தில் கல்வித் தேர்ச்சியுள்ள இடத்தில் பெண் கொடுக்க விரும்பிரொக்கப் பணம் உதவ ஆரம்பிக்கவே, எல்லா நல்ல வழக்கங்களைப் போலவே முடிவில் தீமையைத் தர ஆரம்பித்தது.

கலியாணம், பெண் முக்கியமில்லை. வரதட்சணையே ஆடவனுக்குக் குறியாயிற்று. பரிதாபம். வருந்தத்தக்க

விஷயம். பெண்ணைப் பெறுவது அதிர்ஷ்டமற்ற ஆபத்தான செயல் என்ற மனப்பான்மையும் வளர ஆரம்பித்தது. பெண்ணின் பெருமைகள்; பண்புகள், உயர்வுகள், பணப் பிசாசினுல் மறைக்கப் பட்டன. பெண்ணுக்கும், சமூகத்திற்கும் விரோதியாகப் பணம் ஆட்சிபுரியத் தொடங்கிற்று. இத்தனை தீமைகளிலும் ஒரு நன்மை பிறந்தது.

திருமணத்தை, வயது வந்தும் செய்யலாம். பால்ய விவாகம் வேண்டாமென்ற நன்மை பரவிற்று. ஏற்கனவே வயது வந்த பின்னர் திருமணம் செய்து வந்த சமூகத்தினர் வரதட்சிணையைப் பிடித்துக்கொண்டார்கள். தீமை விளைய ஆரம்பித்தது.

பணத்தைப் பெரிதாக எண்ணி எண்ணித் தனி மனிதர்கள் ஆனந்தத்தையும் வாழ்க்கை நலத்தையும் இழக்கிறுர்கள். நாலு நபர்களை சம்ரட்சணை செய்யக்கூடிய சக்தி ஆடவனுக்கு வரும்போது ஒரு பெண்ணை மணக்கலாம் என்பது நடுத்தர வர்க்கத்தினர் தரும் பொருளாதார அந்தஸ்து; உழைப்பாளிகள் வர்க்கத்தில் திருமணம் பொருளாதார அடிப்படையில் இலாபம் தருவது. கடனே உடனே வாங்கி உரிய காலத்தில் கல்யாணம் முடித்துக் கொண்டு குழந்தையும் குட்டியுமாய் ஆகிவிடுவார்கள். வாழ்க்கைக்குப் பணத்தை இலட்சியமாகக் கொடுள்ள, நடுத்தர வர்க்கம் தனி மனித வாழ்க்கையில், ஒட்டல் பறவை போல வாழ முயல்கிறது. திருமணத்தின் சுக சௌகரியங்களை எண்ணி எண்ணி நாளைத் தள்ளிப் போடும் திருக்கூட்டம் இது ஒன்றே. பணக்காரர்களும், ஏழை உழைப்பாளிகளும் உரிய காலத்தே திருமணத்தைச் செய்து கொள்ளுகிறுர்கள். ஏமாந்து போவது நடுத்தர வகுப்பினர்.

பணம், வாலிபனைவிட வயோதிகனுக்குத் துணைப் பொருள். உடலிலே புதுரத்தம் குபு குபுக்கும் வாலிபபருவத்தில் பணத்தினுல் அடையும் இன்பத்தைவிட, ஆயிர மாயிரம் மடங்கு திருமண சுகத்தில் இன்புறலாம். செவ்வானம், அலைமோதும் கடல், ரெயில் பிரயாணக் காட்சிகள், அடுத்த வீட்டார்களின் அசட்டுத்தனம், ஒருவர் இதயத்தோடு மற்றவர் இதயம் ஒட்டும் தாளலயம், பணத்தின் விலைக்குள் வர இயலாத இன்பங்கள். பொறுப்புணர்ச்சி. பெரிய மனிதனுக்கும் எண்ணப் பாங்கு. கடமை யென்ற முட்டுக்கால்கள் பெண்ணைத் தெய்வமாகவும், ஆண்மகனை மனிதருள் மாணிக்கமாகவும் தூக்கி நிறுத்தும்

ஏழை யென்ற எண்ணமோ, நிறையப் பணம் என்ற நோக்கமோ வராமல், இருப்பதை உயர்வாக எண்ணும் உயர் வுள்ளம் பெறுகிறுர்கள். பெற்றோரை உற்றாரை, உடன் பிறந்தாரை, சுற்றுச் சூழ்நிலையை மறந்து வந்த பூங்கொடியை, தன்னைச் சுற்றிப் படர, படர்ந்து மணம் வீச இளைஞன் உள்ளம் தூணுக நிற்கிறது. சின்னஞ் சிறு காட்சிகள், சிறு சிறு மனஸ்தாபங்கள், உப்புச் சப்பற்ற பொருள்கள் அத்தனையும், தேனூறிய பண்டங்களாய்த் தெரியும்காலம் திருமணமானப் புத்தம் புதுப்பருவம்.

இல்லற சுகத்தின் விளைவாக, கொடியிலே பசுமை படர்ந்து தோற்றப் பொலிவு தரும்போது எத்தனை கோடி ரூபாய் கொடுத்தும் வாங்க இயலாத இன்பம் என்று எண்ணுவார்கள். தந்தையாகும் எண்ணம், தாயாகும் உள்ளம், இந்த இரண்டும் என்று சித்திக்கிறதோ, அன்று தான் திருமணத்தின் பலன் பூத்துக் காய்த்து விட்டது.

பருவத்தே பயிர் செய் என்பது எடுத்துக்கொள்ளும் வித்துபலன் தருவதே நோக்கம், வித்தின் பயன் மகசூலாக வரவேண்டும். வித்திடும் எந்த முயற்சிக்கும் ஆகும் காலமே முக்கியம். வயலிலே விதைக்க வேண்டிய பருவத்தில், பணமில்லாக் கொடுமையால் காலந்தாழ்த்தி வித்திட்டால் பலன் சிறிது. மனக்கஷ்டமும் அதிகம். பட்ட மென்றும், பருவமென்றும். விளையும் வித்துக்களுக்கு நாட்கணக்குக் குறிந்து. அதை விளைவிப்பது போல, மனித குலமும், வாழையடி வாழையாக வரவேண்டிய வித்துத்தான். பணம் ஒன்றுதான் திருமணக் கஷ்டங்களை விலக்கும் என்று எண்ண ஆரம்பித்தால், பயனற்ற சாவிகளே ஆவார்கள்; சாவியான விளைபொருளை அறுத்துச் செல்வார்கள்.

வயதும் தளர்ச்சியும் வருகிற காலத்தே பணத்தைப் போல இன்பங்களை விலைக்கு வாங்கும் சக்தி எதற்கும் கிடையாது. கோடிசெம்பொன் போனுல் என்ன, குறுநகை போதுமடி என்பது வாலிப உள்ளத்துச் சித்தாந்தம். குறுநகை வேண்டாம். கோடிச் செம்பொன் வேண்டுமென்பது கிழட்டுள்ளத்தின் வேதாந்தம்.

வரதட்சணையை நிறைய எதிர் பார்க்கும் ஆண், வியாபார ரீதியில் தன்னலத்தில் விருப்பமுள்ள உழைப்பை விரும்பாத கோழை; சுரண்டித்தின்னும் வர்க்கம். இவ்வாறு பணத்தாசை பிடித்தவர்களுக்கு வாழ்க்கைப் படுவதை படித்த பெண்கள் மறுக்க வேண்டும். புரட்சி, சீர்திருத்தம் என்பன தன்னலத்தையும், சமூக ஊழலையும் வெறுத்துத் தள்ளுவது. திருமணத்திற்கு நோயற்ற உத்சாகமுள்ள, தன்னம்பிக்கையுள்ள ஜோடிகளே பொருத்தமுள்ளவர்கள். பிறர் சம்பாதித்த பொருளுக்கு ஆசைப்படுகிறுனே தவிர, பிறர் மகள் மீதல்ல ஆசை. பணத்தைக் காட்டி வியாபாரம் செய்யும் திருமணங்களைச் சீர்திருத்தம் செய்தால், விவாக ரத்து என்ற நஞ்சு அநேகமாக நமது நாட்டுப் பண்பில் கலக்காது.

பணத்தின் ஆதிக்கம் திருமணத்தில் எவ்வளவுக் கெவ்வளவு குறைகிறதோ, அந்தத் திருமணங்களில் காதல், அன்பு, கடமை, தெய்வீகம் கூடத் தாண்டவமாடும்.

சீர்திருத்தம், பகுத்தறிவு. புரட்சி மனப்பான்மை கொண்டவர்களும், மொய்பரிசளிப்பு என்ற பெயரால் பணத்தின் வரவை எதிர் பார்க்கிறுர்கள். எந்தத் திருமணத்தில் மொய் பரிசளிப்புகள் லிஸ்டு போட்டு எழுத வில்லையோ அது உண்மையிலே பணத்திற்காக வந்தவை அல்ல. பண்பும் நன்றியும் தந்த செல்வச்சின்னங்கள் எனலாம் லிஸ்டு போட்டு விட்டால் வட்டியில்லாக் கடனை நன்றிக்கு லேபில் ஒட்டிப்பார்த்த கதை. திருமண நிகழ்ச்சியில் பணத்தின் ஆதிக்கம் தலைபிடத் தலைபிட எத்தனை படிப்பும், பண்பும் உயர்ந்தும் நாம் ஐந்தறிவுள்ளவர்களாய் வாழ்கிறோம் என்றே முடிவு கட்டலாம்.

திருமணம், கூட்டத்தில் கொத்திச் செல்லும், மிருக இச்சையாக இருந்தது. பின்னர் குடும்பத்திற்குப் பரிசளிக்கும் அறிவுப் படலமாயிற்று; கூட்டமும் குடும்பமும் பிரிந்து பிரிந்து வீரத்தின் அடிப்படையில் தாலி கட்டும் வழக்கமாயிற்று. பின்னர் எத்தனையோ படையெடுப்புகள், ஆட்சி முறைகள், அறிவுக் கேடுகள், சூழச் சூழ, சாதிக்குச் சாதி திருமண முறை யென்ருயிற்று.

வசதியும். வாய்ப்பும். அறிவும் ஏற ஏற, பணத்தின் ஆதிக்கமே திருமணத்தின் முடிச்சு என்பதை இருபதாம் நூற்றுண்டு தீர்ப்புச் சொல்கிறது.

சாதிவிட்டு சாதி திருமணம் செய்யலாம்; மதம்விட்டு, மதம் மாறித் திருமணம் செய்யலாம்; நாடுவிட்டு நாடு திருமணம் செய்யலாம்; பணம் விட்டுப் பணம் மாறித் திருமணம் செய்துவிடக் கூடாது என்ற பகுத்தறிவில் நிற்கிறோம்.

அரசியல் போக்கில் எல்லோருக்கும் வாழும் வாய்ப்பு. சமசந்தர்ப்பம், சோற்றுக்கவலை என்ற பிச்சைக்காரத்தனம் போய் உணவு மிச்சம் என்ற சமுதாய வளர்ச்சியில் பெறுமானுல், பணம் போன இடம் புல் முளைத்துப் போகும். காதல் தழைக்கும். கருணை உள்ளங்கள் வளரும்.

சங்க காலத்துத் தமிழர் வாழ்க்கை, பணத்தை மறந்து வாழ்ந்த அன்பு வாழ்க்கை. மறத்தை வெல்லப் பிறந்த அறவாழ்க்கை. அதே அன்பும் அறமும் மீண்டும் குமிழிவிடும் நாளே தமிழர் சமுதாயத்திற்குத் திருமண நாள்.

சுடர்வீசும் ஜோதி

என். எஸ். சிதம்பரம்

1. நிலைகொள்ளா வாழ்க்கையிலே நெஞ்சம் ஊறி
நெறியற்றோர் மனைவாசல் நித்தம் ஏறி
மலையாகத் தனம்சேர மனம்தான் மாறி
மதியிழந்தார் தமைநாடிக் கதியாய் நின்றேன்!

2. கொடுநஞ்சை உள்ளத்தில் குழைத்து வைத்துக்
குணநலத்தோர் போல்நடிக்கும் கூற்றன் றுரைக்
கொடுக்கின்ற வள்ளலெனப் போற்றி செய்து
குவலயத்தில் இகழ்வுற்றே அவல மானேன்!

3. பொய்யினையே மெய்யாக்கிப் புறமே பேசும்
பூதலத்தில் நிதமற்றோர் புகழே சொல்லி
மெய்யினையே பொய்யாக்கும் மேன்மை யில்லார்
மேலன்பாய்த் துதிபுரிந்தே சில மற்றேன் !

4. வஞ்சகமும் சஞ்சலமும் வாய்ந்த பூமி !
வழிகாட்டும் பெரியோரைப் பழிசொல் பூமி !
தஞ்சமென்று வந்தோரைத் தள்ளும் பூமி !
தன்மையற்ற பூமியிதில் நன்மை காணேன் !

5. எண்ணியெண்ணிப் புண்ணடைந்த இதயம் தானும்
எவ்வகையும் காணாமல் இருந்த போதில்
நண்ணியதோர் உறுதியினை நான்என் சொல்வேன்?
நானிலத்துப் போக்கதனை நான்ம றந்தேன் !

6. "உலகினரைக் குறைகூற உரிமை ஏது ?
உண்மையொன்றே நிலைக்குமென்ற உயர்வை ஓது!"
பலவகையாய் என்னுள்ளே பரந்த சக்தி
பகர்ந்தபெரும் பொருள்கண்டே பண்ப றிந்தேன்!

7. பயனில்லா மார்க்கத்தில் பலநாள் சென்று
படுதுயராம் கடல்மூழ்கிப் பரத வித்து
நயமிழந்த எனக்குவெகு நல்ல ஞானம்
நல்கியதோர் சக்தியினை நவில லானேன் !

8. "பாருள்ளோர் செயல்களைநீ பார்க்க வேண்டாம் ;
பரந்திருக்கும் அருள்வெளியைப் பரிவாய்ப் பார்ப்பாய்!"
சீருடனே சக்தியதும் செப்பி நிற்கச்
செய்வகையும் தெளிந்துமனச் செழிப்பு முற்றேன்!

9. அகங்குலைந்தே உணர்வில்லா அக்கா லத்தில்
அலைந்தலைந்து வலிதுன்றி அல்ல லுற்றேன் !
சுகந்தமுடன் அருட்சக்தித் திறத்தைக் காணச்
சுடர்வீசும் சோதிதனைச் சூழ்ந்த தம்மா !

வாழ்வும் தாழ்வும்

சிறைச்சாலையின் சாப்பாட்டு மணி அடித்து ஓய்ந்தது. அதைத் தொடர்ந்து கொட்டடிகளின் பூட்டுகள் மட மட வென்று திறக்கப்படும் ஓசை எழும்பிற்று. கல்லெறி பட்ட மாதுள மரத்தின் சிட்டுக் குருவிகளின் கூட்டம் விர்ரென்று பறந்து பாய்வது போல, அதுவரையில் அடைபட்டிருந்த கைதிகளின் கும்பல் சரேலென்று வெளியே பாய்ந்தனர்.

எதிரே திருகிவிட்ட நீர்க் குழாயிலிருந்து தொட்டியில் தண்ணீர் ததும்பி வழிந்தோடிக் கொண்டிருந்தது. அதனருகே ஓங்கி வளர்ந்திருந்த மகிழ மரத்தைச் சுற்றிக் குவளைகளும், கிண்ணிகளும் கவிழ்த்து அடுக்கப்பட்டிருந்தன. எல்லோரும் அவற்றை நோக்கி ஓடி, ஆளுக்கொரு தட்டும், குவளையும் எடுத்துக் கொண்டு வேகமாக அலம்ப ஆரம்பித்தனர்.

நான் அந்த இடத்திற்குப் புதியவன். ஆகவே முண்டியடித்துக் கொண்டு நுழைய எனக்குத் தைரியமில்லை. எல்லோரும் நகர்ந்த பிறகு மெதுவாக எனக்குக் கிடைத்ததை எடுத்துக் கொண்டு, தேய்த்துக் கழுவி உணவு கொடுக்குமிடத்து வரிசையில் கடைசியாக வந்து நின்றேன்.

சற்றுப் பொறுத்து சாவதானமாக எனக்கும் பின்னால் தட்டும் குவளையுமாக மாணிக்கம் வந்து நின்றான். சிறையில் என் அறையில் எனக்கும் முன்னதாக அவன் இருந்தான். இருந்தும் அவன் மற்றவர்களைப் போல ஆகாரத்துக்கு அவசரப்படாததன் காரணம் விளங்கவில்லை. ஏன், அனைவரும் அவசரப்பட்டதன் காரணமும் தான் எனக்கு விளங்கவில்லை.

ஆகவே, "ஜெயிலில் எல்லோருக்கும் ஒரே அளவு சாப்பாடு தான் போடுகிறார்கள். எதற்காக இத்தனை போட்டி?" என்று கேட்டு சிரித்து வைத்தேன்.

"அதுவா! முதலில் வந்து நிற்கும் இருபது பேர்களுக்கு தான் அரிசிச் சாப்பாடு கிடைக்கும். பாக்கிப் பேர்களுக்கெல்லாம் களி உருண்டை தான்!" என்றான் மாணிக்கம்,

"அது ஏன் அப்படி? இது என்ன நியாயம்? இங்கே இருப்பவர்கள் எல்லோரும் ரிமாண்டுக் கைதிகள் தானே? இதிலே எதற்குப் பாரபட்சம்?"



ப. தனுஷ்கோடி

"அதென்னவோ எனக்குத் தெரியாது. உங்களைப்போன்றவர்கள் அரசாங்கத்தை நடத்த வரும்போது இதை ஆராய்ந்து பேதத்தை நீக்குங்களேன்!"

விசாரணைக் கைதிகளிடையே சப் ஜெயிலில் இருக்கும்போது உணவில் பாகுபாடு காட்டுவது சரியானதாக எனக்குத் தோன்றவில்லை; ஆனாலும் அங்கிலையில் அதற்காக நான் கவலைப்பட்டு என்ன செய்யமுடியும்? ஆனால் ஒரு சந்தேகம் எழுந்தது. இந்த அனுபவம் தெரிந்த மாணிக்கம் ஏன் ஓடிப் போய் முன்னே நிற்கவில்லை? அவனுக்கும் களி தின்னப் பிரியமா?

க்யூ நகர்ந்துகொண்டே வந்து எங்களுடன் முடிந்தது. எங்கள் தட்டில் விழுந்தவை கடைசி களி உருண்டைகள். அடிபிடித்த தீசலும், வண்டல் பொடிகற்களும் தட்டில் உரசி சத்தமிட்டன. அண்டாவிலிருந்து சுரண்டி ஊற்றிய குழம்பும் கடைசிதான்! அவுன்ஸ் கோப்பைக்குப் போதும் போதாதுமாக இருந்தது. எப்படியோ உயிரைப்பிடித்துக் கொண்டு பொழுதைப் போக்கியாகவேண்டுமே. ஒரு புறமாக வந்து உட்கார்ந்தபடி, தொட்டுத் தொட்டு உண்ணலானேம்.

"ஏனப்பா! உனக்குத் தான் விஷயம் தெரியுமே! முன்னாடிபோய் அரிசிச் சோறாக வாங்கிச் சாப்பிடுவது தானே? இந்நேரம் என்ன செய்தாய்?" என்றேன்.

"அது கிடக்குதுங்க! கண்ட கண்ட பசங்க தின்னும் எச்சில் கிண்ணியை எல்லாம் தொட எனக்கு மனசு ஒப்பு

வதில்லேங்க! எனக்குன்னு தனியா ஒதுக்குப் புறமா வைச்சுக்குவேன்; எடுத்துக்குவேன்!"

● ● ● ●

அவன் பேச்சு எனக்கு விசித்திரமாக இருந்தது. கொட்டடியைத்திறந்தது முதல் நானும் அவனைக்கவனித்துக் கொண்டுதானிருந்தேன். மூல்லைப் புதரின் மறைவிலிருந்து தட்டும் குவளையும் எடுத்து வந்து ஆரஅமர தண்ணீர்த் தொட்டியின்முன் அமர்ந்து நன்றாக மண்ணைப் போட்டுத் தேய்த்துக் கழுவினான். அது அவன் சொந்தப் பாத்திரமல்ல; அதுவும் சிறைச் சொத்துதான்! என்றாலும் மகிழமரத்தடி அலுமினிய ஏனங்களைப்போல வாய் ஒடுங்கியும், ஓரம் நசுங்கியும், கையைக் கிழிக்கும்படி கீறல் விழுந்தும், மங்கியும் இருக்கவில்லை. மாணிக்கத்தின் தட்டும் குவளையும் புத்தம் புதிய வெள்ளிப்பாத்திரம் போல் கடைச்சரக்காக மின்னின! அவன் அது தன்னதல்லவாயினும் தன்னுடையதைப் போலவே பாவித்து, கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்ததைக் கண்டுவியந்தேன. அற்பப் பொருளாயினும், அவனதல்லவாயினும், அவனதாக இருக்கும்போது அதைப்பாங்காக வைத்துக் கொள்ள எவ்வளவு அக்கரை காட்டுகிறான்? சின்ன விஷயத்திலேயே இவ்வளவு அற்புதமான குணம் படைத்திருக்கும் மாணிக்கம் என்ன குற்றம் புரிந்திருப்பான்? எதற்காக ஜெயிலில் இருக்கிறான்? களை சொட்டும் இளம் முகத்தைப் பார்த்தால் அப்படி ஏதும் தவறு புரிந்துவிட்டவனாகவே தோன்றவில்லை. இன்றைக் கெல்லாம் இருந்தால் இருபத்தைந்து வயதுக்கு மேலிராது. அறைக்குப் போனதும் அவனை நன்றாக விசாரிக்கவேண்டும். முடிந்தால் ஏதாவது கண்ணியமான உதவியும் செய்யவேண்டும். அதோடு, "ஜெயில் கிண்ணியில் எச்சில் கிண்ணி எது? எச்சில் படாத கிண்ணி எது?" என்றும் கேட்கவேண்டும்!

ஒருவகையாக உணவு முடிந்து அவரவர் அறைக்குப் போனதும் சிறை வார்டன் வந்து வரிசையாக பூட்டிக் கொண்டு சென்றான். அங்கிருந்த கிழிந்து கைந்துபோன கம்பளிப் பாயொன்றை தரையில் விரித்து நிம்மதியாகப் படுத்துவிட்டான் மாணிக்கம். "உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு" என்பதையறிந்த எனக்கு அவன் ஆயாசத்தைக் கலைக்க உடனே மனம் வரவில்லை. எங்கே போய்விடப் போகிறான்? அப்புறம் தான் விசாரிப்போமே என்று நானும் திண்ணைத் திண்டில் தலையைச் சாய்த்தேன்!

● ● ● ●

அப்போது நேற்றுமாலை நடந்த சம்பவம் ஒன்று என் நினைவுத்திரையில் இலேசாக மிதந்து வந்தது. சப்ஜெயிலில் இரவுச்சாப்பாட்டை சாயங்கால வெளிச்சம் இருக்கும்போதே முடித்துவிடுகிறார்கள். கைதிகளைப் பூட்டியானதும், கைதிகளின் எண்ணிக்கையைச் சரிபார்க்க ஜெயிலர் வரிசையாக வருகிறார். அவர் வணக்கம் செலுத்தாது போனாலும் கைதிகள் எழுந்து கம்பிகளுக்கருகில் நின்றுகொண்டு ஆங்கில முறைப்படி "சல்யூட்" செய்யவேண்டும்.

நான் அப்படிச் செய்யவில்லை. காந்திய நெறிப்படி சத்யாக்ரகம் செய்து உள்ளே வந்தவன்." கதர் வேஷ்டியும் கதர் ஜிப்பாவும் அணிந்துகொண்டிருந்தேன். எனவே இந்திய முறைப்படி இரு கைகளையும் கூப்பி வணக்கம் செலுத்தினேன். ஜெயிலர் ஆங்கிலோ இந்தியர்; வேலூர் சிறையில் [illegible] கைதிகளின் மீது தடியடி தர்பார் நடத்தி அன்னிய அரசாங்கத்திடம் நற்சாட்சி பெற்றவர்! இந்த சிறைச்சாலைக்குப் புதிதாக மாற்றலாகி வந்திருந்தார். என்னை அலட்சியத்துடன் "யாரது?" என்றார். என் பெயரைத் தயக்கமில்லாமல் சொன்னேன். "உன் பேரில் என்ன கேஸ்?" என்றார் அடுத்தபடியாக. அதற்கு நான் பதில் சொல்லும் முன் உடன் வந்த வார்டன், "டிபன்ஸ் ஆக்ட்!" என்றான். அவன் அனுபவ புத்திசாலி! பஞ்சும் நெருப்புமான எங்களை அதிகம் பேசவிடாமல் குறுக்கிட்டு தடுத்துவிட்டான்!

அடுத்து நின்றான் மாணிக்கம். அவனையும் அதே போலக்கேட்டார் ஜெயிலர். "உன் கேஸ் என்ன?" என்றார். அதற்கு அவன் சட்டென்று பதில் சொல்லவில்லை. கொஞ்சம் நாணம் கலந்த தயக்கத்துடன், "அது ஒரு பொம்பளையால் வந்ததுங்க!" என்றான். ஜெயிலதிகாரிக்கு அது புரியவில்லை. வார்டன் பக்கம் திரும்பி "வாட்?" என்றார். வார்டன் "மர்டர் கேஸ்" என்றான். திடுக்கிட்ட ஜெயிலர் மாணிக்கத்தை ஒருமுறை நன்றாக ஏற இறங்கப் பார்த்து, "யங்க்ஃபலோ! பொம்பிளையைக் கொன்னுட்டியா?" என்று அலட்சியமாகக் கேட்டுவிட்டு அப்பால் நகர்ந்து போனார்.

இந்தச் சம்பவம் என் நினைவிற்கு வந்ததும் மாணிக்கத்தைத் திரும்பிப் பார்த்தேன். அவன் இப்பொழுது விழித்துக் கொண்டு என்னையே பார்த்துக்கொண்டிருந்தான். நான் அவனைப் பார்ப்பதை அறிந்ததும் அவனாகவே, "தினசரிப் பத்திரிகைகளில் அடிக்கடி, "ஆசைநாயகி கொலை வழக்கு; வைப்பாட்டியைக் கொன்றதாக" என்றெல்லாம் வருகிறதே! அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வி என்னை திடுக்கிடச் செய்தது. நான் சாதாரண காங்கிரஸ் ஊழியன். இவ்வளவு பெரிய விஷயத்தைப் பற்றி நான் என்ன கருத்துக் கூறமுடியும்? அதைப் பற்றிய அனுபவம்தான் எனக்கு ஏது? ஆகவே "எனக்கொன்றும் புரியவில்லை; நீயே சொல்லு!" என்றேன்.

"அதற்கில்லே சார்! "மனைவியைக் கொன்றதாக" என்று வருகிறதா? அப்படி வந்தாலும் ஆசைநாயகி கொலை வழக்கு நூறு வந்தால், மனைவியைக் கொன்றதாக ஒன்றுதான் வரும்!" என்று மேலும் விளக்கினான் மாணிக்கம்.

எனக்கு அது இன்னும் குழப்பமாகத்தான் போய்விட்டது. "இதோ பார் மாணிக்கம்! உன்னைப் பார்த்தால் ரொம்ப யோக்யனாகத் தெரிகிறது. நீ எப்படி இந்த நிலைமைக்கு ஆளானாய்? அதைச் சொல் கேட்கிறேன். பெரிய தத்துவ விசாரணைக்கெல்லாம் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது!" என்றேன்.

"அதற்காகத் தான் ஆரம்பித்தேன். என் துரதிருஷ்ட வரலாற்றைக் கேளுங்கள்!" என்று மாணிக்கம் தன் கதையை நேரடியாகத் தொடங்கினான்.

● ● ● ●

பெண்ணாசை என்ற இச்சை தோன்றும் பருவத்திற்கு முன்னதாகவே மாணிக்கத்துக்கு திருமணமாகிவிட்டது. வாழ்வு என்பது என்ன? குடும்பம் என்பது எப்படி நடத்தவேண்டும் என்ற விவரமெல்லாம் அப்போது அவனுக்குத் தெரியாது. என்றாலும் யோக்யமான—ஒழுக்கமான வாலிபன் என்ற முறையில் அனைவரது நன்மதிப்பையும் பெற்றிருந்தான். அந்த நாளில் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதாகக் கூறப்படும் செய்தித்தாள்களையும் வார ஏடுகளையும் படித்து வருவான். அடிக்கடி அம்மாதிரி கூட்டங்களுக்கும் பிரசங்கம் கேட்கச் செல்வான். இதன் பயனாக அவனது இளம் உள்ளத்திலும் ஒருவித சீர்திருத்த ஆவேசம் தோன்றியது. ஏதாவது செயற்கரிய செயலைச்

செய்து தானும் ஒரு இங்கர்சாலாகவோ, பிளேட்டோவாகவோ, ஆகவேண்டும் என ஆசைப்பட்டான்.

ஆனால் ஏற்கனவே கலியாணமாகிவிட்ட அவனால் ஒரு "சீர்திருத்தத் திருமணம்" கூட செய்துகொள்ள முடியவில்லை. இந்நிலைமையில் குடும்ப வாழ்க்கையை ஏற்று நடத்தும் காலம் வந்தபோது, ஒரு அருமையான சந்தர்ப்பம் அவனுக்காகக் காத்து நின்றதை அறிந்தான். பள்ளியறையில் நுழைந்த அவன் அந்தச் செய்தியறிந்ததும் துள்ளிக் குதித்தான்! அவன் படித்த பத்திரிகைப் படிப்பிற்கு பொன்னான வாய்ப்பு கிடைத்தது போலிருந்தது அது?

ஆம்; அவன் மனைவிதான் அதைக் கூறினாள். வேறொரு கணவனாக இருந்தால் அந்த இடத்திலேயே அவள் கழுத்தை நெறித்துக் கொன்று போட்டிருப்பான். மாணிக்கம் பகுத்தறிவுச் செல்வமல்லவா! பெண்ணுரிமையைத் தன்னுரிமையாகப் பாவிப்பவனல்லவா! ஆகையால் அவள் காதல் வேறொருவனிடம் என்பதறிந்தும் உள்ளம் பதைக்கவில்லை; உயிர் துடிக்கவில்லை. ஆத்திரப்படாமல் அமைதியாக அவளைத் தீண்டாமல் அவள் தலைக்குமேல் உள்ளங்கையமர்த்தி "வாழ்க! வாழ்க!!" என ஆசிர்வதித்தான். ஆனால் ஆயிரமாயிரமாகச் செலவழித்து கல்யாணத்தை நடத்திவைத்த அவர்களின் பெற்றோர், உற்றோர் இந்தச் செய்கைக்கு உடன்படுவார்களா? ஆகையால் "நான் நோகாமல் அடிக்கிறேன்; நீ ஓயாமல் அழு!" என்றபடி, கொஞ்சநாள் அமைதியாகக் குடும்பம் நடத்துவதுபோல் நடந்து, அவளைத் தாய்வீடு அனுப்பிவிட்டான். அங்கிருந்து அவள் தன் காதலனுடன் போய் எப்படியாவது வாழ்வதைப்பற்றி அவனுக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்கவில்லை.

அதன்படியே எல்லாம் நடந்தது. தன்னுரிமையை மனமார மாற்றானுக்கு விட்டுக் கொடுத்து பூரிப்படைந்தான். வெளியில் பலருக்குப் பலவிதமாகத் தோன்றினாலும் மாணிக்கத்துக்கு மட்டும் மனசாட்சிப்படி எல்லாம் உயர்வாகவே தோன்றியது.

ஆனால் என்ன காரணமோ, இவ்வளவு உயர்ந்த மாணிக்கத்தின் செய்கை உரிய பயனளிக்கவில்லை, பிறந்த வீடு சென்ற அவன் மனைவி யாருடனும் வாழாமல் சில மாதங்களிலேயே மரணமடைந்து விட்டாள்! எல்லாம் வெற்றிகரமாக நடந்த பிறகு நண்பர்களிடமெல்லாம் தன் நடத்தையைக் கூறி "சபாஷ்!" வாங்க நினைத்த மாணிக்கத்திற்கு அது இடி விழுந்தது போலாயிற்று! இனிமேல் அதைச் சொல்லி என்ன பிரயோஜனம்? யார்தான் நம்பப் போகிறார்கள்? இப்படியாக அவனது வாழ்வில் முதல் அத்தியாயம் முடிந்தது!

∴ ∴ ∴

அப்புறம் நெடுநாள் வரை மாணிக்கம் தன் வாழ்வைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. வீட்டில் மறுமணப் பேச்சு எடுத்தாலும் கூட அவன் சிரத்தை கொள்ளவில்லை. அப்படி மீண்டும் மணம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், இந்தத் தடவையாவது ஏதேனும் புரட்சிகரமான வழியில் செல்வது என எண்ணினான். ஒருமுறை வாழ்விழந்தவனான அவன், அதேபோல ஒருமுறை வாழ்விழந்த ஒருத்திக்கு புனர் வாழ்வு அளிப்பதன் மூலம் தன் லட்சியத்தை ஈடேற்றிக் கொள்ளத் துணிந்தான். ஆனால் இதற்கு அவன் குடும்பமும், சமூக சூழ்நிலையும் சற்றும் இடம் தரவில்லை, எனவே காலத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

அந்த நாளும் ஒருநாள் வந்தது. கணவனை இழந்து தனித்து வாழும் கைம்பெண் ஒருத்தியின் வலையில் அவன் விழுந்தான். அல்லது அவன் வலையில் அவள் விழுந்தாள் என்றும் சொல்லலாம். யாரை நம்பி யார் விரும்பினார்கள் என்று திட்டமாகச் சொல்வது கடினம். அவளது ஆதரவான நிலையும், அவனது தேடும் படலமும் அன்று ஒன்று கூடின. அவ்வளவுதான். ஒருமனப்பட்ட இன்ப வாழ்வு ஓராண்டு காலம் நீடித்தது.

அவன் இன்ப அணைப்பில் மயங்கி நிற்கையில் அவள் அடிக்கடி இப்படிச் சொல்வாள்; "இந்த மாதிரி இருப்போம் என்று முன்பே தெரிந்திருந்தால் எப்படி இருந்திருக்கலாம்!"

தன்னைத்தானே நொந்து கொள்ளும் இந்தப் பேச்சு, தன்னைத்தான் புகழ்ந்து பேசும் பேச்சாக இன்பம் கொடுத்தது. மாணிக்கத்துக்கு ஆனால் நாளடைவில் அதே பேச்சு அவனுக்குத் தன்னை இழிவுபடுத்தும் நாராசமாகத் தோன்றியது. ஒரே பேச்சுக்கு அர்த்தம் அனர்த்தமானதற்குக் காரணம் இல்லாமலில்லை. காதல் கைம்பெண்ணின் பூர்வீக வாழ்வில் அடிபட்ட சிலரைப்பற்றி அவன் காதில் நாளடைவில் விழுந்ததுதான் காரணம்.

அப்படியொன்றும் தன்னைத்தான் பத்தினி என்று அவள் அவனிடம் பொய் வாக்குறுதி கொடுக்கவில்லை. அவளுக்கு அவன் எத்தனையாவது நபரோ? அவனுக்கு அவள் முதல்வள்! இந்த வித்தியாசமே அவன் மனதில் அருவை படரச் செய்தது. ஆனாலும் அவனுக்கு அவளை விட்டால் வேறுகதி இல்லை. பகிரங்கமாக ஒரு விதவையுடன் பலகாலம் வாழ்ந்தபின் அவனால் ஒழுங்காக மறுமணம் கூட செய்துகொள்ள முடியாது. இருக்கிற வாழ்வாவது கண்ணியமாக காப்பாற்றப்பட வேண்டாமா?

அதனால் அளவுக்கு மீறிய அன்பையும், ஆசையையும் அவள்மீது பொழிந்தான். மாணிக்கத்தின் பரிவும், பாசமும் அவளுக்கு மேலும் வேதனையைத்தான் கொடுத்திருக்க வேண்டும். புதிய கட்டுப்பாட்டுடன் கூடிய குடும்ப வாழ்வை அவள் மனமார விரும்பினாலும், கெட்டுப்போன அவளால் முன்பே கிடைத்த தொடர்புகளை அறவே நீக்கிவிட முடியவில்லை. அதோடு தனிமையில் சுதந்திர வாழ்வு நடத்துவதில் உள்ள சில சௌகரியங்களைப் பற்றிய சபலமும் அவ்வப்போது ஏற்படத்தான் செய்தன.

"ஓடு காலிக்கு வீடு பிடிக்காது" என்பார்கள். ஆனால் அவளுக்கு வீடும் வேண்டும்; கண்ணியமான கணவனும் வேண்டும். கேள்வியும் கேட்கக்கூடாது. மாணிக்கத்தின் நிலை தர்ம சங்கடமாயிற்று. ஆழம் தெரியாமல் சீர்திருத்த வேகத்தில் காலை விட்டுப் பின் அவதிப்படலானான். காலை வெளியில் இழுத்துக்கொண்டு ஓடவும் முடியவில்லை. சுய மதிப்பை விட்டு வாழவும் முடியவில்லை.

முன்னர் யார் அவளைத் தீண்டியிருந்தாலும் மறந்து மன்னித்துவிடத் தயாராக இருந்தான். ஆனால் தன் பொருள் என்று ஆனபின் பிறர் கைவைப்பதை அடியுடன் வெறுத்தான்.

"இப்போதும் ஒன்றும் குடி முழுகிவிடவில்லை; உனக்கு இஷ்டமானவருடன் சேர்ந்து உன வாழ்க்கையை அமைத்துக் கொள்! இனி என் அன்பை—ஆதரவை நினையாதே!" என்று பலமுறை மாணிக்கம் மனமார விடை கொடுத்தான்.

ஆனல் அவள் மனைவியல்லவே! காதலித்து வாழ்வு நடத்துபவளல்லவா! அப்படி லகுவில் விட்டு விடுவாளா? "உங்களை விட்டுப் பிரிந்தால் அவ்வளவுதான்! மறுபடி இந்த ஜென்மத்தில் உயிர் வாழ்வதேது?" என்பாள்'

இதைக் கேட்கையில் மாணிக்கத்தின் மனம் இரக்கத்தால் சாம்பிக் குவிந்துவிடும்! "சரி: சரி: இனிமேல் அப்படியெல்லாம் நடந்துகொள்ளாதே!" என்பான்!

சிலநாளில் அவனில்லாதபோது யாராவது அவளை வந்து பார்ப்பார்கள். குசலம் விசாரிப்பார்கள். அது அவன் காதுக்கு எட்டும்! எவ்வளவு தாராளமாக விட்டுக்கொடுத்து நடந்துகொண்டும் அவள், அவள் புத்தியைக் காட்டுகிருளே என்று ஆத்திரமாக வரும்! இரைந்தும், அறைந்தும் கூட பேசி விடுவான்" "நானு அவர்களை வரச்சொன்னேன்?" என்று ஏங்கி அழுவாள் அவள். அதோடு" இப்படி இருபுறமும் இடிபடுவதைவிட எங்காவது ஆற்றில் குளத்தில் விழுந்து செத்துத் தொலைந்தாலும் பரவாயில்லை!" என்று நொந்து கொள்வாள்.

"நீ ஏண்டி சாகனும்? நானே தூக்குப் போட்டுக்கொண்டு செத்துத் தொலைகிறேன்! அப்புறமாவது கவலையில்லாமல் உன் ஆனந்த வாழ்வை இஷ்டம்போல் நடத்து!" என்று மாணிக்கமும் சீறுவான்.

அவள் ஒடிவந்து அவன் வாயைப் பொத்துவாள். "அப்படிச்சொல்லாதீர்கள்! எனக்காகநீங்கள் அப்படிஏதும் செய்து விடாதீர்கள்! நான் போனலும் பரவாயில்லை: என் வாழ்வே பாழானதும் எனக்காக யாரும் கவலைப்படவேண்டியதில்லை."

"ஏன் நான் கவலைப்படுவேன்! உனக்காகநானும், எனக்காக நீயும் ஏன் சாகவேண்டும்? இருவருக்காக இருவருமே வாழ்வோமே! இப்போ என்ன வந்தது?"

இருவரும் அப்பாவிகள்! அசடுகள்! வாழத் தெரியாதவர்கள்! ஒவ்வொரு தடவையும் இப்படித்தான் சண்டை மூண்டு சாவின் எல்லைக்குச் சென்று சமாதானமடையும். பிறகு சிலநாள் சந்தோஷத்தின் சுவையைச் சுவைப்பார்கள். அவர்கள் காதலித்து வாழ்பவர்கள்; அதனல் யாரும் குறுக்கிட்டு வழி காட்டுவதில்லை!


ஆனல் இப்படியே எத்தனை காலம் நீடிக்க முடியும்? அவளின் மீதோ மற்றொருவன் மீதோ பழிபோட முடியாது. விதியைத்தான் நொந்து கொள்ளவேண்டும். அன்று அவன் மீண்டும் தன்னையறியாது தவறிழைத்ததிலோ, அவன் தன்னை மீறி தண்டிக்க முற்பட்டதிலோ குற்றம் இல்லை. பொறுத்துப் பொறுத்து தன் வசமிழந்து அவன் ஆத்திரப்பட்டு விட்டான். பழகிப் பழகி பாசத்தில் வழுக்கி விழுகிருள் அவள்! ஆரம்பத்திலேயே பண்புடன் — மனிதப்பண்புடன், அடக்கமாக வாழ முற்பட்டிருக்கவேண்டும்.

ஆவேசத்தில் அவன் அடித்துத் துன்புறுத்தினன்: வாஸ்த்தவம்! ஆனல் கொல்ல நினைக்கவில்லை; கொல்லவும் இல்லை! தவிர்க்க முடியாத துயரத்தில் அவளும் கிணற்றைநோக்கி ஓடினள் எப்போதும் போல சாவதற்காக! உண்மையில் சாக நினைத்திருந்தாலும் அது அவனைவிட்டு உயிருடன் பிரிந்திருக்க முடியாது என்ற எண்ணத்தினல் தானிருக்கும்! எப்படியோ இன்று அவன் கைபடாமலேயே — அவளாகவே விழுந்து செத்துப்போய்விட்டாள். "ஐயோ! போய்விட்டாளே!" என்று இதோ அவனும் கதறுகிருன். அவன் கூற்றை ஏற்பவர்கள் யார்?

★ ★ ★

மாணிக்கத்தின் வரலாறு முழுவதும் கேட்டு முடிந்த பின்னர், நான் கேட்க நினைத்த "ஜெயில் கிண்ணியில் எச்சில் படாத கிண்ணி எது?" என்பதைக் கேட்கவில்லை. வாழ்வின் அனுபவத்தை இருமுறை உணர்ந்து அறிந்த பின்னும் அவனுக்கே அது விளங்காத புதிராகத்தான் இருந்து வருகிறது. எவனெவனே அவனுக்கு முன் அதே தட்டில் எச்சில் பண்ணி தின்றிருப்பான்; அவனுக்குப் பின்னும் எவனெவனே அதே தட்டில் தின்ன வருவான். ஆனல் மாணிக்கத்துக்கு அது பற்றிய அக்கறையே காணேம்! அவன் அனுபோகத்தில் இருப்பதை அவன் வரை மாசு மருவற்று வைத்துக் காப்பாற்ற விரும்பினன். அவனுக்கு காதலியும் ஜெயில் கிண்ணமும் ஒன்றேதான்! ஆனல் ஜெயில் தட்டு என்னதான் ஒதுக்கி வைத்தாலும், நாளை அவனுக்குப்பின்-மற்ற தட்டுகளோடு மகிழமரத்தடியில் கலந்துவிட வேண்டியது தானே? ஏன் ஜெயிலர் நினைத்தால் இன்றைக்கே கூட அது நடந்துவிடும்! இது எனக்குப் புரிந்து என்ன பிரயோஜனம்?

அவன் கவலைப்பட்டுக்கொண்டே காலம் கழிக்கவேண்டியதுதானே என்னவோ! அதற்குப் பிறகு அதிகநாள் அங்கே நான் இருக்கவில்லை. என்னை வேறு இடத்திற்குக் கொண்டுபோய்விட்டார்கள். வெகு நாளைக்குப் பின் அங்கே கிடைத்த பத்திரிகைக் காகிதம் ஒன்றில் "மாணிக்கத்தின் மீது குற்றம் ருஜுவாகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது" என்று கண்டிருந்தது. எனக்கு அது ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. ஏனென்றல் இனிமேல் அவன் எங்கே இருந்தாலும், எப்படி இருந்தாலும் ஒன்றுதான்!



அந்திமந்தாரை

டி. எம். வாசுதேவன்

பஸ்ஸில் ஓரத்து மூலையில் உட்கார்ந்து குனிந்த தலை நிமிராமல் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த குமரவேல் " பெண்களுக்கு நீண்ட கூந்தல் இருப்பது அழகு தான். ஆனால் அதை நீள சடையாகப் பின்னி அதில் குஞ்சம் வைத்து இப்படி பஸ்ஸில் உட்கார்ந்திருப்பவர்கள் முகத்தில் சாட்டை போல் விசிறிப் போடுவது தான் அழகாயில்லை."

இவ்வண்ணம் எரிச்சலுடன் முனகிக்கொண்டு அருவருப்புடன் எதிரே பார்த்தான்.

அவனுக்கு, அப்படி சினத்தைக் கிளறிவிடுவதற்குக் காரணமாயிருந்த அப்பெண் — அருணா — நகைத்துக்கொண்டே "என்ன துர்வாசரே, இவ்வளவு கோபம் வேண்டாம். உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது, ஆமாம்" என்றாள் கிண்டலாக.

தூக்கிப் போட்டது குமரவேலுக்கு. குதூகலத்தோடு "அடேடே அருணாவா! எங்கே இப்படிக் கிளம்பினே?"

"சாக்ஷாத் தங்களைச் சந்திக்கத்தான்"

"சரியாய்ப் போச்சு போ. நானும் உன்னைச் சந்திக்கத் தான் கிளம்பி வந்து கொண்டிருந்தேன். நட்ட நடுவிலேயே எதிர் பாராவிதமாக சந்தித்து விட்டோம். சரி. இப்படியே இறங்கி 'உமாகேப்பில்' சிற்றுண்டியை முடித்துக் கொண்டு ஏதாவது மாட்டினி ஷோவுக்குப் போய் வருவோம் என்றான்.

"உம்" என்று ஒப்புதலாகத் தலையசைத்தாள்.

இருவரும் பஸ்ஸை விட்டிறங்கி உமாகேப்பில் நுழைந்தார்கள். சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டே சிறிதளவு சிற்றுண்டியையும் ருசிபார்த்து விட்டு சினிமா தியேட்டரை நோக்கிக் குஷாலாகக் கிளம்பினர்.

"நம் கல்யாண விஷயமாக உன் அப்பா ஏதாவது கேட்டாரா?" ஆவலோடு கேட்டான் குமரவேல்.

"உம். உம். கேட்டார். கேட்டார்." அமுத்தலான சிரிப்புடன் கூறினாள் அருணா.

"என்ன கேட்டார்? நீ என்ன சொன்னே?" இது குமரவேல்.

" என்ன அம்மா அவனைப்போய் பண்ணிக்கொள்கிறேன் என்கிறாயே. அவனுக்குப் பேனா பிடித்து எழுதத் தெரியுமா? இல்லே. கேட்கிறேன். ஒரு பத்திரிகாலயத்தில் ஆபீஸ் பையனாக வேலை பார்க்கவாவது அவனுக்குத் திறமை உண்டா? ஒரு பேராசிரியரின் பெண்ணாய்ப் பிறந்து விட்டு இப்படி அற்பத்தனமாக ஆசைப்படுகிறாயே" என்று இரைந்தார்.

குமரவேலின் உள்ளுணர்வு துடித்தது. "ஆகா அப்படியா நினைத்து விட்டார்! இதோ பார். இந்த நிமிஷமே ஒரு பத்திரிகையைத் துவக்கி அதற்கு ஆசிரியராகி ...."

"போதும். போதும். நிறுத்துங்கள், நிறுத்துங்கள். அதற்கு மேல் வேண்டாம். அந்த ஆசை அப்படியே இதயத்தில் இருந்து விட்டுப்போகட்டும்..........அப்பா ஒரு அரைப் பைத்தியம். தான் பெரிய இலக்கிய சேவை செய்வதாக எண்ணிக்கொண்டு இரண்டொரு இரண்டாந்தர விளம்பரங்களையும் வெத்து வேட்டுச் செய்திகளையும் வைத்துக் கொண்டு கதை பண்ணி வருகிறார். உங்களுக்கு வேண்டாம் அந்த 'இலக்கிய சேவை.' அப்புறம் இந்த ஏழைத் தமிழ் நாடு கட்டுக் கொள்ளாது. அறிவாளிகளால் அது திணறித் திக்கு முக்காடிச் செத்துப் போகும்..........ஒன்று சொல்கிறேன். அப்படிச் செய்யுங்கள். இப்போதைக்கு அது போதும்........."

"என்ன? என்ன?"—பரபரப்போடு கேட்டான் குமரவேல்.

அப்புறம் அவள் அவன் காதோடு ஏதோ சொல்ல அவன் ஆக்ஷேபணை செய்ய அவள் சமாதானம் கூற இறுதியில் ஒரு வழியாக அவள் திட்டத்தை ஏற்றுக்கொண்டான்.

அடுத்த நாள் குமரவேல் 'வெய்யோன்' பத்திரிகாலயத்தினுள் நுழைந்தபோது அதன் ஆசிரியர்—அருணாவின் அப்பா—ஏதோ மும்முரமாக எழுதிக் கொண்டிருந்தார்.

"மாமா" என்றழைத்துக் கொண்டே எதிரில் நாற்காலியில் அமர்ந்தான் குமரவேல்.

"ஏன்?" என்று கேட்கும் பாவனையில் அவனை நோக்கினார் அவர்.

"நான் உங்களுடைய நாவல் போட்டியிலிருந்து விலகிக் கொள்ள விரும்புகிறேன். நான் தங்களிடம் கொடுத்திருக்கும் 'அந்தி மந்தாரை' நாவல் கையெழுத்துப் பிரதியைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்."

"ஏன்?"

"ஒரு சினிமா முதலாளி அதைப் படமாக எடுத்துக் கொள்ள முன் வந்திருக்கிறார்."

"உதவாக்கரை. இருந்திருந்து உன்னுடைய நாவல்தானா அகப்பட்டது அவனுக்கு? சீக்கிரம் உருப்பட்டு விடுவான்!

சரி. சரி. இதோ வாங்கிக்கொள். எனக்கும் ஒரு கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்க்கும் சிரமம் மிச்சம்'' என்று அலக்ஷியமாக பீரோவின் பக்கம் போனவர் திடுக்கிட்டார். வைத்த இடத்தில் அதைக் காணோம். உள்ளிப்பாகத் தேட ஆரம்பித்தார். வேண்டாத குப்பைகளெல்லாம் கிடைத்தனவேயொழிய அது காணவே காணோம்.

அலுத்துப்போய் கலவரத்துடன் முன்னே வந்து உட்கார்ந்தார். "அதை எங்கோ காணோம். தவறி விட்டாற் போலிருக்கிறது'' என்றார் தணிந்த குரலில்.

"விளையாடாதீர்கள் மாமா. அவசியம் அது எனக்கு வேண்டும். அந்தப் பட முதலாளி பதினையாயிரத்துக்கு செக் தருவதாகச் சொல்லியிருக்கிறார்.''

"விளையாட்டல்ல குமரவேல். நிஜமாகவே காணோம். நான் என்ன செய்வது? நீ ஏதாவது நகல் வைத்திருக்கலாமே..........''

'அந்த உபதேசமெல்லாம் வேண்டாம் எனக்கு. அந்தப் பிரதி எனக்கு அவசியம் வேண்டும். அதுவும் இந்தக்கணமே தேவை. இல்லாவிட்டால் நான் மிகவும் பொல்லாதவனாக இருப்பேன் மாமா. உங்கள்மீது ரூபாய் இருபதாயிரத்துக்கு கோர்ட்டில் நஷ்டஈடு தாவா செய்யவேண்டி ஏற்படும்''

"அட என்ன அப்பா, பிரமாதமாகக் கோபித்துக்கொள்கிறாய். கொஞ்சம் பொறு. இன்னும் தேடிப் பார்க்கிறேன்'' என்று அவர் தாழ்ந்த குரலில் கெஞ்சவும், அதே சமயம் கைவளையல்கள் கலகலக்க, இரட்டைப் பின்னலின் ரிப்பன் படபடக்க அருணா உள்ளே நுழையவும் சரியாக இருந்தது'

"இதோ பாரம்மா ஒரு கையெழுத்துப் பிரதி தவறிவிட்டது. பிரமாதமாகக் கோபித்துக் கொள்கிறான். நீதான் சமாதானப் படுத்தவேண்டும்.''

"நீயே சொல் அருணா. நான் ஒரு நாவல் எழுதி பத்திரிகாசிரியர் என்றமுறையில் உன் அப்பாவிடம் ஒப்புக்கு அதை காண்பித்தேன். அவர், தான் ஒரு நாவல் போட்டி வைத்திருப்பதாகவும் என்னுடையதை அதில் சேர்த்துக்கொள்வதாகவும் சொன்னார். அப்போதே நான் மறுத்தேன். இவர் விடாப்பிடியாக அது தன் பத்திரிகையில் வெளி வந்தால் தன் பத்திரிகைக்கும் தனக்கும் பெருமையாக இருக்கும் என்று கெஞ்சினார். போகட்டும் என்று கொடுத்தேன். ஆனால் அப்போதே, நான் அதை வேண்டிக் கேட்கும் எந்த சமயத்திலும் திருப்பிக் கொடுத்து விடவேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் தான் கொடுத்தேன். இப்போது சினிமா உலகில் அதற்கு நல்லதோர் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. திருப்பிக் கேட்கிறேன். கொடுத்துவிடவேண்டியது தானே. உன் அப்பா தாமதிக்கிறார். தில்லு முல்லு வேலை செய்கிறார்''.

"இருங்கள். இருங்கள். ரொம்ப ஒவராகப் பேசாதீர்கள். கொஞ்சம் பொறுங்கள் விடுங்கள்''....என்று நீதிபதியின் பாவனையில் உத்தரவு போட்டுவிட்டு'' எங்கே நீங்கள் சொல்லுங்கள் அப்பா உங்கள் கட்சியை'' என்று முழங்கினாள் அருணா.

அருணாவின் அப்பா உள்ளத்துள் சிரித்துக்கொண்டே வாயைத் திறக்க முனைந்தார். "உங்களுக்கு ஒரு சிறு கடிதம் வந்திருக்கிறது" என்று உரைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான் தபால்காரன். அப்பாவுக்காக அதைத் தானே கையெழுத்திட்டு வாங்கிப் பிரித்தாள் அருணா.

சட்டமன்ற உறுப்பினர் உருத்திரசாமி விடுத்திருந்த எச்சரிக்கை அது. தன்னைப்பற்றி வெய்யோன் பத்திரிகையில் அவதூறாக எழுதியதற்காக மானநஷ்ட ஈடாக பத்தாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும் இல்லாவிட்டால் நீதிமன்றத்தில் வழக்காடப் போவதாகவும் வரைந்திருந்தார்.

மௌனமாக அதை அப்பாவிடம் நீட்டினாள். அவள் முகம் சிவந்திருந்தது.

அவர் கடிதத்தைப் பார்வையிடும் வரையில் காத்திருந்தாள். அவளுக்கு உலும்பிக்கொண்டு எழுந்தது கோபம் "என்ன அப்பா. உங்கள் விவகாரம் பெரிதாகிவிட்டது. இவர் ஒருபுறம் பதினையாயிரம் கொடு என்கிறார். அந்த எம். எல். ஏ. பத்தாயிரம் கேட்கிறார்.

''ஆமாம். எப்படியோ பிசகிப் போய்விட்டேன். இப்போ'' இதற்கு என்ன செய்வது?

"இந்தத் தள்ளாத வயதில் ஏன் உங்களுக்கு இந்தக் கவலையெல்லாம். இதோ இவர் இருக்கிறார், நான் இருக்கிறேன், நிர்வாகத்தை எங்களிடம் விட்டுவிடுங்கள். உங்கள் பத்திரிகையைப் பிரமாதமாக நடத்திக் காட்டுகிறோம் பாருங்கள். முதலில் அந்த சட்டமன்ற உறுப்பினரை சமாதானப்படுத்துவது இவர் வேலை. இவர் 'அந்திமந்தாரை'யைப் பற்றி மூச்சு விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது என் பொறுப்பு. அப்புறம் உங்களுக்கேன் கவலை!''

"சரி அம்மா எனக்கு வேண்டியது அவ்வளவுதான். இதோ இப்போதே எல்லாவற்றையும் உங்களிருவர் பேருக்கும் மாற்றிவிட்டு மறு வேலை பார்க்கிறேன்'' என்று கூறி அதைக் காரியத்திலும் நிறைவேற்ற டைப் மிஷினுக்கு முன் போய் உட்கார்ந்தார் அவர்.

"அசடுகள். இதுகள் கல்யாணம் செய்துகொள்ள இப்படி ஒரு வழி கண்டிருக்க வேண்டாம். என்னிடம் தம் உள்ளக் கிடக்கையை வெளியிட்டு ஏற்பாடு செய்துகொண்டிருக்கலாம். அதை விட்டு நான் அயர்ந்திருந்த சமயம் பார்த்து இந்த அருணா அவனுடைய கையெழுத்து பிரதியைத் திருடிக்கொண்டு போவதும் இருவரும் சேர்ந்து உருத்திரசாமியைக் கிண்டிவிட்டு தம் செலவில் எனக்கு நோட்டீஸ் கொடுக்கச் சொல்வதும் வெகுவேடிக்கை! இவ்வளவும் தெரிந்திருந்தும் ஏதும் அறியாததுபோல் நான்நடிப்பது இன்னும் வேடிக்கை. உம். உம். காலாகாலத்தில் இருவருக்கும் முடிச்சுப் போட்டு விடவேண்டியதுதான்.—இப்படி உளத்தோடு சொல்லிக்கொண்டார் அவர்.

உண்மை அறியாத அருணாவும் குமரவேலும் "எப்படி நம் வேலை" என்று கேட்டுக்கொள்ளும் பாவனையில் ஒருவரையொருவர் பார்த்துக் கள்ளத்தனமாகச் சிரித்துக் கொண்டார்கள்.

எமகாதப் பேர்வழியான அந்த ஆசிரியர் அதையும் கவனித்துக்கொள்ளத் தவறவில்லை.

உள்ளம் குளிர்ந்தது

எம். எஸ். கமலா

ரங்கம் அன்று பள்ளிக்கூடத்திலிருந்து சீக்கிரம் வந்து விட்டாள். அரிசி பொறுக்கிக் கொண்டிருந்த அலமேலு ரங்கத்தைக் கண்டதும் பரபரவென்று எழுந்து "நீங்க இத்தனை சடுதியில் வருவீங்கன்னு தெரியாதே" என்று, இன்னும் காப்பி, டிபன் தயாராகவில்லை என்பதை ஜாடையாய் அறிவித்தாள்.

"இவ்வளவு சீக்கிரம் வரநேரும்னு எனக்கும் தெரியாது. நீ நிதானமாய் காப்பிப்போடு. இப்பதான் மாதர் சங்கத்துக் காரியதரிசி மதாலசா என்னிடம் வந்து "வடக்கே இருந்து சில மாணவர்கள் நம் மலையாளநாட்டைச் சுற்றிப் பார்க்க வருகிறார்கள்; உங்களாலான சகாயம் செய்ய வேண்டுமென்றார்." என்று, கையிலிருந்த புத்தகங்களை டிராயருக்குள் வைத்தாள்.

"அதுக்கு நாமென்ன செய்ய முடியும்?" என்று அரிசியைப் பாத்திரத்தில் அள்ளிக்கொண்டாள்.

ஸ்டேண்டிலிருந்த துவாலையை எடுத்துக்கொண்டே "அலமு! இந்த வயநாட் பீடபூமியில் வசதியாய்த் தங்க இடமும் அவர்கள் நாட்டு சாப்பாடும் கிடைப்பது கஷ்டமல்லவா? அதனால் இவ்விடம் சுற்றிப்பார்க்க வரும் மாணவர்களை நம் சங்க நிர்வாக அங்கத்தினர்கள் வீட்டுக்கு இருவர் வீதம் அனுப்பி வைப்பதாகச் சொன்னார்களாம். நிர்வாக அங்கத்தினர் பதவியை விரும்பி வகிக்கும் மாதர்கள் "தங்கள் வீட்டில் இடம் நெருக்கம்" என்று ஒருவரும், "எங்கள் மாமியாருக்கு சரிப்படாது" என்று மற்றொருவரும் "என் கணவர் காதில் இவ் வார்த்தையைப் போட்டாலே சங்கத்துப் பக்கம் கூட தலைசாய்க்கவிடமாட்டாரென்று" வேறொருவரும் சொல்லி கைவிரித்து விட்டார்களாம்."

"மூஞ்சி, முகம் தெரியாத ஆம்பிள்ளைகளை ஒரேமுட்டாய் வீட்டில் வெச்சுக்கோன்னு சொன்னா எப்படியம்மா?" என்று ஆச்சரியத்துடன் முகத்தைக் கேள்விக்குறிபோல் வைத்துக்கொண்டுபார்த்தாள். "முதலில் காப்பியைக் கொடு, அப்புறம் பாக்கி விஷயத்தைச் சொல்கிறேன்." "இன்னிக்கிங்க நான் இப்படி பொழுதுபோனது தெரியாதே இருந்தேன்" என்று தன்னைத்தான் நொந்து கொண்டே அலமு அடுக்களைக்குள் புகுந்தாள்.

ரங்கம் பி. ஏ. எல். டி. வயநாட்டுக்கு வேலைக்கு வந்து பத்து வருடங்களாகின்றன. அவள் அந்த 'போர்ட் ஹைஸ்கூல்' வாத்தியாரம்மாவாய் வரும்போது சாதாரண எஸ். எஸ். எல். ஸி. தான். அதற்குப்பின் அவள் உபாத்தினியாயிருந்து கொண்டே பி. ஏ. எல். டி பட்டம் பெற்று, படிப்படியாய் வேலையிலும் உயர்ந்து அந்தப் பள்ளிக்கே தலைமையாசிரியையாகிவிட்டாள். வயநாட்டுக்கு வருதற்கு முன் தலைச்சேரி, கண்ணனூர் முதலிய இடங்களில் வேலைபார்த்தாள். அவள் வீட்டுக்கு வருபவர்கள் யாருமில்லை. அவளும் விடுமுறை நாட்களில் கூட எங்கும் போகாது தன் வீட்டிலேயே தோட்டவேலை செய்து கொண்டு உற்சாகமாயிருப்பாள். அவள் வேலைக்காரி அலமேலு அவளுடனேயே இருக்கிறாள். அவளைவிட வயதில் மூத்தவள் தான் எனினும் கூடியவரை ரங்கத்தின் எல்லா வேலைகளையும் அவளே செய்துவிடுவாள். ரங்கம் பள்ளிக்கூடத்தைவிட்டு விட்டுக்கு வந்தால் தோட்டத்தைக் கவனிக்கச் சென்றுவிடுவாள். அலமுவும் அவளுடன் நாற்று நட்டு, தண்ணீரூற்றி, உலர்ந்த சருகுகளைப் பொறுக்கி, பந்தல்போட்டு, தன்னாலான காரியங்களைச் செய்வாள். அலமேலு ரங்கத்தின் சமையல்காரி மாத்திரமல்ல. அவள் வீட்டை நாய்போல் காக்கும் விசுவாசமுள்ளவள். ஆள்காரனைப்போல் கடைகண்ணிக்குப் போவாள். அலமேலு இல்லாவிட்டால் ரங்கத்தின் வாழ்க்கை மிகவும் கஷ்டமாகத்தானிருக்கும். அதனால் ரங்கம் அலமேலுவை எப்பொழுதும் குஷிப்படுத்திக் கொண்டேயிருப்பாள். ரங்கத்தின் முகம் கறுத்தால் அலமேலுவின் உள்ளம் நோகும். அவள் கண்கலங்கினால் இவள் குடல் கலங்கும்.

ரங்கம் முகம் அலம்பிக்கொண்டு வந்து கண்ணாடி முன் நின்று தன்முகத்தில் லேசாய் ஸ்னோவைப் பூசி அதன் மேல் வெகு ஜாக்கிரதையாய் முகப்பூச்சுப் பூசிக்கொண்டது தெரியாமலிருக்க நாசூக்காய் பௌடர் பூசிக்கொண்டாள். நெற்றியில் தம்பிடியகலம் குங்குமமிட்டுக்கொண்டு, தன் முகத்தை மற்றொருமுறைக் கண்ணாடியில் பார்த்தாள். அவளுக்கே திருப்தியாயிருந்தது" தலையும் வாரிகிட்டாதான் அலங்காரம் சரியாயிருக்கும் அம்மா!" என்று சொல்லிக் கொண்டே காப்பி லோட்டாவை மேஜைமேல் வைத்தாள் அலமு.

"அவளை ஒருமுறை புருவங்களை நெளித்துக்கொண்டு பார்த்து, "தா! அலமு!! அடுப்படியில் வேலையிருக்கிறதா?" என்றாள் காப்பியை ருசி பார்த்துக்கொண்டே.

"ஏன்? என்ன வேணும்? சொல்லுங்க? என்றாள்.

"அதுதான் அந்தப் பையன்கள் ராத்திரி எழுமணிக்கு வருவார்கள். நம் விட்டில் நால்வர்தான் தங்க முடியும். அதுவும் சிரமத்தின் பேரில் என்று மதாலசாவிடம் சொல்லி

விட்டேன். நீ கடைக்கு சீக்கிரம் போய்விட்டு வந்துவிடு. நான் அதற்குள் விட்டை சற்று அலங்கரிக்கிறேன். போகும் போது பள்ளிக்கூட காவலாளி "கலாசந்திரனைக் கொஞ்சம் வரச்சொல்லி சொல்லிவிட்டுப்போ!"

"ராத்திரி அவுங்க என்ன சாப்பிடுவாங்களோ......."

"அதைப்பற்றிக் கவலைப்படாதே! நமக்குத் தெரிந்ததை நாம் பண்ணிப்போடலாம். அவர்களுக்குப் பிடித்தால் சாப்பிடட்டும். இல்லையேல் இருக்கவே இருக்கு சுகுமார் & கோவிலிருந்து ரொட்டியை வரவழைத்துக் கொடுத்து விடுகிறேன்" என்று வெகு நாட்களாய் மூடிக்கிடந்த பெட்டிகளைத் திறந்து எதை எதையோ தேடினாள். அவள் தேடும்பொருள் கிடைக்க சிறிது தாமதமாயிற்று. அதற்குள் காவலாளி கலாசந்திரன் வந்தான். அவன் சகாயத்தால் விட்டை வெகு நன்றாய் அலங்கரித்தாள். நடுக் கூடத்தில் நான்கு நாற்காலிகளைப் போட்டு அவைகளுக்கு அழகிய பூ வேலை செய்த விரிப்புகளை விரித்தாள். வாயிற்படிக்கு திரைச்சீலை தொங்கவிட்டாள். தெருவெராந்தாவில் நான்கு 'சார்பாய்' (கயிற்றுக் கட்டில்களை) ஒருபுறமாய் நிறுத்தி வைத்தாள். மணி ஏழு அடித்துவிட்டது. அவள் பரபர வென்று அடுக்களைக்குள் நுழைந்து ஏதோ வேலை செய்யத் தொடங்கினாள்.

கடையிலிருந்து சாமான்களை வாங்கிக்கொண்டு வந்த அலமேலு, ரங்கம் வேலைசெய்வதைப்பார்த்து பரபரவென்று அடுக்களைக்குள் புகுந்து "எம்மா இன்னிக்கு வரவங்களுக்கு நான் சமைத்துப் போட்டால் பிடிக்காதுங்களா?" என்று கேட்டாள் உணர்ச்சியற்ற குரலில்.

"அலமு, நேரமாகிவிட்டதே என்று அடுப்பைப்பற்ற வைத்தேன். உன்னைப்போல் நன்றாய் சமைக்கும் சக்தி எனக்கேது? கேத்திரங்காய் உப்பேரி பண்ணு. மத்தனைக் (பறங்கி) கறி பண்ணு. பால்பிரதமன் (பால்பாயசம்) செய்து பப்படாம் காய்ச்சு. சாம்பாரும், ரசமும் தெறிஞ்சே கிடக்கு" என்ன? என்றாள்.

"ஒரு மணி நேரத்தில் பண்ணிவிடமாட்டேனு? அம்மா! சாம்பாருக்குக் கர்ஷணம்..........?"

"உன் இஷ்டம் போல் எதையோபோடு......." என்னும் போதே வாயில் ஆட்கள் வரும் அரவம் கேட்டது. சட் டென்று தெருப்புரம் வந்து எட்டிப்பார்த்தாள். கூலியாள் சாமான்களை சுமந்து வர, மதாலஸாவிட்டு வேலைக்காரன் மூன்று மாணவர்களை அழைத்து வந்தான்.

"சங்குண்ணி! இன்னொருவர் எங்கே?" என்றாள்.

"தம்பிராட்டி மூனுபேரெ அனுப்பிச்சுண்டு" என்றான். அந்த மாணவர்களில் ஒருவன் முன்நின்றுகொண்டு ரங்கத்துக்கு வணங்கி "நாங்கள் மொத்தம் வந்தவர்களே பத்துபேர்கள். அதில் இருவர் 'மூல்லா சாஹேப்' விட்டிற்கு சென்று விட்டார்கள். ஸ்ரீமதி மதாலஸா விட்டில் மற்றவர்கள் தங்கி யிருக்கிறார்கள்" என்றான். ரங்கம் அவனையும், அவனுடன்வந்த மற்றிருவரையும் ஒரு முறைபார்த்து 'சங்குண்ணி' யிடம் ஏதோ மலையாளத்தில் சொல்லி, கூலியாள் கொண்டுவந்த சாமான்களை ஒருபுறமாய் வைக்கச் சொன்னாள். சங்குண்ணி விடைபெற்றுச் சென்றதும் ரங்கம் அவர்களை அன்புடன் உள்ளே அழைத்துச் சென்று அவர்களுக்காக ஒதுக்கி வைத்த அறையைக்காட்டி, "அலமு! என்றாள்.

"ஐந்து நிமிஷத்தில் அலமு கூடத்திலிருந்த மேஜை மேல் நான்கு கோப்பைகளில் 'டீ'யும் ஒரு தட்டில் ஆரஞ்ச் வாழைப்பழம் பலாச்சுளைகளையும் கொண்டுவைத்துச் சென்றுள் மாணவர்கள் சிறிதுநேரத்தில் கூடத்தில்வந்து அமர்ந்த னர். ரங்கம் அவர்களை அன்புடன் நோக்கி, புன்முறுவல் பூத்தாள் முதலில்அவளுடன் பேசினவாலிபன்" அம்மணி! இந்த மேற்குத்தொடர்ச்சி மலைப்பிரதேசத்தின் வனப்பைக் காண எங்களைவரும்படி வற்புறுத்தியவன் மதாலஸாவின் சகோதரன் மங்கேசன். நாங்கள் வந்தோம். அதனுல் முகமறியாத தங்களுக்கு எங்களால்........." என்று முடிப்பதற்குள்,

"சிரமமொன்றுமில்லை, நீங்கள் எப்பொழுது சாப்பிட்டதோ? முன்பு இந்தக் கனிகளை எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு எவ்வித உணவு தயார் செய்ய வேண்டுமென்று சொன்னுல் தயார் செய்யச் சொல்கிறேன்."

"நாங்கள் பெனாரிஸ் யூனிவர்ஸிட்டி" யில் படிக்கிறோமே ஒழிய நாங்கள் தமிழர்கள்தாம். இவன் 'ரங்கராஜன்' எம். எஸ். ஸி. 'ரிசர்ச்' செய்து கொண்டிருக்கிறான். நான் இவ்வருடம்தான் சொற்பொழிவாளனுய்ச்சேர்ந்தேன். இவன் பத்மநாபன் · பி. எஸ். ஸி. பி. இ. இன்னும் ஒரு, வருடப் பயிற்சி பெறவேண்டும்" என்றான்.

"உங்கள் பெயர் சொல்லவில்லையே?" என்று "அலமு.......!" என்றழைத்தாள்.

"ராஜசேகரன் எம். ஏ.," என்றான் ரங்கராஜன். அவன் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு அவனை உற்றுப்பார்த்தாள் ரங்கம். அவனின் கள்ளங்கபடற்ற பார்வையும், வாரிவிட்டும் அடங்காமல் நெற்றியில் படுத்து கொக்கரிக்கும் கூந்தலும் அவளை எங்கோ இழுத்துச் சென்றன. இடது கையால் முகவாய்க்கட்டையைப் பிடித்து அழுத்திக் கொண்டு தன்னைச் சமாளித்துக்கொண்டு; 'டீ' கோப்பையை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எடுத்துக் கொடுத்தாள். அதே சமயம் அலமு மற்றொரு கோப்பையில் 'டீ' எடுத்துக் கொண்டு அவ்விடம் வந்தாள்.

"அலமு! இவர்களெல்லாம் நம்மவர்கள்தான். உன் இஷ்டப்பிரகாரம் நன்றாய்ச் சமைத்துப்போடு. இவர்களிடம் நான் சொல்லியிருக்கிறேன். எங்க வீட்டு அலமுவைப் போல் யாரும் சமைக்கமுடியாது அவள் சமையலை சாப்பிட்டவர்களுக்கு வேறு எவர் சமைத்தாலும் பிடிக்காது என்று" என்றாள்.

"இங்கே பாருங்க! நீங்கல்லாம் என் பிள்ளைங்க போல. அவ்வளவு நன்றா சமையல் செய்யாட்டி இந்த ரங்கம் கவலைபத்து படிச்சு முன்னுக்கு வரமுடியுமுங்களா? நானும் பதினஞ்சு வருசமா சமைச்சுப்போடரேனுல்லா!" என்றாள் பெருமையாய். வாலிபர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக்கொண்டனர்.

"அலமு! நீ போய் சீக்கிரம் உன் வேலையைப்பார்" என்று அவர்களைப்பார்த்து "இவள் வெகுநாளாய் என்னிடம் இருக்கிறாள். நம்பிக்கையும், அன்புமுள்ள இவளைப் போன்ற உண்மை உழைப்பாளி எங்கோ ஆயிரத்துக்கு ஒருவர் தாம் கிடைப்பார்கள்" என்று ஆங்கிலத்தில் சொன்னாள் ரங்கம்.

"முகஸ்துதிப்பிரியம் போலும்" என்றான் ராஜசேகரன் சற்றுக் குறும்பாய். "மானிடர்களுக்கேசகஜமானதுதானே!" என்றான் ரங்கராஜன் அமைதியாய். "அதிலும் வயதான பெண்ணினங்களுக்கு அது ஜீவநாடி" என்றான் பத்மநாபன் அழுத்தமாய். ரங்கத்தின் முகம் இமைப் பொழுது மங்கி மலர்ந்தது. "நீங்கள் ஸ்னானம் செய்வதாயிருந்தால் செய்யுங்கள்" என்று ரங்கம் எழுந்து சென்றாள்.

⁂ ⁂ ⁂

பொழுது போவதே தெரியாமல் நண்பர்கள் பேசிக் கொண்டு அமர்ந்திருந்தனர். மணி ஒன்பதுமுறை யடித்து ஓய்ந்தது. ரங்கம் அவர்களை யணுகி "சாப்பிட எழுந்து வாருங்கள். அதிக நேரமாகி விட்டது" என்று அழைத்த போதுதான் அவர்கள் சுவற்றிலிருந்த கடியாரத்தை உற்றுப் பார்த்தனர். அவர்களுக்கே வெட்கமாயிருந்தது. எல்லோரும் உணவருந்தச் சென்றனர்.

அலமு தான் செய்த அறுசுவை பதார்த்தங்களை மேஜை மேல் கொண்டு வந்து வைத்தாள். ரங்கம் ஏதேதோ பேசிக் கொண்டே அவர்களுக்கு அன்பாய் அன்னையைப் போலப் பறிமாறினாள். எல்லோரையும் விட ரங்கராஜன் அவள் உபசரிப்பில் அன்னையின் அதி உன்னத பாசத்தைக் கண்டு களித்தான். யௌவனப் படியைத்தாண்டி அனுபவ வயதின் மேடு பள்ளங்களையறிந்து அச்சமில்லாமல் அடிபோடும் ரங்கத்தின் முகத்தில் நிர்மலமான புன்னகை நிலவுபொழிந்து கொண்டுதானிருந்தது. கட்டுக்கடங்காத கருங் கூந்தலின் நடுவே ஆங்காங்கு மின்னல் கோடுகளை வரைவது போல் நரைக்கூந்தல் ஒவ்வொன்று பளிச்சிட்டது. அதுவும் அவள் முகத்திற்கு அழகையே அளித்தது. அவளின் அழகிய கண்களை ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கு மாத்திரம் அதில் ஏமாற்றத்தின் ஏக்கம் தேங்கியிருப்பது தெட்டென விளங்கும். ரங்கராஜன் மாத்திரம் அவ்வப்பொழுது அந்தக் கண்களைக் கூர்ந்து கவனித்தான். ஒருவிதமாய் அலமுவைப் புகழ்ந்து, மாணவர்கள் நன்ருய் உண்டு, பத்து மணிக்குப் படுக்கையில் சாய்ந்தனர். பிரயாண அலுப்பும், விருந்து சாப்பாடும் அவர்களை நித்திரையிலாழ்த்தியது.

வடமலையாளத்தின் வனங்களின் சிறப்பும், காப்பிச் செடிகளில் பருத்து நிற்கும் கொத்துக் கொத்தான காப்பிக் கனிகளும், சூரியன் குஞ்சுகள் போல் செம்பொன் நிறமாய்த் தொங்கும் கனிகளை ஏந்தி நிற்கும் ஆரஞ்ச் செடிகளும், பச்சை விசிறிகளை நட்டுவைத்தாற்போல் ஒவ்வொரு இலையுடனேயே ஒய்யாரமாய் ஆடி நிற்கும் சேனைச் செடிகளையும் கனவில் கண்டுகளித்தபடி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த வாலிபர்களை ஆனந்தபைரவி ராகம் தட்டி எழுப்பியது.

"எங்குநோக்கினும் இன்பம், மெய்யின்பம்.
ஏனையயாவினும் இன்பம் நல்லின்பம்.
வாழும் இவ்வையக மின்பம்
சூழும் மலர்ச் சோலைகளின்பம் "எ"
முழங்கும் கடலுடன் பாயும் நந்நதிகளும்
திங்களுள் திகழும் கருமுகிலுமின்பம்.
மின்னும் விண்மீன் களுமின்பம்
தூயவாழ்க்கையுமின்பம் நல்லின்பமே!"

பர பர வென்று எழுந்தனர். அலமு அவர்களுக்கு காலையாகாரத்தைத் தயார் செய்து வைத்துக் கொண்டு காத்திருந்தாள். நண்பர்கள் கலகல வென்று பேசிக் கொண்டே காலைக்கடனை முடித்துக் கொண்டு வந்தனர். ரங்கராஜன் மாத்திரம் "எங்கு நோக்கினுமின்பம், மெய்யின்பம்" என்று தன்னுள் சொல்லிக்கொண்டே கூடத்தின் நாற்புற சுவற்றையும் பார்த்தான். மாசு படிந்த ஒரு சிறு புகைப்படம் தவிர சுவர்களெல்லாம் அப்பொழுது தான் கட்டப்பட்டதுபோல் காலியாய் நின்றன.

"வணக்கம், வெகுநேரம் தூங்கி விட்டீர்கள். மங்கேசன் ஒன்பது மணிக்கு வருவதாகவும், அதற்குள் நீங்கள் ஆயத்தமாயிருக்கவேண்டுமென்றும் சொல்லியனுப்பினர்" என்று தன் இயற்கையான புன்னகையுடன் சொல்லிக்கொண்டே கூப்பியகரங்களுடன் ரங்கம் அவ்விடம் வந்தாள்,

"ஏழு ஆகிவிட்டதா?" என்று ராஜசேகரன் ஆவலாய்க் கேட்டான். அதே சமயம் அரை மணி நேரத்தையறிவிக்கக் கடியாரம் ஒரு முறையடித்து நின்றது.

"ஏழு..........ராத்திரி தாங்க இனி ஏழு மணி. "இப்பொ அடிச்சது எட்டரையுங்க" என்று அலமு சூடான இட்டிலியும், பூரி, மசாலாவும், புகைக்கும் காப்பிக் கோப்பைகளையும் ஒரு பெரிய ட்ரேயில் கொண்டு வந்து வைத்து அவ்விடம் விட்டகன்ருள். மாணவர்கள் வெட்கித் தலை குனிந்தனர்.

"அவள் நடுவில் ஏதாவது அசம்பாவிதமாய்ப் பேசி வைப்பாள். ஒரு நாளா? அரை நாளா? நான்கு நாட்கள் பிரயாணமல்லவா? மிகவும் சோர்வுற்றிருக்கிறீர்கள். பிறகு பேசலாம்" என்ருள் ஆங்கிலத்தில்.

"உண்மையில் நாங்கள் இந்தப்பிரயாணத்தில் சோர்ந்து தான் போனேம். மேற்கு மலைத்தொடர்ச்சியின் மேடு பள்ளங்களில் பஸ் ஏறி இறங்கும் போது குடலைக் குமட்டிக் கொண்டு வாந்தியெடுத்து அவதிப்பட்டோம்" என்ருன் ரங்கராஜன்.

ரங்கம் தன் இயற்கையானப் புன்னகையைக்காட்டி "அப்படியா?" என்று அவனை உற்றுப்பார்த்தாள். அவன் கள்ளங்கபடற்ற பார்வை அவளை ஈர்த்து நின்றது. சட்டென்று தன்னைச்சமாளித்துக் கொண்டு,

"நீங்கள் இம்மாதிரி பஸ்பிரயாணம் செய்ததில்லை போலும்", என்றாள்.

"நான் பஸ் பிரயாணம் செய்திருக்கிறேன். விமானத்தில் கூட பிரயாணம் செய்திருக்கிறேன். ஆனால் இந்த கூத்தாடிச்சுரத்தின் மேல் பஸ் ஏறி இறங்கும்போது........"

"ஆமாம்! குட்டியாடிகாட்' என்னும் இடம் சற்றுக் குடலைக் குமட்டும். வாருங்கள். காலையாகாரம் எடுத்துக்கொள்ளுங்கள் நேரபதிகமாகி விட்டால் வேண்டியிராது" என்று முதல் நாள் இரவைப்போலவே பரிமாறத் தொடங்கினாள்.

"நீங்களும் எங்களுடனேயே சாப்பிட்டால் நன்றாயிருக்கும்" என்றான் ரங்கராஜன். அவள் சிரித்துவிட்டு வெகு அன்பாய்,

"நீங்கள் முதலில் கருடப்பாரையைப் போய் பார்த்துவிட்டு வாருங்கள். அலமு வென்னீர் போட்டு வைத்திருப்பாள். ஸ்நானம் செய்து சாப்பிட்டு இளைப்பாருங்கள். மாலை சீக்கிரம் வந்து இந்த வீட்டிற்குச் சொந்தமான காவத்தன் கண்டி, சேனைக்கண்டி, வாத்தியார்கண்டி முதலிய இடங்களைக் காட்டுகிறேன். கபிலையில் அதிகத் தண்ணீர் இராவிடினும் இறங்கி விடாதிர்கள். எங்காவது மலையில் மழை பெய்தால் கபிலை கதறிக்கொண்டு வருவாள். ஜாக்கிரதை. இயற்கையன்னையின் சௌந்தர்யத்தைக் காண வந்து......" என்று அனைவரையும் ஒரு முறைப் பார்த்தாள். அதே சமயம் மங்கேசன் "எனக்குக்கிடையாதா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான்.

"எல்லாம் உன்னுடையது தானே!" அலமு!! மங்கேசன் வந்திருக்கிறான்" என்று தன் முன் இருந்த தட்டை அவனுக்கு நகர்த்தினாள்.

"இல்லை நான் ஒன்றகரா வயிறு தின்று விட்டு வந்தேன்' என்ன ராஜசேகர்! தூக்கம் போதாதோ?" என்றான்.

"நல்ல தூக்கம். நல்ல சாப்பாடு" என்று எழுந்தான். ஐந்து நிமிஷத்தில் அனைவரும் உடுத்துக்கொண்டு புறப்பட்டனர். இரண்டு நாட்களில் வயநாட் பீட பூமியை சுற்றிப் பார்த்துக் கொண்டு மூன்றும் நாள் காலை பஸ் மார்க்கமாய் அவர்கள் ஊட்டிக்குச் சென்றனர். அவர்கள் செல்லும் போது ரங்கத்திடம் பிரியா விடை பெற்றுச் சென்றனர். ரங்கத்திற்கு மாத்திரம் அவர்கள் இன்னும் இரண்டு நாள் தங்கவில்லையே! என்று குறையாயிருந்தது.

• • • •

அலமேலு தன் நெருங்கிய உறவினர்கள் யாரோ கள்ளிக்கோட்டைக்கு வந்திருப்பதாக அறிந்து இரண்டு நாள் விடுமுறை பெற்று அன்று காலை புறப்பட்டுச் சென்றாள். ரங்கம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து ஸ்நானம் செய்துவிட்டு கூடத்திலமர்ந்து மாதாந்திரப் பரீக்ஷை விடைத் தாள்களை திருத்திக் கொண்டிருந்தாள். அச்சமயம் "டீச்சரம்மை மடத்திலுண்டோ!" (வாத்தியாரம்மா வீட்டிலிருக்கிறார்களா?) என்று யாரோ கேட்பது கேட்கவே எழுந்து எட்டிப்பார்த்தாள். அவள் நீண்ட கூந்தல் காற்றில் பறந்து கொண்டிருந்தது. ஒரு சிறு பெட்டியை தூக்கிக்கொண்டு நின்ற கூலியாளுக்குப்பின் நிற்கும் ஒரு ஆடவனை உற்றுப் பார்த்தாள். சுமார் ஐம்பது வயதுள்ள அவர்.

"ரங்கம்......" என்றார். அவள் மெய்சிலிர்த்தது. அந்தக் குரல்......

"நீங்கள்.....நீங்.....கள்......" என்றவள் "வாருங்கள்" என்றாள் ஒருவாறு சமாளித்துக்கொண்டு. அவர் அந்த கூலியாளிடமிருந்த பெட்டியை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றார். ரங்கத்தினால் பேசமுடியவில்லை. அப்படியே சுவற்றில் சாய்ந்து நின்றாள்.

"ரங்கம்! நீ இங்கிருப்பதை என் அதிர்ஷ்டத்தினால் ரங்கராஜன் பார்த்துவந்து எழுதினான். இதோ பார். இந்தக் கடிதம் உனக்கனைத்தையும் தெரிவிக்கும்." என்று ஒரு நீண்ட கடித உரையைக் கொடுத்தார். அதில்,

"அப்பா!

நாங்கள் பத்து மாணுக்கர்கள் வயநாட் பீடபூமியைப் பார்க்கச் சென்ற இடத்தில் நீங்கள் நினைத்துருகும் புனிதவதியைக் கண்டோம். உங்கள் அன்பின் மகுத்துவமோ என்பாக்கியமோ அறியேன். அவர்களின் விருந்தினனாய் மூன்று நாட்கள் தங்கினேன். அவர் பெண் துறவியைப் போல் மலைகள் சூழ்ந்த வயநாட் பீடபூமியில் அடர்ந்த வனத்திற்கிடையே சிறு வீட்டில் குடியிருக்கும் அந்த சபரி பள்ளி உபாத்தினிதான். எனினும் தூய எண்ணங்கள் நிறைந்த தயாமயி.

அப்பா! அந்த தெய்வப்பிறவியை நீங்கள் எப்படி மறக்கமுடியாது தவிக்கிறீர்களோ அப்படியே அவரும் உங்களை எண்ணி எண்ணி உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டிருக்கிறார் போலும். என்னைக் கண்டதும் ஆச்சரியத்துடன் தன்னை மறந்து இமைப்பொழுது நின்றவர் பிறகு என்னைப் பற்றி பூரணமாய் விசாரிக்கவில்லையே! பெண்களுக்கே புரம்பான பெண் தெய்வம் போலும். எல்லோரையும் போல் நானும் என் படிப்பையும் பெயரையும் சொன்னேன். என் குரலை கேட்கும் போது மாத்திரம் மேக கர்ஜனையை கேட்டு களிக்கும் மயிலைப்போல் களிப்பார். நான் சென்ற அன்று எனக்கு அதுவிளங்கவில்லை. மறு நாள் காலை குளித்து கூடத்திற்கு வந்த போது உங்களிடமிருப்பது போன்ற புகைப்படம் மாசு படிந்தது அந்தம்மாளின் அறையினருகே மாட்டப்பட்டிருப்பதைக் கண்டேன். பிறகு விசாரித்ததில் அவர்கள் உங்கள் பிரார்த்தனை தெய்வமென்று தெரிந்தது. அம்மாள் இறந்து இருபதாண்டுகளாய் நீங்கள் இரவில் அந்தப் படத்துடன் பேசிக் கொண்டு காலம் கடத்தினது போதும். உங்கள் உலர்ந்த வாழ்க்கையில் பசுமையைக்காண வேண்டுமானால் உடனே வயநாடுக்குச் செல்லுங்கள். எங்கம்மாவான ரங்கம்மாளிடம் என் தாழ்ந்த வணக்கங்களைத் தெரிவியுங்கள். இனி எவரையும் ஏமாற்ற முடியாது. வட நாட்டில் விடுமுறை விட்ட அன்றே வய நாட்டை தேடிக் கொண்டு அவர் மைந்தன் வந்து விடுவானென்று சொல்லுங்கள். இனி உங்களையும் தனிமையில் வாட்டித் தானும் தனிமையில் வதங்க வேண்டாமென்று சொல்லுங்கள். மகன் தலை எடுத்து விட்டால் தாய் தந்தையர் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டியது கடமை. ஆகவே நீங்களிருவரும் இங்கு வருவதாயிருந்தால் நல்லது. அம்மா அந்த பசுமையான மலையாள நாட்டை விட்டு வர இஷ்டப்படாவிடில் நானே அப்பக்கம் வந்து விடுகிறேன். இக்கடிதம் உங்களுக்கு கிடைத்ததும் நீங்கள் புறப்பட்டு விடுவீர்களென்று தெரியும். அடுத்த வாரம் அம்மாளுக்கு எழுதுகிறேன்.

உங்கள் அன்பு மைந்தன்

ரங்கராஜன்.

அதைப் படித்ததும் அவள் கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உருண்டன. அவள் கண்முன் இருபதாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் திரையிட்டது. அவள் பரீக்ஷை எழுதி வீட்டுக்கு வந்ததும் அவள் தாய் கண்ணை மூடினாள். அவ்வருடம் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை எழுதிய ரங்கம் உபாத்தினி பயிற்சிபெற, பயிற்சி பள்ளிக்கூடங்களுக்கு எழுதிக்கொண்டிருந்தாள். அப்பொழுது பக்கத்து வீட்டு

பருவதம் அவ்விடம் வந்து "ரங்கம் என்ன செய்றே? இந்த கடிதத்தைப் படித்துச் சொல்லேன்" என்றாள். அவள் படித்தாள். அதில் "ராஜாராமனுக்கு நாங்கள் பார்த்த பெண் பிடிக்கவில்லையாம். அங்கேயே யாரோ ஒரு பெண் வெகு அழகாய் நல்ல குணமுள்ளவளாயிருக்கிறாளாம். அவளை மணக்கவேண்டுமாம். அந்தப் பெண் யார்? உனக்குத் தெரியுமா? நல்ல இடம் தானா? பணக்கட்டும் ஜனக்கட்டும் உண்டா?"

இதைப் படித்த ரெங்கத்தின் முகம் கருத்தது. மெல்ல யார் மாமி என்றாள்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லையடி. இங்கு சமத்தாய் குனிந்ததலை நிமிராமல் படித்துக் கொண்டிருந்தவன் இப்படி சொன்னானென்றால் ஆச்சரியமாய்த்தானிருக்கிறது" என்றாள்.

ரங்கம் பெருமிதமாய் சிரித்தாள். ரங்கமும் அவள் தாயும் என்று அவ்வீட்டில் குடிபுகுந்தார்களோ அன்றே ரங்கம் ராஜாராமன் மனதை கொள்ளை கொண்டாள். ஓரிருமுறை ராஜாராமன் ரங்கத்திடம் அவள் தாய் முன்னிலையிலேயே இவ்விஷயத்தை சொல்லியிருக்கிறான். உலக விவகாரத்தை நன்கறிந்த ரங்கத்தின் தாய் இதைப் பெரிதாய்க்கருதவில்லை. கண்ணை மூடும்போது "ரங்கம்" எவர் பேச்சையும் எளிதில் நம்பி பெண்மையை நாசம் செய்துகொள்ளாதே" என்று சொன்னாள். அவள் மனதில் அவள் தாயின் பேச்சு எதிரொலித்தது. அவள் மனதில் 'பணக்கட்டு, ஜனக்கட்டு, நல்லயிடம்' என்றது ஆழப்பதிந்தது. பயிற்சிப்பள்ளியில் இடம் கிடைத்ததும் போய்ச்சேர்ந்தாள். அவள் போவதற்கு முன் ராஜாராமனுடன் புகைப்படம் பிடித்துக்கொண்டாள்.

பயிற்சி முடிந்ததும் கண்காணாத இடத்திற்கு வேலைக்குப் போவதாய் சொல்லிக் கொண்டிருந்தாள். கள்ளிக்கோட்டையில் போய் வேலை ஏற்றாள். அங்கிருந்து தலைச்சேரி கண்ணனூர் முதலிய இடங்களில் வேலை பார்த்து வயநாட் வந்து சேர்ந்தாள். இன்னும் நான்கு வருடம் உழைத்தால் உபகாரச் சம்பளம் பெறுவாள். இச்சமயம் இவர் வந்து........

"ஏன் ரங்கம் அழுறே? உன் விருப்பப்பிரகாரம் வேரொத்தி கைபிடித்து அவள் அளித்த கனியை ஏந்தினேன். அவள் காலன் விடு சென்றாள். உன்னை எங்கெல்லாம் தேடினேன். பெற்றவர்கள் திருப்திக்காக மணந்த அவள் மறைந்து மறுபடியும் உன்னினைவே என் நெஞ்சின் அலைகளில் எழும்பி கூத்திட வேண்டுமா? ஆலகாலத்தைப்போல் கொதிக்கும் என் உள்ளத்தைத் திறந்து பார். வாழ்வின் இறுதியிலாவது வாழ்க்கையின் முதல் படியிலேற தகப்பன் சாமியாய் நம்மைந்தன் ரங்கராஜன் துணைபுரிந்தானே!" என்று அவள் கரம்பிடித்தான். எத்தனையோ ஆண்டுகளாக கொதித்துக் கொண்டிருந்த அவள் "உள்ளம் குளிர்ந்தது" வேதனை நிழல் படிந்த அவள் கண்களில் இன்ப ஒளி வீசியது. அச்சமயம் சங்குண்ணி வந்து

"அம்மா! உங்களை மதாலஸா அம்மாள் தீபாவளிக்கு அங்கு வரச்சொன்னாங்க" என்றான்.

"எங்க வீட்டிலே அவர் வந்துவிட்டார். நான் வரவில்லை என்று சொல்" என்றாள்.

★ ★

நாயும் கல்லும்

டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி.

அன்று மாலை ஊருக்குத் தபால் எழுத விரும்பி மேஜையைத்துளாவினேன். கார்டு கிடைத்தது. பேனு கிடைக்கவில்லை. பையன் எடுத்துப் போயிருந்தானென்று தெரிந்தது. பிறகு எழுதலாமென்றிருந்து விட்டேன்.

இரவு பையன் வந்த பிறகு பேனுவைக் கேட்டு வாங்கினேன். ஆனல் கார்டு நான வைத்த இடத்தில் காணும். எரிச்சலாக வந்தது. "நாயைக் கண்டால் கல்லைக்காணும்," என்று நான் அழுத்துக் கொணடதைக கேட்டுககொண்டே, என் தங்கை சற்று முன்புதான் அந்த கார்டைத் தான் உபயோகப்படுத்தி விட்டதைச் சொல்லி, " என்ன அண்ணு! நாயும் இருந்து, கல்லும் கிடைத்துவிட்டால், நாய் மீது கல்லை விட்டெறியத்தான் செய்வாயா ?" என்று கேட்டுவிட்டாள்.



கேள்வி நல்ல கேள்விதான். சிந்தனை ஓடிற்று.

இது என்ன விசித்திரப் பழமொழி !

" நாயைக் கண்டால், கல்லைக்காணும்

கல்லைக்கண்டால், நாயைக்காணும் ! "

கல் கிடைத்து விட்டால், நாயை அடிக்க வேண்டியது அவசியம் தானு? கடிக்க வரும் நாயைக் கூட பயமுறுத்தித் துரத்துவதுதான் முறையே தவிர, அடிப்பது நியாயமில்லையே! அஹிம்சையே மேலான தர்மம் என்ற கோட்பாடு நிலவிவரும் நாட்டிலே, இப்படியும் ஒரு பழி இருக்க முடியுமாவென்றெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தேன்.

உண்மைக் கருத்து புலனுகாவிட்டாலும், நாம் நினைத்துக் கொண்டிருக்கும் கருத்தைத் தவிர வேறு மேலான கருத்துடன்தான் பழமொழி உருவாகி இருக்கவேண்டுமென்று தோன்றிற்று.

" அப்பா, நேத்திக்கு கொலுவில் வைக்க நீ வாங்கி வந்தாயே நாய்க்குட்டி, அதை விஜயா உடைத்து விட்டாள்" என்று புகார் தாக்கல் செய்தான் மணி. உடைந்த நாய்த் துண்டுகளையும் என் முன் கொண்டு வந்து வைத்தான்.

என் யோசனை பலமாக இருந்ததே அல்லாது, அவனுடைய கேஸ் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

உடைந்த பொருளைப் பார்த்தேன். அது நாயல்ல. வெறும் மண்தான். நாயுருவம் களையப்பெற்று மண் தன் பூர்வாசிரமத்திற்கு வந்துவிட்டது.

தங்கை கேட்ட கேள்விக்கு விளக்கமும் தெரிந்து விட்டது.

பழமொழியின் தோற்றுவாய் இப்படித் தான் இருக்க வேண்டும். கல்லினுல் செய்யப்பட்ட நாயைப் பார்த்து ஒரு சிந்தனையாளன் வியந்திருக்க வேண்டும்.

"நாயைக் கண்டால், கல்லைக்காணும்"

கலைஞனின் கைத்திறன் கல்லை மறைத்துவிட்டது. ஆனல் கலைஞனுக்கும் மேலான சிந்தனையாளன் அவன். சாக்ஷிபூதமாக தன் எதிரில் நிற்கும் நாய் உருவத்தை தன் மனத்திரையிலிருந்து நீக்கிப் பார்த்தான்.

" கல்லைக் கண்டால், நாயைக் காணும் "

இவ்விதமாக அவன் முடிவிற்கு வந்திருப்பதிலும் விந்தையுமில்லை.

திருமூலரின் மந்திரச் சொல் அறியாதார் யாரே !

" மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம் "



கௌரவம்

வி. லக்ஷ்மிநரசிம்மன்

''ராஜீவ நயன த்யாக ராஜாதிவினுத மைன நீனுமரூப முலகு........'' என்று பாகவதர் மங்களத்தை ஆரம்பித்த உடனேயே சபையில் கூடியிருந்த திரளான ஜனங்கள் தங்கள் இடத்தை விட்டு எழுந்து புறப்படுவதற்கு ஆயத்தமாயினர். ரசிக ரஞ்சனி சபாவில் வெகு நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட கச்சேரி அது. கானுமிர்த கணேச பாகவதர் அவர்களுடைய கச்சேரியென்று ஒரே அமர்க்களம். கூட்டத்திற்குக் கேட்க வேண்டுமா?

''ஏம்ப்பா, கச்சேரி எல்லாம் முடிஞ்சுட்டது. இன்னும் என்னப்பா உக்காந்திருக்கே. சுண்டல் ஏதாவது குடுப்பாங்கன்னு நினைச்சுக் கிட்டிருக்கியா. எழுந்திரு, எழுந்திரு'' என்ற பாலசுப்ரமணியத்தின் குரலைக் கேட்டு ராஜாராமன் உடம்பைச் சிறிது அசைத்துக் கொடுத்தான்.

''மழை இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடும் போலிருக்கிறது. புறப்படுப்பா சிக்கிரம்'' என்றான் பாலசுப்ரமண்யம் மீண்டும்.

''ம்....ம்.......இதோ....... என்று சொல்லிக்கொண்டே ராஜாராமனும் எழுந்து நடக்க ஆரம்பித்தான்,

''கச்சேரி எப்படி இன்னிக்கு? பிரமாதமில்லே?

ராஜாராமன் பேசவில்லை.

''ஏம்ப்பா, ராஜாராம், கரஹரப்ரியா ராக ஆலாபனையும் அதிலே ஐயர்வாளோட உருப்படி ''பக்கல நிலபடி''யும் ஏ ஒன். கணேச பாகவதரோட கச்சேரி என்னைக்குமே சோடையாகப் போனதில்லே. ஒவ்வொரு கச்சேரியிலேயும் ஏதாவது ஒரு புது சங்கதியை அவிழ்த்து விடுவார். எனக்குத் தெரியும் ''நின்னு கோரி''....ங்கிற மோகன ராக வர்ணத்தோட எப்போ கச்சேரியை ஆரம்பிச்சாரோ அப்பவே எனக்குத் தெரிஞ்சு போச்சு இன்னிக்கு நல்ல இசை விருந்து இருக்குன்னு, எப்படி அந்த வர்ணம்?

ராஜாராமனின் வாயிலிருந்து வார்த்தை உதிரவில்லை. ''சரிப்பா, நான் வர்றேன். இன்னைக்கு உனக்கு ''மூடு ஒண்ணும் சரியாயில்லேன்னு நினைக்கிறேன்'' என்று சொல்லியவாறே பாலசுப்ரமண்யம் விடை பெற்றுக்கொண்டான்

வர்ணம்....வர்ணம்....என்று ராஜாராமனின் வாய் முணுமுணுத்தது. வாழ்க்கை ஒரு வர்ணக் கண்ணாடி! அதிலும் ஒரு விசித்திர வர்ணக் கண்ணாடி என்று எங்கோ, எப்போதோ காலேஜில் படித்ததாக ஞாபகம். அன்று அதன் பொருள் அவ்வளவாக விளங்கவில்லை. ஆனால் இன்று? ஓரளவு விளங்கித்தான் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஏனெனில் அவன் மாமனாரின் சாயம் வெளுத்துவிட்டது என்பதற்குத்தான் ஆதார பூர்வமான அத்தாட்சிகள் கிடைத்து விட்டனவே. ''கலர் ஹார்மனி'' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்களே அதைப்போல் வாழ்க்கையெனும் வர்ணக் கண்ணாடியிலும் கட்டாயம் இருக்கத்தான் செய்யும் என்று அவன் நம்பியேயிருந்தான். அன்று வரை.

ராஜாராமன் ஒரு பைத்தியம். அதிலும் கலைப்பைத்தியம். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் இசைக் கலைப் பைத்தியம். நல்ல எடுப்பான சாரீரம். குழைவோடு கூடிய குரல். சிறு வயதிலிருந்தே யாராவது ஒரு பாட்டுப் பாடினால் அதை உடனே அவரைப்போலவே பாடிக் காட்டுவான். சினிமாவில் வரும் பாட்டுக்கள் மனப்பாடம். இவ்வளவு திறமை படைத்த அவன் கல்லூரியில் நடந்த இசைப் போட்டியில் முதல் பிரைஸ் அடித்தது யாருக்கும் ஆச்சரியமாகவில்லை. அண்ணாமலை யுனிவர்ஸிடியில் சங்கீதபூஷணம் கோர்ஸில் சேர்ந்து இசைக் கலைஞனாகவே தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்று உறுதி கொண்டிருந்தான்.. ஆனால் திடீரென்று அபஸ்வரம் ஒன்று விழுந்தது. கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாயிற்று.

தந்தையின் மரணத்திற்குப் பின்னர் நிர்க்கதியாக விடப்பட்ட தன் தாயைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு ராஜாராமனுக்கு ஏற்பட்டது. அந்த ஊரிலேயேயிருந்தால் பழைய நினைவு அலைகள் நெஞ்சக் கடலிலே மோதி அதன் அமைதியைக் கெடுத்துவிடும் என்று தன் தாயுடன் திருப்பாப்புலியூர் அடைந்தான். உடன் படித்தவன் ஒருவன் உதவியினால் வாணி விலாஸ் பாங்கில் குமாஸ்தா வேலை கிடைத்தது. ராஜாராமன் உண்மை உழைப்பாளி என்று எல்லோரும் பேசிக்கொண்டனர்.

சோமசுந்தர முதலியாருக்கு அந்த ஊரில் நல்ல செல்வாக்கு. வாணி விலாஸ் பாங்கின் ஏஜன்டாக பணியாற்றி வந்த அவருடைய இனிய சுபாவத்தினாலும் சுமுகமான பழக்க வழக்கங்களினாலும் பாங்கின் வருமானத்தை வருடா வருடம் உயர்த்திக்கொண்டே வந்தார். பலாப்பழத்தைப் போல் வெளித்தோற்றம் கரடு முரடாக இருப்பினும் அவருடைய உள்ளம் பலாச்சுளையையொத்து மென்மையானது. வேலையைப் பொருத்த வரையில் மிகவும் கறாரான பேர்வழியென்று பாங்க் ஊழியர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் வேலை நேரம் முடிந்ததும் எல்லாரோடும் சமமாகப் பழகுவார். ஆகவே, சோமசுந்தரம் முதலியாரின்கீழ் வேலை

செய்ய நேர்ந்ததைத் தங்களது பாக்கியமாகவே எண்ணி வேலை நேரத்தில் அவர் எதிர்பார்ப்பதற்குமேல் விறு விறு என்று வேகமாக வேலையைச் செய்து முடிப்பார்கள். தன் கீழ் வேலை பார்ப்பவர்களது வாழ்க்கையில் சோமசுந்தரம் விசேஷ சிரத்தை காட்டி வந்தார். ஒவ்வொருவரது குடும்ப விவகாரங்களைப்பற்றி அடிக்கடி கேட்டுத் தெரிந்துகொண்டு அதற்கான நல்ல யோசனைகளும் தருவார். சமயத்தில் பண உதவியும் செய்வதுண்டு. பழுத்த அனுபவத்தின் திறமையால் அவர் சொல்லிய ஆலோசனைகள் பெரும்பாலும் நன்மையிலேயே முடிந்திருக்கின்றன. பாங்க் ஊழியர்களன்றி ஊரில் உள்ள பொதுமக்களும் சில சமயங்களில் அவரை மத்யஸ்தம் செய்ய அழைத்துப்போய் விடுவதுண்டு.

தீபாவளிக்கு இன்னும் நாலைந்துநாட்கள் தான் இருக்கின்றன. பாங்கில் மாலையில் வேலை முடிந்தவுடன் எல்லோரும் தீபாவளித்துணிகள் வாங்க இரண்டு மூன்று தினங்களாகப் போய்க் கொண்டிருந்தார்கள், ஆனால் ராஜாராமன் மட்டும் வழக்கம்போல் தன் மேஜைக்குப் பக்கத்தில் தனியே உட்கார்ந்துகொண்டு வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தான். ஏதோ வேலையாக அந்தப் பக்கம் வந்த ஏஜண்ட் சோமசுந்தரம் ராஜாராமனைப் பார்த்துவிட்டு "ஏம்பா, ராஜாராம், தீபாவளிக்குத் துணியெடுக்க கடைத்தெருவுக்கு நீ இன்னும் போகவில்லையா! என்றார்.

"இல்லை,....சார்"

"ஏன்,....காரணம்?"

"என்ன தீபாவளி சார்"என்றான் ராஜாராமன் அசிரத்தையோடு.

"என்னப்பா இப்படிச் சலிச்சுக்கிறே?" உனக்கு என்ன வந்தது. வருஷத்துக்கு ஒரு நல்ல நாள் வர்றதை நல்லா சந்தோஷமாகக் கழிப்பியா அதை விட்டு....

"சந்தோஷமா எல்லோராலேயும் எங்கே சார் இருக்க முடியுது? அதுக்கு அதிர்ஷ்டம், தலையெழுத்துன்னு ஒண்ணு இருக்கவேண்டாமா?"

"சந்தோஷமா யிருக்கிறதுக்கு அதிர்ஷ்டம் ஒண்ணும் பிரமாதமா வேண்டியதில்லேப்பா. பாடிப் பிச்சையெடுத்துப் பிழைக்கிற பரதேசிங்க கூட நல்லா சிரிச்சுப்பேசி சந்தோஷமா யிருக்காங்களேப்பா. சந்தோஷமா யிருக்கறதுக்கு மனசு இடம் கொடுத்தாப் போதும்."

"ஆமாம். சார், மனசு தான் சார் சரியாயில்லே"

"உனக்கு இது தலை தீபாவளியில்லே?..ஆமாம். இது தானே தலை தீபாவளி. போன வருஷம் நவம்பர் மாதம் 7ம் தேதியிலே தான உனக்குக் கல்யாணம் நடந்தது. தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்குப் போறதுக்கா இவ்வளவு யோசனை பண்ணிக்கிட்டு இருக்கே? ஆமாம்....கையிலே என்ன அது கடுதாசி?"

"மாமனார் கிட்டேயிருந்து வந்தது இந்தாங்க"

"லெட்டருக்கு ஆண் குழந்தை பிறந்திருக்குன்னு எனக்கு சொல்லவேயில்லேயப்பா நீ. குழந்தையைப் பார்க்கப் போனியா இல்லையா?"

"எங்கே...சார்...போறது"?

"உனக்கென்ன [illegible] இருக்கா? இல்லையா? ஆண் குழந்தை பிறந்திருக்கு. தலை தீபாவளி இது இரண்டை-

யும் ஒட்டி மாமனார் விட்டிற்குப் போகாமே பின்னே எப்போ போகப் போறே?"

"மதியாதார் வாசல் மிதியாமை கோடிபெறும்"

"உன்னை மதிக்காமே என்னப்பா செஞ்சுட்டார் அவர். நல்ல மனுஷன்ச்சே அவர்?"

"உங்களைப் பொருத்த வரையிலே யார் சார் இந்த உலகத்திலே கெட்டவங்க? உங்களுக்கு எல்லாமே நல்லவங்க தான்."

"ஆமாம்ப்பா, உலகத்திலே எல்லாமே நல்லவங்கதான். நம்மைப் பொருத்த வரையிலே நாம் நல்லா நடந்து கிட்டோம்னு உலகம் தானு நல்லதா ஆகிட்டுப் போகுது. உலகத்தைத் திருத்தறதுக்கு முன்னாலே நம்மைத் திருத்திக்கணும்ப்பா" அதிருக்கட்டும்...உனக்கு என்ன குறை வைச்சுட்டாரு உங்க மாமனார்?

"ஒரு குறையாயிருந்தாயில்லே சொல்றதுக்கு" "பாவம், அவர் ஒரு ஏழை வாத்தியார். கல்யாணத்தை யெல்லாம் நல்லா தானேப்பா நடத்தினார்.

"கல்யாணத்தை நடத்திட்டா போறுமா சார்; மாப்பிள்ளைக்கு வேண்டியதுகளைக் காலா காலத்துலே கொடுக்க முடியாதவன் ஏன் சார் பொண்ணுகளுக்குக் கல்யாணம் செய்றான்?"

"மாமனார் இளிச்சவாயனு இருந்தா மாப்பிள்ளைங்க 40 பக்கம் நோட்டுலே இல்லே தனக்கு வேண்டியதுகளை எழுதிக் கொடுப்பான்? மாப்பிள்ளை கேட்டது எல்லாம் மாமனார் வாங்கிக் கொடுத்தாருன்னு அவர் கதி என்ன ஆகிறது"?

"பொங்கலுக்குள்ளே ஒரு கைக்கடியாரம் வாங்கிக் கொடுக்கிறேன்னு சொல்லியிருந்தாரு சார். பொங்கலும் போய் ஒன்பது திங்களும் போயிடுச்சு. கடியாரத்தைக் காணோம்."

"அதுக்காக? பிறந்த குழந்தையைப் பார்க்கக்கூடப் போகக் கூடாதுன்னு சொல்லியிருக்கோ? உன் குழந்தையைப் பார்க்கிறதுக்கு என்னப்பா"?

"என் குழந்தையை நான் இன்னும் கொஞ்சநாள் கழிச்சுப் பார்த்துக்கறேன்."

"இந்தாப்பா, ராஜாராம் நான் சொல்றதைக் கேளு. வாழ்க்கையிலே சந்தோஷமான கட்டங்கள் முழுநிலவுபோல் அவ்வப்போது நான் வரும் தொடர்ந்து வந்து கொண்டிருக்காது. மனிதன் அகந்தையினலே இந்த கட்டங்களை அலட்சியம் செய்து விடறான். பின்னாலே, கஷ்டமான நிலைமை வரும்போது கடந்துபோன சந்தோஷ கட்டங்களை நினைத்துக் கொண்டு ஏங்குகிறான். என்ன பிரயோஜனம்?....ராஜாராம் உன்னைப் போலத்தான் நானும் முட்டாள்தனமாக நடந்து கொண்டேன். அதை இன்று நினைத்துப் பார்த்தாலும் வேதனையும் வெட்கமும் என் மனதில் தோன்றுகிறது. பெண் குழந்தை பிறந்திருந்தது என் மனைவிக்கு. தலை தீபாவளிக்கு வரச்சொல்லி எழுதியிருந்தார் மாமனார். உன்னைப்போல் நானும் அன்று முறைத்துக்கொண்டு தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்குப் போகவில்லை. தீபாவளிக்கு முன் தினம் தந்தி ஒன்று வந்தது. பிறந்த குழந்தை இறந்துவிட்டது என்று நெஞ்சம் துடிதுடித்தது. மாமனார் விட்டிற்குப் போவதா என்ற நிமிரினல் பேசாமலேயே இருந்துவிட்டேன். இது நடந்து இருபது

வருஷங்களாகிவிட்டன. நான் மாமனாராகும் பாக்கியம் இல்லாமலேயே போய்விட்டது" என்றார் சோமசுந்தரம்பிள்ளை நாத் தழுதழுக்க, உணர்ச்சி வசப்பட்டு. இரண்டு சொட்டுக் கண்ணீர் கடைக்கண்ணில் தேங்கி நின்றது.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"அதன் பிறகு எங்களுக்குக் குழந்தையே பிறக்கவில்லை. வைத்திய சாஸ்திரமும் எங்களுக்கு உதவவில்லை. சோலை வன வாழ்க்கை பாலை வனமாக மாறியது. ஆத்திரத்திற்கு மட்டும் இடங்கொடுத்து அறிவைக் கெடுத்துக் கொள்ளக் கூடாதப்பா. மனிதன் பண்பாடுடன் மனிதனாக வாழவேண்டும். பண்பாடு என்பது மனத்தின் விருந்தோம்பல். பண்பில்லாத மனிதன் வெறும் காகிதப்பூ. மணமிருக்காது. நல்ல வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ளாதே யப்பா. உனக்குக் கைக்கடிகாரம் தானே வேண்டும். வா. கடைத் தெருவுக்குப் போவோம். உன் மாமனார் என்று என்னை நினைத்துக்கொள். புறப்படு."

"சார்....என்னை மன்னித்து விடுங்கள்., உங்களை என்றுமே நான் மறக்கமாட்டேன்" என்று உரக்கக் கதறினான் ராஜாராமன் கலங்கிய கண்களுடன், திருந்திய உள்ளத்துடன்.

அன்றைய மாலை விழுப்புரம் பாஸஞ்சர் ராஜாராமனை ஏற்றிக்கொண்டது.

எங்கள் முருகன்!

"சன்மிஷ்டை"

*

சரவணப்பூம் பொய்கையிலே,
கருணையொடு வந்தசுரர்
மரபழிய வேல்விடுத்த—ஆறுமுக
வீரன் எங்கள் முருகன்!

உலகமெல்லாம் ஒரு நொடியில்
வலம்வந்து மலைபழனித்
தலமிருந்து நலமுதவும்—ஆண்டிக்
கோலம் எங்கள் முருகன்!

பூதலமும் மீதலமும்
போற்றிசெயப் போரூரில்
நாதனென வந்த—நான்மறை
வேதன் எங்கள் முருகன்!

வேலன் குகன் சீலன் சிவன்
பாலனெனப் பாடித்தொழச்
சோலைமலை மேலமர்க்—கலியுகச்
சோதி எங்கள் முருகன்!

கரங்குவித்துச் சிரங்குனிந்து
கமலமலர்க் கழல்பணியப்
பரங்குன்றில் விளங்கும்—சடாமகுட
தாரன் எங்கள் முருகன்!

நேமமொடு நினதுதிரு
நாமம்நவில் வார்க்கருளச்
சாமிமலை மேவும்—சிவஞான
தேசிகன் எங்கள் முருகன்!

கந்தன்சிவ காமியுமை
மைந்தனெனச் சந்ததமும்
சிந்தைசெயச் செந்திலமர்—குறவள்ளி
காந்தன் எங்கள் முருகன்!

வேதனுக்குச் சிறைவிதித்து
நாதனுக்கு மறையுரைத்துப்
போதகுரு வான—தமிழ்ச்
சித்தன் எங்கள் முருகன்!

அஞ்சுகுழி

சிறுகதைக்குக்கூட முன்னுரை வேண்டுமா என்று நீங்கள் எண்ணலாம். சிறுகதை என்றால் என்னவென்று பெரியோர்கள் நிச்சயித்துள்ள ஓர் இலக்கணம் இருக்கிறது. நான் இங்கு சொல்லப்போகிற வரலாறு, மேற்படி இலக்கண வேலிக்குள் அகப்படாத விஷயமாக இருக்கிறபடியாலும், இந்த வரலாறு என்னத்தைக்காட்டுகிறது என்பதைப் பற்றி ஒரு திட்ட வட்டமான முடிவு எனக்கே இன்னும் ஏற்படவில்லையாதலாலும், முன்னுரையாகச் சில வார்த்தைகள் சொல்லிவிட என்னுகிறேன்.

மாலையம்மாள் வெறும் கற்பனை; "இரத்தமும் சதையும்" இல்லாத சொற்பிண்டம் என்று தோன்றக் கூடும். இதை நீங்கள் சொல்லுவதற்கு முன்னால் ஒரு விஷயத்தைத் தெரிவித்து விடுகிறேன். மாலையம்மாளை நான் "பெரியம்மா." என்று தான் கூப்பிடுவேன். அவள் எனக்கு 'எட்டின சொந்தம்' கூட. போனவருஷந்தான் அவள் இறைவன் திருவடி அடைந்தாள். அதற்கு முன்னால், நான் 'விடுமுறை' காலங்களில் கிராமத்துக்குச் சென்ற சமயங்களிலெல்லாம், 'பெரியம்மா' வீட்டுக்குப் போய் வந்திருக்கிறேன். அவள் கையால் எனக்கு 'விபூதி' இட்டிருக்கிறாள். அவள் போட்டுக் கொடுத்த 'காபி' யையும் வருஷந்தவறாமல் சாப்பிட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல.

"என்ன பெரியம்மா, சுப்பிரமணியன் சௌக்கியமா" என்று கேட்பேன்.

அவள் சொல்வாள்,

"அவன் இன்னும் அஞ்சு குழியில் தான் இருக்கிறான். நேற்றுக் கூட 'ஆண்டவர்கள்' கனவில் வந்து உத்தரவு செய்தார்கள். இன்னும் ஒரு வருஷம் மூன்று மாசம் இருபத்திரண்டு நாள் கழித்துத்தான், உன் மகனை அனுப்பிவைக்கப் போகிறேன் என்று. ஆண்டவர்கள் உத்தரவு இப்படி இருக்கும் போது, நாம் என்னத்தைச் செய்கிறது. எப்படியாவது அவன் சௌக்கியமாக இருந்தால் சரி.........ஆதிமூலம்"

இந்த விதமான மறுமொழியை நான் பல ஆண்டுகள் கேட்டிருக்கிறேன். 'பெரியம்மா'வின் முகத்தில் நம்பிக்கையும் உறுதியும் தெளிந்து நிற்கும். ஒரு வருஷம், மூன்று மாசம், இருபத்திரண்டு நாள்—இந்தக் கெடு ஏதோ நாளை மறுநாள் தீர்ந்து விடப்போகிறது போல், திடச்சித்தத்தோடு பேசுவாள் பெரியம்மா.

பெரியம்மா இறைவன் திருப்பாதத்தை அடைந்து விட்டாள் இப்பொழுது.



துறைவன்

அவள் மனங்குளிர "சுப்ரமண்யம் சௌக்கியமா" என்று யாரும் அவளை இனிக் கேட்கப் போவதில்லை. அவளுடைய பூஜைக்குப் பயன்பட்ட வெள்ளிக் குத்து விளக்குகள், நெய்த் தீபங்கள், பஞ்சபாத்திரம், பச்சைப்பட்டு வஸ்திரங்கள் முதலியவற்றையெல்லாம், தாயாதிக்காரர்கள் தமக்குள் பிரித்துக் கொண்டார்கள். பூஜையிலிருந்த ஏடுகளை நான் எடுத்துக் கொண்டேன். பௌர்ணமிதோறும் எங்கள் வீட்டில் பூஜை உண்டு. ஏடுகளை பச்சைப்பட்டால் போர்த்தி வைத்து, மலர் மாலை சாத்தி வணங்கி வருகிறேன்.

"அந்த ஏடுகளில் என்ன இருக்கிறது" என்று யாராவது நண்பர்கள் கேட்கும் போது மாலையம்மாளின் வரலாறு என் நினைவில் விசித்திரமான மெய்ப்பொருட் கனவுகளை உண்டாக்கும். என் நண்பர்கள் ஒரு சிலரே அறிந்திருக்கும் அந்த உருக்கமான வரலாற்றை உங்களுக்குச் சொல்லலாமென்று நினைக்கிறேன்.

(1)

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரித் தாலூகாவில் உள்ள திருக்குறுங்குடி என்ற வைஷ்ணவ திவ்ய தேசத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். திருக்குறுங்குடி கிராமத்திற்கு மேற்கே ஏறத்தாழ மூன்று கல் தொலைவில், காடு ஆரம்பித்து விடுகிறது. 'அத்தியடி' என்று சொல்லுவார் அந்த இடத்தை. குறுங்குடி ஆறு என்றும் 'சிவகங்கை' என்றும் புகழ் பெற்ற சிறுநதி மலைக்காட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டு, சமதளத்தில் அடியெடுத்து வைக்கிற காட்சியை அங்கு காணலாம். ஆற்றின் தென் கரையில், ஒரு சிறு செங்கல் கட்டடம் இருக்கிறது. பார்

வைக்கு நெல் களஞ்சியம் போல் தோன்றும். முகப்பில் நெளிவுத்தகடுகளால் வேய்ந்த சிறு கொட்டகை ஒன்றும் உண்டு. சித்திரை, ஆவணி மாதத்துப் பௌர்ணமி நாட்களில், இந்தக் கோயிலில் சுமார் நாற்பது, ஐம்பது பக்தர்கள்—ஆண், பெண் குழந்தைகள் அடங்கலாக—தங்கிப் பூஜை செய்வார்கள். தேஜோமயமாக வானத்தில் பவனி வரும் சந்திர பகவானுக்கு "கற்பூர ஹாரத்தி" செய்யுங் காட்சி, மெய்சிலிர்க்கும்படியாக இருக்கும். பூஜை முடிந்த பிறகு, பிரசாதங்களை பக்த ஜனங்கள் ஆற்றங்கரை மணலில் உட்கார்ந்தபடி உண்டு மகிழ்வது வழக்கம். "ஆண்டவர்கள்" என்று அவர்கள் குறிப்பிடும் சித்தரின் பாடல்களை ஒருவர் இரைத்து விளக்கம் சொல்லுவார். எல்லாரும் சிரத்தையோடு கேட்டுப் பரவசமடைவார்கள். நள்ளிரவுக்குப் பிறகு, அங்கங்கே புதரோரங்களிலும், மூங்கில் பண்ணைகளை ஒட்டியும் படுத்துத் தூங்குவார்கள்.

ஆற்றங்கரையை யொட்டினாற்போல் அடர்த்தியாக ஆதிசேஷன்போல வளர்ந்திருந்த மூங்கில் பண்ணையின் அடியில், ஒரு பனை ஓலைப்பாயில் படுத்திருந்தான் சுப்ரமணியன். அவனுக்கு வயது பதினெட்டு. ஆனால் கையும் காலும் சாட்டைக்குச்சிபோல் மெலிந்து துவண்டு கிடந்தன. ஒளி பொருந்திய கண்கள் குழி விழுந்திருந்தன. வைத்திய சாஸ்திரத்திற்கு அப்பாற்பட்ட நோயின் சாயல் முகத்தைப் போர்த்தியிருந்தது. நெற்றியில் சந்தனப் பொட்டும் விபூதியும் துலங்கின. பக்கத்தில் ஒரு சிறு கல்லின் மேல் உட்கார்ந்துகொண்டு, மாலையம்மாள் பஞ்சாமிர்தப்பிரசாதத்தை அவனுக்கு ஊட்டிக்கொண்டிருந்தாள். ஒரு திராக்ஷைப் பழப் பிரமாணமுள்ள பிரசாதத்தைக்கூட, சுப்ரமணியனால் எளிதில் சாப்பிட முடியவில்லை. நாக்கில் ருசி செத்துப் போயிருந்ததோ என்னவோ! வெகு சிரமப்பட்டு, ஒவ்வொரு துளியாக, தொண்டைக்குள் இறக்கிக்கொண்டிருந்தான்.

"அம்மா"

"என்ன குழந்தாய்?"

"பாதத்துக்கு நானும் போகப் போகிறேன்" என்றான் சுப்ரமணியன்.

"மகாராஜனாய்ப் போய்வா" என்றாள் தாய்.

"பாதம்" என்று சுப்ரமணியன் சொன்ன திருச்சுவடு, குறுங்குடி மலைக்குமேல் சுமார் ஐந்துகல் தொலைவில் உள்ள ஒரு பெரிய பாறையில் காணப்படுகிறது. இராவண ஸம்ஹார நிமித்தம் இலங்கைக்கு சென்று திரும்புகையில், இராமாபிராமனது திருப்பாதங்கள் பட்டு, அந்தப் பாறையில் சுவடு விழுந்ததாக ஐதீகம்! அத்தியடி யிலிருந்து, ஒரு அடியார் கூட்டம், பாதத்திற்குச் சென்று பூஜை செய்து மறுநாள் திரும்பிவரும். பாத பூஜைக்குச் சென்று வந்தால் உடம்பு பூரண குணமடைந்துவிடுமென்று மாலையம்மாள் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறாள். ஆனால் சுப்ரமணியனை ரயிலில் ஏற்றி, பஸ்ஸில் ஏற்றி, கூண்டு வண்டியிலேற்றி அத்தியடிக் கோயில்வரை கொண்டு வருவதற்குள், மாலையம்மாள் பட்ட தொல்லையும் சிரமமும் கொஞ்ச நஞ்சமல்ல. "இப்படியும் ஒரு பைத்தியக்காரி இருப்பாளா" என்று தான் நினைத்தார்கள் பலர். என்றாலும், அவளுடைய பக்தியையும் நம்பிக்கையையுங் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் இல்லை.

"அம்மா, என்னால் பாதத்துக்கு நடக்க முடியும் இல்லையா? என்று கேட்டான் மகன்,

"நன்றாக நடக்க முடியும். 'ஆண்டவர்கள்' கிருபையினால், காலையில் உனக்கு எல்லாம் சொஸ்தமாகிவிடும். பிரசாதத்தைச் சாப்பிடு" என்றாள் தாய்.

மறுநாள் காலை ஏழு மணியிருக்கும். அடியார் குழாம் பாத பூசைக்குப் புறப்பட யத்தனமாகி நின்றார்கள்.

மாலையம்மாள் ஓடோடியும் வந்தாள். பக்தர் குழாத்தின் முன்னிலையில் நமஸ்காரம் செய்தாள்.

"இன்னும் மூன்று நாழிகை கழித்துப் புறப்படுங்கள். அதற்குள், சுப்ரமணியனுக்கு உங்களோடு நடக்கச் சக்தி பிறந்துவிடும். 'ஆண்டவர்கள்' நேற்று ராத்திரி சொப்பனத்தில் வந்து சொன்னார்கள்" என்று, சேலை முன்தானையை விரித்துப் பிச்சை கேட்டாள் மாலையம்மாள்.

பதில் ஒன்றும் பேசாமல், அடியார்கள் அங்கங்கே கற்களை ஆசனமாகக் கொண்டு அமர்ந்தார்கள்.

மாலையம்மாள், அசையைக்கூடத் திராணியற்றுக் கிடந்த மகனைக் கவனிக்கப் போனாள்.

அடியார்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கண்களால் பேசிக்கொண்டார்கள். தாயின் உள்ளம் செய்கிற அர்த்தமில்லாத கற்பனைகளுக்கு நாம் இடங் கொடுப்பதா? ஆனால் அவைகளுக்கு ஒருவேளை அர்த்தம் இருக்கக் கூடுமோ?

நான்கு நாழிகை ஓடியது.

"ஆண்டவர்களே, ஆதிமூலம்" என்ற கோஷம் அடியார் குழாத்திலிருந்து கிளம்பிற்று. மெல்ல மெல்ல, அந்த கோஷம் தூரத்தில் மங்கி மறைந்தது.

" அம்மா "!

" என்ன குழந்தாய் " என்றாள் தாய்.

" என்னை விட்டு விட்டுப் போய்விட்டார்களே ஏன் ? "

" குழந்தாய், அவர்கள் பாதபூஜையை முடித்துக் கொண்டு நாளை சாயங்காலம் திரும்பிவிடுவார்கள். நாளை மறுநாள், இங்கிருந்து 'அஞ்சுகுழி'க்கு ஒரு கோஷ்டி புறப்படப்போகிறது. அதில் நீயும் சேர்ந்து கொள்ளலாம் " என்றாள் தாய்.

சுப்ரமணியனின் கண்களில் ஒரு புதிய மகிழ்ச்சி பொங்கித் ததும்பியது. " அஞ்சுகுழி "யைப்பற்றி, அம்மா வெகு விரிவாகச் சொல்லியிருக்கிறாள் அவனுக்கு. திருக்குறுங்குடி மலையின் உச்சியில், நடுக்காட்டில் இருக்கும் புனிதபூமி அது. காட்டு யானைகளும் புலி கடுவாய்களும் சாதாரணமாகத் திரியக்கூடிய உயர்ந்த காடு. அங்கே தான், ஸ்வர்ணபத்ரை என்ற ஆறு உற்பவமாகிறது. பாறைகளுக்கிடையேயுள்ள ஐந்து சிறு குழிகளிலிருந்து, ஸ்படிகம் போன்ற தண்ணீர் குமிழியிட்டுப் பொங்கி வழிந்து கொண்டேயிருக்கும். அதனால் அந்த ஸ்தலத்திற்கு 'அஞ்சுகுழி' என்று பெயர். பூர்வத்தில் இராமாயணம் பாடிய வால்மீகி பகவான் அஞ்சுகுழிக்கு அருகில்தான் ஆசிரமம் அமைத்துத் தவஞ்செய்து கொண்டிருந்தார். ஜகன்மாதாவாகிய சீதாபிராட்டி லவ குசர்களைப் பாராட்டிச்சீராட்டி வளர்த்ததும் அந்த அஞ்சுகுழி ஆசிரம பூமியில்தான். பச்சைப்பசேலென்ற அந்த வனத்தில், புலிகள், யானைக் கூட்டங்கள் அடியார்களை ஒன்றுமே செய்வதில்லை. நீண்ட மலைப்பாம்புகள், கிளைகளில் வளையம் சுற்றிக்கொண்டு பிராணாயாமம் செய்து கொண்டிருக்கும். காட்டு மூலிகைகளின் நறுமணம் காற்றிலே பரவி' அடியார்களின் உடல்களைத் தூய்மை செய்து உள்ளங்களையும் தெய்வச்சிலிர்ப்பாய் நிரப்பிக்கொண்டிருக்கும், 'பஞ்சகுழி' சென்றவர்களை தேகரோகங்கள் கிட்ட நெருங்க முடியாது. உடம்பில், தங்கமயமான உள்ளொளி பிரகாசிக்க ஆரம்பிக்கும்.

நனைந்த துணிபோல் துவளும் தன் கைகளைப் பார்த்தான் சுப்ரமணியன். 'அஞ்சுகுழி' அவனை வா, வா என்று அழைத்தது.

மாலையம்மாள், அந்த மத்தியான்ன வேளையில் மரத்தடியில் அயர்ந்து தூங்கி விட்டாள்.

தலைக்கு மேலே அடர்த்தியாக பின்னி விரிந்த மூங்கில்களையும் அவற்றின் நுனியில் தோகையாக வளர்ந்த செழுமையான இலைகளையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான் சுப்ரமணியம். சற்றைக்கொரு தடவை சலேரென்று வீசிய காற்றில், மூங்கில்—செறிவு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது.

பட்டென்று விழித்துக் கொண்டாள் மாலையம்மாள். அவள் முகத்தில், என்றுமில்லாத துணிச்சல் மிதந்தது.

" குழந்தை, ஆண்டவர்கள் சொப்பனத்தில் வந்தார்கள் " என்றாள்.

சுப்ரமணியத்தின் முகத்தில் அந்த மகிழ்ச்சி அலை.

தாய் ஆவேசம் வந்தவள்போல் கூறினாள் " குழந்தை, நீ இப்படியே படுத்திரு நான் திருக்குறுங்குடி கிராமத்துக்குப்போய், ஆனைமுடி வாங்கிக்கொண்டு வருகிறேன். ஆனைமுடியை உன் கழுத்தில் கட்டிப்போட்டால், எல்லாம் அந்த கணமே குணமாகும் என்று 'ஆண்டவர்கள்' உத்தரவு சொல்லியிருக்கிறார்கள். நீ இங்கேயே படுத்திரு" என்று சொல்லிவிட்டு, அப்பொழுதே புறப்பட்டுச் சென்றாள் மாலையம்மாள்.

கொட்டகையில் தங்கியிருந்த இரண்டொரு முதியவர்களும், பெண்களும், சுப்ரமணியனைப் பார்க்க வந்தார்கள்.

" அம்மா எங்கே?"

" திருக்குறுங்குடிக்குப் போயிருக்கிறாள்"

" எதற்காகப் போனாள், உன்னை இப்படித் தனியே விட்டு விட்டு ?"

"எனக்குத் துணையாக, " ஆண்டவர்கள் " இருக்கிறார்கள். அம்மா சிக்கிரம் வந்துவிடுவாள். நாளைக் கழித்து, நான் 'அஞ்சு குழிக்கு'ப் "போகப் போகிறேன்" என்று தெளிவாகச் சொன்னான் சுப்ரமணியன்.

இதைக் கேட்டவர்களுக்கு இரக்கத்தால் சிரிப்பு வந்தது.

" அதற்குள் உனக்கு உடம்பு குணமாகிவிடுமா தம்பி"

" ஏன் ஆகாது? ஆண்டவர்கள், அம்மா கனவில் வந்து சொன்னது பொய்யா ?"

பையனின் ஆவேசத்தைக் கண்டு, அந்த அடியார்கள் உள்ளம் வெதும்பினார்கள்.

அன்றிரவு பத்து மணிக்கு, சுப்ரமணியன் " அம்மா, அம்மா " என்று வாய் புலம்பினான்.

அம்மா திருக்குறுங்குடிக்குப் போயிருந்தாள்.

பக்கத்திலிருந்தவர்கள், பையனுக்குக் கொஞ்சம் பால் பிரசாதம் கொடுத்தார்கள். அவர்களைத் தூங்க விடாமல், ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தான் சுப்ரமணியம்.

மறுநாட் காலை, "அம்மா வந்து விட்டாளா ?" என்றான் சுப்ரமணியம்.

அம்மா வரவில்லை. ஆனைமுடி கிடைக்கவில்லையோ என்னவோ ?

அன்று சாயங்காலம் சூரியன் மறையும் பொழுது பசுக்கூட்டங்கள் கழுத்து மணிகள் சப்திக்க காட்டிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தன. சிவகங்கை ஆறு கூழாங்கற்களின்மேல் " கள கள, கிளு கிளு " என்ற ஒலியோடு புரண்டோடிக்கொண்டிருந்தது. மேற்கேயிருந்து பாத பூசை செய்துவிட்டுத் திரும்பிவரும் அடியார்களின் கோஷம் காற்றில் கலந்து வந்தது.

" ஆண்டவர்களே..........ஆதிமூலோம்

ஆண்டவர்களே.. ....ஆதிமூலோம் " .

சுப்ரமணியம் காதுகொடுத்துக் கேட்டான் அந்த கோஷத்தை !

பக்கத்திலிருந்தவர்கள் எழுந்து, அடியார் குழாத்தை வரவேற்கச் சென்றார்கள்.

" நாமும் போனால் என்ன " என்ற எண்ணம் பிறந்தது இளைஞனுக்கு.

மெதுவாக வலது காலை அசைக்க முயன்றான். அசையவில்லை. இடது காலும் அசைய மறுத்தது. வலது கை, இடதுகால்—எல்லாம் அசைய மறுத்தன.

மனம் மட்டும் எழுந்து உதறி நின்றது. துள்ளிச்சென்று ஓடுந்தண்ணீரில் ஒரு முழுக்குப்போட்டது. நனைந்த தலைமுடியைத் தண்ணீர் போக வழித்துவிட்டுக் கொண்டே கோஷம் வந்த திக்கை நோக்கி ஓடியது. அது அரோக திடகாத்திரமாக ஓடியது. ஆவேசமாக ஓடியது. சற்றும் தங்கு தடையின்றிப் புதர்களையும், குன்று பள்ளங்களையும் அனுயாசமாகத் தாண்டிச் சென்றது! அதன் ஓட்டத்திலே, விடுதலை மகிழ்ச்சியின் வெறி, துள்ளுமறியாகத் துள்ளிற்று.

இரவு பத்து மணிக்குத் தாய் வந்தாள். ஓடோடியும் வந்தாள். மூன்று கல் தூரம் முள்ளிலும் கல்லிலும் கால்கள் நோவ ஓடி வந்தாள். அவள் சேலைத் தும்பில் நாலு ஆனை முடிகளை இறுக முடிச்சிட்டிருந்தாள்.

சுப்ரமணியனது உடலைச் சுற்றி அடியவர் கூட்டம் அமர்ந்திருந்தது. தாய் அவர்களைக் கவனிக்கவில்லை. வந்த கையோடு, ஆனைமுடிகளை ஒரு சரட்டிலே கட்டி, மகனுக்குக் கழுத்தில் போட்டாள்.

"குழந்தை நன்றாகத் தூங்குகிறான். அவன் தூக்கத்தை யாரும் கலைத்து விடாதீர்கள். இப்படி அவன் தூங்கி எவ்வளவோ வருஷக்கணக்காயிற்று!" என்று சொல்லிக்கொண்டே கோயில் முகப்பில் போய் உட்கார்ந்தாள். சம்மணம் போட்டமர்ந்து தியானஞ் செய்ய ஆரம்பித்தாள்.

பொழுது விடிந்தது. மாலையம்மாள் தியானம் கலையவில்லை.

அடியார்கள், மேற்கொண்டு நடக்கவேண்டிய காரியங்களைக் கவனித்தார்கள்.

மாலையம்மாள் தியானத்திலிருந்து எழுந்திருக்கவில்லை.

சுப்ரமணியத்தின் மெலிந்த சிறு தேகம் அன்று மாலை, காட்டோரமாகப் புதைக்கப்பட்டது. எல்லோரும், ஆற்றில் குளித்துவிட்டு வந்து, சிற்றுண்டி சமைக்க அடுப்பு மூட்டினார்கள்.

தியானத்திலிருந்து எழுந்தாள் மாலையம்மாள். எழுந்து சாவதானமாக, மூங்கில் பண்ணைக்கு வந்தாள். சுப்ரமணியன் படுத்திருந்த இடத்தை உற்றுக் கவனித்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஐந்தாறு நிமிஷம் அப்படியே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காற்று அசைந்தது, மூங்கில் அசைந்தது, அடியவர்கள் கண் கொட்டாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"சுப்ரமணியன் அஞ்சுகுழிக்குப் புறப்பட்டுப் போய் விட்டானா?" என்று மகிழ்ச்சி பொங்கக் கேட்டாள் தாய்.

"ஆமாம்" என்று தலையசைத்தார்கள் அடியவர்கள்.

அவள் முகத்தில் பிரகாசம்.

"ஆண்டவர்கள் என் சொப்பனத்தில் வந்து சொல்லும் போதே எனக்குத் தெரியும். ஆனை முடிக்கு எங்கேயெல்லாம் அலைந்தேன் தெரியுமா? கடைசியில, சுப்ரமணியன் அதிர்ஷ்டம், நாலு முடியாவது கிடைத்ததே! அஞ்சுகுழியில் தீர்த்தம் ஆடி பூஜையும் முடித்துக்கொண்டு விட்டானால், அவன் மேனி தங்கப் பிரகாசந்தான். ஊருக்குத் திரும்பிய கையோடு, அவனுக்கு ஒரு கால் கட்டையும் கட்டிப் போட்டுவிட வேண்டும். பிறகு எனக்கு என்ன கவலை! அக்கடா என்று உட்கார்ந்து விடலாம். அவன்பாடு, அவன் பெண்டாட்டி பாடு........

மாலையம்மாள் பேசிக் கொண்டே போனாள். கேட்டவர்கள் ஊமையாக அழுதார்கள்,

நாலைந்து நாட்கள் கழிந்தன.

"சுப்ரமணியம் எப்பொழுது இறங்கி வருவான்?" என்று கேட்டாள் தாய்.

"அடுத்த பௌர்ணமிக்கு" என்றார் ஒரு அடியவர். "நாம் ஊருக்குப் போவோம்" என்றார்.

பெரியம்மா ஊர்வந்து சேர்ந்தாள். அவள் நிலையை உணர்ந்து கொண்ட ஜனங்கள் அவளிடம் சரியாக நடந்து கொண்டார்கள்.

"அஞ்சுகுழியை விட்டு வருவதற்கு யாருக்குத்தான் மனசுவரும்! ஜகன்மாதா சீதாலக்ஷ்மியினுடைய குழந்தைகள் வளர்ந்த இடம் அது! இவன் ஆழத்தில் இறங்காமலிருக்கவேண்டும். அதற்கு, ஜகன்மாதா இருக்கிறாள், "எச்சரிக்கை செய்ய" என்று பேசிக்கொண்டே போனாள் பெரியம்மா.

ஒரு குழந்தை கேட்டது:

"சுப்ரமணிய அண்ணாச்சி எப்போ நம்ம ஊருக்கு வருவான்?"

"அடுத்த பௌர்ணமிக்கு" என்று சொல்லி சிரித்துக் கொண்டே, கேட்ட குழந்தையின் கன்னத்தைக் கிள்ளிக் கொஞ்சினாள் மாலையம்மாள்.

அடுத்த பௌர்ணமி ஆயிரம் வந்து போய்விட்டது. அதிலிருந்து சந்திரன் என்ன தான் தேய்ந்து கொண்டே போனாலும், மறுபடியும் அவன் வளர்ந்து 'பௌர்ணமி' வராமலா போகும்?

ஊர் அறிந்த கேடு

நாவற்குழியூர் நடராஜன்

*

தேறுகின்ற அறிவு கொண்டு
தெரிகிலாத பொருளையும்
நூறு கண்ட துண்டமாக்கி
நுவலுகின்ற வாதிகாள்!
ஆறு நூறு சமயமாகி
ஆய்ந்து மென்ன அறிகிலா
வாறுநின்ற தென்றும் அந்த
வாறுதா னிருக்குதே!

தெரிகிலாத பொருள்களுக்குத்
தெரிகிலாத ஒன்றையே
உரியதான ஏதுவாக
உரைகள் செய்யு முறைகளைப்
புரியு மறிவு கொண்டபேர்கள்
புவியி லொன்று கூடியே
பெரிய தொன்றைச் சிறியதாக்கிப்
பித்த லாட்ட மாடுறார்.

பொறிபுலன் அடக்கி யாரும்
புனிதமான மனிதரின்
அறிவு ஆற்றல் என்பவற்றின்
அளவை மீறி நிற்பதை
அறிய எண்ணி ஆவதென்ன?
ஆய்ந்து காணு மொன்றுபோல்
குறிய எல்லை போட்டு இங்கு
கும்பிட்டுந்தா னென்னடா!

மெய்வளைத்துக் கை குவித்து
மிக வணங்கி நிற்பதில்
ஐயனே என் அர்த்தம்? இங்கு
அது வணக்க மாகுமா?
செய்யலாமிச் சிறிய செய்கை
சிலரை ஏய்க்கப் புவியினில்
தெய்வமென்ற பொருளுக் கிந்தச்
சிறிய செய்கை ஏனடா?

வாயி லென்றும் தூபி யென்றும்
வடிவு கொண்ட கோபுரக்
கோயி லென்றும் பூசை யென்றும்
கோடி நூறு பேதமே
ஆயிருக்கு திங்கு அந்த
அருவருத்த பிரிவினை
நோயிருக்கு மட்டும் தெய்வ
நோக்க மெங் குதித்திடும்?

பேரறிவு கொண்ட மக்கள்
பிளவு பட்டு நிற்கிறார்
ஆறறிவுக் கெட்டிலாத
அகண்ட வஸ்து பேரினால்;
ஊரறிந்த கேடு, எந்த
ஒன்றின்பேரில் ஒற்றுமை
வேர்நிலவ வேணுமோ, மா
வேற்றுமை செழிக்குது!

நான்-சில பேட்டிகள்

"மஹி"

நான் யார்? நான் என்றால் என்ன? என்ற விசாரம் எனக்கு ஏற்படுவதுண்டு அடிக்கடி. அப்போதெல்லாம் என்னைக் கேட்டுக் கொள்வேன். நான் என்பது ஏதப்பா? என்று. அப்போது என் கை மார்பின் மேல்தான் நிற்கும் எல்லோரையும்போல. அப்படியானால் நான் என்பது நெஞ்சு தான். நெஞ்சுதான் நான் என்றால் தலை என்ன? அதற்குள் உள்ள மூளையோ.... ஒரு வேளை களிமண்ணாகவும் இருக்க லாம். அது நான் இல்லையா? நான் என்று சொல்லுவதற்கு நாவை அசைப்பது மூளையின் பகுதியல்லவா? அதை ரஸித் துச் சொல்வது சிறு மூளையல்லவா?

மேலும் நான் என்று சொல்லுவது எதையும் குறிக் காத ஒரு குறையும் தோன்றுவது உண்டு. ராத்திரி பத்து மணி. நான் வழக்கமாக வீடு அடையும் நேரம். நான் என்று சொன்னேனே? இல்லை. நீங்கள் சொல்லும் நீ. மற்றவன். சொல்லும் அவன். என் மனைவி சொல்லும் அவா என் மக்கள் சொல்லும் அப்பா! மேடையில் அறிமுகம் செய்து வைக்கும்போது அவர்கள். சேச்சே விளக்கத்தையே விள க்கவேண்டும்போல இருக்கிறதே. கருத்துரைக்குப் பொழி ப்புரையும் தமிழ்ப் பாட புத்தகத்தின் எளிமையை விளக்க தமிழ் துணைவன். (நோட்ஸ்) போல விளக்கம் குழம்பக் கூடாதல்லவா? ரஸம் குழம்பினால், குழம்பு கட்டியாகி விடாதா..போதும்.

நான் கதவைத் தட்டினேன். உள்ளேயிருந்து யாரோ கேட்டார்கள் 'யாரு' என்று. யார் கேட்டார்கள்? கேட்ட வர்கள் யாரா? அல்லது நான் யாரா! யாருக்கு யார் யார்? எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. "நான்தான்" என்றேன்.

"நான்தான் என்றால் தெரிஞ்சு போயிடுமா? யாருன்னு சொன்னாத்தான்....".

என்ன சொல்வது? எனக்கு நான் நான்தான்....உள்ளே உள்ளவர்களுக்கு யாரு? உள்ளே இருப்பவர்கள் எனக்கு 'யாரு'! ஆனால் அவர்களுக்கு நான் நான்தான். எனக்கு நான் நான்தானா? அல்லது உள்ளே உள்ளவர்களுக்கும் நான் நான்தானா? என்னடா சங்கடம்?

எனக்கு உள்ளேயிருப்பது யார் என்று தெரியும்? அவ ருக்கும் வெளியே நிற்பது நான்தான் என்று தெரியும். இது என்ன தெரியாத பாவனை? எப்படியோ நானைப்புரிந்து கொண்டு கதவு திறந்தது. உள்ளே போனேன். இருட்டு. ஒன்றுமே தெரியவில்லை. இருட்டில் தடவிக்கொண்டே போ னேன். நிற்பது யார் என்று தெரியாததுபோல 'யாரு' என்றேன். உடனே "நான்தான்" என்றாள். நீயும் நான் தானா? இல்லை நான்தான் நீயா?

"போருமே. கவிதை ஏதாவது எழுதப் போறேளா?"

"ஏன் கதவை மூடிடப் போறியோ?"

"கதவை மூடினா கவிதை வராதா! இல்லை, அதுவும் ஒங்கமாதிரி வந்து அர்த்தராத்திரியே கதவைத்தட்டுமா?"

"கவிதை வந்து கதவைத் தட்டுமா? என்னிக்கித் தட் டித்து....".

"கதவைத் தட்டறதோ என்னமோ, என் கழுத்தைத் தட்டறது....".

"உன் கழுத்துலே கவிதை கட்டித் தொங்கறதா?"

"கழுத்துலே கவிதை கட்டித் தொங்காட்டா, கவிதை எழுதறவா. இன்னம் முழிச்சிண்டிருக்காளான்னு தலையைத் தூக்கித் தூக்கிப் பார்த்து பார்த்து....".

"ஒஹோ!"

"சரி சரி சாதம் இருந்தாப் போடு....".

"போட்டுட்டு....".

"படுத்துக்கோ....".

"நீங்க....?"

"நான்....வந்து....நான்....

நான் மீண்டும் நானாகிவிட்டேன். சாப்பிட்டது, லக்ஷ்மி படுக்கை போட்டுவிட்டுப் படுத்தது. விளக்கை ஜன்னலில் வைத்து விட்டு ஈஸிசேரில் நான் உட்கார்ந்துகொண்டது, எழு தும் கட்டை என் மடிக்கு வந்தது....ஏதும் நான் செய்வது தானா....? ஊஹூம் தெரியாது....மடியில் எழுதும் கட்டை. அதில் தாள்கள், கையில் பேனா....

தாடியும் மீசையுமாக கோவணாண்டி ஒருவர் வந்தார். "என்ன யோசனை...?" என்றார். "நான்பற்றி யோசிக் கிறேன்"

"யாரு....?"

"நான்தான்...."

"நீயா? நீ எது....நான் எது? நானாகவும் நீயாகவும், அவராகவும். எல்லாம் அந்த பரப்பிரம்மத்தின் திருவிளையாடல் ....அதில் நான் ஒரு குமிழ்....

"அப்படியானால் நான் இல்லையா? இதோ கைகள் கால்கள், மனம், மூளை, தலை, உடல்.... இவை என்ன....?

"இவை எப்படி நான் ஆகும்?"

"பின்னே நான் என்பது என்ன?"

"அகம்....".

"அகம் என்பது வீடு. உள்ளே....என்று நினைண்டுப் போனான்."

"அகம் என்றால் அந்த அர்த்தமில்லை. திமிர். நான் என்ற மமதை. அகங்காரம் மமகாரம் என்று சொல்லுவதில்லையா?

"ஓஹோ?"

"உன் அர்த்தப்படியே உள்ளே என்றாலும் உள்ளே பார்த்தால் நான் விளங்கும்..".

"சரி இருட்டாக இருக்கிறதே....".

"சரி சரி! வெளிச்சம் வரும்வரை பொறுத்திரு"....தாடிச் சாமியார் மறைந்தார். நீண்ட ஜிப்பாவும், தலையில் ஜில்பாவுமாக ஒரு வான்பார்த்த தலையுடைய ஆசாமி வந்தார்.

"சோதர! யாது வேதனை?".

"நானைத் தேடினேன்...."

"ஆஹா! நான், வான், மான், மீன், கோன், ஈன், ஊன், கான், எத்தனை எதுகைகள்...!"

"ஓஹோ நீரும் கவிஞரா? எதுகை சரி. மோனை?"

"சரி நானுக்கு மோனையே ஒரு மோனைதானே"

நானுக்கு மோனையிட
  நீயுண்டு, நேருண்ட
நோயுண்டு, நாவுண்டு
  நல்லபடி சொல்லிவிடத்
தானுண்டு. தான்படுக்கை
  தைதை என்றே பேறு
தாவக் குதித்து நடம்
  தனி நின்று ஆடிடலாம்.

" அப்போ...... நான் கவிதைக்கு....... முக்கியமா ? "

" நான் என்று நெஞ்சு நிமிர்ந்து நின்றால் வான் என்ன, வானுக்கு அப்பாலும் நான் சென்று விளையாடி மான்விழியும் மலர் மொழியும் மங்கையது, பொங்கு ரவி, தங்கமதி, வெள்ளி முகில், கண்ணிமிறுக்குள்ள விண்மீன்..........

குரல் காற்றாய் கரைந்து வர்ணமாய் இழைந்து பூவாய் மலர்ந்து கன்னியாக வந்துக் கண்வழியே பாய்ந்தது. கன்னத 'கய' வென்று [illegible]. ஒலி பசுமையாகத் தெரிந்தது ஒளியின் சோதி சிங்காரம் செய்தது. புலன்கள் பணி மறந்த சோரணடன. கவிஞர் மறைந்தார்.

ஒரு மிதுனம். ஒரு ஜோடி.... சல சல என்ற அருவிச் சிரிப்பொலி. கிண்கிணியின் சல சலத்த நாதம். ஒரு மங்கை. ஒரு யுவன். முகத்துக்குக்கண்ணாடிபோல வானுக்குக் கடல் போல........சரிசமான அழகு. ஒத்த வயது தக்க பருவம்........ " என்னய்யா யோசனை ? " என்றனர்.

" நானைத் தேடினேன்....... "

" சை ! பொழுதைக் கொல்லுகிறீரா ? இந்த நேரம் எங்களுக்குப் பறவாய் பறக்கிறது. நான் என்று ஒன்று உண்டு. இதோ அவள் நிற்கிறேன் " என்றாள் அந்தப் பெண்.

" இதோ அவன் நிற்கிறேன் " என்றான் யுவன்.

" அப்போது நீங்கள் யார்."

" நாங்கள் நாங்கள்தாம். - இங்கே நான் கிடையாதே. நான் என்ற தனிமையைக் கொன்று விடத்தானே நாங்கள் ஒன்றி விட்டோம் காதலில். "

" அப்போ நானே கிடையாதா ? "

" ஊஹூம் "

" பின்னே "

" இவரோட என்ன பேச்சு? வாருங்கள். அந்தக் கடற்கரை மணலில் படுத்துப் புரளுவோம். காதலில் சிக்கிய நமக்கு இந்த உலகமே பூராவும் சொந்தம். இந்த நான் ஆராய்ச்சியில் பொழுதைக் கழிப்பதில்........அதற்குள்......"

" எத்தனை முத்........"

நான் கண்களை மூடிக்கொண்டேன். அவர்கள் சொன்னதுடன் நில்லாமல் செய்கையிலும் முகம்பொருத்தி

சை. தலையை ஆட்டிக் கொண்டேன். அன்னக்காவடி மணி ஒலிக்க "தருமதாயி பரிதாபப்பிச்சை தாயி" வந்தார். " என்ன சிவா ? என்ன யோசனை "

' நான்பற்றி ஆராய்கிறேன். "

" நான் என்றால் என்ன சிவா ? இந்தச் சிவாவுக்கு எந்தச் சிவாவும் புரியாது, சிவா ? சிவன் ஒன்று மாலையில் வந்தது. ஒரு சிவன் சிவனில் படுத்திருந்தது. வந்த சிவம் சிவத்தில் ஏறிவிடவும் சிவம் செத்து விட்டதை இந்தச் சிவா பார்த்தேன். சிவ சிவா "

மூளை குழம்பியிருந்தது உறைந்து விட்டது. ஓஹோ என்று கத்திவிட்டேன். " என்ன என்ன ? " என்று ஓடி வந்தாள். லக்ஷ்மி. " யாரு " என்றேன்.

" நான்தான் ஏன் ? " என்று சொல்லிக்கொண்டே ஒரு கையால் அணைத்துக்கொண்டாள்.

இப்போது நான் புரிந்துவிட்டது. என் முகம் அவள் ஹிருதயத்துள் சென்றுவிட்டது. அங்கேயும் நான்தான்.





(ந. பிச்சமூர்த்தி)

வளர்ச்சி என்றால் உரு மாறுதல் என்ற ரகஸியம் பலருக்குத் தெரியாது. அதனால் தானே எதிர்த்தாப் போல இருப்பது திண்ணை என்று பலருக்குப்புலப்படாமல் போய்விட்டது. அந்தத் திண்ணையைத் தான் இப்பொழுது பாலம் என்கிறார்கள். பாலம் என்றால் வெள்ளம்போகும் ஆறோ, மணலோடும் காட்டாறோ இருக்கும் என்று எதிர்பார்க்க வேண்டாம். மழைஜலம் போவதற்காக பங்களா வாசலில் ஒரு கால்வாய் வெட்டினார்கள். கால்வாயினால் மோட்டாருக்கு இடைஞ்சலாயிருந்தது. அதற்காகப் பாலம் கட்டினார்கள். இருபுறத்திலும் இடுப்பளவு உயரத்திற்கு இரண்டு சுவர் எழுப்பி சிமிண்டு பூசி விட்டார்கள். முக்கால் அடிச் சுவர் ஆனபடியால் தாராளமாக உட்கார்ந்து பேசலாம். வாசல் புறத்தில் நாலு பேர் உட்கார்ந்து பேச மேடை இருந்தால் அது திண்ணை தானே! ஒன்றாய் இருந்த பின்னால் இந்த நாளில் இரண்டாகி விட்டாலும் அதைப் பின்னால் என்று சொல்லாமலிருப்பதில்லை. பங்களா வாசலில் இருக்க வேண்டிய திண்ணை தான் இப்பொழுது இரண்டு கைப்பிடிச் சுவராகி விட்டது. அதைத்தான் பாலம் என்கிறார்கள். போகட்டும்!

இந்தத் திண்ணையில் ஆடுகளும் ஆட்டுக் குட்டிகளும் நிற்கும். பால் குடிக்க, கொடுக்க, உறங்க, துள்ளி குதிக்க, டீப்பாய எல்லாவற்றிற்கும் இந்தத் திண்ணைகள் தான். ஆனால் பொதுவாக மாலை வேளைகளில் இவை தொழிலாளர் முகாம்—குறிப்பாக மோட்டார் ஓட்டிகள், கண்டக்டர்கள், மோட்டார் வாண்டுகள், டிக்கட் தரகர்கார், முதலியவர்கள் முகாம்.

அன்று மீசைக்கார சோமுவும் அக்கடா ஆசைத்தம்பியும் பாலத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். "என்ன தம்பி! விடுதியா?" "ஆமாங்கறேன்" என்று ஆசைத்தம்பி சொல்லிவிட்டு காகி சட்டையிலிருந்து இரண்டு புரச இலை பீடியை எடுத்து ஒன்றை சோமுவிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றைப் பற்ற வைத்துக்கொண்டான்.

"ஒரு வார சோத்தை ஒரே நாளிலே தின்னூட்டு பாக்கி நாள் சும்மா இருந்தா எப்படி இருக்கும்?"

"நல்லாத்தான் இருக்கும்!"

"தொழிலாளிங்களுக்காக என்னவோ வெட்டி சாச்சூட்டது மாதிரி பேசறாங்க. ஒவ்வொரு நாளைக்கும் சேர்ந்தாப் போலெ அக்கடான்னு உக்காந்திருக்க 4 மணி விடுதி இருக்கிறது எப்படி? சேத்து வச்ச விடுதி எப்படி?"

"நான் பொழைக்கறதுக்கு ஒன்னைப் பாத்துப் பாவம்ங்கிறேன். நீ பொழைக்கிறதுக்கு என்னைப் பார்த்து பாவம்கிறே........இவ்வளவுதான் கதை. இந்த மோட்டார் கீட்டார் இல்லாத நாளிலே இருந்த சொகத்தை இப்பொக்காணும்"

"கையிலே காசு தான் புரளுதே!"

"புரளுது. சந்தோஷம் புரளல்லியே!"

இந்த சந்தர்ப்பத்தில் பாலத்தை நோக்கி ஒருவர் வந்து கொண்டிருந்தார். மோட்டார் ஓட்டிகள் வழக்கமாக அணியும் சாக்குக் காக்கி நிஜாரும், சாக்குக்காக்கி கோட்டும் போட்டிருந்தார். கோட்டு பொத்தான்கள் மளிகைக் கடை வெள்ளிக்கிழமை குத்து விளக்கைப்போல் சுடர் விட்டுக் கொண்டிருந்தன. தலையில் மட்டும் குல்லாய் இல்லை; வழுக்கை இருந்தது. கொஞ்சம் கூனிய நடை. பாலத்தடியில் வந்ததும் "என்னுங்க மீசைக்காரரே" என்றார்.

"ஆமாங்க" என்று சோமு இடத்தை விட்டு இறங்கி சுகமா என்று விசாரித்தார்,

"நான் ஊரிலேதானே இருக்கேன்" என்றார் வந்தவர்.

"இல்லே, சுகமான்னு கேட்டேன்."

"பெரிய மவன் இப்பொத்தான் சீராகிக்கிட்டு வர்றான்" என்றார்.

அப்பொழுதுதான் ஒன்பது வாசலில் இரண்டு அடைபட்டுப்போன மனிதன் என்ற உண்மை ஆசைத்தம்பிக்குத் தெரிந்தது.

உரக்கப் பேசுவதில் பயனில்லே என்று சோமு குழித்த அபய ஹஸ்த முத்திரையைக் காட்டியதுதான் தாமதம்.

"சோகந்தான், சோகந்தான். இப்போ எல்லாம் காது சரியாக் கேக்கல்லே......சம்பளம் ஏசரும் இன்னியே?"

ஆகிவிட்டதற்கறியாக சோமு தலையை ஆட்டி விட்டு மேற்குப்பக்கமாகப் பார்த்தான்.

"விட்டைப்பத்திக் கேக்கிறயா? அதொரு தொல்லேயாப் போச்சு. என்னவோ இரும்புக் கொக்கி வேணும்கருரு மேஸ்திரி, வாங்கப்போறேன். ஒன்னைப் பார்த்ததும் நின் னுட்டேன். நீ தான் வூட்டைப் பாக்க வரமாட்டேன் கிறியே? எப்போவர்றே?"

வருகிறேன் என்று சோமு சமிஞ்கை செய்தார். வந்த வர் ஷாப்புக் கடைக்குக் கிளம்பி விட்டார்.

"தம்பி இவரைத் தெரியுமா உனக்கு?"

"தெரியாதே"

"அஞ்சப்பிள்ளைன்னு கேள்விப்பட்டதில்லே?"

"ஆமாம்."

"அவருதான்"

"என்ன கேள்விப் பட்டிருக்கே?"

"ஒண்ணுமில்லே, பெரிய சூரன்னு சொல்லுவாங்க."

"வாஸ்தவம் தான். இப்போ பாத்தால் பல்லுப்போன புலி மாதிரி இருக்கிறாரு. அப்போ பாத்திருக்கனும். பட் டாக்கத்தி மாதிரி இருப்பார்."

"அதுக்கென்ன, வாட்டசாட்டமா நான்கூடத்தான் இருக்கேன்."

"நீயும் அவரும் ஒண்ணாயிடுவியா? மாசச் சம்பளம் போதாமெ இருவது முப்பதுன்னு கடன் வாங்கறே.... அவரு வூடு கட்டி இருக்கிறாரு. நாமும் அவரும் எப்பிடி ஒண்ணுக முடியும்!"

"வூடு கட்டிப்பிட்டாரா? அப்பிடின்னு சாமர்த்தியம் தான்."

"மறுவங்களை மயக்கறதுலே பலே பேர்வழி. ஆதியிலே ஒரு மலைத்தோட்ட முதலாளி கிட்டெ மோட்டார் ஓட்டியா 10 வருஷம் இருந்தார். துரைக்கு இவரிடத்திலே ரொம்ப விசுவாசம். அதைவிட பத்து பங்கு துரைசாணிக்கு. இந்தப் பத்து வருஷத்திலே, ரோடிலே ஒரு சின்னத் தகராறு கூட இவரு செஞ்சதில்லேன்னு பாத்துக்கோ. இவருக்கு ஒரு தரம் காய்ச்சல் அடிச்சபொழுது, தொரைசாணியே வண்டியை ஓட்டிக்கிட்டு வந்து இவரு குடி இருந்த வூட்டுலே பாத்துட்டுப் போனுங்கன்னு பாத்துக்கோ!

ஒரு தடவை இவுங்களெல்லாம் பங்களூரிலே இருந் தாங்க. அப்போ தொரைசாணி முழுகாமெ இருந்திச்சு. மலைத்தோட்டத்திலே என்னவோ ஆளுங்க தகராறு இன்னு சேதி வந்திச்சு. உடனே மலைத் தோட்டத்துக்குப் போய் பாத்துவிட்டு வந்தவரு துரைசாணியோடெ என்ன பேசினாரு தெரியாது. ரெண்டு நாளுக்குள்ளார துரை தோட்டத்தை வித்துப்புட்டாரு.

எல்லோரும் சீமையோடேயே போறதுன்னு முடிவு செஞ்சது இவருக்குத் தெரிஞ்சதிலே இருந்து இவரு மோட் டார் தொடியிலேயே கிடந்தாரு. வேளைக்குச் சாப்பிடற

தில்லே, அதுக்காகப் பொழுது சாயாமெ இருக்குமா? சீமைக்குப் போற விமானம் பழுதாயிடுமா? ஒரு வாரத்திலே அவுங்க கிளம்பிட்டாங்க.

போறப்போ துரை ஒரு காரியம் செஞ்சாரு. மலைத் தோட்டத்தை வித்தபொழுது மோட்டாரையும் வித்துட் டாரு." அவர் கிட்டெ ஒரு லாரி இருந்துச்சு. லாரி லேசென்னை அஞ்சப் பிள்ளை பேருக்கு மாத்தி லாரியை அவருக்கே கொடுத்துட்டாரு. அதுமுதல் இவரு லாரி சொந்தக்காரராயிட்டாரு"

"நல்ல லாரியா, இல்லாட்டி பீர்க்கங்காய் கூடா?" என்று குறுக்கிட்டார் ஆசைத்தம்பி!

"ஒண்ணும் நம்பர் வண்டி. டியூப் கூட எல்லாம் புதுசு. ஒரு வாரம் லாரியை வச்சுகிட்டு இவரு சும்மாவே இருந் தாட்டாரு. ஒண்ணும் மனுசு சரிப்படலே.... எத்தினி நாளு இப்பிடியே இருக்க முடியும்? அப்புறம் மெதுவாக லாரியை உள்ளூரிலே அடிக்கத் துவங்கினரு. பொறவு தொலைவுக்கு மளிகை சாமான் அது இது ஏத்திக்கிட்டுப்போக ஆரம்பிச் சாரு. பணம் கையிலே பொழங்க ஆரம்பிச்சுது. பணம் பொழங்க ஆரம்பிச்ச உடனே அங்கங்கே ஆளுங்களும் இவருக்குச் சேர ஆரம்பிச்சுது.

இவருகிட்டே ஒரு சுபாவம். வெள்ளைக்காரனோடே பழகின காரணமோ என்னமோ! அங்கங்கே கிளப்புக்குப் போறு அவனை இவனைக் கூட்டிக்காமெ போகமாட்டாரு. பிலாப்பழத்தை ஈ மொக்காதா? ' ஒவ்வொரு ஊரிலே யும் பாதை எல்லாம் இவருக்கு ஆள் சேர்ந்து போச்சு.

ஒரு நடவை எதோ சாமானை ஏத்திக்கிட்டு சேலத்துக்குப் போயிக்கிட்டிருந்தாரு. முசிரியிலே ஒரு ஆபத்தாயிடுச்சு. அவருக்கே ஷாக் அடிச்சாபோல ஆயிடுச்சு.

ஒரு ஆட்டுக்கிடாவைப் பொடிப் பயலுங்க கல்லாலெ அடிச்சு விரட்டினுங்க. எங்கேயே போறுப்பலே போன ஆடு ரஸ்தாவிலே குறுக்கே ஓடிச்சு. அப்படியும் இவரு பிரேக் போட்டாரு. உபயோகப் படல்லே. ஆட்டுக்கிடா போயிடுச்சு. அவ்வளவுதான். தெருவிலே இருந்த பேரெல் லாம் கும்பல் கூடிக்கிட்டு ஆளுக்கொண்ணு பேச ஆரம்பிச் சுட்டாங்க. இவரு தம்மேலே குத்தம் இல்லே இங்கிறதைக் காட்டிப்புட்டு ஆட்டு சொந்தக்காரனிடத்திலே பத்து ரூபாய் பணத்தைக் குடுத்துட்டு ஆட்டையும் வண்டியிலே போட் டுக்கிட்டு கிளம்பிட்டாரு.

அரை மைலுக்கு அப்பாலே தான் இவரு மாமனர் வீடு. அங்கே போய் வண்டியை நிறுத்திக்கிட்டு மாமனரிடம் எதோ சொல்லி ஆட்டைக் கீழே தள்ளிவிட்டு லாரியை ஓட்டிக்கிட்டுப் போயிட்டாரு. சேலத்திலே சரக்கை இறக் கிப் போட்டுட்டு புதுச் சரக்கை ஏத்திக்கிட்டு மாமனர் விட்டண்டை திரும்புகாலில் வண்டியை நிறுத்தினாறு. முப் பத்தி ஒன்னரை ரூபாய் பணத்தை எண்ணி மாமனரு இவருகிட்டே கொடுத்தாரு. பணம் ஏதுன்னு இவரு கேட்டாரு. இறைச்சியாப்பண்ணி வித்த பணம் இன்னாரு.

அதிலேஇருந்து இவருக்கு என்னதோணித்தோ என்ன வோ! லாரி வாடகையைத் தவிர கஷ்டமில்லாமெ சம் பாதிக்க வழி இருக்கிறதுன்னு ரகசியம் எண்ணி தெரிஞ்சு கிட்டாரு. ஆள் சம்பந்தப்பட்ட ஆபத்தாயிருந்தா இவரு கதை எப்படி ஆயிருக்குமோ யார் கண்டா?

இதற்குப் பதினைஞ்சு நாளைக்குப் பிறகு முசிரிக்கு அஞ்சு மைல் தெற்கே இதே மாதிரி ஒரு கிடா அடிபட்டுப்

போச்சு. இவருதான் ஏத்திப் பிட்டாருன்னு பார்த்தவன் ஒருவன் சொன்னான். 'வாயில்லா ஜீவனுக்கும் எனக்குச் சண்டையா, வேணுமினு ஏத்த இன்னு பதில் சொன்னதை ஆட்டுச் சொந்தக் காரனாலே மறுக்க முடியல்லே. பேரம் பேசி பதினொரு ரூபாய் பணத்தை வாங்கிக்கிட்டான். இவரு தன் ஜமா ஒருவன் கிட்டெ ஆட்டை குடுத்து ரகஸியமா அவன் கிட்டே எதோ சொல்லி அனுப்பிச்சுட்டாரு. திரும்பு காலிலே அவருக்கு முப்பத்திமூணு ரூபாய் கிடைச்சு போச்சு.

கிடைச்சாமாத்திரம் என்ன? கிடைக்கிறதெல்லாம் நெலெச்சாபோவுது? எங்கிருந்தோ ஒரு போலீஸ்காரன் வந்து சேர்ந்தான். அவனுக்கு வாய்க்கட்டை போட்ட பிறகு தான் சிக்கல் தீர்ந்துச்சு.

அதிலிருந்து பாரு கெட்டதெல்லாம் இவருக்கு நல்லதாகவே முடிஞ்சுக்கிட்டுவர ஆரம்பிச்சுட்டுது. ஒரு போலீஸ்காரன் சிநேகமான உடனே மத்தவங்ளோடெ சிநேகமாயிப் போச்சு.

அதற்குப் பொறவு ஒரு வாரத்துக் கொருதடவை ஆடு கோழி அடி பட ஆரம்பிச்சுது. ஒரு கிருஸ்தமஸ் பண்டிகை அப்பொ ஒரு பன்னிகூட அடிபட்டுப் போயிட்டுச்சு.

இதிலே இருந்துதான் இதை அஞ்சப் பிள்ளை ஒரு சில்லரை வியாபாரமாக்கி விட்டார். அதிலேதான் இவருக்கு சிறுகச் சிறுக பணம் சேர்ந்து போச்சு.

“இதுக்கெல்லாம் கேள்வி முறை இல்லேபா” என்று ஆச்சர்யத்துடன் ஆசைத்தம்பி கேட்டார்.

“ஏன் கேள்வி வருது? அவருக்கு இறைச்சி இவருக்கு இறைச்சின்னு குடுத்தா ஏன் மேலே இருக்கிறவங்க கேக்கப் போறாங்க? இருந்தாலும் இவருக்குக் காசு சேரச் சேர இவரு மேலே புகாரும் சேந்துபோச்சு. திடீர்னு ஒரு நாள் லாரியிலே வீட்டுச் சாமானை எல்லாம் ஏத்திக்கிட்டு குடும்பத்தோடே கும்பகோணத்துக்குப் போயிட்டாரு.

அங்கே ஒரு ஏழு வருஷம் இதே கதை தான். அங்கேயும் புகார் முத்தினப்பறம் செங்கல்பட்டுக்கு வந்துட்டாரு'

செங்கல்பட்டிலே இருந்தப்பொ இவரு எனக்கு சிநேகமானாரு. கதை கதையாய் சொல்வாரு— தான் தப்பிச் சதைப்பத்தி எல்லாம். இந்தப் பக்கத்திலே ஒரு ஏழு வருஷம் இதேகதை தான்.

இங்கே தான் புகார் ரொம்ப முத்தி போச்சு. போலீஸ் ஜில்லா சூபரின்டென்டெண்டு பொல்லாத ஆள். இவரைப் பத்தி நல்லா விசாரிச்சுக்கிட்டு லாரி லேசென்ஸ் கொடுக்கக் கூடாதுன்னு எழுதிப்போட்டுட்டாரு. அஞ்சப்பிள்ளை அப்பில் கிப்பில் எல்லாம் பண்ணினாரு. ஒண்ணும் பலிக்கல்லே. அதோடே இவரு ஆட்டம் முடிஞ்சு போச்சு. சிவனேன்னு லாரியை வித்துப்புட்டு பட்டணம் வந்துசேர்ந்தூட்டாரு.

மேற்கே ஒரு சின்ன மனையை வாங்கி வூட்டைக்கட்டினாரு. பெரிய மவனுக்கு ஒரு கடை வச்சுக்குடுத்தாரு. இப்பொ இங்கே இருக்காரு. எப்பொ யாரைப்பாத்தாலும் வீட்டைப் பார்க்க வரல்லியான்னு நச்சரிப்பாரு.”

இப்படிப்பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அஞ்சப் பிள்ளை நீளமான புகை சுருட்டு ஒன்றைக் குடித்துக்கொண்டு பாலத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். இவர்களைப் பார்த்தும், ஆசைத்தம்பியைக் குறிப்பிட்டு விசாரித்தார். மோட்டார் டிரைவர் என்று சோமு சொன்ன பதில் காதில் விழவில்லை. “பட்டாளத்திலே இருக்காரு? நல்ல வேலையாச்சே. இங்கே உக்காந்து பேசிக்கிட்டு இருக்கியே அவரையும் இட்டிக்கிட்டுவாயேன் வூட்டை பார்க்க. வரேன் வரேன் இன்னு பயமுறுத்திக்கிட்டே இருக்கியே” என்றார் அஞ்சப் பிள்ளை.

வீசைக்கார சோமுவும் அக்கடா ஆசைத்தம்பியும் திண்ணையை விட்டுப் புறப்பட்டார்கள்.



தெய்வம் மன்னிக்குமா?

(டி. எஸ். கோதண்டராமன்)

நான் அந்த வீட்டினுள் நுழையும் போதே புதிய அனுபவத்தின் இன்பப் பூரிப்பு அலைகள் உடல் முழுதும் பரவின. அதற்கேற்றாற்போல, நண்பர் கண்ணப்பனும் அவருடைய மனைவியும் ஐந்து வயதுக் குழந்தையும் மலர்ந்த முகங்களுடனும் கூப்பிய கரங்களுடனும் -வரவேற்றார்கள். அவர்களது முக மலர்ச்சியில் இருந்த பளிங்குத் தன்மையும் கரங்குவித்திருப்பதில் இருந்த கலைத் தன்மையும் என்னைப் பிரமிக்கச் செய்தன.

"வாருங்கள், வாருங்கள்! குறித்த நேரத்தில் தவறாமல் வந்துவிட்டீர்களே!......."

"ஆமாம்! என்ன இருந்தாலும் நீங்கள் வியாபாரி. ஒவ்வொரு நிமிஷமும் பொன் மதிப்புடையவையாயிற்றே, உங்களுக்கு!......."

என்னுடைய பேச்சு, சிங்கள ஸ்திரீயான கண்ணப்பரின் மனைவி திஸ்ஸ ரஞ்சனிக்கும் புரிந்திருக்கவேண்டும். அதனால் தானே, என் பேச்சைக் கேட்டதும், அபார ரஸிகத் தன்மையோடு அவள் சிரித்தாள்! குழந்தை குணரத்ன கூடச் சிரித்தானே!.......

சிற்றுண்டி அருந்த அமர்ந்தோம். ஏற்பாடுகள் எல்லாம் முன்னமேயே தயாராக இருந்தன. என்னை வரவேற்பதற்காக அவர்கள் செய்திருந்த ஏற்பாடுகளை என்னென்று சொல்வது! மிக மிக நெருங்கிய, உத்தம நண்பருக்குரிய வரவேற்பு அல்லவா, அது?

ஆனால்.........?

கண்ணப்பருக்கும் எனக்கும் அறிமுகம் ஏற்பட்டு இன்னும் இருபத்து நான்கு மணி நேரம் கூட ஆகவில்லை. பல ஆண்டுகள் பழகிவிட்ட உணர்வு மட்டும் இருவருள்ளும் புகுந்து தழைத்துவிட்டது.

நேற்றைய தினம், இந்த நேரத்தில், நாங்கள் — நானும் கண்ணப்பர் குடும்பத்தினரும — எவ்விதத் தொடர்பும் இல்லாத அன்னியர்கள். இன்று, நான் அவர்களுடைய விருந்தாளி. 'பெரஹரா' திருவிழாவைக் காண, நான் கண்டியில் தங்கியிருக்காவிட்டால் இந்த அதிசய தம்பதிகளின் நட்புறவு கிடைத்திருக்குமா?

இலங்கைக்குப் போகவேண்டுமென்று எனக்கு வெகு காலமாக ஆசை. அந்த ஆசை நிறைவேறும் காலம் வந்தபோது, பிரயாணத்தின் முழுப் பயனையும் இன்பத்தையும் அடைய திட்டமிட்டேன். பிரயாணக் குறிப்புப் புத்தகங்களை பலவற்றைப் படித்து, ஆராய்ந்து, இரண்டு மாத காலம் தங்கிப் பார்க்கப்படத்தக்க இடங்களை வரிசைப்படுத்தி ஒரு திட்டம் தயாரித்துக் கொண்டேன். அந்தத் திட்ட அட்டவணையில், கண்டியில், ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும் 'பெரஹரா' திருவிழா தான் முக்கிய அம்சம். நான் எதிர்பார்த்தபடி ஜூலை மாதத்திலேயே என்னால் புறப்பட முடியவில்லை. விஸா, பாஸ்போட் என்று எவ்வளவு தொல்லைகள்! இவைகளைக் கடந்து, நான் இலங்கை மண்ணில் காலடி வைப்பதற்கும், கண்டி கோவிலில் 'பெரஹரா' உற்சவம் தொடங்குவதற்கும், சரியாக இருந்தது. எனவே மற்ற இடங்களைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு கட்டிவிட்டு, கொழும்பிலிருந்து காரில் கண்டிக்குப் போனேன். ஒரு நல்ல ஹோட்டலாகப் பார்த்துப் பெட்டி, படுக்கைகளைத் தள்ளிவிட்டு, பிரசித்தி பெற்ற புத்த கோவிலை நோக்கிச் சென்றேன். திருவிழாவின் முக்கிய அங்கமான ஊர்வலம் எதிரே வந்து கொண்டிருந்தது.

என்னுள் பீறிட்டெழுந்த கற்பனைக்கெட்டாத இன்பத்தில், நான் திறந்தவாய் மூடாது, சிலையாகி நின்றேன்! ஆகா, இந்த மகத்தான கோலாகலக் காட்சியைக் காண வல்லவா, நான் பறந்தோடி வந்தேன்! என்னுடைய சிந்தனையிலே மேகம் போலத் தோன்றி மலையைப் போல திண்மை படைத்துவிட்ட இந்தத் தெய்விகக் காட்சியைக் காணத்தானே, கடல் தாண்டி வந்தேன்! இப்பொழுது அனுபவிக்கும் கனப்பொழுதுகளுக்காகத்தானே, நான் மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் காத்திருந்தேன்!

பொன், வெள்ளி அணிகளால் அலங்கரிக்கப்பட்ட நாற்பது யானைகள் கம்பீரமாக நடந்து வருகின்றன. கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும், அதற்கு அப்பாலும் ஜனத் திரள். இடையிடையே தோன்றும் அந்த நடன கோஷ்டிகள்!........ அற்புதமான உடைகள், களிப்பூட்டும் இசை முழக்கம், கோஷம், ஆட்டம்!........

த்ஸ!..........

'ஐயோ, இவன் என்ன இப்படிப் பம்பரம் போலச் சுழன்று, எழும்பிக் குதிக்கிறான்!......'

ஆனந்தப் பெருக்கில், சுற்றுப்புறத்தை மறந்து நான் திடீரென்று கூச்சலிட்டேன். ஒரு கணம் சென்றுதான் எனக்கும் உணர்வும் கூச்சமும் வந்தன. அங்கிருந்த அலை இரைச்சலில் எவர் செவியிலும் விழுந்திருக்க முடியாது என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டு, திரும்புகையில்.....

இரண்டு கண்கள் என்னையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டேன்! அந்தக் கண்களில் ஏதோ நிறைவு

தென்பட்டது. சாந்தம் தெரிந்தது. அவர் தமிழ் நாட்டவர்தான் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டேன். எப்படியோ! அவரை, இதற்கு முன் எங்காவது பார்த்திருக்கிறேனே?

அவர் அதிக சிந்தனைக்கு இடம் வைக்கவில்லை. கையிலிருந்த குழந்தையுடன் என்னருகே வந்தார்.

"நீங்கள் தஞ்சாவூர்க்காரரா?"

என் புருவங்கள் உயர்ந்தன. "ஆமாம்...."

"ஊருக்குப் புதியவரா?"

"எப்படியோ!... ஏழு வருஷத்துக்கு முன் நானும் தஞ்சாவூர்க்காரன்!..."

"சந்தோஷம். உங்களைப் பார்க்க முடிந்ததில் பெரிதும் மகிழ்கிறேன்!"

இதற்குள். இடுப்பில் ஒரு கைக்குழந்தையை வைத்துக்கொண்டு ஒரு சிங்களப் பெண் அவரருகே வந்து நின்றாள். முதல் தோற்றத்திலேயே அவளுடைய அமைதி நிறைந்த அழகுதான் என்னைக் கவர்ந்தது.

அவர் அவளோடு சிங்கள மொழியில் ஏதோ பேசினர். பின், என்னைப் பார்த்து, "இவள் என் மனைவி" என்று அறிமுகப்படுத்தினர். நான் கைகூப்பினேன்.

இதற்குப்பின் ஒரு மணி நேரம் நாங்கள் பேசிக்கொண்டேயிருந்தோம். குறுக்கும் நெடுக்குமாக ஓடும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் எங்கள் கண்களில் படவில்லை; வானத்தைப் பிளந்து விடுவதைப்போல முழங்கும் பறை ஒலி எங்கள் செவிகளில் விழவில்லை. அந்த வீதி முழுவதும் ஏன், கண்டி நகரம் முழுவதிலுமே நானும் அவரும்—கண்ணப்பரும்—மட்டுமே இருப்பதாகத் தோன்றியது. அவ்வப்போது, கண்ணப்பரின் மனைவி, திஷ்ண ரஞ்சனி, சம்பாஷணையில் புகுந்து உயிரூட்டினாள். குழந்தை குணரத்ன மெல்ல மெல்லச் சிரித்து வையகத்தையே அங்கு கொண்டு வந்து விட்டான்!

இரவு படுக்கையில் விழுந்தபோது, மணி ஒன்று. பிரயாணக்களைப்பு, நகரைச் சுற்றி வந்த அசதி எல்லாவற்றையும் மீறி உள்ளம் கிளுகிளுத்துக் கொண்டிருந்தது. உற்றார் உறவினர் அற்ற ஊரில், வேற்று நாட்டில் இருக்கிறோம் என்ற எண்ணமே இல்லை. காரணம், கண்ணப்பர்.

கண்ணப்பரைப்பற்றி நினைத்துக் கொண்டதுமே, புனலாடும் மங்கையின் உடல்போல நெஞ்சம் சிலிர்க்கிறது.

தான் ஒரு சிறு கடையின் முதலாளி என்று கூறினர். ஆனால், அன்பை வழங்குவதில் பேரமும் இல்லை; தயக்கமும் இல்லை. அவர் தான் இப்படி என்றால், அந்த ஸ்திரியும் ஏன் அவரைப் போலவே இருக்கிறாள்?

எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாது செய்துகொண்ட காதல் மணமாம். ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. கண்ணப்பர் கண்டியில் தொழிலாளியாக சுற்றிக்கொண்டிருந்த காலம். அவள் கண்டித் தெருக்களில் முந்திரிப்பழம் விற்றுக்கொண்டிருப்பாள். முந்திரிப் பழத்தின் மணத்தைவிட, அவள் பரப்பியமணம் அதிகமாகயிருந்தது. அந்த மணத்தின் போதையில் இருவரும் தங்களை மறந்து, திருமணத்தில் வந்து விழிப்புப் பெற்றார்கள்!

இதை என்னிடம் கண்ணப்பர் கூறியபோது புராணம் கேட்கும் பரவசத்தோடு கேட்டேன். அவர் சொற்களை நம்பினேன். சிறிது நேரத்திலேயே அவர்களிடையே நிலவிய முதிர்ந்த அன்பை உணர்ந்து கொண்டு விட்டேன். அவர்கள், இந்த ஜன்மத்தில் வெவ்வேறு துருவங்களில் பிறந்தாலும் கூட, எப்படியேனும் ஒன்றுகூடி விடுவார்கள் என்ற மாதிரியான எண்ணம் என்னுள் பிறந்தது.

இந்தக் காரணங்களால் தான், அவர்கள் என்னை மறுநாள் மாலை தங்கள் இல்லத்துக்கு அழைத்தபோது நான் மறுத்துச்சொல்ல இயலாதவனுகிவிட்டேன்.......

தட்டிலிருந்த சிற்றுண்டியை அருந்தும்போது முன் நாளைய நினைவுகள் எல்லாம் புத்துருவம் பெற்றெழுந்தன. நான் பேசாமலிருப்பதைக் கண்டதும் கண்ணப்பர் பேச்சைத்துவக்கினர்.

"ராமன், என்ன பேசாமலிருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை. ஏதோ சிந்தனைகள்!...."

"அவ்வளவுதானே?....நல்ல வேளை!.......எங்கே, ரஞ்சனி செய்த சிற்றுண்டி உங்கள் தொண்டையில் சிக்கி பேச முடியாதபடி செய்து விட்டதோ என்று பார்த்தேன்!"

இதைக் கேட்டதும், பொய்க் கோபத்துடன் தலையைச் சாய்த்து ரஞ்சனி, கண்ணப்பரைப் பார்த்த பார்வை....! அது ஒரு எழில் நிறைந்த சொப்பனக் காட்சி!

"இல்லை, இல்லை! நான் இலங்கைக்குப் புறப்படுமுன் எனக்குச் சற்றுப் பயமாகக்கூட இருந்தது. வேற்று நாட்டில், அறிமுகமானவர்களும் இல்லாமல் எப்படிப் பொழுதைக் கழிக்கப்போகிறேனோ என்ற கவலை வேறு. ஆனால், இதோ பாருங்களேன், இலங்கை வந்து இரண்டு நாட்கள் ஆவதற்குள்ளாக ஒரு குடும்பமே என்னுடன் நட்புக் கொண்டாடத் துவங்கி விட்டது!"

"நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்கள், ராமன்!...."

திஷ்ணுவும் தலையை அசைத்தாள்.

"ஒன்று செய்யுங்களேன்: உங்கள் பெட்டி படுக்கைகளை இங்கேயே கொண்டுவந்து விடுங்கள். நீங்கள் கண்டியில் இருக்கும்வரையிலாவது எங்கள் விருந்தாளியாக இருக்கலாம்."

"ஓ! பாதகமில்லை. ஹோட்டல் சௌகரியமாகத்தான் இருக்கிறது."

"உங்கள் இஷ்டம்.....உங்களுக்கு விருப்பமானால், நானே உங்களை முக்கியமான இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுகிறேன்...."

"விருப்பமானலா!...நன்றாயிருக்கிறது, நீங்கள் என் பொருட்டு இந்த உதவியைச் செய்தால் நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன்...."

மறுதினம் முதற்கொண்டே பிரயாணத்திற்கான திட்டங்களைச் செய்ய முனைந்து விட்டார், கண்ணப்பர். அவருக்கும் இலங்கையைச் சுற்றிச் சுற்றி வருவதில் அளவில்லாத ஆசை. ஆகவே, கண்டியை மையமாக வைத்துக்கொண்டு மூன்று நாட்களுக்கு ஒரு முறை அங்கு வந்து போகக்கூடிய முறையில் பிரயாணங்களைத் திட்டமிட்டார், அவர்.

அன்று, ஸிக்ரிக்குப் போவதாக ஏற்பாடு. திஷ்ணுவும் எங்களுடன் வருவதாக இருந்தாள். முதல் நாள் மாலையிலேயே வாடகைக்காருக்கு ஏற்பாடு செய்திருந்தார், கண்ணப்பர்.

அதிகாலையில் காரில் புறப்பட்டோம். தம்புளை என்ற இடத்துக்கு வந்தபோது மணி ஏறக்குறைய எட்டாகிவிட்டது. அங்குள்ள குகைக் கோயிலுக்குச் சென்று நூற்றுக்கணக்கான புத்தர் சிலைகளைத் தரிசித்தோம். நாற்பத்தேழு அடி நீளமுள்ள படுத்திருக்கும் புத்தர் சிலையைக் கண்டு வியந்தவாறே மீண்டும் காரில் ஏறிக்கொண்டோம். சில மைல்கள் தூரத்தில் உள்ள ஸிக்ரி குன்றை நோக்கிக் கார் பறந்தது.

ஸிக்ரிக் குன்றில் பாதி தூரம் ஏறியதும், ஒரு பனைமரம் உயரத்துக்கு ஓர் இரும்பு ஏணி வைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்ததுமே எனக்குக் குலை நடுங்கிற்று.

"எதற்காக இந்த ஏணி?" என்று கேட்டேன்.

"இந்த ஏணி முடியுமிடத்தில் ஒரு குகை இருக்கிறது. அங்கே புராதன காலத்துச் சித்திரங்கள் பல இருக்கின்றன.. ...."

"பேஷ்!......நீங்கள் யாரேனும் அங்கே போவதுண்டா?"

"நாமும் இப்போது அங்கே தான் போகிறோம்!" கண்ணப்பர் குதூகலமாகச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, திஷ்ணு மடமடவென்று செங்குத்தான அந்த இரும்பு ஏணியில் ஏறத் தொடங்கி விட்டாள். அவள் ஏறியலாகவத்தைப் பார்த்தால், தேயிலைத் தோட்டத்துப் பெண்களைப் போல, முதுகில் தன் கைக்குழந்தையையும் தொங்கவிட்டுக் கொண்டு அநாயாசமாக ஏறிவிடுவாள் போலிருந்தது. எனக்கோ, அடி நாளிலிருந்தே ஆள் உயரமுள்ள ஏணியில் ஏறுவது என்றாலே பயம்!

"நாம் இந்தச் சித்திரங்களைப் பார்க்காவிட்டால் என்ன?.....அதனால் சித்திரங்கள் வெகுவாக வருத்தப் பட்டுக்கொண்டுவிடப் போவதில்லையே!......."

"சித்திரங்கள் வருந்த மாட்டா, மிஸ்டர் ராமன்! இவைகளைப் பார்க்காமற்போனால், நீங்கள் தான் பின்னால் வருந்துவீர்கள்!......." இதைச் சொல்லும்போது அவர் ஏணியில் எட்டு அடி உயரத்தில் இருந்தார். 'விதியே' என்று, ஆயிரம் தெய்வங்களை வேண்டிக்கொண்டு நானும் ஏறத் தொடங்கினேன்.

அந்தக் குகைக்குள் நுழைந்ததும், தெய்வலோகத்துக்கே வந்து விட்டாற்போலிருந்தது. மயனுடைய உலகில் சஞ்சரிப்பது போன்ற பிரமை உண்டாயிற்று. ராஜ கன்னிகைகளும், அரண்மனைகளும், அந்தப்புரங்களும் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன்னே வர்ணம் தீட்டப்பட்டிருந்தும் கூட பொலிவு குன்றாமல் புதுமையுடன் பிரகாசித்தன.

இவைகளை விட்டுப் பிரிய மனமின்றி நின்றபோது, "சரி, சரி. நேரமாகிறது, இறங்குங்கள்" என்று உத்திரவு போட்டு விட்டு முதலில் இறங்க ஆரம்பித்து விட்டாள், திஷ்ணு.

நானும் கண்ணப்பரும் மெல்ல இறங்கத் தொடங்கினோம். ஆனால், ...ஆனால்........நான் அதை எப்படிச் சொல்வேன்?........அதை நினைத்தாலே, நரம்புகளெல்லாம் மார்புக் கூட்டினுள் பந்தாக முறுக்கிக்கொள்வதைப் போலிருக்கிறது. சிந்தனை சிதறுகிறது.

திஷ்ணு முதலில் இறங்கிவிட்டாள். அண்ணாந்து பார்த்தாள். கண்ணப்பர் பதினைந்து அடி உயரத்தில் இருந்தார். நான் அவருக்கும், மேலே இருந்தேன். அவளுக்கு உண்டான களிப்பில், 'ஹோய்' என்று கூச்சலிட்டு கையை விசினாள். கண்ணப்பரின் நெஞ்சத்தில், அவளுடைய திங்குரல் என்ன உணர்ச்சிகளை எழுப்பிற்றோ? கீழே நின்ற திஷ்ணுவைப் பார்த்தவாறே கால்களை அந்தரத்தில் வைத்தார். அடுத்த கணம், ...

"ஹா...." என்று கிறீச்சிட்டாள், திஷ்ணு.

'மடேர்....'

என்னை சமாளித்துக்கொள்ள, ஏணியை மார்புறக் கட்டிக்கொண்டு இரண்டு மூன்று நிமிஷம் நின்றுவிட்டேன். பின், அவசரமாக இறங்கினேன்.

கண்ணப்பர் ரத்த வெள்ளத்தில் மிதந்தார். ஐம்பது ஆண்டுகள் வறுமையிலேயே வாழ்ந்துவிட்ட கிழவியைப் போலாகிவிட்டாள் திஷ்ணு, கணப்பொழுதில். என் நெஞ்சு பட்ட வேதனையை விவரிக்க முடியாது.

ஆறு மணி நேரத்திற்குப் பின் கண்ணப்பரின் சடலத்துடன் கண்டியுள் நுழைந்தோம். ஈமக் கடன்கள் முடியும் வரை நான் ஒரு பொட்டுத் தண்ணீர் கூடப் பருகவில்லை.

பத்து நாட்கள் நான் பித்துப்பிடித்தவன் போலிருந்தேன். மகா பயங்கரமான குற்றத்தைச் செய்து விட்டதைப் போல நெஞ்சம் பயந்து பயந்து செத்துக்கொண்டிருந்தது. எங்கே திரும்பினாலும் கண்ணப்பரின் இன்முகம்தான்!...

ஆனால், இப்போது திஷ்னுவின் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. இவ்வளவு முதுமை எங்கிருந்து வந்தது, அவளுக்கு? மிகக் கொடிய நோய் தாக்கியிருந்தால் கூட, அவள் உடல் இவ்வளவு இளைத்துவிடாதே?....

எல்லாவற்றிற்கும், பாவி, நான்தான் காரணம்! அவருடைய நட்பை, அன்றே கத்தரித்து விட்டிருந்தால் இந்தக் கோர விபத்து சம்பவித்திருக்காதே?

குணரத்னுவும் கைக்குழந்தையும் அழுகிறார்கள். ஐயோ, இனி அவர்களுக்குக் கண்ணப்பரின் அரவணைப்புக் கிடைக்காதே?

குமைந்து குமைந்து சாகிறேன். நெஞ்சு பரிதவிக்கிறது. அமைதியின்றி அல்லற்படுகிறது. இனி எனக்கு அமைதி ஏது?

திஷ்னு, எனக்கு ஆயிரம் சமாதானம் சொல்லிவிட்டாள். "அவர் போக வேண்டிய வேளை. போய்விட்டார். நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்கிறாள். "என் கூச்சலைக் கேட்டுத்தானே அவர் மிரண்டுபோய் கைப்பிடியை நழுவ விட்டார். அவர் முடிவுக்குக் காரணம் நானே தான்!" என்று நெஞ்சு தழுதழுக்கக் கூறுகிறாள்,

எரியும் என் இதயத்தில், நெய்யாக விழுகின்றன, இந்தச் சொற்கள்!

பதினைந்து நாட்களுக்குப் பின் இலங்கைப் பிரயாணத்திற்கு முடிவு கட்டிவிட்டு, சென்னையைப் பார்க்கப் புறப்படத் தீர்மானித்தேன். கடைசி முறையாக, திஷ்னுவைக் காணச் சென்றேன்.

"உல்லாசம் தேடி இங்கு வந்தேன். ஆனால்,.... மன உளைச்சலோடு போகிறேன்.... நான் உங்கள் வாழ்வில் குறுக்கிட்டதற்கு மிகவும் வருந்துகிறேன். நான் ஒரு பாவி. என்னை மன்னித்துவிடுங்கள்....!" தலைவணங்கி அமமாதரசியின் சன்னதியில் நின்றேன்,

"இல்லை. எல்லாம் என் துரதிர்ஷ்டம்.."

"..உங்களுக்கு என்னால் சிறிதளவேனும் உதவி செய்ய முடிந்தால், அதுவே எனக்குப் பெரிய ஆறுதலாக இருக்கும்.."

"நானே உங்களிடம் ஒரு உதவியைக் கோர எண்ணியிருந்தேன்...."

"சொல்லுங்கள், அம்மா. செய்யக் காத்திருக்கிறேன்...."

"நீங்கள் சென்னையில்தானே இருக்கிறீர்கள்?"

"ஆமாம்."

திஷ்னு, உள்ளே சென்று வந்து, ஒரு விலாசம் எழுதிய காகிதத் துண்டை நீட்டினாள்.

"இந்த விலாசத்தில் ஒரு வயோதிக ஸ்திரீ இருக்கிறாள். அவரை உங்கள் சொந்தத் தாயாக மதித்துக் காப்பாற்றுவீர்களா?"

"நிச்சயமாகக் காப்பாற்றுவேன்.................. இந்த ஸ்திரீ...."

".... நான் முகம் காணாத மாமியார்!"

திஷ்னு விம்மினாள். "சிங்களத்திற்கு வந்தபின் ஒரு முறைகூட என் கணவர் தாய்நாடு சென்றதில்லை. நான்தான் அப்படிச் செய்துவிட்டேன். ஆனால், மாதந்தோறும் அவர் தயாருக்கு முப்பது ரூபாய் நானே முன்னின்று அனுப்பச் செய்தேன்........"

"நானும் அப்படியே செய்கிறேன்........"

குணரத்னுவைக் கட்டியணைத்து முத்தமிட்டு விட்டு, நீர் சுரக்கும் கண்களுடன் காரில் ஏறிக்கொண்டேன்.

3

ஆகாய விமானத்தின் வேகத்தைவிடப் பல நூறு மடங்கு வேகத்தில் என் மனம் பறந்துகொண்டிருந்தது. கண்ணப்பரின் தாய்க்கு என்னால் இயன்ற அளவு உதவியைச் செய்வது என்று தீர்மானித்திருந்தேன். என் சொந்தத் தாயை விட மிகவும் உயர்ந்த நிலையில் அவரை வைத்துப் பார்க்க நான் துடித்துக் கொண்டிருந்தேன். இப்படியேல்

லாம் செய்வதன் மூலம் அவருடைய ஒரே மகனை நான் திரும்பக் கொண்டுவந்து கொடுத்ததாக ஆகிவிடாது தான். ஆனால், கண்ணப்பரின் அம்மா சாந்தியடையும்; திஷ்று பெரிதும் ஆறுதலடைவாள். தன் காதலனைப் பெற்றெடுத்த ஸ்திரீ, நல்ல நிலைமையில் இருப்பதைக் கேட்டு நிம்மதியுறுவாள்.

• திஷ்று, ஏனவேறும் அமைதியான வாழ்க்கையை இனி நடத்தினால், என் மனச்சுமை கடுகளவேனும் குறையும். அவளுக்கும் பணக் கஷ்டம் இல்லை. வியாபாரத்தையும் கவனித்துக்கொள்ளும் சாமர்த்தியம் உண்டு அவளிடம் ஆனால், இரு குழந்தைகளை வளர்த்துப் பெரியவர்களாக்கும் பொறுப்புடன், வியாபாரத்தையும் சேர்த்து நிர்வகிக்கவேண்டுமே ?..........

மீனம்பாக்கத்தில் வந்து இறங்கும்வரை சிந்தனை மயம் தான்.

வீட்டுக்குள் நான் நுழைந்தபோது எல்லோரும் திடுக்கிட்டுவிட்டார்கள். இரண்டு மாதங்கள் தங்கிவிட்டு வருவதாகச் சொல்லிப் போனவன், இருபது நாட்களில் திரும்பிவந்தால்.......?

"உடம்புக்கு என்னடா ?......"

"ஒன்றுமில்லையே !......."

"பாதியாகத் தேய்ந்து வந்திருக்கிறாய். உடம்புக்கு ஒன்றுமில்லையாவது ?"

"அம்மா...........உங்கள் கண்ணுக்கு மட்டும் நான் எப்போதும் இளைத்தவனாகவே காணப்படுகிறேன் !"

எனக்குப் பிடித்தமான சமையல் சமைக்கும்படி உத்திரவிட அம்மா உள்ளே போய்விட்டாள். உற்சாகத்தோடு வரவேற்ற தம்பி பாலு, என்னைப்பாராதவன் போல வெளியே போய்விட்டான். அரை மணி நேரம் என் பெட்டியைக் குடைந்தும் புதுமையான பொருள் எதுவும் காணப்படாத ஏமாற்றம், அவனுக்கு !

'காரேஜி'லிருந்து காரை எடுத்தேன்.

"வந்ததும் வராததுமா எங்கேடா கிளம்பிட்டே ?.."

"..பத்து நிமிஷத்தில் வந்துவிடுவேன், அப்பா...."

கார், ராயபுரத்தை நோக்கி ஓடியது. அந்த வயோதிக ஸ்திரீயின் விலாசம் எனக்கு மனப்பாடமாகியிருந்தது. ஒதுப்புறமான சந்தில் குடியிருந்தார், அவர். வெகு காலமாக அங்கேயே இருக்கிறாராம். கண்ணப்பர் ஊரை விட்டு, வேலை தேடிச் சென்னைக்கு வந்தபோது குடியேறிய வீடு. பட்டணத்தில் சரியான வேலை கிடைக்காததால் தானே சிங்களத்துக்குப் போனார், அவர் ?

ஒரு வழியாக விசாரித்துக்கொண்டு, குறிப்பிட்ட இடத்தை அடைந்தேன். கார் நுழையமுடியாத சந்து. வீதியில் காரை நிறுத்திவிட்டு, சந்துக்குள் புகுந்தேன். ஏழைமைக்கோலத்துடன் அரை டஸன் சிறுவர்கள் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு 'சுள்' கொட்டினார்கள். நான்கு வீடுகளுக்கப்பால் ஒரு கிழவன் புகைபிடித்துக் கொண்டிருந்தான்.

"பெரியவரே,........"

தன் மோன நிலையைத் தகர்த்த என்னை வெறிக்கப் பார்த்தார், அவர்.

"எட்டாம் நம்பர் வீட்டில் ஒரு கிழவி இருக்கிறாராமே,......?"

"அது பூட்டுதே !........"

"எங்கே போய்விட்டாங்க? இடத்தைக் காலி செய்திட்டாங்களா ?........"

"நீ என்ன நாயினா !........ அது செத்துப்பூட்டுது, சார் !.......நேத்து ராவிலேயே கொளுத்திப்புட்டோம் ?...."

"பூமியில் வேரோடி நின்றேன். என்னுடைய துரதிருஷ்டத்தைக்கண்டு என்பேரிலேயே எனக்குக் கடுங்கோபம் பிறந்தது.

"நிசமாகத்தான் சொல்றீங்களா, பெரியவரே ?"

"மெய்யாத்தான், சார், சொல்றேன்.."

"அந்தக் கிழவியின் மகன் கூட சிலோனில் இல்லை.

"ஆமா........"

என் கண்களில் நீர் துளிர்த்தது

"நீ, அவங்க மச்சானா, சார் ?" .... அப்படின்னு அந்த சிலோன்காரனுக்கு லெட்டர் போட்டுடுங்க ...

மௌனமாகத் திரும்பி காருக்கு வந்தேன். வெடிக்கக் காத்திருக்கும் எரிமலையாக மனம் கனன்று கொண்டிருந்தது. விபத்துக்கள் ஏதும் நேராமல் வீடு வந்து சேர்ந்ததே பெரும் பாக்கியம் தான்!

4

ஒரு மாதம் சென்றபின்தான் என் மனம் ஒரு நிலைக்கு வந்தது. ஆனாலும், கண்ணப்பருடைய தாயாரின் மறைவைத் திஷ்ணுவுக்குத் தெரிவிக்கும் துணிவு பிறக்கவில்லை. அப்படித் தெரிவித்தாலும் அவளுடைய வருத்தம் அதிகரிக்குமே தவிர, வேறு எவ்விதப் பலனும் இருக்கப் போவதில்லை. இந்தச் செய்தியை அவளிடமிருந்து மறைத்து விட்டால் என்ன?

இது நல்ல யோசனையாகப்படவே, திஷ்ணு கொடுத்த விலாசத்தில் இருந்த ஸ்திரீயைச் சந்தித்ததாகவும், அவரை என் தாய்போலவே காப்பாற்றி வருவதாகவும் அவளுக்குக் கடிதம் எழுதினேன். பின், அவளுடைய பதிலுக்காக நான் காத்திருந்தேன்.

ஆனால்,....

ஒரு வாரத்திற்குப் பின், என்னுடைய கடிதம் எனக்கே திரும்பி வந்துவிட்டது. 'ஏன்? ஏன்?' என்று நான் தவித்துக்கொண்டிருக்கையில், இலங்கை முத்திரையிட்ட இன்னொரு கடிதத்தை பாலு கொண்டு வந்து கொடுத்தான். பரபரப்புடன் உறையை கிழித்தேன்.

"ஐயா,

நான், காலஞ்சென்ற கண்ணப்பரின் கடையில் வேலை செய்பவன். திஷ்ணு அம்மாளுக்கு நீங்கள் எழுதிய கடிதத்தைத் திருப்பி அனுப்பியிருக்கிறேன், ஒரு துன்பச் செய்தி திஷ்ணு அம்மாளுக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டு விட்டது. கண்ணப்பரிடம் அவர் கொண்டிருந்த அபூர்வ அன்பின் விளைவு, அது. குழந்தைகளையும் கடையையும் திஷ்ணுவின் தூரத்து உறவினர் ஒருவர் கவனித்துவருகிறார். அவர் ஒரு பெரிய குடிகாரர். எனக்கு அவரைப் பிடிக்கவேயில்லை. வேறு வேலை தேடிக்கொண்டிருக்கிறேன். இடைத்தால், இந்த வேலையை விட்டுப்போய்விடுவேன். ஆனால் அந்தக் குழந்தைகளின் கதியை நினைத்துக் கொண்டால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது.

பொன்னம்பலம்."

என் இதயத்தின் அஸ்திவாரத்திலிருந்து கனல் ஊற்றுப் பெருகி, ஆகாயம் அளாவ எழுந்து, என்மேல் சடசடவென்று பொழிந்துகொண்டிருந்தது.

தெய்வம் என்னை மன்னிக்குமா?..........

அபய குசலோபாக்கியானம்

ஏ. எஸ். ராகவன்

முன்னுரை: கிரஹஸ்தாசிரம தர்மத்தைப் பற்றி நிற்பவர்களும், விதியில் நம்பிக்கை உள்ளவர்களும், யதார்த்த வாதிகளும் இந்தக் கதையை ஏற்றுக்கொள்வார்கள். நம்பாதவர்களைப் பற்றிக் கவலை இல்லை. அவர்கள் நம்பும் காலம் விரைவில் வரட்டுமென்று (கிரஹஸ்தன் என்ற முறையில்) ஆசீர்வதிக்கிறேன்.

பிறந்தது முதலே பழகிப் போன சம்சார விசாரத்தில், எதற்கும் ஈடு கொடுத்து ஈடு கொடுத்து ஒடிந்து போய் விட்ட முதுகெலும்பும், காலத்திற்கும் கணக்கிற்கும் எட்டாத சிந்தனைக் குப்பைகள் அரித்த மார்பும், நிற்கும் தரைக்கும் நில்லாத உடம்புக்கும் ஈடு காட்ட முடியாத கால்களும், குறைகளை எல்லாம் மறக்க அமைந்த வரப்பிரசாதம் போல் பாம்புச் செவியும், பயந்து பயந்து பார்க்கும் விழிகளுமாக வாஞ்சி நாதய்யர் கூடத்துக் கட்டிலில் படுத்துக் கிடந்தார். அருகே ஒரு முக்காலியில் பழைய பாட்டில் ஒன்று, உரித்த ஆரஞ்சுத் தோலி, சக்கை, அலாரம் கெடிகாரம் (ஆனால் அலாரம் அடிக்காது), சிவப்பு வர்ண மருந்து, அதைச் சுற்றி ஈக்கூட்டம்—இத்தனையும்.

அவயத்துக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கிறதா? வியாதியஸ்தன் படுத்திருக்கிற இடம் இப்படியா இருப்பது! ஆரஞ்சு சாப்பிட்டு அரை மணி ஆகிறது. தோலியையும் சக்கையையும் அப்புறப்படுத்தக் கூடாதோ! சொன்னால் எரிந்து விழுவாள்! 'போக்' கென்று பிராணன் போய்விட்டால், இந்த இம்சை எல்லாம் இல்லாமல் போய்விடும். அதுவும் தான் லேசில் போகிறேன் என்கிறதா?

உள்ளிருந்து குரல் கணீரென்று வந்தது. "பாழும் பிராமணன்! தலையாலே அடிச்சுண்டேன், போய் அந்த நிர்த்ததிலே முழுகாதே, முழுகாதேன்னு....கேட்டேதா? இப்போ என் பிராணனை வாங்கறது... ஓட வெடதுண்டு, காச்ச லோட வந்ததுனாலே வீட்டுக்குள்ளே விட்டேன். இல்லாட்டா, அப்பவே கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிக் கதவைச் சாத்தியிருப்பேன்...."

அபய குசலாம்பாள் யாரிடமோ பேசிக் கொண்டிருந்தாள். வாஞ்சிநாதய்யருக்கு உடல் நடுங்கியது. நல்ல வேளை, குளிரும் காய்ச்சலும் வந்ததோ, பிழைத்தோமோ! இல்லாவிட்டால் அன்றைக்கு அவயம் கழுத்தைப் பிடித்து, வெளியே.......

"என்ன வாழ்ந்தது என்கிறேள்?.... எப்பவும் இதே கதை தான்.... துறையூர் மச்சினர் பொண் கல்யாணத்துக்குப்போய் விட்டுச் சிப்படவில்லையா?"



வாஞ்சிநாதய்யருக்கு அந்த நினைவு வந்தது. பத்துவருஷங்களுக்கு மேலிருக்கும். கல்யாணம் என்று போன இடத்தில் எப்படி ஆட்டி வைத்தாள் அவரை! மனுஷனாக அவரை அவள் எண்ணியதே இல்லை. கல்யாணத்திற்குப் போகிறவர்கள் இங்கிருந்து நெல் இரண்டு படியா கொண்டு போவார்கள்! அவயம் கொண்டு போனாள். அண்ணன் பெண்ணுக்குக் கல்யாணம். கேட்கணுமா? பஸ்ஸில் பை நழுவி அத்தனையும் கொட்டி விட்டது. நாற்பதுபேர் புளி மூட்டைபோல் அடைந்து கிடக்கிற பஸ்ஸில் குனிந்து அத்தனையும் திரட்டுவதென்றால் லேசான காரியமா? அவயத்துக்கு இது எங்கே தெரிந்தது? "ஒரு மணி விடாமல் எடுத்துப் பையில் போடுங்கோ.... இல்லாவிட்டால் சாப்பிட ஒரு பிடிச் சாதம் கிடைக்காது...." என்று அத்தனைபேருக்கு நடுவிலே, காளிகா தேவி மாதிரி.......

"போறுமே... ஒரு காரியத்துக்குத் துப்பில்லே எல்லாம் நான் இருந்து நிர்வகித்துக்கொண்டு வந்ததுனாலே, வீடு வீடா இருந்தது. உத்தியோகம் பார்த்து மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்து தள்ளினாரோ பிராமணன்! ...."

அடிபாவி! நெஞ்சாரப் - பொய் சொல்கிறாயே! ஓடி, ஓடி எத்தனை சம்பாதித்துக்கொண்டு வந்து இந்த வீட்டில் கொட்டி விட்டு, சாப்பாட்டுக்கு உன் கையை எதிர்பார்த்துக் கொண்டு தவித்திருப்பேன் என்று வாஞ்சி நாதய்யர் உள்ளூர உறுமினார். அந்த உறுமல் தொண்டையைப் பிளந்து கொண்டு இருமலாக வெளிப்பட்டது.

இருபத்து ஒன்றாவது வயதில் அபயம் அவர் கை பிடித்தாள். அவள் தான் பிடித்தாள். அவர் பிடிக்கவில்லை. அன்று அவரை ஆட்கொண்ட நடுக்கம் இன்று வரை ஓய

வில்லையே! சம்சாரத் தொடரில் இது ஒரு இடைச்செருகல் என்பது அவருக்கு விளங்கி விட்டது. காத்திரமான சரீரமும், அதற்கேற்ற சாரீரமும் படைத்த அபயம், அந்த வீட்டில் தன்னைச் சுற்றியுள்ள மாமனார், மாமியார், நாத்தனார் ஆகிய பூதகணங்கள் நடுங்க, தெருவெல்லாம் அதிர, ஆட்சி செலுத்தலானாள். வாஞ்சிநாதய்யர் நடுங்கியது ஆச்சரியமில்லை. இயற்கையாகவே பயந்த சுபாவம் படைத்தவர். இல்லறத்தை நல்லறமாக்கவும், நாலுபேர் முன் நல்லவர் என்று பெயர் வாங்கவும், அவர் படாதபாடு பட்டார்! அபயத்தைத் திருப்தி செய்வதன் மூலம் வீட்டில் அமைதியையும், அதன் மூலம் அக்கம் பக்கத்துச் செவிகளை அடைத்து ஊரில் தன்னை ஸ்தாபித்துக் கொள்ளவும் முயன்றார். ஆனால் இந்த முயற்சிகளில் பாதி வழியே அவரால் எட்டிப் பிடிக்க முடிந்தது. அபயம் எப்போதுமே அவரை, 'தேவலாமே!' என்று கூட ஏற்றுக்கொண்டதில்லை.

சே! என்ன வாழ்க்கை இது! அவருக்கும் தான் வயது அறுபது ஆகிறது. முப்பத்தி ஒன்பது ஆண்டுகளில் ஒரு நாளாவது அவர் இஷ்டத்துக்கு அபயம் அசைந்து கொடுத்ததுண்டா? அவளை எதிர்த்து ஒரு வார்த்தை அவர் பேசியிருக்கிறாரா?....எதிர்த்துப் பேசுவதா? எப்படி?....அபயத்தை எதிர்த்துப்பேசி விட்டு எங்கே போவது? ஊரைக் கூட்டி முழக்கி விடுவாளே!

இருமல் பொத்துக்கொண்டு வந்தது. மார்பை அழுத்திப்பிடித்துக்கொண்டு எழுந்தார். கவனமாக சுவரோரத்தில் வைக்கப்பட்டிருந்த கலயத்தில் துப்பிவிட்டு மீண்டும் தலையைச் சாய்த்தார். கண்முன் திடீரென்று எல்லாம் இருண்டது போலிருந்தது. ஆயிரம் அமாவாசைகளை ஒன்று சேர்த்து அரைத்த கலவை மாதிரி. இனி எல்லாமே இரண்டு விடும், தன் வாழ்வில் ஒளியே இராது என்று அவருக்கு அந்தக் கணத்தில் தெரிந்து விட்டது. பயத்துக்குப் பதிலாக ஒரு நிம்மதி மனதில். எப்படியாவது இந்தப் பந்தத்திலிருந்து விடுபட்டால் போதும் என்றிருந்தது அவருக்கு.

முடிவு நெருங்குகிறது என்பதை அவர் நன்றாக உணர்ந்தார். . எப்படியோ அவருக்கு அது தெரிந்து விட்டது. மூடிய கண்ணைத்திறக்க முடியவில்லை. அப்போது நெஞ்சில் ஒரு உறுதி பிறந்தது. இத்தனை நாட்களாக இல்லாத உறுதி. "அவயம் என்னை என்னவென்று எண்ணிக் கொண்டிருக்கிறாள்! இனிமேல் அவளுடைய மிரட்டலுக்கு நான் மசியப் போவதில்லை...பிழைத்து எழுந்து அவள் கையை எதிர்பார்ப்பதாக இருந்தால் தானே பயப்பட வேண்டும்!...வருவது வரட்டும். ஒருகை பார்த்து விடுகிறேன்."

ஆமாம். இன்றோடு எல்லாம் கடைசி. இந்த வீடு, கூடம், விசாரம், பந்தம் எல்லாவற்றுக்கும் முக்தி அப்புறம் அழுவாளோ? அவ அழுதாலும் அழுவாள். அவளால் எல்லாம் செய்ய முடியும்.

"என்ன, கண்ணை மூடிண்டு ஜபம் பண்ணியாகிறது! மருந்து சாப்பிட வேண்டாமா?" என்று அவயம் வந்து நின்றாள்.

மூடிய கண் தானாகத் திறந்து கொண்டது. இவ்வளவு நேரம் பாடுபட்டும் திறக்காத கண் அவளுடைய மிரட்டலுக்குப் பயந்து விட்டதோ! "உம்....உம்...."

"என்ன 'உம்'?...கோட்டான் மாதிரி, எதுக்கெடுத்தாலும் ஒரு 'உம்' தானா?..வாயைத் திறவுங்கள்..மருந்தை ஊற்றி விட்டுப் போகிறேன்.."

அவருக்குத் தன் உறுதி நினைவுக்கு வந்தது. ஆனால் மருந்து விஷயத்தில் அதைப் பிரயோகிப்பது புத்திசாலித்தனமாக இராதென்று வாயைத் திறந்தார். அவள் ஊற்றியதைக் குடித்தார்.

"நிலத்துக் குத்தகை வரவேயில்லை........படுக்கையிலே படுத்ததும் அவனுக்குக் கொட்டமாப் போயிடுத்து...... எப்போ அதை வசூல் பண்றதோ? இங்கே பிண்டத்துக் லாட்ரிஅடிக்க வேண்டியதுதான்......'

"உம்.........உம்"

"என்ன உம்?"

"என்னை என்ன பண்ணச்சொல்றே?..."

"உங்களை என்ன செய்யச்சொல்லி என்ன? எதுக்குத் துப்பு இருந்தது? எல்லாம் என் தலை எழுத்து...."

"பேஷ்!"

"என்ன பேஷ்?" அவயம் உருட்டி விழித்தாள்.

"துப்பில்லாதவனுக்குப் பெண்டாட்டியா வாச்சா இந்த அவஸ்தைதான்!" அவளை எதிர்த்துவிட்டதாக அவருக்கு நினைப்பு.

"மூடுங்கள் வாயை....ஒரு விசாரமில்லாமல் படுத்துண்டாச்சு. நான் ஒருத்தி என்ன செய்து சமாளிக்க முடியும்?....வியாதி பாதி. கபடம் பாதி........ஏதாவது ஒரு சாக்கு வேண்டுமோ. இல்லையோ!"

"அவயம் கண்டபடி பேசாதே.....அசையக் கூடத் திராணி இல்லே. வேனும்னா படுத்துக்கொண்டிருக்கேன்? நீ வேண்டுமானா நோய்ப்பட்டுப் படு. நான் உழைக்கிறேனா இல்லையா, பார்...."

அவ்வளவுதான் அவயம் ஆரம்பித்துவிட்டாள். "இந்த நினைப்பா உனக்கு? அட, பாழும் பிராமணா! நாக்கு அழுகிப் போகாதோ? நான் வியாதிப்படுக்கனுமா? இந்த ஆசை எத்தனை நாளா?" என்று பொருமித்தள்ளினாள்.

அய்யருக்கு உள்ளூற ஒரு திருப்தி. இத்தனை வருஷங்களுக்குப் பிறகு அவயத்தை எதிர்த்துப் பேசிவிட முடிந்ததே! ஜென்மமே சாபல்யமாகிவிட்ட மாதிரித் தோன்றியது. இனி எது எப்படிப் போனால் என்ன?

2

தேவந்திரனுக்குப் பரிபாலனம் பழைய பாதையில் ஓடுவதில் அதிருப்தி ஏற்பட்டுவிட்டது. வருணன் முன் போல மாதம் மும்மாரி பொழிவதில்லை. காரணம் கேட்டால், நல்லார் ஒருவரும் இல்லாதபோது எவர் பொருட்டுப் பொழிவது என்கிறான். நல்லார் யார் என்பதைக் காண்பதோ பூலோகத்தில் சுலபமான காரியமாக இல்லை. பழைய சாஸ்திரங்களும் தர்மங்களும் விதித்த லட்சணங்கள் அறவேமங்கிப்போய் விட்டிருக்கின்றன. பிரஹஸ்பதிக்குத் திரும்பத் திரும்ப பழைய பல்லவியையேதான் பாடத் தெரிகிறது.

யுகாந்திரமாகக் கண் இமைக்காமல் அமிர்தத்தைக் குடித்துச் சிரஞ்சீவிகளாக வாழ்வதில் என்ன சுகம் இருக்கிறது? ஊர்வசி திலோத்தமை இவர்களின் சிலையழகில் ஜீவ அசைவே காணோமே!

ஒரு மாற்றம் வேண்டும். தபோ பலத்தால் தன்னை மற்றொருவன் வென்றுவிட்டுப் பதவியைப் பெறமுடியும்

என்ற சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரவேண்டும். வெறுமே நீட்டின இடத்தில் கையெழுத்து போட்டுவிட்டு நிர்வாகத் தலைமையில் இருந்து விடுவது சுகத்திற்குச் சுகம். லாபமும் கூட!

பூலோகத்தின் குடியாட்சி முறை தேவலை என்று 'ஸெலக்ட் கமிட்டி' தெரிவித்த சிபார்சை தேவேந்திரன் ஏற்றுக்கொண்டான். தேவலோகத்தில் 'எலக்ஷன்' வந்துவிட்டது. சுவரொட்டிகளைக் கண்டு இமைத்துப்பார்த்தனர் தேவர்கள்.

எந்த வம்புக்கும் போகாமல், சிருங்கார புருஷராய், லட்சுமி கால் வருடப் பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த நாராயணனின் முன் நாரதர் ஒரு 'பாரத்தை நீட்டி, "இதில் கையெழுத்திட்டுக் கிருபை செய்ய வேண்டும்," என்றார்.

"என்ன இது?"

"தேர்தல் அபேட்சகர் மனு."

"உன் குறும்புக்கு எல்லை இல்லை....சரி கொண்டுவா."

நாரதர் பொல்லாதவர். எமதர்மனிடமும் சென்று அதே தொகுதிக்கு மனுவை எழுதி வாங்கி வந்துவிட்டார்.

கடைசித் தேதி தெரியாமல், இருவரில் எவரும் 'வாபஸ்' பெறாதுபோகவே, நேரடிப் போட்டி வந்துவிட்டது. சண்டை என்று வந்தால் கட்சியாடித்தானே தீரவேண்டும்! நாராயணனே இறுதியில் வெற்றி பெற்றதாக தேர்தல் கமிஷனர் பிரஜாபதி அறிவித்துவிட்டார்.

யமதர்மனுக்கு இது பெருத்த அவமானமாகப் பட்டது. ஏதோ சில்லரைக் குறைகளைக் காட்டி 'ரிட்' மனு தாக்கல் செய்தான்.

இது இங்ஙனமிருக்க......

சித்ராபுத்திரன் யமன் முன்வந்து நின்று, "பூலோகத்தில் அஸ்தயனபுரி என்ற கிராமத்தில் வாஞ்சிநாதய்யர் என்ற ஜீவனுக்கு இன்றோடு ஆயுள் முடிகிறது......." என்று வாசித்தான்.

யமன் தனது திருஷ்டியை அந்த ஜீவன் மேல் செலுத்தக் குனிந்தான். ஒடிந்த கட்டிலில் ஒரு ஒடிந்த ஜீவன் கண்களை மலக்க, மலக்க விழிப்பதைக் கண்டான். கைகளை சிரமப் பட்டு உயர்த்தி. "ஹே நாராயணா, எனக்கு விடுதலை கொடு.... போதும் இந்த பந்தம்!......." என்று பிரார்த்திப்பதையும் கண்டான். அச்சமயம் தனது பூதகணங்களில் ஒன்றைப் பழிக்கும் அபய குசலாம்பாள் அங்கு பிரசன்னமாகி, "பாழும் பிராமணா!.......எல்லாத்தையும் போட்டது போட்டது போல் விட்டு விட்டுப் போகறது பிராணனை விடவா பிரார்த்தனை செய்கிறீர்?...என்னைத் தவிக்க விட்டு விட்டு...." என்று முழக்குவதையும் கேட்டான்.

"சித்ரா, இந்த ஜீவன் நாராயணனை அல்லவா பிரார்த்தனை செய்கிறது?" யமனுக்கு 'எலெக்ஷன்' குரோதம் போகவில்லை.

"ஆமாம், பிரபோ......."

"ஏதாவது வழி இருக்கிறதா பார்......."

எமனது குறிப்பை உணர்ந்தான் சித்ராபுத்திரன். வாஞ்சிநாதய்யரின் ஏட்டைப் புரட்டினான். "பிறந்தது முதல் சம்சார விசாரத்தில் உழலும் ஜீவன். மனைவி அவயத்தின் கைப்பொம்மை. எதிர்த்து ஒரு வார்த்தை கூடப்பேசி அறியாதவர். மானி" என்று குறிப்பிட்டிருந்தது அதிலே. சிறிது நேரம் மூளையைக் குழப்பிக்கொண்டான்.

ஒரு துள்ளித் துள்ளி எமன் முன்போய் நின்றான்.

"என்ன? ஏதாவது புலப்பட்டதா?"

"புலப்பட்டு விட்டது."

"சொல்லும்."

"மானிட ஜாதியைப் படைக்கும் போதே, ஒவ்வொரு ஜீவனுக்கும் தனிப்பட்ட குணங்களையும், மனசையும், அவயவ அமைப்பையும் தருகிறோம். அந்தந்த நிலையில் அவரவர் வாழ்ந்து மறைய வேண்டுமென்பது விதி.......இந்த வாஞ்சிநாதய்யர் என்ற ஜீவனை மனைவியின் கைப்பொம்மையாகப் படைத்ததுதான் பிரம்ம விசேஷம்......இத்தனை நாள் அதில் பிறழாது வாழ்ந்த இந்த ஜீவன் இன்று மனைவியை எதிர்த்துப் பேசியிருக்கிறது......"

"நிஜமாகவா?........இது எப்படி சாத்தியம்?"


"சாகப்போகிற துணிச்சல்......"

"ஓஹோ........தகுந்த தண்டனை அளிக்காமல் இந்த ஜீவனைச் சிட்சிக்க முடியாது. இவரது ஆயுள் இன்னும் பத்து வருஷம் நீடிக்கட்டும். சிருஷ்டி இயல்பை மீறிய குற்றத்துக்காக என்று குறிப்பு எழுதி விடும்."

கண்ணிருட்டு நீங்கியது. முன்போல் இருமல் இல்லை. நடக்கவும் பேசவும் முடிந்து விட்டது. மீண்டும் வாஞ்சிநாதய்யர் பழைய நிலையை அடைந்தார். அவயம் தனது அரசாட்சியைக் குறைவின்றி நடத்தி வந்தாள்.

(சுபம்)

[பின்னுரை: இக்கதையைப் பாராயணம் செய்தவர்கள், பாராயணம் செய்யக் கேட்டவர்கள் ஆகிய மாது சிரோமணிகள், சாவித்திரியைப் போன்ற அபய குசலாம்பாளின் பேற்றைப் பெறுவார்கள்.]



பழங்கால நினைவுகள்

ரா. நா.

தற்கால அனுபவங்கள் பெரிதும் மனதிற்குக் கசப்பையே அளிக்கின்றன. ஆகையால் பழங்காலத்தையும், அப்போது நிகழ்ந்தவைகளையும் நினைத்துக் கொண்டால் மனதில் இன்பம் தோன்றி அமைதியும் நிலவுகிறது.

முதியவர்கள் தங்களது ஆதிகால வாழ்க்கையை நினைத்துப் பெருமிதம் அடைகின்றனர், அவர்களுக்குத் தற்காலச் சிறப்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் கிடையாது என இத்தலைமுறையினர் நினைக்கலாம். ஆனால் உண்மை அதுவன்று. வெளிநாடுகளில் வல்லரசுகளின் போராட்டத்தைக் காண்கின்றோம். நம் தாய்த் திரு நாட்டில் சாதிச் சண்டையையும் மொழி வெறியையும் தவிர வேறு எதைக்காண முடிகிறது? இங்கிலேயில் பகைவனை விரட்டும் ஒரே குறிக்கோளுடன் எல்லோரும் ஒன்றுபட்டுப் பணிபுரிந்த காலத்தை நினைவுபடுத்திக் கொள்வது நல்லதல்லவா? அந்த நாட்களில் ஆத்திரம் பொங்கி எழுந்ததென்றால் நம்மை அடக்கியாளும் ஆட்சியாளர்களிடமும் அவர்களுடைய அடிவருடிகளிடமும் தான் வேகமும் வெறியும் சென்றது. இம்மாதிரிச் சம்பவங்களில் சிலவற்றை இங்கு விவரிக்கின்றேன்.

நான் கல்லூரி மாணவனாயிருந்த காலத்தில்தான் அன்னிபெசண்ட் அம்மையாரின் ஹோம் ரூல் இயக்கம் மும்முரமாக நடந்தது. அம்மையாரின் பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் பிரசங்கம் செய்ய வந்தனர். பொதுக்கூட்டங்களில் மாணவர்கள் ஏராளமாகப் பிரசன்னமாயிருந்தனர். இம்மாதிரி அரசியல் கொந்தளிப்புகளில் இளைஞர்கள் பங்கு கொண்டால் அவர்கள் பாழ்பட்டுவிடுவர் என எண்ணி அரசாங்கத்தார் 'மாணவர்கள் அரசியல் கூட்டங்களுக்குச் செல்லலாகாது' என உத்தரவு பிறப்பித்தனர். இதுதான் புகழ் பெற்ற 559 என்னுள்ள அரசாங்க உத்தரவு.

இதை மாணவர்கள் புறக்கணித்தனர். திருச்சியில் 500 மாணவர்களுக்கு மேற்பட்டுக் கையெழுத்திட்டு தாங்களே அரசியல் பொதுக்கூட்டம் கூட்டினர். டவுன் ஹால் சதுக்கத்தில்தான் அக்கூட்டம் கூடியது. இதற்கு மேல் தமிழ் நாடெங்கும் இம்மாதிரிக் கூட்டங்கள் கூடின. இந்த உத்தரவு ரத்து செய்யப்படவில்லை எனில் மாணவர்கள் பள்ளி பகிஷ்காரம் செய்வர் என பகிரங்கமாகப் பொதுக்கூட்டங்களில் அறிவிக்கப்பட்டது. பள்ளிக்கூடங்கள் காலியாகிவிட்டால் தங்களுக்கு அவமானம் எனக் கருதி முதலில் இரண்டு வாரங்களுக்கும், பின்னர் இரண்டு வாரங்கட்கும் கல்லூரிகள் போலிக் காரணங்கள் கூறி மூடப்பட்டன. மீண்டும் கல்லூரிகள் திறக்கப்படுமுன் அந்த உத்தரவு சர்க்காரால் ரத்து செய்யப்பட்டது. அச்சமயம் கல்வி இலாகா தலைவர் ஸ்டோன் (கல்) என்பவர். அவர் அச்சமயம் நீலகிரியிலிருந்தார். அரசினர் பணிந்து வந்ததை "நம் கிளர்ச்சியால் நீல மலையிலிருந்த கல் சரிந்து விழுந்தது" என மாணவர்கள் கேலியாகக் கூறிச் சிரித்தனர்.

• • • •

ஹோம்ரூல் இயக்கத்தின் விளைவாக பெசண்டம்மையாரும் அவரது சகாக்களான அருண்டேலும் வாடியாவும் கவர்னர் பெண்ட் லாண்டு பிரபுவால் காவலில் வைக்கப்பட்டனர். மூன்று மாதங்களுக்குப்பின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் விடுதலையானபின் அம்மையாரின் தொனி மாறிவிட்டது. இதை புனாவில்திலகரும், சென்னையில் 'ஹிந்து' ஆசிரியர் கஸ்தூரி ரெங்கய்யங்காரும் வன்மையாகக் கண்டித்து எழுதினர். இதுபற்றி அம்மையார் தனது 'நியூ இந்தியா' எனும் தினசரியில் 'திலகரும், கஸ்தூரி ரங்கய்யங்காரும் நாட்டிற்கு அபாயம் விளைவிப்பவர்கள்' என எழுதியிருந்தார். இந்தக் கருத்து வெளியானபின் அவர் திருச்சிக்கு வந்தார். அன்னார் டவுன் ஹாலில் பேச ஏற்பாடாகி இருந்தது. மூன்று மாதத்திற்குமுன் பூர்ண கும்பம் மாலை மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டவரை இந்த சமயம் யாரும் லட்சியம் செய்யவில்லை. அதற்கு பதிலாக டவுன் ஹாலில் கூடியிருந்தவர்கள் 'அம்மையார் திலகர் அய்யங்கார் பற்றிய அவதூறை வாபஸ் பெறுவிட்டால் பேச விடமாட்டோம்' என சவால் விடுத்தனர். கூட்டத்தினரும் பிடிவாதமாயிருந்தனர். அம்மையாரும் பணிவதாயில்லை. அந்த சந்தர்ப்பத்தில் ஸய்யத்மூர்த்தா சாஹேப் அவர்கள் எழுந்து 'அம்மையாரின் கருத்தை வெறுப்பவர்கள் வெளியே திறந்த வெளிக்கு வாருங்கள்' என அழைத்தார். மண்டபத்தில் இருந்தவர்கள் யாவரும் வெளியேறினர் உள்ளே சில பிரம்மஞான சங்கத்தினரே இருந்தனர். வெளியேறிய மக்கள் மைதானத்

அவர்கள் தலைமையில் அம்மையாரின் கூற்றைக் கண்டித்து ஏகமனதாகத் தீர்மானம் செய்தனர்.

* * *

உப்பு சத்தியாக்ரஹம் மும்முரமாக நடந்த காலம். திருச்சியில் உள்ள தலைவர்கள் யாவரும் சிறை சென்று விட்டனர். இயக்கம் சிறுவர்களாலே நடந்தது. கிலேதார் தெருவில் தொண்டர் முகாம் நடந்தது. ஒரு நாள் கோயமுத்தூர் என். எஸ். ராமஸ்வாமி அய்யங்கார் பேச வந்திருந்தார். வக்கீல் தொழிலில் எப்படி நாவன்மையுடன் பேசுவாரோ அம்மாதிரியே பிரசங்க மேடையிலும் தமிழ் மொழியில் கடல் மடை திறந்தாற்போல் பேசுவார். அவர் பேச்சை எல்லோரும் ரசித்துக் கேட்டனர். தொண்டர் படையில் ஆள் சேரவேண்டும் எனும் அவர்கள் வேண்டுகோளுக்கு அவரது சொல்லழகை ரஸித்த அளவுக்கு ஆட்கள் சேரவில்லை. அந்த சமயத்தில் தோழர் பாலு எழுந்து

'நீதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்'

எனும் பாரதியார் பாட்டை பொருள் செறிவு குன்றாத இசை அழகுடன் பாடினார். அவர் பாடி முடித்ததும் பல இளைஞர்கள் தொண்டர் படையில் சேர்ந்தனர். உண்டியல் பெட்டிகள் நிறைந்தன. அழகு மிக்க சொற்பொழிவுகளைவிட ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த பாட்டுக்களின் வலிமையை அன்று மக்கள் கண்டனர்.

* * *

1931ம் ஆண்டு ராஜேன்பாபு ராஷ்டிரபதி என்கிற முறையில் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். அச்சமயம் சென்னை 'ஜெய பாரதி' தின இதழின் விசேஷ நிருபராக பாபுஜியுடன் சென்று வந்தேன். தமிழ் நாடெங்கும் கறுப்புக் கொடியினர் அவரைத் தொடர்ந்து சென்று 'ராஜேன்பாபு திரும்பிப்போ' என கோஷமிட்டு வந்தனர். பொறுமையே பூஷணமான ராஜேன்பாபு பொறுத்துக் கொண்டுவந்தார். திருச்சியில் கருப்புப் படை பெருகி, அவர்கள் குரலொலியும் வலுத்திருந்தது. டவுன் ஹால் மைதானத்தில் இந்த எதிர்ப்புக் கோஷத்தைக் கண்டு ராஜேன்பாபு சற்று கலங்கி விட்டார். ஆனால் உடனே நிதானமடைந்து, அவரது சக்தியையும் மீறிய உரத்த குரலில் "என்னைத் திரும்பிப்போ! திரும்பிப்போ' என நண்பர்கள் கோஷமிடுகின்றனர். நான் எங்கே திரும்பிப் போவது? இந்த நாடு பூராவும் எனது தாய்த்திரு நாடாயிற்றே" என்றார். கருப்புப் பக்தர்களின் கல் மனமும் கரைந்து அமைதி நிலவியது. பாபுவும் தனது கொள்கைகள்பற்றி நிதானமாகப் பேசினார்.

* * *

காந்தியடிகள் தமிழ் நாட்டுச் சுற்றுப்பிரயாணமொன்றில் திருச்சி வந்தார். மணிக்கூண்டுக் கெதிரில் அடிகள் பிரசங்கத்திற்கான தனிப்பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அந்தத் தடவை எங்கும் ஏராளமான கூட்டம் கூடிக் கட்டுப்பாடின்றி மகாத்மா தரிசனத்திற்காக அடிகளை வளைத்துக் கொண்டதால் அவருக்கு அலுப்பும் சோர்வும் ஏற்பட்டு அவர் சொல்ல விரும்பியதை ஒழுங்காக எடுத்துக்கூற முடியாமல் போய்விட்டது. இந்த நிலையில் அண்ணல் திருச்சி வந்துசேர்ந்ததும் பத்திரிகை நிருபர்கள் வளைத்துக்கொண்டு விட்டனர். 'ஜனங்களின் கட்டுப்பாடற்ற அன்பை சமாளிக்கும் வகையறியேன்' என்பதை எடுத்துரைப்பதற்காக 'I am at the end of my resources' எனக் கூறினார். நிருபர்கள் இதை அப்படியே நாடெங்கும் பரப்பி விட்டனர். இதை மக்கள் அடிகளின் உடல் நிலை மோசமாகி விட்டதாகக் கருதி கவலை தோய்ந்த தந்திகள் அனுப்பிய வண்ணமிருந்தனர். பின்னர் தமது நிலையை விளக்கியதும்தான் மக்கள் நிம்மதி பெற்றனர்.

* * *

சுதந்திரம் வேண்டினோம். சுதந்திரம் அடைந்து விட்டோம். ஒரு லட்சியத்திற்காகப் பாடுபடுகையில் உள்ள இன்ப உணர்ச்சி அந்த லட்சியம் கைகூடியதும் இருப்பதில்லை என ஒரு மேநாட்டு ஆசிரியர் கூறியது முற்றிலும் உண்மை என்றுதான் தோன்றுகிறது.

"தீபாவளி எக்ஸ்பிரஸ்"

லால்குடி கிருஷ்ணமூர்த்தி

"ராமு.......!"

"............!"

"ராமு ஊ....ஊ....!

"............!"

"ற்........ற்...................ரூமூ!"

அழைப்பு சாந்தாவின் பற்களில் நன்ருகக்கடிபட்டு வெளிவந்தது.

"ஏனக்கா?" கொட்டாவியும் வாயுமாக வந்தான் தம்பி ராமு.

"கடியாரத்தைப் பார்த்தாயா?"

"ஏன்?"

"மணி 3–ன் பதாகப் போகிறதே!"

"ஆமாம்! இன்னும் கொஞ்ச நேரம் கழிந்தால் பத்துகூட ஆகும்!"

"அப்புறம் பதினென்ருகும்....! பன்னிரெண்டும் ஆகும்!"

"ஆமாம்! யார் இல்லையென்ருர்கள்!"

"பிறகு விடிந்து கூடப்போகும்!"

"அதற்கு என்னை என்ன செய்யச்சொல்கிருய் சாந்தா?"

"அம்மா உன்னிடம் என்ன சொல்லியிருக்கிருள்?"

"என்ன சொன்ஞள்? நினைவில்லையே!"

"ரயில்வே ஸ்டேஷனுக்கு போய்வரச் சொன்ஞளே....!"

"ஒஹோ! அதுவா....!"

"அதுவேதான்! நீ இன்னும் இங்கேயே சுற்றிக் கொண்டிரு.......!"

"பத்தரை மணிக்குத்தானே ரயில் வரும். அதற்கு இப்பொழுதே என்ன?"

"நீ ஆடி அசைந்து ஸ்டேஷன் போய்ச் சேருவதற்குள் பத்தரையும் ஆகும் பதினென்றும் ஆகிவிடுமே!"

"ஆமாம்! அப்படித்தான் ஆகும். வேண்டுமென்ருல் நீயே ஸ்டேஷனுக்குப் போய்........!"

சாந்தாவுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்து விட்டது.

"அம்மா! இந்த ராமுவைப் பாரம்மா....!" என்று செல்லமாக அழுது கொண்டே தன் தாயை அழைத்தாள்.

"ஏண்டா ராமு! அவளோடு என்னடா வம்பு....!" என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள் தாய் பார்வதி.

"நான் பேசாமல் தானம்மா இருந்தேன்! இவள் தான்.... என்னை வம்புக்கிழுக்கிருள்....!" என்ருன் ராமு.

"வம்புக்கா இழுத்தேன்! நீ அவனை ஸ்டேஷனுக்குப் போகச் சொல்லியிருந்தாயே என்று, அவனுக்கு நினைப் பூட்டினேன்! அதற்கு........!" சாந்தாவின் குரலில் அழுகை, ஆனந்தம் வெட்கம் எல்லாமே கலந்திருந்தது.

"பத்தரை மணிக்கு வரப்போகும் எக்ஸ்பிரஸ்ஸுக்கு, இப்பொழுதே என்னை ஸ்டேஷனுக்கு விரட்டுகிருள் அம்மா!"

"அம்மா! இவன் வந்து....என்னையே ஸ்டேஷனுக்குப் போடி! என்று சொல்கிருனம்மா!"

"நான் போவதற்குள் பொழுது விடிந்து விடுமாம்!"

"சீக்கிரமாகப்போடா என்ருல்,....மெள்ள ஊர்ந்து தான் போவானும்....!"

"சரி! போதும் சண்டை! ராமு நீ ஸ்டேஷனுக்குப்போய் மாப்பிள்ளையை அழைத்து வாடா!" என்று பார்வதி அம்மாள் குறுக்கிட்டு அவர்களின் வாக்கு வாதத்திற்கு முற்றுப் புள்ளிவைத்தாள்.

சாந்தா ஏளனமாகத் தன் தம்பியை பார்த்துக் கொண்டே ஒரு வெற்றிச் சிரிப்பை உதிர்த்துவிட்டு உள்ளே சென்ருள்.

"அவர் வரட்டும் வேணுமென்றே நேரம் கழித்துக் கூட்டிக்கொண்டு வருகிறேன்!" என்று கருவிக்கொண்டே நடந்தான் ராமு.

* * *

சாந்தாவுக்குத் தலை தீபாவளி. சென்ற ஆனியில் தான் அவள் கழுத்தில் ஒரு தாலியைக்கட்டிவிட்டு, இந்த ஆண்டு தீபாவளியை அவளுக்குத் தலை தீபாவளியாக்கிவிட்டு, ஏன்? தனக்கும் ஆக்கிக்கொண்டு, எழும்பூர் ரயில் நிலையத்தில் எண்ணாற்ற பிரயாணிகளுக்கும், தீபாவளிக் கதாநாயக நாயகியர்களுக்கும், டிக்கட் அடித்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் தான் புக்கிங் கிளார்க் புஷ்பநாதன்.

தீபாவளிக்கு இரண்டு மாதங்களிருக்கும் பொழுதே சாந்தாவின் அற்புதக் காதல் கடிதங்கள் திருவாளர் புஷ்பநாதனையும், தலை தீபாவளியையும் வரவேற்கத் தொடங்கி

விட்டன. புஷ்பநாதனும் முன்னேற்பாடாகத் தன் மேலதிகாரிகளுக்கு:— தான் தலை தீபாவளிக்குத் 'திண்டிவனம்' போகவேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டு, அதற்கு குறைந்தது ஒரு வாரமாவது விடுமுறை வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தான்.

ஆனல்! அதே ஸ்டேஷனில் வேலை செய்து கொண்டிருக்கும் ஒரு அரை டஜன் புக்கிங் கிளார்க்குகளுக்கும் இது தலை தீபாவளியாக இருக்கப்போகிறது என்று அவன் கண்டானு!

சாந்தாவுக்கு அவன் எழுதிய முதல் கடிதத்தில் தீபாவளிக்கு நான்கு நாட்கள் முன்னதாகவே வந்து விடுகிறேன் என்று எழுதியிருந்தான்.

இரண்டு நாட்களுக்குப்பிறகு வந்த கடிதத்தில்:— 'லீவு கிடைப்பது கஷ்டமாயிருக்குமென்று தோன்றுகிறது....இருந்தாலும் தீபாவளிக்கு இரண்டு நாட்கள் என்கையில், ஓடி வந்து விடுகிறேன்' என்று கண்டிருந்தது.

அதன் பிறகு அவன் எழுதிய கடிதத்தில்:—'பண்டிகைக்கு முதல் நாள் மதியம் எப்படியாவது வந்துவிடுகிறேன்' என்று ஒரு குறை அழுதிருந்தான்.

கடைசியாக இன்று காலை அவன் அனுப்பிய தந்தியில் "இரவு எழுமணிக்கு எழும்பூரிலிருந்து கிளம்பும் 'திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்ஸில்' புறப்பட்டு பத்து மணிக்கெல்லாம் திண்டிவனம் சேருவதாய்"க் கதறியிருந்தான்.

"பாழாய்ப்போன ரயில் உத்தியோகமே இப்படித்தான் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும். வருடத்திற்கு ஒரு நாள் ஏன்! வாழ்க்கையிலேயே ஒரே ஒரு நாள்தானே தலை தீபாவளி! இதற்கு இப்படி லீவு கொடுக்கமாட்டேனென்று பழிவாங்குகிறார்களே!' என்று தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டி வாய்வலிக்க யாரையோ வைதாள் சாந்தா.

'ஏற்கனவே இந்த தீபாவளி ஆடி அசைந்துகொண்டு வருகிறது. ஐப்பசி மாதத்து அமாவாசையில்தான் தீபாவளிப் பண்டிகை கொண்டாடவேண்டும் எதற்காக வைத்திருக்கிறார்கள்? புரட்டாசியிலேயே கொண்டாடினால் என்ன! அப்பப்பா! ஒவ்வொரு நாளும் எத்தனை மெதுவாக நகருகிறது. இருபத்துநாலு மணிநேரத்தை இருநூற்று நாற்பது மணிநேரமாக்கிக்கொண்டு நாட்கள் இப்படித் தயங்கி நின்று விடுகின்றனவே! போகட்டும்! தீபாவளிதான் இத்தனை தாமதமாக வருகிறதே; இதற்கு இரண்டு நாட்கள் தாராளமாக லீவு கொடுத்து அவரை அனுப்பி வைக்கப்படாதோ?' என்று அங்கலாய்த்தது அவள் மனது.

யாரோ இந்த தீபாவளியை வேணுமென்றே தள்ளி வைத்து, அவளுடைய கணவனுக்கும் விடுமுறை தராமல் வம்பு செய்து கொண்டிருப்பதாக அவள் நினைப்பு.

சாந்தாவுக்கு மட்டும்தானு இப்படி! இன்னும் எத்தனையோ தலை தீபாவளிக் கதா நாயக நாயகியர்களுக்கும், இந்த தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாதத்து அமாவாசைக்காக காத்துக்கொண்டிருப்பது பொறுக்கவில்லைதான்! என்ன செய்வது? தீபாவளி தீபாவளியன்றுதானே வரும்.

எப்படியோ சாந்தா உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தீபாவளியை நெருங்கி விட்டாள். விடிந்தால் தீபாவளி. இரவு பத்தரை மணிக்கெல்லாம் அவர் வந்து விடுவார்.

"டங்......!"

கடிகாரம் மணி ஒன்பதரை என்பதை உணர்த்திற்று.

ராமு இந்நேரம் ஸ்டேஷனுக்குப் போயிருப்பான். சற்றைக்கெல்லாம் எக்ஸ்பிரஸ் வந்துவிடும். என்ன இருந்தாலும் அவர் வீடு வந்து சேர குறைந்தது ஒரு மணி நேரமாவது பிடிக்குமே!

ஒரு மணியென்றால் லேசா? அறுபது நிமிஷம்! 60×60 செகண்டுகள். அப்பப்பா! இன்னும் மூவாயிரத்து அறுநூறு விநாடிகள். இந்த இரண்டு மாதங்களாக அவரைக் காணக் காத்திருந்ததுகூட அத்தனை பிரமாதமாகத் தோன்றவில்லை! ஆனல்! இந்த ஒரு மணி நேரத்தைக் கடப்பது பெரிய பாடாக இருக்கும் போலிருக்கிறதே!

ஐயோ! ஏன் என் நெஞ்சு இப்படி விண் விண்ணென்று தெரிக்கின்றது? சே! பாழும் கடிகாரமுள் இப்படி நின்றஇடத்திலேயே நின்றுகொண்டு சதி செய்ய வேண்டாம்!

தம்பியை ஸ்டேஷனுக்கு அனுப்பிய பிறகு சாந்தா, தன் அறைக்குச் சென்றாள். போகும்பொழுதே கூடத்திலிருந்த நிலைக்கண்ணாடியில் தன் வலதுபுற அழகை ஜாடையாக கவனித்துக்கொண்டே, முதுகில் தொங்கும் பின்னலை எடுத்து முன்புறமாக புரள விட்டுக்கொண்டாள்.

தலைப் பின்னல் முன்புறம் ஊசலாடுவது எடுப்பாயிருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும் —போலிருந்தது. அறை வாயிற்படியில் காலை வைத்தவள், மறுபடியும் கண்ணாடியின் முன்வந்து நின்றாள்.

கண்ணாடியில் தன் அழகை தானே பார்த்து ரசித்துக்கொண்டு, ஒரு புன்சிரிப்பை முகத்தில் நெளியவிட்டுக் கொண்டாள்.

வெற்றிலை போட்டுக்கொண்டதனால், பற்களில் சிறிது காவி படிந்தாற்போலிருந்தது. அவ்வளவுதான்! உடனே கிணற்றடிக்கு ஓடி பற்பொடி டப்பியை எடுத்துக்கொண்டாள்.

அந்த இரவில் பற்கள் கதறக்கதற அழுத்தித்தேய்க்க வாரம்பித்து விட்டாள் சாந்தா.

தன் மகளின் இந்த அலங்கார சேஷ்டைகளைக் கண்ட தாய் பார்வதி அம்மாளுக்கு சிரிப்புத் தாங்கவில்லை; தனக்குத் தானே சிரித்துக்கொண்டாள். அவளுக்கும் பழய இன்ப நினைவுகள். இருபத்திஐந்து ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற அவளுடைய தலை தீபாவளியையும், அன்று அவள் அனுபவித்த இன்பத் தவிப்புகளையும் நினைவு தூண்டி விட்டிருக்கவேண்டும்.

பற்களைத் தேய்த்த பிறகு, கையோடு கையாக ஒரு அரைக்கட்டி சோப்பையும் கரைத்து முகத்தைக் கழுவிக் கொண்டுதான் சாந்தா தன் அறைக்குத் திரும்பினாள்.

அதன் பிறகு ஒரு அரை மணிநேரம் பவுடர் டப்பாவும், குஞ்சமும், பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

முகத்தைக் கழுவிக்கொண்டபோது, சோளியில் சிறிது தண்ணீர் பட்டுவிட்டது. சோளியை மாற்றி வேறு போட்டுக்கொள்வோமா? வேண்டாமா? என்ற பிரச்னை எழுந்தது! சரி! எதற்கும் வேறு சோளியே போட்டுக் கொண்டுவிடுவோம் என்று தீர்மானித்தவளாய் அலமாரியைத் திறந்தாள் சாந்தா!

இன்னும் ஒரு அரை மணி நகர்ந்தது. அலங்காரம் முடிந்து அறையை விட்டு அவள் வெளியே வரும்பொழுது மணி பத்தரைக்கு மேலாகிவிட்டது.

மாடியில், அவளுடைய தந்தையின் குறட்டைச் சப்தம் காதைக் குடைந்தது. பார்வதி அம்மாளும் படுக்கையில் சாய்ந்துவிட்டாள் என்பதற்கடையாளமாக சமையலறை விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன.

இது என்ன? அவர் வரும் சமயமாகி விட்டது. இப்படி அம்மாவும் அப்பாவும் தூங்கிக்கொண்டிருக்கிறார்களே! அவர் வந்தால் யார் ஓடி வரவேற்பது? என்று வினவிக் கொண்டே கடைசி முறையாகத் தன் முழு அழகையும் நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொண்டு தன் அறைக்கு வந்தாள் சாந்தா.

ரயில் இந்நேரம் ஸ்டேஷனுக்கு வந்திருக்கும். ராமு அவரைப் பார்த்திருப்பான். ரயிலைவிட்டு அவர் இறங்குவார். …………இப்போ…………இருவரும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்திருப்பார்கள். வண்டிக்காரன் பெட்டி படுக்கைகளை வண்டிக்குள் வைப்பான்…………முதலில் அவர் வண்டியில் ஏறுவார். ராமுவும் ஏறிக்கொள்வான். அவ்வளவு தான்!…….ஜல்ஜல் என்று வண்டி பறக்கும்.

மாட்டுவண்டியில் அழைத்துக்கொண்டு வருகிறானோ, அல்லது குதிரை வண்டியில் வருகிறானோ? ராமு ஒரு அசமந்தம். அவசரமே தெரியாதவன். அந்த மண்டு மாட்டு வண்டியை அமர்த்தியிருந்தால்…………!……..வீட்டிற்கு வர அரைமணிக்கு மேலே ஆகுமே! ஜட்காவாக விருந்தால் பத்து நிமிஷத்தில் வந்துவிடலாம்.

பகவானே! அவர்கள் ஜட்காவிலேயே வரவேண்டும்.

"டங்! டங்! டங்! டங்!………!

மணி பதினொன்று!

கையில் ஒரு தீபாவளி மலரை வைத்துப் படித்துக் கொண்டே படுக்கையில் நெளிந்துகொண்டிருந்த சாந்தா, திடுக்கிட்டு எழுந்தாள். சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். சந்தேகமில்லை மணி பதினொன்றுதான்!

இன்னும் ஏன் வரவில்லை? ஒருவேளை ரயில் நேரம் கழித்து வருகிறதோ? ஏன் இன்னும் காணோம்?

ஒரு வேளை……! அவர் வரவே இல்லையோ? சே! அப்படி இருக்காது! காலையில்தானே தந்தி வந்தது. கட்டாயம் வருகிறேனென்று. இந்த அசடு ராமு, ஸ்டேஷனுக்குப்போய் எங்கேயாவது ஒரு மூலையில் படுத்து தூங்கிவிட்டிருப்பானோ? நல்ல தூங்கு மூஞ்சியைப்பார்த்து அனுப்பினார்கள். அப்பாவே போய் அவரை அழைத்து வந்திருக்கக் கூடாதோ!

அழைக்க யாருமே ஸ்டேஷனுக்கு வரவில்லையென்று கோபித்துக்கொண்டு அடுத்த வண்டியிலேயே திரும்பி எழும்பூருக்குப் போய்விட்டால் என்ன செய்வது? ஹூம்! என்னைப் பார்க்காமல் அவரால் போய்விட முடியுமா! ஒருவேளை அப்படி நேர்ந்து விட்டால்?

அம்பிகே! ராமுவைத் தூங்கவிடாமல் பார்த்துக் கொள் தாயே! எனக்கே தூக்கம் கண்ணைச் சுழற்றுகிறது………! ராமு சின்னக் குழந்தை! அவனால் தூக்கம் விழிக்க முடியுமா….!

:: :: ::

"அம்மா! அம்மா!"

ராமுவின் குரல்தான் அது. அதோ வாயிற்கதவை யாரோ திறக்கும் சப்தம் கூடக் கேட்கிறது. அடடா! இத்தனை நேரம் கோட்டானைப்போல் விழித்துக்கொண்டேயிருந்துவிட்டு அவர் வரும் நேரத்தில் நன்றாகத் தூங்கி விட்டேன் போலிருக்கிறது.

"என்னடா ராமு! நீ மட்டும் வருகிறாய்?"

அம்மாவின் குரல்தான் இது.

"………!"

"என்ன இது? பதிலைக் காணோமே" அவர் வரவில்லையா?" சாந்தா வாரிச்சுருட்டிக்கொண்டு வாயிலுக்கு ஓடினாள்.

"என்னடா முழிக்கிறே ராமு?" பார்வதியம்மாளின் குரலில் தாங்கமுடியாத வேதனையும் கடுமையும் கலந்திருந்தது. ராமு தலையை மட்டும் அசைத்தான்.

"ஏன்டா மாப்பிள்ளை வரவில்லையா" என்று கேட்டுக்கொண்டே மாடியிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தார் தந்தை.

"நாலு எக்ஸ்பிரஸ்ஸுகளையும் பார்த்துவிட்டுத்தானப்பா வருகிறேன்! …. அவர் வரக்காணோம்!"

"போகும்பொழுதே அழுகையுடன் போனான்! விடியா மூஞ்சி!" என்று குமுறினாள் சாந்தா.

ராமு ஒன்றும் பேசவில்லை. தலையைத் தொங்க விட்டுக் கொண்டான்.

சாந்தா அழுதுகொண்டே தன் அறைக்குச் சென்று படுக்கையில் அலங்கோலமாக விழுந்தாள்.

அவள் தாயும் தகப்பனும் ராமுவை என்னவோ குறைகூறிக் கொண்டிருந்தார்கள்.

முகத்தைத் தலையணையில் புதைத்துக்கொண்டு விம்மினாள்-சாந்தா.

அவர் ஏன் வரவில்லை ? ஐயோ ஏன் வரவில்லை அவர் ? ஏன் ?..........ஏன் ??

எத்தனையோ கோடித்துக் கோடித்து வைத்திருந்தேனே! வந்தால் அவரோடு முதலில் இப்படிப் பேசவேண்டும், அப்படிச் சிரிக்கவேண்டும். அதோடு நான்கு நாட்களுக்கு முன்னதாகவே வருகிறேனென்று முதலில் கடிதம் எழுதிவிட்டு அப்படி வராததற்காக சிறிது பொய்க்கோபம் கொள்ளவேண்டும்.......அதை அவர் நிஜமென்று நம்பி, என்னை சமாதானப்படுத்த என் தாடையைப் பிடித்துக் கொஞ்சலுடன் கெஞ்சுவார். நான் சிரித்தும் சிரிக்காமலும் ஒரு மோகனப் பார்வையை அவர் மேல் பாய்ச்சி மயக்குவேன்! அவ்வளவுதான்....!....உடனே அவர் என்னை அப்படியே வாரி அணைத்துக்கொள்வார்!

நான் வெட்கம் தாங்காமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொள்வேன்......பிறகு.....?அவருடைய பட்டுக் கரங்கள் என் கன்னத்தைவருடி மெதுவாகஎன் முகத்தைத் திருப்பிக் கொள்ளும். கவிழ்ந்த என் தலையை கொஞ்சம் கொஞ்சமாக மேலே உயர்த்துவார். நாணத்தால் நான் கண்களை இறுக மூடிக்கொண்டு விடுவேன்......அதன் பிறகு?

அவருடைய முகம் என் முகத்தின் அருகே நெருங்கி நெருங்கி வருவதை அவருடைய சுவாசம் என் முகத்தில் படுவதால் உணர்ந்து கொள்வேன். மெள்ள! மெள்ள! அவருடைய ஸ்பரிசம் என் முகத்தில் எங்கெல்லாமோபட்டு கிளுகிளுக்கவைக்கும். ....அப்புறம்? அப்புறம்?!

ஐயோ எல்லாம் பாழாகி விட்டதே! எல்லாம் கனவாகி வெறும கற்பனையோடு நின்று விட்டதே!

∴ ∴ ∴ ∴ ∴

"சாந்தா! சாந்தா!

"யார் அழைக்கிறார்கள்? குரல் அவருடையதைப் போலல்லவா இருக்கிறது! காதுகளுக்கருகில் இத்தனை மெதுவாக இவ்வளவு ரகசியமாக........இனிமையாக! அவர் தானே என்னை அழைப்பார்!

நெற்றியில் கூட யாருடைய கையின் ஸ்பரிசமோபட்டு தலைமயிரைக் கோதி விடுவது போல் தோன்றுகிறது.

அட! இது என்ன? முகத்தில் கவிழ்ந்து கொண்டு யாரோ சுவாசம் விடுகிறார்களே! ஆஹா! எத்தனை இதமாக இருக்கிறது. கன்னங்களில் வடிந்திருக்கும் கண்ணீரைத் துடைத்துவிட்டு......ஐயோ! இதென்ன அநியாயம்! முகத்தைத்தடாலென்று திருப்பி இதழ்களில்........?

டபார்! பட்! படார்! பட்! பட்! பட்டாசுகளின் வெடிச் சப்தம் காதைப் பிளந்தது.

∴ ∴ ∴ ∴ ∴

சாந்தா திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அவளுடைய கனவு கலைந்தது. ஆனால்! மறுபடியும் ஒரு கனவு! ஆமாம் எது கனவு? எது நினைவு?

"ஹா! இது யார்? நம்பவே முடியவில்லையே!"

வரவில்லையென்று ராமு சொன்னானே! எப்படி வந்தார்? நான்கு எக்ஸ்பிரஸ்ஸுகளும் போன பிறகு மறுநாள் காலையில்தானே வண்டி. இப்பொழுது எப்படி இவரால் வர முடிந்தது?

"என்ன சாந்தா! இன்னும் தூக்கம் கலைய வில்லையா? என்னை வரச் சொல்லிவிட்டு இப்படித் தூங்கி கனவு கண்டு கொண்டிருக்கிறாயே?"

"கனவு கண்டு கொண்டிருந்தேனா? ஆமாம்! எது கனவு? இதுவரை கண்டு கொண்டிருந்ததா! இப்பொழுது காண்பதா? அல்லது இடையில் இன்பமாக இடறியதே அதுவா?"

சாந்தா மெதுவாக உணர்வு பெற்றுக்கொண்டிருந்தாள்.

"அரை மணி நேரமாய் இங்கே நின்று கொண்டிருக்கிறேன். உன் கண்ணீரைத் துடைத்தேன். தலைமயிரைக் கோதிவிட்டேன். முகத்தின் அருகில் குனிந்து சாந்தா! சாந்தா! என்று அழைத்துப் பார்த்தேன்! எதற்கும் நீ அசைய வில்லை! பிறகு உன் இதழ்களில்.......!அதற்கும் நீ விழிக்கவில்லை! கடைசியாக உன் தம்பி கொளுத்திப்போட்ட பட்டாசுகள் வெடித்த பிறகுதான் விழித்துக்கொண்டாய்!" என்றான் புஷ்பநாதன்.

வெட்கமும் இன்பமும் பிடுங்கித்தின்ன, அவசரம் அவசரமாக படுக்கையிலிருந்து எழுந்தாள் சாந்தா!

"எக்ஸ்பிரஸ் சிறிது நேரம் கழித்து வந்ததற்காக இப்படிக் கண்ணீர் விடலாமா?" என்று தேற்றினான் புஷ்பநாதன்.

"தீபாவளி எக்ஸ்பிரஸ் இன்றைக்கு நூற்றி இருபது நிமிடங்கள் தாமதமாக வந்ததப்பா!" என்று தந்தையிடம் ராமு, மாப்பிள்ளை நேரம் கழித்து வந்ததின் காரணத்தை விளக்கினான் ராமு.


"என்னடா இது! தீபாவளி எக்ஸ்பிரஸ்ஸா?—திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்ஸா?" என்று கேட்டாள் பார்வதியம்மாள்.

"நம்ம சாந்தாவுக்கு இரண்டும் ஒன்றுதானே!" என்றான் போக்கிரி ராமு.

தாயும் தகப்பனும் சிரித்தார்கள்.

சாந்தாவும் புஷ்பநாதனும் அறைக்குள் என்ன செய்கிறார்கள் என்பதைக்காண மத்தாப்புக்குச்சியைக் கொளுத்தி கையில் எடுத்துக்கொண்டு ஜன்னல் பக்கம் போனான் ராமு.

ஆனால்! அங்கே! முன் ஜாக்கிரதையுடன், ஜன்னற்கதவுகள் நன்றாக மூடப்பட்டிருந்தன!



கோஷங்கள்

நெரூர் சிவசுப்ரமண்யம்

இது கோஷங்கள்யுகம். அவை பல. 'முன்னேற்றம்' ஒரு மூலமந்திரம். அதன் நாமாவளிகள் பல. அபிவிருத்தி, பொருளாக்கம், உற்பத்திப்பெருக்கு முதலியன ஒரு புறம். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் முதலியன ஒரு புறம். விஞ்ஞான வளர்ச்சி, மக்களின் சக்தியை விரிப்பதாகக் காட்டி, மனிதனின் அகந்தையைப் பெருக்கி விட்டுள்ளது. அவன் எதையும் செய்யக்கூடும் என்ற நம்பிக்கையை அவனுக்கு ஊட்டி வளர்க்கின்றது. மனிதன் மயக்கங் கொண்டாற்போன்று புது உலகை நிறுவ முற்பட்டு நிற்கின்றான். அம்முயற்சியில் எளிதாகவும் முதலாகவும் அவன் செய்யக் கூடுவது கோஷங்களைக் கிளப்புவதேயாகும். அதை இன்று மனிதன் நிறைந்து செய்கின்றான். அதுவே முன்னேற்றமாயின் மனிதன் அதை அடைந்து விட்டான் என்று நிச்சயமாகக் கொள்ளலாம்.

தண்ணீர் என்றால் தாகம் தணியாது, இனிய உணவென்றாலும், அமிர்தம் என்றாலும் பசியாறுவதில்லை. அவைகளைப் பெற்று துய்ப்பதினால் பெறும் அனுபவத்தை, சொற்களைக்கேட்பதால்—அவைகளின் நாமோச்சாரணத்தால்—மனிதன் பெறுவதில்லை. அச்சொற்களைக்கேட்பதால் அவைகளைப்பெற ஆர்வம் பெருகுவதும், துடிதுடிப்பு உண்டாவதுமன்றி பயனில்லை. இவை எளிய சொற்கள், ஆயினும் தாகமுள்ளவனையும், பசியால் வாடுபவனையும் கலக்கிவிட சக்தி பெற்றவை. 'முன்னேற்றம்' என்ற கோஷம் எப்பொழுதும் விரிபொருளில் நின்று கானல் நீராய் நிற்பதொன்று. அதற்கு தெற்றன பொருள் விளக்கம் குறிப்பது எளிதில் கூடுவதின்று. அவரவர் தம் இஷ்டப்படி அதை திரித்தும் விரித்தும் பொருள் கொள்ளலாம். பல பகுதிகளுள்ள மனித வாழ்க்கையை அது முற்றுமாகவும் குறிக்கலாம். ஒரு பகுதியை மட்டும் குறிக்கவும் செய்யலாம். இன்று உலகில் தோன்றி, உயிர் நீத்தல் வரையுள்ளதே வாழ்வு என்றும், உடலுடன் நிகழ்கின்ற அச்சிறு காலத்து மனிதன் உடல் தேவைகளை மிக்கும் பெறுவதும் அவைகளைத் துய்ப்பதுமே முன்னேற்றமென்றும் கொள்ளப் படுவதைக் காண்கின்றோம். அதனாலேதான் பொருளாக்கம், உற்பத்திப்பெருக்கு என்ற நோக்கம் மனிதனை யாட்டிவைக்கின்றது. இவை மனிதனின் மிருக உடலிலிருப்பவை. அதனின் உயர்ந்த இலட்சியங்களும் வேண்டுமென்ற ஆர்வத்துடன் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோஷங்களும் கிளப்பப்படுகின்றன. ஆயின் இவை குறிப்பவை யாவை, இவைகளை மனிதன் பெற எவ்வழியில் முயலுதல் வேண்டுமென்ற ஆழ்ந்த சிந்தனை சிற்றளவிலே நின்று விடுகின்றது.

இச்சொற்கள் பிழைபட்டவையன்று, அவை நல்ல கோஷங்களாகவும் இருக்கலாம். ஆயின் வாழ்வு, உயர் வாழ்க்கை, நிறைவு இவை யாவையென மனிதன் ஆராய்ச்சியால் துணிந்தாலன்றி இவை சரியான வழியில் நம்மை ஊக்கா. ஆன்றவிந்தடங்கிய கொள்கைகளை விளக்க இவை பயன்படும் வரை அவை நன்மையினும் தீமையையே அதிகம் விளைக்கவும் செய்யலாம். அவிந்தடங்கும் நிலை, மனிதனின் பெருமிதமும் அகந்தையும் நீங்கி அவன், தனக்கு விளங்காவிடினும் உலகை முறைபடுத்தும் ஒரு பெரு நியதியை ஏற்று அதற்குத் தலை சாய்க்காதவரை உண்டாவதில்லை. அதனாலேதான் கோஷங்கள், கோஷமிடுபவர்களை ஒட்டியே பொருளும் சிறப்பும் பெறுகின்றன. இன்றைய கோஷங்கள் ஒலியளவில் நின்று விடுவதற்குக் காரணம் கோஷமிடுபவர்களின் தன்மையாலாவது என்றும் முடித்து விடலாம். ஆன்றவிந்தடங்கிய பெரியோர்கள் இத்தகையவரன்று. அவர்கள் கோஷங்களை கிளப்புவதைவிட்டு சிந்தனையைத் தூண்டும் போதங்களைத் தருகின்றார்கள். ஆயின் அவர்கள் அவசரத்தைப் புறத்திடவும் எப்பகுதியையும் மிகைப்படுத்தவும் செய்வதில்லை. அவை மென்மையாக அமைவதால், சிலரையே பற்றுகின்றன, ஆயின் அவை படிப்படியாய் வளர்ந்தெழ, இன்றைய வல்லிய கோஷங்கள் புயற்காற்றைப் போன்று வீசியடித்து ஓய்ந்து பயனற்றுப் போகின்றன. அவைகளின் விளைவு, அழிவும், சேதமுமாகலாம். ஒரு காலவரையறைக்கு புயற்காற்றின் தூசி போன்று, அழிவைக் கணக்கிட முடியாதபடியும் செய்யலாம். ஆயின் அழிவும் குறைவுமன்றி, ஆக்கமும் நிறைவும் உண்டாவதில்லை.

சிந்தனையின் பயனாயபோதம் நிலையாய அடிப்படைகளின் மேலமர, தற்காலிக கோஷங்கள், சிந்தனையாலன்றி, உணர்ச்சியால் மனிதனைப்பற்றியலைக்க முற்படுகின்றன. கோஷத்தை ஒருவர் கிளப்ப, அதன் பொருளை உணராமலே பிறரும் அதை வன்மையுடன் பிதற்றுபவராக நின்று விடுகின்றார்கள். கோஷம் குறிப்பதை செயலன்றி வீண் கோஷம் சாதித்துவிடுவதில்லை என்பதையும் உணர்வதில்லை. வாய்ச்சொல்லில் வீரராய், கோஷத்தால் மாங்கனியை வீழ்த்த அவர்கள் செய்யும் முயற்சி நிலையை மோசமாக்குவதை, ஒரேயொரு கோஷத்தை ஆராய்ந்தாலும் தெளிந்து கொள்ளலாம். 'பொருளாக்கம்' எது பொருள்? அது எவ்வளவிற்கு வேண்டும்? அதைப் பெறுவதெப்படி? அதைப் பெறவும் விநியோகிக்கவும் தனி மனிதன் சமுதாயத்துடன் பொருந்துவதெப்படி? பலர் கூடுவதால் அமையும் சமுதாயம் அனைவரும் நிறைவாக வாழ பொருளாக்கம் பெறுவதெப்படி? என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைக்கும் பொழுதே பொருளாக்கத்தின் நிறை பொருளும் கிட்டும். பொருளாக்கத்திற்கு நேர்மாறான வறுமையை ஏன் ஆன்றோர் போற்றியுள்ளார்கள்? ஒட்டகம் ஊசிக்கண் வழிசெல்லினும் பணம்படைத்தோன் வானுலகு எய்துவது கடினம் என இயேசுநாதர் சொல்வானேன்? வாழ்வாவது மாயம் என்று சொன்னவர் அறிவிலியன்று. பொருள் சிறு பொழுது வாழ்விற்கு உதவுவதென்றே கொள்ளினும், மாயமாகும் அவ்வாழ்விற்காக, மனிதனின் சிறப்புடைமைகளை விட்டும் பொருளாக்கம் தேட முற்பட்டால் தன்னை

இழந்தவனாகி விடுகின்றான். அப்பொழுது கண்ணை விற்று சித்திரம் வாங்குபவனாக அவன் அமைவது திண்ணம். இவை போன்ற பல வினாக்களுக்கு இறுதி விடையாக அமரும் பொருளாக்கமே நமக்கு வேண்டுவது. அதையே நாடி நாம் நிற்றல் வேண்டும். கோடிக்கணக்கில் வியாபார இலாபம், பல் கோடிக்கணக்கில் உற்பத்தி இவைகளெல்லாம், வறுமையை இடம் மாற்றவன்றி அதை விரட்டியடிக்க பயனற்றவை. பொருளளவிலன்றி, பணக்கணக்கில் அவைகளைக் குறிப்பதும் ஏமாற்றத்திற்கே வழிவிடுகின்றது. ஒரு ரூபாயிக்கு, நான்கு படி அரிசி விற்கும் பொழுது நாலணா கூலி பெறுபவன், ரூபாயிக்கு ஒரு படி அரிசி விற்கும் பொழுது ஒரு ரூபாய் கூலி பெற்றாலும் வறுமையுடனேயே நின்று விடுகின்றான். பணம் நேரடியாகத்துய்க்கப் படும் பண்டமன்று, பிறதுய்ப்புப்பண்டங்களை வாங்க ஒரு சாதனமாக அமைவதுதான். அதைத் திரித்துக்கொண்டே பொருளாக்கம் பெறுவதாக நாம் விளக்கமிடுவது திப்பறவை முகத்தை மூடிக்கொண்டு தன்னை முழுதும் மறைத்துக்கொள்வதாக எண்ணுவதற்கொப்பாகும்.

அதே போன்று சுதந்திரம் என்ற கோஷம் எவ்வளவோ திரிக்கப்பட்டு நிற்கின்றது. காட்டில் சிங்கம் பசித்தவுடன் எதையும் அடித்துத்தின்ன சுதந்திரம் பெற்றது. முயல் சாகவும் சிங்கம் உண்டு புசிக்கவுமாக உள்ள நிலை சுதந்திர நிலையா? கான் விலங்குகளுக்கு அது சுதந்திர நிலை. அச் சுதந்திரத்தை மனிதனும் கோருவானாயின் அவன் பூண்டோடு மறைந்து போவான். ஒவ்வொருவரும் தம் சுதந்திரத்தை பிறன் சுதந்திரத்துடன் மோத விடாமல் அதைக் கட்டுப்படுத்திக்கொள்வதுவே மனித அறிவின் பயன். மனித அறிவு சுதந்திரததை எவ்வளவிற்குக் கட்டுப்படுத்துகின்றதென்பதை நாம் முற்றிலும் தெரிந்து கொண்டே சுதந்திரத்தை நாடவேண்டும். சுதந்திரம் கட்டுப்பாடற்றதாக எங்கும் நிற்பதில்லை. சுதந்திரத்தை நிலைக்க, எழுந்த கட்டுப்பாடுகள் பலவகை உள்ளன. பிரஞ்சு ஆசிரியர் ரூஸோ, "சுதந்திரனாகப் பிறந்த மனிதன் எங்கும் தளைபட்டு நிற்பதுவே காணக்கிடைக்கின்றது" என்கிறார். சுதந்திர கோஷம் தப்பாக அறியப்படுவதாலேதான் உலகின் பூசல்கள் பெருகி, கட்டுப்பாடுகளும் அதிகரித்துள்ளன. கட்டுப்பாடுகளை அறிந்து தன்னை முழுதுமாக கட்டுப்படுத்திக்கொள்பவன் முற்றும் சுதந்திரம் பெற்றவனாக விளங்க, அஃதற்றோன் சுதந்திரத்தைப் பாராட்டி நின்றாலும், பிறனைக் கட்டுப்படுத்தவே முனைபவனாவன். அவன் அறிவின்மையும் அகந்தையும் அதற்கே இட்டுச்செல்லுகின்றன. உலக சரிதத்தில் சுதந்திரத்தைப் பாராட்டி அதை நிலைக்கத் தொடங்கியவர்கள், இறுதியில் எதேச்சாதிகாரிகளாக மாறி விடுவதை நாம் காண்கின்றோம்.

கோஷங்கள் பயனற்றவை, மக்களை மயக்கவே உதவுபவை. அவை அழகும் கவர்ச்சியுமுள்ளவாயமைகின்றன. ஆகையால் மக்கள் அவைகளையே அதிகமாக கையாளுகின்றார்கள். மக்களைமேய்க்க, தாம் உயர்ந்தெழ விரும்புபவர்களும் அவைகளையே சாதனங்களாகக் கொள்கின்றார்கள். அவை காட்டுத் தீபோன்று நொடியில் பரந்துவிரிவன. ஆயின் அவை மனித சமுதாயத்தை மேம்படுத்தவன்று, தாழ்த்தவே உதவுகின்றன.

நிலையாய மேம்பாட்டை வேண்டுபவர்கள், செயலில் ஈடுபடுபவர்கள். அவர்கள் பிறரையும் செயலில் ஈடுபட அவர்கள் உணர்ச்சியையன்று அவ்ர்கள் சிந்தனையைத் தூண்டுபவர்கள். அவர்கள் ஆடம்பரத்தையும் அவசரத்தையும் வேண்டாது, பணிவுடன் செல்கின்றார்கள். இத்தகைய பணி இன்றைய தான இயக்கம். நில சீர்திருத்தம் என்றால், உழவனுக்கே நிலமென்றால், அவை கவர்ச்சி பெறும் கோஷங்களாக மக்களின் கவனத்தைக் கவர்கின்றன. உள்ளதில் இல்லாதவனுக்காக ஒரு பங்கைக்கொடு என்றால் அது ஏதோ பசையற்ற தர்மோபதேசமாகக் கொள்ளப்படுகின்றது. ஒருவனதை ஒருவன் பற்ற எழும் ஆர்வம், சிங்கத்தின் பசிபோன்றது. ஆயின் மனிதன் அதை அடைவது முறையா? அயலான் பசியை அறியக்கூடிய மனிதன் பிறன் பசியை ஆற்ற தானே ஏதாவது முற்பட்டுச் செய்ய வேண்டுமென்பது பண்டையினின்றுவரும் முறை, நியாயம். இதைத்தான் இன்று விநோபாவடிகள் சொல்லுகின்றார். செயலில்—வாய்ச்சொல்லிலன்றி—அவரவர் தமதமதில் ஒரு பகுதியைக்கொடுக்கச் சொல்லுகின்றார். செயலாற்றச் சொல்கின்றார். பாடன்றோ பொருளைத்தருவது. மந்திரமன்று. உடல் வாழ்க்கை நிறைவைக் கொடுப்பதில்லையென்பதையும், சீலமும் அறமும் பொருந்தும் பொழுதே—அது இன்றைய முன்னேற்றமாக மதிக்கப்படாவிடினும் வாழ்க்கை சிறப்புறும் என்று சொல்கின்றார். அவரது, எளிய சிந்தனையைத் தூண்டும் போதனைகள், கோஷங்கள் பிறர்கையாயுதங்கள்.



"பாரதியின் சொல்"

தம்பி ஸ்ரீநிவாசன்

கடலாழம் கண்டாலும் காண்போம்—இந்தக்
கவி ஆழம் கண்டிட முடியாத ஆழம்!

கண்டாலே இன்பம் பயக்கும்—கவிக்
கடல் ஓசை கேட்டாலும் இன்பமே பொருளை
விண்டிட எண்ணிப் புகுந்தால் — அதில்
மெத்த உண்டே பல முத்துப், பவழம் !
(கடலாழம்)

சின்னக் குழந்தையும் பாடும் — அவன்
சித்திரப் பாடல்கள் அத்தனை எளிதாம்.
வன்னக் கருத்தின் இனிமை — நம்
வாழ்க்கை முழுதும் சுவைத்திட லாமே.
(கடலாழம்)

கீதையின் தத்துவம் காண்போம் — தெய்வக்
கீர்த்தியைப் பாடிப் பரவசம் ஆவோம்
போதை தரும் இன்பக் காதல் — வழி
புகுந்துவிடின் கவி எல்லையைக் காண்போம்.
(கடலாழம்)

" கத்தும் குயில் ஓசை " என்பான் — அந்தக்
'கத்த'லில் எத்தனை தத்துவம் அம்மா !
'சக்தி ஓம் சக்தி' என்றாலோ — சொல்லின்
சக்தி அனைத்தும் அதிலே தொனிக்கும் !
(கடலாழம்)

சொல்லாலே மாளிகை கட்டி — அதில்
தொட்ட அனைத்தையும் பொன்னாகச்
செய்தான்.
பல்லாயிரம் ஆண்டு காலம் — ஞான
பானு எனத் திகழும் அந்தச் சொல்லே.
(கடலாழம்)

வேறு

ஆழ்வார் தம் பக்தி இசை
அமுதக் கடல் குளித்தான்
வாழ்வுக்கு வாழ்வளிக்கும்
மைவண்ணன் புகழ்சொன்னான் !

வேதாந்தத் தத்துவத்தை
விளங்குதமிழ்ச் சொற்களிலே
போதித்தான், நம் மரபை
போஷித்த புலவ னவன்.

பற்றறுத்தான் வெற்றியினை:
பற்றறுத்தான் தோல்வியினை.
பற்றறுக்க வில்லை அவன்
பாரதத்தின் பணியையே !

'வானத்தின் சிறந்த பொருள்
வையத்தில் உண்டு அவை என்
தாய்நிலமும் எனைப் பெற்ற
தாயாரும்' என்றானே.

வேறு

காக்கை குருவியில் ஈசன் திருவுரு
கண்டு மகிழ்ந்தவனும். — தன்
பாக்களினால் இந்த வையம் முழுதுமே
பாலிக்க வந்தவனும்.

மாக்கள் என உணர் வின்றித் தவித்தோரின்
வாழ்வுய்யச் செய்தவனும்.
தேக்கமிலாத கவி சொல்லிச் சொல்லியே
தேவனாய் மாறி விட்டான்.

தியாகம்

விஜயன்

எங்கு பார்த்தாலும் குழந்தைகளின் வெற்றி முரசம்.

பட்......படார்......படார்..........

சப்தம் வான் வெளியைக் கிழித்துக் கொண்டுபாய, புகை எங்கும் பரவியது. காற்றலைகள் தாலாட்ட மேகத்தொட்டிலில் ஆனந்தமாகத் தூங்கிக்கொண்டிருந்த இயற்கையன்னைக்கு விழிப்புத் தட்டியது. புகை மண்டலத்தால் சூழப்பட்ட அவள் விழிகளிலே ஒரு கரிப்பு....நீர் முட்டிக்கொண்டு வந்தது. ஆனால்..........

ஜாய்........ய்.......

பிஞ்சு உள்ளங்களின் மகிழ்ச்சி ஆரவாரம். அவர்களின் மலர்ப்பாதங்கள் தரையில் தாளம் போட்டன.

சொர்.......ர்.......ர்.......

பூமியிலிருந்து கிளம்பிய நட்சத்திரச்சுடர் ஒன்று வானை நோக்கிப் பாய்ந்தது.

"ஹூம்...ம்...."—ஒரு பெருமூச்சு. அதைத் தொடர்ந்து ஒரு கிழட்டு முணுமுணுப்பு.

ஆனந்தக் கடலில் திளைத்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவர்களுக்கு அதையெல்லாம் பற்றிக் கவலை ஏது.......?

∴ ∴ ∴ ∴ ∴

ஒரு ஓட்டு வீடு....அதன் பக்கத்திலே வெட்டுண்ட நீண்ட மரத்துண்டு ஒன்று கிடந்தது. கிராமத்துச் சிறுவர்கள் சிலர் அதன் மீது உதிரிச் சீன வெடிகளைக் காயப் போட்டிருந்தார்கள்.

அங்கே கிடந்த மஞ்சள் நிற சங்குக் காகிதத்திலே திட்டப்பட்டிருந்த சீன அழகி சிரித்துக் கொண்டிருந்தாள். தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு கிடந்த சீன வெடிகள் அவளை ஏக்கம் தோய்ந்த கண்களால் விழுங்கிக்கொண்டிருந்தன. அவைகளின் வருத்தமெல்லாம் தங்கள் மீது சுற்றப்பட்டிருந்த அந்த மஞ்சள்நிற மேலுறை கழற்றி எறியப்பட்டதிலே கூட அல்ல; அந்தச் சீன அழகியின் ஒயிலான முகம் தங்கள் கைக்குக் கிட்டவில்லையே என்பதிலேதான். இந்தக் கற்பனையைப் புரிந்து கொண்ட மரத்துண்டு "களுக்" என்று சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்......?"...வெட்டும் விழிகளால் கட்டெரித்துவிடுவன போலச் சீன வெடிகள் துள்ளிக்கொண்டே கேட்டன.

மரத்துண்டு மேலும் சிரித்தது.

நீங்கள் பிறந்ததெல்லாம் என்னவோ இந்த மண்ணிலே தான். ஆனால்.........."

"என்ன ஆனால்......?"—நறநறக்கும் நெஞ்சோடு சீன வெடிகள் குமுறிக்கொண்டு கேட்டன.

"உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயரை நினைத்துக் கொண்டோ என்னவோ தெரியவில்லை, உங்கள் நாட்டமெல்லாம் வேற்று மண்ணின் அழகை ரசிப்பதிலே தான் சென்று கொண்டிருக்கிறது."— கலகல வென்று சிரித்துக்கொண்டே மரத்துண்டு சொல்லியது. அந்தச் சிரிப்பில் குறும்பு குமுழியிடத்தான் செய்தது.

சிவந்த நெஞ்சை உயர்த்திக்கொண்டு ஒரு சீன வெடி பாய்ந்து வரும் குத்துச் சண்டைக்காரனைப்போல துள்ளிக் கொண்டு முன்னே வந்து நின்றது.

"ஏய்....!"—அதன் குரலிலே ஒரு அதட்டல்........"பழுப்பு நிறத்திலே பாசி ஏறிக் கறுத்துப் போய்க் கிடக்கும்! உன் நிறத்தைக் கண்ணாடியிலே போய்த்தான் பார்க்கவேண்டும்! ஹூம்........! முண்டும் முடிச்சுமாக உள்ள உடம்போடு அநாதையாகக் கிடக்கும் அவலட்சணப் பிண்டமே! நீ யாரைப்பார்த்துப் பேசுகிறாய்........? குழந்தைகளின் தளிர்க் கரங்களிலே கொஞ்சி விளையாடுகிறோம் நாங்கள்.......தெரியுமா? அவர்களின் முகங்களிலே மகிழ்ச்சிப் பூக்கவேண்டும் என்பதற்காக தங்களையே அர்ப்பணிக்கும் தியாகத் திரு உருவங்களாகிய எங்களைப்பார்; பளபளப்பான எங்கள் உடலைப்பார்; மின்னும் புரட்சிச் சிவப்பைப் பார்........பார்.... பார்.......பார்த்துக் கொண்டேயிரு!"

மரத்துண்டு மௌனமாக இருந்து விட்டது. அதன் முகத்திலே மட்டும் குறுநகைக் கோடுகள் மின்னலிட்டு மறைந்தன.

∴ ∴ ∴ ∴ ∴

இரவு..........

இடி விறிட்டது. வெட்டும் மின் வீச்சோடு புயல் சீறியது.

சட....சட....மட.. ....மட... ....

மரங்கள் சாய்ந்தன. வெறிபிடித்தக் காற்றின் சுழற்சியிலே கிடுகிடென வீடுகள் நடுங்கின. பயம்...எங்கும் பீதி!

பொழுது விடிந்தது. வானம் வெளி வாங்கி விட்டது. எங்கும் சிதைவின் சின்னங்கள் கோரமாகப் பல்லிளித்துக் கொண்டு நின்றன. ஆனால்.....—

புத்தாடை சலசலக்க குறுகுறுக்கும் விழிகளால் எதையோ தேடிக்கொண்டு சிறுவர் பட்டாளம் கிளம்பியது. வீட்டின் மூலைகளில் எங்கெங்கோ சிதறிக்கிடந்த சீனவெடிகளையெல்லாம் சேர்த்துக் குவித்துக்கொண்டு அவர்கள் வெளியே வந்தார்கள்.

பயம் பத்திரமாக எட்ட நின்றுகொண்டு அவைகளை ஒவ்வொன்ருகக் கொளுத்திப் போட்டார்கள். ஆனால் அவற்றில் ஒன்றேனும் வெடிக்கவில்லை. இரவு பெய்த பெருமழையில் அவைகள் நமத்துப் போய் விட்டன....அந்த ஒட்டு வீட்டுக்கும் வந்தது ஆபத்து!

சிறுவர்களுக்கு ஒரே எரிச்சல்! அவைகள் எல்லாவற்றையும் ஒடித்து ஒடித்து வைத்துப் "புஸ்" வாணம் விட்டு விளையாடுவதைத்தவிர அவர்களுக்கு வேறு வழியேயில்லை. அவைகளில் ஒன்று பின்புறமாகப் பீச்சிக்கொண்டு வந்து ஒரு பொடியனின் கைவிரலைத்தீய்த்து விட்டது. நறுக்கப்பட்ட நாகத்தின் வாலைப்போல அவன் துடித்துக்கொண்டிருந்தான்.

பெரியவர்கள் நிறைந்த ஒரு கும்பல் அவர்களைக் கடந்து வேகமாகச் சென்றது. அவசரம் அவசரமாக அவர்கள் கீழே கிடந்த மரத்துண்டை நிமிர்த்தி அந்த ஒட்டு வீட்டின் ஒரு பக்கத்துச் சுவருக்கு முட்டுக்கொடுக்கும் முயற்சியில் சிரமத்தோடு ஈடுபட்டார்கள். வேலை முடிந்தது. வேடிக்கைப்பார்த்துக்கொண்டு நின்ற குழந்தைகளின் விழிகள் வியப்பால் விரிந்தன.

இனி அந்த வீடு மனித ஜீவன் குடியிருப்பதற்கு ஏற்றதாக ஆகிவிடும். ஆனால்....அந்த மரத்துண்டு மட்டும் இல்லாமலிருந்தால்......?—

∴ ∴ ∴

சுவரின் பாரம் தலையை அழுத்த பொறுமையோடு நின்று கொண்டிருந்த அந்த மரத்துண்டு செத்து மண்ணோடு மண்ணாகிக்கிடந்த அந்தச் சீனவெடித்துண்டுகளைப் பார்த்தது. அதன் மனதுக்குள் ஏதோ இனந்தெரியாத ஒரு வகைப்பச்சாதாபம்.......!

"தியாகம் துடிப்பிலே இல்லை தொண்டிலேதான் இருக்கிறது என்பது—பாவம்....!—இவைகளுக்குப் புரியவேயில்லை"—என்று அது மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டது.

ஜடாயு

சிவகுமாரன்

"தானம் என்ற சொல்லுக்குத் தவறான பொருள் நம்மிடையே நிலவுகிறது. தனி மனிதன் தனது வளர்ச்சிக்காகச் சமூகத்திடமிருந்து பெற்றுக்கொண்டதை அதற்கே திருப்பியளிக்கும் செய்கைக்குத்தான் தானம் என்று பெயர். அது அவனது கடமையாகும். அதை யொட்டித்தான் 'தானம் சமவிபாகம்' என்று ஆதி சங்கரர் அருளினார்" — பூஜ்ய வினோபாஜி.

இரவு மணி இரண்டிருக்கும். வெகு நேரம் வரை கண் விழித்திருந்து ஏதோ எழுதிவிட்டு அப்போதுதான் படுத்துச் சற்றுக் கண்ணயர்ந்தேன். யாரோ கதவை இடிக்கும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்து விளக்கைப் போட்டுவிட்டுக் கதவைத் திறந்தேன். பால்காரக் கண்ணன் நின்று கொண்டிருந்தான்.

'என்ன கண்ணு, இந்த அகாலத்தில்,' என்று வியப்புடன் கேட்டேன்.

கண்ணனுக்கு மேல்மூச்சு வாங்கியது. 'குமரண்ணனுக்கு உடம்பு சாஸ்தியாயிட்டது. என் சித்தப்பாரு உங்களைக் கையோடு கூட்டியாரச் சொன்னாரு' எனக்குத் திக்கென்றது. துண்டை உதறி மேலே போட்டுக்கொண்டு அவன் பின்னால் நடந்தேன். ஓடினேன் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும்.

பால்காரத் தெருவின் நடுவில் குமரனின் வீடு. வீட்டுத் திண்ணையில் அவன் படுத்திருந்தான். ஒரு ஹரிகேன் விளக்குப் புகையைக் கக்கிக் கொண்டிருந்தது. திண்ணையை யடுத்த திட்டி வாசலில் சிறிய கூட்டம் கூடியிருந்தது. மெள்ளக் குமரனின் அருகே போய் உட்கார்ந்தேன். 'டாக்டருக்கு ஆள் போயிருக்கிறதா' என்று கண்ணனைக் கேட்டேன். 'ஆமாம்' என்று பதில் வந்தது. குமரன் நெற்றியில் கையை வைத்தேன். குமரன் கண்ணைத் திறந்து என்னைப் பார்த்தான். 'தம்பி, வந்தியா என்று கேட்டான். முகத்தில் மகிழ்ச்சியின் ரேகை. பிறகு ஒரு தயக்கம். 'வந்தேமாதரம்,' என்று குளறினான், கண்ணை மூடிவிட்டான்.

டாக்டர் வந்து அறிவித்த பிறகுதான் குமரன் இனி எழுந்திருக்கமாட்டான என்பதை நாங்கள் அறிந்தோம். அவ்வளவு வைதாங்கியும் முகத்தில் ஒரு விகாரமும் இல்லை. நிம்மதியாக உறங்குவதைப் போலிருந்தது. குமரனின் காலடியிலிருந்த போர்வையை எடுத்து அவன் உடலை மூடினேன். மௌனமாக உட்கார்ந்தேன். நேற்றிரவுகூட நான் குமரனைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். நோய்நொடியற்ற இரும்பு உடம்பு. மனித வாழ்வின் அநித்தியத்திற்கு நிதர்சனமான உதாரணம். நேற்று அவன் எனக்கு மிகப் பெரிய உதவியொன்று செய்தான். 'இனி நான் நிம்மதியாகப் போகலாம்' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான். இவ்வளவு சீக்கிரம் போய்விடுவானென்று நான் எதிர்ப்பார்க்கவில்லை.

* * *

அன்று திருவையாற்றிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். கிருஷ்ணன்குளத்து மூலை தாண்டியதும் நெடிதுயர்ந்த உருவம் எதிர்ப்பட்டது. ஆறடிக்குக் குறையாத உயரம். முதிர்ந்த உடல். நரைத்த தலையில் வழிய வழிய எண்ணெய். ஒரு கையில் ஊன்றுகோல், மற்றதில் சிகைக்காய்த்தூள். ஒருகாலில் விந்தல். எதிரேவந்த என்னைக்கண்டதும் அப்படியே கட்டிக்கொண்டு விட்டான். 'சின்னய்யாவா, அடையாளமே தெரியவில்லையே, எங்கேயிருக்கிறாய், என்று சரமாரியாகக் கேள்வி கேட்டான். நானும் சற்றுத்தாமதமாகத்தான் புரிந்துகொண்டேன். அவன்தான் தில்லைகுமரன். நடுத்தெருவில் குமரன் காட்டிய பரிவு எனக்குக் கொஞ்சம் கூச்சத்தை ஏற்படுத்தியது. எனினும் அதைப் பொருட்படுத்தவில்லை. சிறிது நேரம் குசலம் விசாரித்த பிறகு, 'தம்பி, நீயாவது நிறையக் காசு சேர்த்து வைத்துச் சந்தோஷமாயிருக்கணும். ஐயா நிலமெல்லாம் ஏலம் போயிடுச்சு, நீதான் அவைகளைத் திருப்பணும், ' என்று ஆதாரத்துடன் கூறினான். நேரமாவுது, வீட்டுக்குப்போ, நாளைக்கு வந்து கண்டுக்கிறேன்,' என்று கூறிக் கால்வாயை நோக்கி நடந்தான்.

தில்லைக் குமரன் அந்தநாளைய 'அன்னோன் ஸோல்ஜர்' தேசபக்தத்திருக்கூட்டத்தில் அவனும் ஒருவன். அண்ணல் நடத்திய அறப்போரில் ஆவேசத்துடன் கண் மூகம் தெரியாது தீயில் குதித்த சேவகன். போலீஸ் தடியடியால் கணுக்கால் எலும்பு முறிந்து ஒரு கால் ஊனமாகிவிட்டது. குழந்தை குட்டி ஒன்று கிடையாது. மனைவி என்றோ இறந்துவிட்டாள். சென்ற தடவை விடுமுறையில் வந்திருந்தபோது குமரனுக்கும் ஏதாவது வீர மான்யம் தரவேண்டுமென்று ஜில்லா ராஷ்டிரபதியின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர் கையை விரித்து விட்டார். நிழலுக்குக்கூடக் கதர்க் கொடியின் கீழ் நின்றறியாதவர்களுக்கெல்லாம் மான்யம் கிடைத்தது. ஆனால் குமரனுக்குக் கிடைக்கவில்லை. ஏனென்றால் அவன் நிஜமாகவே ஒரு தியாகி. எனினும் அவன் அதற்காகக்கவலைப்படவில்லை அவனுக்கு மான்யம் கிடைத்திருந்தாலும் அதைப் பூமிதானமாகக் கொடுத்திருப்பான். அது அவனது இயற்கைக் குணம்.

* * *

குமரனைக் குளத்தங்கரையில் சந்தித்த தினத்துக்கு மறுநாள் பகல் உணவிற்குப் பிறகு ஒய்வெடுத்துக் கொண்டிருந்தேன். 'யாரோ ராகவையங்கார் கூப்பிடுவதாக

மேல்வீட்டுக் குஞ்சு வந்து கூறினான். 'எந்த ராகவையங்கார்' என்று வினவினேன். 'அவர்தான், பெருமாள் கோயிலுக்குப் பக்கத்திலிருக்கிறாரே, சந்தனக் கடை ராகவையங்கார், என்று பதில் வந்தது. குஞ்சு போய் விட்டான்.

படை பதைக்கும் வெய்யிலில் அவர் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தேன்! வாப்பா, சிவசங்கரன் பிள்ளையா நீ, குழந்தையிலே பார்த்தது,' என்று சிரித்த முகத்துடன் வரவேற்றார். அவர்தான் ராகவையங்காராக இருக்க வேண்டும் என்று அனுமானித்தேன். சோம்பேறி நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் ஒரு ஸ்டூலின் மேல் தடித்த அகராதியும் போட்டிப் பந்தயக் கூப்பன்களும் இருந்தன. அடுத்தாற்போல திண்ணையில் இன்னொரு பெரியவர். அவர் பக்கத்தில் இருபது வயதிருக்கும், ஒரு பையன். மூவரும் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். நல்ல ஸ்தானத்துப் பண்பு அது. 'கறுப்பு' என்ற வார்த்தையில் 'று' வல்லினமா, இடையினமா என்ற சர்ச்சை தமிழ் வளர்ச்சி நடந்து கொண்டிருந்தது.

'நமஸ்காரம், என்னைக் கூப்பிட்டனுப்பியதாகக் குஞ்சு சொன்னான். எனக்கு யாருமே அறிமுகமில்லை. இந்த ஊர்க்காரனாயிருந்துவிட்டபோதிலும் இங்கு வந்து பல வருஷங்கள் ஆகிவிட்டதல்லவா?

'வாஸ்தவம்தான்,' சோம்பேறி நாற்காலியில் உட்கார்ந்தவர் பேசினார். தற்போது எங்கேயிருக்கிறாய்?

பம்பாயில் நாரங்ஜீ மில்லில் சூப்ரவைஸர் உத்தியோகம்.

'என்ன சம்பளமோ'?

'குறைச்சல்தான். அத்தோடு ஏதோ பத்திரிகைகளுக்கு விஷய தானம் செய்து வருகிறேன். அதனால் கட்டிவருகிறது. அங்கே கூடஇருந்த பையன் என் பதிலைக் கவனித்து விட்டு 'பட்டமரம்' கதை எழுதியது நீங்கள்தானா ஸார்? என்று வினவினான். 'ஆமாம்' என்றேன். நல்ல ஸ்தானத்தில் கூட ரஸிகத்தன்மை பரவியிருந்தது எனக்கு வியப்பாக இருந்தது. கொஞ்சம் கர்வமும் கூட. அது தான் எழுத்தாளனுடைய உடன் பிறப்பாயிற்றே.

'உன்னைப்பார்த்தால் சிவசங்கரனைப் பார்க்க வேண்டாம். உன் வயதில் அவன் இப்படித்தானிருந்தான். ஆனால் எப்போதும் கதர்தான் கட்டுவார் உங்கப்பா. அந்தக் கதர்தான் எவ்வளவு வெளுப்பாயிருக்கும் தெரியுமா? அவனுடைய மனசைப்போல. ராகவையங்கார் பேசிக்கொண்டே போனார், பிறகு திடீரென்று 'இப்போதென்ன லீவில் வந்திருக்கிறாயா' என்று வினவினார்.

'ஆமாம், ஊருக்கு வந்து வருஷம் ஐந்தாகிறது. என் தாயார் கடைசி நாட்களில் காவேரி தீரத்திற்கு ஆசைப்படுகிறாள். ஒரு மாதம் இருந்துவிட்டுப் போவோமே என்று வந்தேன்!

ராகவையங்கார் தொடர்ந்து பேசினார். 'உங்கப்பா உனக்கு ஒன்றும் மீதி வைக்கவில்லை. காந்தி, தேசம், என்று, உங்கள் எல்லோரையும் ரொம்பக் கஷ்டப்படுத்தி விட்டார். இந்த ஊரில் உங்களுக்கு மிஞ்சியது இந்த விடு ஒன்றுதான் என்று நினைக்கிறேன். அதனால்தான் நான் கூட இத்தனை நாள் பொறுத்திருந்தேன். இப்போது அவசரச் செலவு காத்திருக்கிறது. அதனால்தான் கூப்பிட்டனுப்பினேன்!

ராகவையங்கார் பேசிய போது எனக்கு அடிவயிற்றில் குளிர் எடுத்தது; வீட்டினுள்ளிருந்து ஒருபழைய தஸ்தாவேஜிக் கட்டை எடுத்து வந்தார். அது இருபது வருஷத்துக்கு முந்திய கடன் பத்திரம். சமீபத்தில் 'எக்ஸ்பார்ட்டியாகத் தீர்ப்பாகியிருந்தது. அந்த நோட்டில் காணப்பட்ட என் தகப்பனாரின் கையெழுத்து என்னை என்னவோ செய்தது. கையெழுத்தா அது. எங்கள் குடும்பத்தின் தலையெழுத்தல்லவா அது.? எத்தனை பிராமிஸரி நோட்டுக்களில், எத்தனை ஜாயிண்டு நோட்டுக்களில் அவரது கையெழுத்தைப் பார்த்திருக்கிறேன் நான். என் தலை சுழன்றது.

தழதழத்த குரலில் நான் பேசினேன். இந்த விடு ஒன்றுவது மிஞ்சியிருக்கிறது என்று என் தாயார் எண்ணிக்கொண்டிருக்கிறாள். அவள் இன்னும் அதிகநாள் ஜீவிக்கப் போவதில்லை. இந்த ஆயிர ரூபாய்க் கடனை என்னால் உடனடியாகத் தீர்க்க முடியாது. ஏதோ தவணைகளில் திரும்பக் கொடுத்து விடுகிறேன். அதுவரையில் பொறுத்துக் கொள்ள வேண்டும். எனக்குத் தலையிறக்கமாக இருந்தது. மேலே ஒன்றும் பேசத் தோன்றாமல் திரும்பிவிட்டேன். துக்கம் நெஞ்சையடைத்தது.

● ● ● ●

'எங்கேயடா குழந்தாய், போய் விட்டு வருகிறாய் இந்த வெய்யிலில்' படுத்துக் கொண்டிருந்த என் தாயார் எழுந்திருந்து என் தலையில் கையை வைத்துப் பார்த்தாள் எத்தனை வயதானாலும் நான் அவளுக்குக் குழந்தை தானே!

'பேசாமல் படுத்துக் கொள்ளுங்களம்மா, ராகவைய் யங்கார் கூப்பிட்டனுப்பினர். போய் வந்தேன்'

என்ன விசேஷம் ?

'வழக்கம் போலத்தான்.' என்று கூற வந்தவன் அவளுடையகண்களைப்பார்த்துச் சட்டென்று நாக்கைக்கடித் துக் கொண்டேன். 'பெருவிலாவிலே அவர் மருமான் இருக் கிருனும். நான் திரும்பும் போது ஏதோ சாமான் தருவ தாகச் சொன்னர். சரியென்று சொல்லிவிட்டு வந்தேன். என் தடுமாற்றம் தாயாருக்குப் புரிந்ததோ இல்லையோ தெரியாது. அவள் ஆயாசத்துடன் திரும்பவும் படுத்துக் கொண்டாள்.

அந்த மெலிந்த உடலிலே குடி கொண்ட உள்ளம் எத்தகைய துயரத்தைத் தாங்கியிருக்கும் ? என் தகப்பனு ரைத்தேடி நட்சத்திரேயனைப் போல அமிழ வந்தபோ தெல்லாம் இரண்டாம் பேயரறியாமல் நகைகளைக் கழற்றிக் கொடுப்பாள். பிறந்த வீட்டில் கேட்டால் மெருகிடக் கொடுத்திருப்பதாகப் புளுகுவாள். நிலம், தோப்பு, துரவு நகைகள் என்று ஒவ்வொன்ருய் மறைந்தன. கடைசியில் குடும்பம் தலையெடுக்கும் தருணத்தில் என் தமையன் டைபாய்டு ஜுரம் வந்து இறந்து போனன். அவள் தாங் கிய அளவு பேரிடிகளைச் சமாளிக்க இந்தத் தலைமுறைக்கு மன உரமோ உடலுரமோ கிடையாது. கடைசியாக எங்கள் பிதுரார்ஜித வீடு ஒன்ருவது மிச்சம் இருக்கிறது என்று என் ணிக் கொண்டிருக்கும்போது அதற்கும் 'உயில்' வைத்து விட்டுச் சென்றிருக்கிரர் என் தகப்பனர். எப்படியாவது அந்த விஷயத்தை அம்மாவிடமிருந்து மறைத்துவிட வேண்டுமென்று நிர்மானித்தேன்.

ஆனல் நல்ல ஸ்தானத்தில்தான் எல்லோர் விட்டிலும் ஞானதிருஷ்டிக் கருவிகள் இருக்கின்றனவே. இரகசியப் போலிஸ்கூட அவ்வளவு திறமையாக வேலை செய்யாது. எல்லோருக்கும் தெரிந்த இந்த இரகசியம் என் தாயார் காதிற்கும் எட்டிவிட்டது. என்னிடம் அதைப்பற்றி ஒன்றும் கேட்காவிட்டாலும் அம்மாவுக்குத் தெரிந்துபோய்விட்டது என்று நான் புரிந்துகொண்டேன். என் தாயாரின் உடம்பு அதிகமாகிவிட்டது.

• • •

அன்று மாலை பாலக்காரத் தெருப்பக்கம் போக நேரிட் டது. தன வீட்டு வாசல் திண்ணையில் குமரன் உட்கார்ந் திருந்தான். என்னைக் கண்டதும் அன்புடன் வரவேற்றன். விட்டினுள் போக நுழைந்தேன். 'சும்மா இப்படித் திண்ணை யிலே உட்கார் தம்பி. என் குடும்பம் தானுகவே முன் னுக்கு வந்துவிட்டது பார். உன்னை போனுல் கூரை இடிந்து தலையில் விழும். நான் உன்னையும் புழக்கடை பக்கமும் போவதையே நிறுத்திவிட்டேன்' என்று வேடிக்கையாகக் கூறினன். சிறிதுநேரம் பேசாமலிருந்துவிட்டு மறுபடியும் தொடங்கினன். ராகவையங்கார பணம்கேட்கிறராமே தம்பி, என்ன செய்யப்போகிருய்?

'என்ன செய்யலாம், விட்டைக் கொடுத்துவிடவேண்டி யதுதான். வேறு வழி என்ன?

குமரன் பொருமினன்: அந்தக் கடனை உங்கப்பா எதற்கு வாங்கினர் தெரியுமா?

'தெரியாதப்பா, அவரது எந்தக் கடனைப்பற்றித் தான் எங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிருய்?

நீ பிறப்பதற்கு முதல் வருஷம் இந்த ஜில்லாவில் பெரும் புயலடித்தது, வெள்ளம் வர இருந்தது. சமீபத்தில் வேதாரண்யம் நாசமாகப் போனதுபோல் இந்த ஊரிலும் வெள்ளத்தால் சேதம் உண்டாயிற்று. அப்போது உங் கப்பா பொன்னுச்சாமி பிள்ளை கடையிலிருந்து சாமான்கள் வாங்கிப்போட்டு எல்லோருக்கும் கஞ்சி ஊற்றினர். நாளா டைவில் பிள்ளை நெருக்கினர். அப்போது ராகவையங்கா ரிடம் கடன் வாங்கி அதை அடைத்தார். உங்கப்பாவுக்குத் தான் கடன் வாங்குவதில் வர்ஜா வர்ஜமே கிடையாதே!

'தர்மம் தலைகாக்கும் என்று சொல்வார்கள் குமரண்ணு, இந்தத் தர்மம் என் தலையையல்லவா கொண்டு போகிறது? நான் விரக்தியோடு கூறினேன்.

அப்படிச் சொல்லாதே தம்பி, அவர் மனுஷன் தங்கம், அவரைப்போலொத்த புண்ணியவான்களால்தான் இன்னும் மழை பெய்கிறது. அவர்செய்த சேவையால் இந்த ஊருக்கே பெருமை. தேச சேவை செய்கிறவர்களில் பெரும்பாலோர் இப்படித்தான் திக்கிரையாகியிருக்கிருர்கள். அதற்காக வருத்தப்பட்டுப் பயன் உண்டா? சிறிது நேரம் மௌனம் சாதித்த பிறகு மறுபடியும் பேசத்தொடங்கினன் குமரண் ணன். தம்பி, உங்கப்பாவும் நானும் அண்ணன் தம்பி போலப் பழகியிருக்கிருேம். எங்களுக்குள் ஒருநாளும் வித்தி யாச எண்ணமே தோன்றியது கிடையாது. எனக்கு அவர் செய்திருக்கும் உதவிக்குக் கணக்கேயில்லை. அந்தக் கடனில் ஒரளவாவது நான் திருப்பிக் கொடுக்கத்தான் வேண்டும். குமரன் திண்ணை மூலையை யடைந்து ஒரு பானையை நகர்த் தினன். செங்கல் ஒன்றைப் பெயர்த்து சிறிய துணி மூட் டையை எடுத்தான். 'இந்தா இதில் எண்ணூத்திச் சொச் சம் இருக்கிறது. இதை சந்தனக்கடைக்காரரிடம் கொற் த்து நோட்டை வாங்கி காது கிள்ளிவிடு. இரண்டாம்பேர் அறியாமல் செய்யனும். 'போ, போ சிக்கிரம் போ' நோட் டுக் கத்தைகளை என்னிடம் கொடுத்து விரட்டினன். நான் மறுத்தேன். கடுமையான குரலில் கண்டிக்க ஆரம்பித்தான். 'தம்பி எனக்காக இல்லாவிட்டாலும் அந்த மஹாலட்சுமி, உங்கம்மா மனக்கஷ்டத்தை நீக்கவாவது இதைச் செய் யப்பா, கடைசிக் காலத்தில் அவர்களாவது நிம்மதியாக இருக்கட்டும். குமரனின் இந்தக் கடைசிப் பாணம் என்னை அடி பணிய வைத்துவிட்டது.

அதற்கு மறுநாளே குமரன் அமரனுகிவிட்டான். அவன் இவ்வளவுநாள் வாழ்ந்ததே எனக்கு உதவி செய்யும் பொரு ட்டுத்தானே!

குமரனின் உடலைத் தேசியக் கொடியால் சுற்றினேம். உள்ளூர் தேச பக்தப் பிரமுகர்களைக் கூட்டி மரியாதை தெரி வித்தோம். தேசிய வீரனுக்குரிய மரியாதைகளுடன் அந்தப் புனித உடலைப் பஸ்மமாக்கினேன்.

நான் ராமாயணம் படித்ததுண்டு. கம்பன், துளஸி, வால்மீகி அனைவரும் ஜடாயுவின் அந்திமக் கிரியைகளை ஸ்ரீராமன் மேற்கொண்டபோது அவனுடைய மனநிலையை வர்ணித்திருக்கிருர்கள். அம்மொழிகளின் உள்ளர்த்தம் அவற்றைப் படித்தபோது எனக்கு விளங்கவில்லை.

இன்று குமரனின் உடலுக்குத் தீ மூட்டியபோது அந் தக் காவியத்தின் அழகு வரிகள் வெகு நன்ருக மனதில் பதிந்தன.

———



கபிலரது பாட்டு

வித்துவான் வி. துரைசாமி.

சரித்திர வரம்புக்குள் சரியாக வராத காலத்தில் எழுந்த நூல்களைச் 'சங்க நூல்கள்'' என்றழைக்கிறோம். தமிழ் மொழியின் அழியாப் பெருஞ் செல்வங்களாகத் திகழும் அவை, தமிழர் தனி நாகரிகத்தின் ஒப்பற்ற சின்னங்கள் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். மனித வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களாகிய அன்பு, அறம் போன்ற பொருள்களை நமது முன்னோர்கள் கையாண்ட முறைகளைத் தெள்ளத் தெளிய விளக்கி நம்மையெல்லாம் வியப்புக் கடலில் ஆழ்த்தும் அப் பழந் தமிழ் நூல்களைப் பாமரரும் அறியும்படி பரப்புவது அறிஞர் கடமையாகும்.

சங்க இலக்கியங்கள் மூன்று பிரிவுக்குள் அடங்கும். அவை (1) எட்டுத்தொகை, (2) பத்துப்பாட்டு, (3) பதினெண்கீழ்க்கணக்கு என்பன. பொருளிலக்கணம் என ஒன்று தமிழில் அமைந்திருப்பது பிறமொழிகளுக்கில்லாத சிறப்பாகும். அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாக அமைத்து, வாழ்வு முறையை வகைப்படுத்தி வளப்படுத்திய நம் முன்னோர்களின் அறிவுத் திறனையும் நாகரிகச் சிறப்பையும் எவ்வாறு போற்றுவது?

அகம் என்பது ஒருவனும் ஒருத்தியும் தெய்வ வசத்தால் எதிர்ப்பட்டு, உள்ளங்கலந்த காதலால் அவர்களின் நட்பு வளர்ந்து களவு, கற்பு என்னும் முறைகளில் மணம் புரிந்துஇல்வாழ்க்கை நடத்துதலாகும். இத்தகைய வாழ்வில் அத்தலைவனும் தலைவியும் கூடி அனுபவிக்கும் இன்பம் பிறர்க்கு எடுத்துக்கூற இயலாததாகி நெஞ்சால் மட்டுமே உணரக்கூடிய தாகையால் அதனை அகம் என்றனர்.

புறம் என்பது அகம் போலன்றி இத்தன்மைத்தென எவர்க்கும் எடுத்தியம்பும் தன்மையதாகிய அனைத்திற்கும் பொருந்தும். எனவே அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களில் இன்பத்தை அகம் என்றும், மற்ற அறம், பொருள், வீடு என்பனவற்றைப் புறம் என்றும் கூறலாம். சங்க இலக்கியங்கள் அனைத்தும் இவ்விரு பிரிவுகளுக்குள் அடங்கிவிடுகின்றன.

அகம், புறம் என்ற இரண்டையும் திணை என்ற சொல்லால் குறிப்பிடுவர். திணை என்பது நிலம், குலம், ஒழுக்கம் என்ற பொருள்களைக் காட்டும். அகப்பொருளில் திணை என்பது நிலத்தினையே குறிக்கின்றது என்பதை குறிஞ்சித் திணை, முல்லைத்திணை என வழங்குவதால் அறிகிறோம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பூமியை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து 'அன்பின் ஐந்திணை' என்றனர் நமது முன்னோர்கள். ஒவ்வொரு திணைக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பொருள்கள் உண்டு.

மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சித்திணையைச் சிறப்பிப்பதில் கபிலர் என்னும் புலவர் தலைசிறந்தவர் என்று பெரியோர் கூறுவர். வேள்பாரியின் உயிர் நண்பராகிய இப்புலவர் திருவாதவூரில் பிறந்தவர் என்றும், அந்தண வருணத்தவர் என்றும் தெரிகிறது.

"யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்,"
"யானே, தந்தை தோழன் இவரென் மகளிர்,
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே"

என்றெல்லாம் இவரே கூறுதல் காண்க. "பொய்யாநாவிற் கபிலன்" என்றும், "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" என்றும், பல சங்கச் சான்றோர்கள் இவரைப் பாராட்டியிருக்கின்றனர். பதிற்றுப்பத்து என்ற நூலில் ஏழாவது பத்து, கபிலரால் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேர மன்னன் மீது பாடப்பட்டது. அப்பாடல்களைக் கேட்ட அவ்வரசன் இவருக்கு நூறாயிரம் பொற்காசுகளைப் பரிசாகக் கொடுத்ததோடமையாது ஒரு மலைமேல் ஏறிக் கண்ணிற்கண்ட நாடெல்லாம் பரிசாகக் கொடுத்தானென்று பதிற்றுப்பத்து அறிவிக்கின்றது. மேலும் பத்துப்பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டு கபிலர் பாடியதாகும். இது பிரகத்தன் என்னும் ஆரிய அரசனுக்குத் தமிழின் அருமை பெருமைகளை அறிவுறுத்துவதற்காகப் பாடப்பட்டது.

கபிலர் பெருமான் காட்டும் இயற்கைக் காட்சிகளைக் குறிஞ்சிப்பாட்டு மூலம் அறிந்து வியப்பும் களிப்பும் அடைகிறோம். இதோ ஒரு காட்சி:—

இரண்டு பெண்கள் மலையிலிருந்து விழும் அருவியாடச் சென்றார்கள். நெடுநேரம் நீராடிய அவர்கள் கரை சேர்ந்து தமது நீண்ட கூந்தலை முறுக்கிப் பிழிந்து முதுகில் கிடத்துகின்றார்கள். அது தங்கப் பாளத்திலே நீல மணியை அழுத்தியது போல இருந்ததாம்.

"பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்தஎம்
பின்இருங் கூந்தல் பிழிவனம் துவரி"

என்பது அவர் வாக்கு. நெடுநேரம் நீராடியதால் அப்பெண்களின் கண்கள் சிவந்து போயின. ஈரம் காயாத ஆடையோடு அம்மலைச்சாரலில் உள்ள பலவகை மலர்களைக் கொய்யப் போகிறார்கள். என்னென்ன மலர்கள் என்று காண்போம். "காந்தள், அனிச்சம், குவளை, குறிஞ்சிப்பூ, வெட்சிப் பூ, செங்கொடுவேரிப்பூ, தேமாம்பூ, செம்மணிப்பூ, பெருமூங்கிற்பூ, வில்வப்பூ, எருழம்பூ, மராமரப்பூ, கூவிரப்பூ, செருந்திப்பூ, கோங்கம்பூ, சண்பகப்பூ, தில்லைப்பூ, காட்டு மல்லிகைப்பூ, சிறுமூங்கிற்பூ, சிறுபூளைப்பூ"..........கபிலர் கூறும் பூவகைகளில் ஒரு சிலவே இங்குக் காட்டப்பட்டன. இன்னும் நூற்றுக்கணக்கான பூக்களின் பெயர்களைக் குறிஞ்சிப்பாட்டில் காணலாம்.

இவ்வாறு பலவகைப்பட்ட மலர்களைப் பறித்த அம்மகளிர் அவற்றையெல்லாம் அழகுபெறத் தொடுத்து,

"பல்வேறு உருவின் வனப்பமை கோதைஎம்
மெல்இரும் உச்சி கவின்பெறக் கட்டி"

என்றபடி கரிய கூந்தல் முடியிலே வைத்துக் கட்டிக்கொள்ளுகிறார்கள். குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்வகைகளிற் பெரும்பாலானவை மேலே குறிக்கப்பட்டன. மலையிடமும், அருவியும், அப்பிரதேசத்தைச் சேர்ந்த மலர்களும் ஆகிய இவை தவிர, ஓர் காட்டு யானையைக் கபிலர் காட்டும் அழகைப் பார்ப்போம்.

"கார்ப்பெயல் உருமின் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை இருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாசும் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழம் மடங்கலின் எதிர்தர"

குறிஞ்சி நிலத்து இளைஞர்கள் தேனையுண்டு களிப்பினோடு விளையாட்டயரும் காலத்தில் ஒரு காட்டியானை அவர்களுடைய புனத்திற்குள் வந்து விட்டது. அதைக் கண்டதும் அவர்கள் அம்பை எய்தும், காடே அதிரும்படி சிழ்க்கையடித்தும் விரட்டுகின்றார்கள். இதனால் அந்த யானை கோபத்தை வெளிக்காட்டும் முகத்தால் மதத்தைப் பொழிந்து, மயக்கத்தோடு கார்காலத்து மேகம் இடிப்பிடிப்பதுபோல முழக்கஞ் செய்து, மரங்களையெல்லாம் முறித்து, தனது நீண்ட துதிக்கையை நிலத்தில் படியவைத்து யமனைப் போல அவ்விளைஞர்களை எதிர்த்து வருகிறதாம்.

மலைக்குகையும் அதன் பகுதிகளும் ஆகிய இடங்களுக்குக் கபிலர் நம்மை அழைத்துச் செல்லுகிறார். அங்கே நாம் காண்பன,

"கங்குல்,
அளைச்செறி யுழுவையும் ஆளியும் உளியமும்
புழற்கோட்டு ஆமான் புகல்வியும் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்து
உருமும் சூரும் இரைதேர் அரவமும்
ஒடுங்குஇரும் குட்டத்து அருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்
நூழிலும் இழுக்கும் ஊழ்அடி முட்டமும்
பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்"

இராக்காலத்தில் புலி, யாளி, கரடி, யானை, இடி, வழிச்செல்வாரை வருத்தும் கொடுந்தெய்வம், உணவுதேடி யலையும் பாம்பு, ஆழத்திலேஉள்ள சுழியில் திரியும் முதலை, அம்முதலையின் இனங்களாகிய இடங்கர், கராம் என்பவை, இன்னும் வழிப்பறி செய்வோர் மக்களைக் கொல்லும் இடங்களாகிய நூழில், வழுக்கு நிலம், பிசாசு, பெரும் பாம்புகள்........இப்படிப் பல்வகைப் பிராணிகளும் நடமாடும் இடங்களைக் காட்டுகிறார்.

இயற்கைக் காட்சிகளில் உள்ளம் செல்லாத மக்கள் மாக்களேயாவர். இத்தகைய அழகின் இருப்பிடமான இயற்கையன்னையின் கொலுமண்டபத்தை முற்றிலும் கண்டனுபவிக்க வேண்டாமா? கபிலர்பெருமான் இயற்றிய குறிஞ்சிப் பாட்டைப் படியுங்கள்!

———



கயவனா-கணவனா

ராதிகா.

குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருந்தாள் சந்தியா. அவளுடைய அழகு நிறைந்த வதனம் துக்கத்தின் சாயை படர்ந்தோடி வாடிக் கிடந்தது. உடன் பிறவாமல் இருந்தும் கணமும் பிரியாது உயிருக்குயிராய் வாழும் ஆருயிர்த் தோழி பாலாவின் தேகநிலைதான் அவளை அப்படி அலைக்கழித்தது. அதற்குக் காரணமான தன் கணவனை நினைத்ததும் ஏற்பட்ட வெறுப்பும் துக்கமும் அவள் மனதை கொந்தளிக்க வைத்தது. சுவற்றில் மாட்டியிருந்த குமாரின் படத்தைப் பார்த்தாள் சிலகணம்.

" ஐய்யோ! நீங்களா இப்படித் துரோகம் செய்து விட்டீர்கள்! உயிருக்குயிராய் நேசித்த உங்கள் மனம்.... இத்தகைய கயமைத்தனம் படைத்ததுதானா? பசுத்தோல் போர்த்திய புலிபோல் நடித்து என் சகோதரி வாழ்வையே சூறையாடி விட்டீர்களே! என் கணவர் என்னையன்றி வேறு பெண்ணைக் கனவிலும் நினைக்கக்கூட மாட்டார் என்று நம்பி இறுமாந்திருந்த என்னை ஏமாற்றி விட்டீர்களே?...... .....இனி............இனி " என்று குமுறி குமுறி அழுதாள் சந்தியா.

அச்சமயம் பாலாவின் அறையில் சப்தம் கேட்கவே கண்ணைத்துடைத்துக் கொண்டு அங்கே நடந்தாள்.

" பாலா! இது என்ன! என்னை விட்டு விட்டு எங்கே போகப் போகிறாய்! "

" என்னைத் தடுக்காதே! நான் இனியும் இங்கு இருந்தால் உன் குடும்ப கௌரவமே வீணாய்விடும்........... என் மதியீனத்தினால் வந்த வினையை நான் அனுபவித்துக் கொள்கிறேன். விதி விட்ட வழி..........போகிறேன். அத்தானிடம் நீ.......... " மேலே கூற முடியாமல் துயரப்பளு பாலாவின் தொண்டையை அடைத்தது.

அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள் சந்தியா. " பாலா! நீ எதற்கும் கவலைப்படாதே, எனக்கு யாவும் தெரியும். வீணாய் நீயும் புண்பட்டுப் பேசி என்னையும் சித்திரவதைப்பட வைக்காதே! உன் பெற்றோர் சிறு வயது முதல் என்னை வளர்த்து மணம் செய்வித்து பல நன்மைகள் செய்ததற்குப் பிரதியாக, தற்சமயம் அனாதையாகி விட்ட உன்னை, என் உயிருள்ளவரை நான் கைவிடேன். என் கடமை அது என்பதை மறவேன். உணர்ச்சியுடன் கூறிக் கொண்டே வந்தவள் கண்களில் திடீரென்று பாலாவின் பெட்டிக்கருகில் உள்ள சாமான் மீது பார்வை விழவே, ஆவேசம் வந்தாற்போல பதறிப்போய் அதை எடுத்து விட்டெறிந்தாள். அது உடைந்து, உள்ளிருந்த விஷம் சிதறியது.

" அக்கா..........ஏன் அதை.......... " விம்மினாள் பாலா "

" சீ...............அசடே................என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய். நீ படித்ததின் பலன் இதுதானா! உடன் பிறவாதவளானாலும் நான் உன்னை உயிரினும் மேலாக நேசிப்பவள் என்பதை எப்படியடி மறந்தாய்! பாலா.......... நம் நட்பு ரயில் சிநேகம் என்று எண்ணிவிட்டாயா! ஆத்மார்த்தமான — அழிக்க முடியாத அன்பு என்பதை உணர்ந்தும் மறக்க துணிந்து விட்டாயா? இந்த அசட்டு எண்ணத்தை என்மீதாணையாக இனிக் கனவிலும் நினைக்கமாட்டேன் என்று சொல் பாலா............... சொல்லு!! அவள் இரைந்தது அவ்வீட்டையே அதிர வைத்தது. கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. உடம்புநடுங்கியது.

" சந்தியா............என்னை மன்னித்துவிடு. தாங்க முடியாத துக்கம் என் அறிவை மழுங்கச் செய்துவிட்டது, உன் ஆக்ஞையை மறவேன் இது உறுதி— என்னை நம்பு " என்று சந்தியாவின் மார்பில் சாய்ந்துகொண்டு விம்மியழுதாள் பாலா.

" பாசமும் பரிவும் பொங்க தோழியின் தலையை வருடியபடி " பாலா! யோசனை செய்துபார். விதி சதி செய்து விட்டால் அதற்காக வீணே கலங்கி சாகத்துணிவது போன்ற முட்டாள்தனம் வேறில்லை. போராடி வெற்றி காண முயல வேண்டும். பயங்கரப் பேரிடியை பூமி தாங்கிக் கொள்வதில்லையா? கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டால் மாலுமி அதற்காக கப்பலை மூழ்க அடிப்பது தான் நலமா? கரை சேர்க்க வேறு திசையில் செலுத்த முயற்சிப்பது நலமா? எனவே இனி நடக்க வேண்டியதை ஆலோசித்துச் செய்ய வேண்டும் தெரியுமா? ஆனால் நீ எதற்கும் கலங்க அவசியமில்லை. கூடிய விரைவில் நாம் வெளியூர் போக ஏற்பாடு செய்கிறேன். நான் இருக்கையில் நீ வீணே மனதை இது பற்றிக் குழப்பிக்கொள்ளாதே! " என்று தேர்தல் கூறிவிட்டு தன் அறைக்குத் திரும்பினாள்.

தன் சகதோழியான டாக்டர் காந்தாமணியின் உதவியுடன் பாலாவுடன் புறப்பட்ட சந்தியா குமாரிடம் கூறக் கூட இல்லாமல் வேற்றூர்ச் சென்று வசிக்கலானாள்.

பாலா தன்னை பற்றிய ஏதேனும் கூற நினைத்தாலும் சரி 'அத்தான்' என்று கூற ஆரம்பித்தாலும் சரி சந்தியாவிற்குக் கோபம் எல்லை மீறி வந்துவிடும்.

" பாலா.......எனக்கு நீ கூறித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. நம் வீட்டைப்பற்றி நினைப்பதே கூட எனக்கு வெறுப்பும் துயரமும் அளிக்கிறது. என் எதிரில் நீ

உறுதியாய் பழைய விஷயங்கள் பற்றியோ எதுவுமே கூறத் தேவையில்லை. தயவு செய்து என்னை புண்படுத்தாதே! நீ நல்லபடியாய் பெற்றுப் பிழைத்துப் பிறகு நாமிருவரும் வேலைக்குச் சென்று நம் வாழ்வை கழித்து விட வேண்டும். விறைய் போனதைப்பற்றி கவலைப்படத் தயாரில்லை நான். இந்த வாழ்வுதான் இனி என் சுகவாழ்வு.. அதிகம் ஆசைப்படுவது கூடாது." என்று கடுமையாகவும் வருத்தமாகவும் பேசினுள் சந்தியா.

யாதும் கூறமுடியாத தவிப்புடன் விம்மியபடி அங்கிருந்து நகர்ந்து விட்டாள் பாலா..........

காலம் ஓடியது. நன்ருய் தூங்கிக் கொண்டிருந்த சந்தியா துர் சொப்பனம்கண்டு விழித்த அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். அருகில் பாலாவையும் குழந்தையையும் காணுது தூக்கிவாரிப் போட்டது. அருகில் கிடந்த கடிதத்தைப் பார்த்த அவள் ஏதோ வெறி பிடித்தாற்போல வாசலில் சென்ருள். கார் நின்ற சப்தம் கேட்டு வாசலில் வந்தான் குமார்.

" அத்தான் என்னை மன்னித்து விடுங்கள். பாவி நான். உண்மை உணராது இதுவரை.........." விம்மியபடி கால்களில் விழுந்தாள்.

குமாருக்கோ ஒன்றும் புரியவில்லை. ஆனல் மனைவியின் பிரிவால் கூற முடியாத வேதனையில் மூழ்கியிருந்த அவன் சந்தியாவைக் கண்டதும் மட்டற்ற மகிழ்வு கொண்டு அன்புடன் அவளை தூக்கி நிறுத்தி "என்ன சந்தியா! என்னை தவிக்க விட்டு இத்தனை நாள் எங்கே போயிருந்தாய்? என்மேல் உனக்கு என்ன கோபம்? நேரில் கூறி தவறிருந்தால் தண்டிக்கக் கூடாதா?.......அது போகட்டும்.....பாலா எங்கே? ஏன் அழுகிருய்? என்ன நடந்தது? கூருமல் அழுகிருயே சொல்" என்று பதறினுன் குமார்.

" அத்தான்..........அத்... ...தான்......அவசரபுத்தியால் ஆராயாமல் மோசம் நடந்துவிட நானே காரணமானேன். பாலா கூறும் போது பேச விடாமல் கண்டித்து உண்மை உணராமல் தவறு எண்ணிவிட்டேன். என் அறிவுக்கண்ணை இதோ இக்கடிதம் தான் திறந்துவிட்டது....அத்தான் என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுங்கள்......" இதயம் வெடித்து விடுவது போல் குமுறிய அவளை அன்புடன் தன் அருகே அமர்த்திக் கொண்டு கடிதத்தைப் பிரித்தான்.

" அன்பு சந்தியா!

மாசற்ற உள்ளமும் தூய்மையே உருவமும் களங்கமற்ற அன்பும் படைத்த உத்தமரான அத்தானை நீ தவருய் எண்ணி விட்டாய். மனதாலும் அவர் உன்னையன்றி வேறு பெண்ணைத் தீண்டாத உன்னதமான குணம் படைத்தவர். உன்னிடம் உயிரையே வைத்திருக்கிறவர். அவர் என்னுடன் சகோதர அன்புடனே பழகி வருபவர்.

என்னுடன் வேலைசெய்த மோகன் என்றவரிடம் மனதை பறி கொடுத்து, பெண்மையை இழந்த நான் உனக்கு அதனால் ஏற்பட்ட என உடல் நிலைமாற்றத்தைக் கண்டு தயோற்றமடைய நேரச் செய்துவிட்டேன். என்னை நேசித்த மோகன் எதனுலோ என் நிலை உணர்ந்து உடனே வேறு ஊர் மாறிச் சென்றுவிட்டார். அச்சமயம் தான் நான் செய்வதறியாது தவித்தபடி நாட்கழித்தபடி இருக்கையில் கபடமற்று நெருங்கிப் பழகும் அத்தானைப் பற்றி தவருக எண்ணி விட்டாய். நான் உண்மையைக் கூற என்னும் போதெல்லாம் நீ கண்டிப்பாக என்னை சற்றுகூடப் பேசவிடாமல் தடுத்தாய். ஒவ்வொரு நாளும் ஒரு பாவமுமறியாத அத்தானைப்பற்றி நீ எண்ணிய பழி கண்டுதான் என் நெஞ்சம் குமுறியதேயன்றி என் நிலை கண்டு கூட கலங்கவில்லை.

என் கணவர் வடதேசத்தில் வேலையில் இருக்கிருர் எனக்கூறி ஊரார் பழி சாராமல் என்னைக் கார்த்தாய். சந்தியா அத்தான் நிரபராதி. நீ இன்றே அவரிடம் சென்று இருண்டு கிடக்கும் அவர் மனதில் அன்பு ஒளி ஏற்றி இன்ப வாழ்க்கை நடத்து. நம் அன்பின்மீதாணையாக நீ என்னைத் தேடக் கூடாது. கவலைப்படாதே. உன் அன்பின் ஆக்ஞையும் குழந்தையின் பாசமும் என் உயிரைக் காக்கும். அதுமட்டுமல்ல, மோகனை என் சக உபாத்தியாயினி ஒருவளின் உதவியால் நேற்று கண்டு பிடித்து விட்டேன். அவர் அன்பற்றவர் அல்ல. எனவே என்னையும் குழந்தையையும் ஏற்றுக் கொள்ள துணிந்துவிட்டார். என்னை விட்டு முன்பு மறைந்த சமயம் அவர் தந்தை இருந்ததால் என்னை ஏற்கவில்லையென்று கூறி என்னை தன்னுடன் வாழ்வில் பங்கு கொள்ள உறுதி அளித்து விட்டார். நீ அத்தானுடன் சந்தோஷமாக வாழ்கிருய் என்று தெரிந்த பின்தான், நான் மோகனுடன் உன்முன் வருவேன். அத்தானிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட போன என்னை மன்னிக்கும்படி சொல். மன்னிக்கும் குணமும் அன்பும் பரிவும் பாசமும் அவர் உடன் பிறந்தவை. மனிதருள் மாணிக்கமான அவருடன் புது வாழ்வு தொடங்க உடனே கிளம்பி அவரிடமே போ..... விடிந்தால் தீபாவளி. அத்திருநாளிலே புது மணப்பெண் போல அத்தானின் இதயத்தில் அன்பு என்ற ஒளியை ஏற்றி மகிழ்வாய் என்று நம்புகிறேன்.

இங்ஙனம் உன் நன்மையை நாடும்
பாலாமணி

நீண்ட பெருமூச்சுடன் கண்ணீர் வழிய சந்தியாவைப் பார்த்தான் குமார்.

"உன் காதல் கணவன் கயவன் என்று தவருக எண்ணி விட்டாய் சந்தியா! நீ சந்தேகிக்கிருய் என்று தெரிந்தால் கூட உடனே என் உயிர் போய் இருக்கும். உன்னைக் காணுமல் எங்கெங்கெல்லாம் சுற்றி தவித்தேன்" என்று துயருடன் கூறினுன்.

" அத்தான் நான் மகா பாவி...........எனக்கு மன்னிப்பே கிடையாதா?" என்பதைத் தவிர சந்தியாவால் எதுவும் பேச முடியவில்லை.

" ஹூம்........எல்லாம் விதியின் விளையாட்டு. போனது பற்றி வீணுய் கவலைப்படாதே. நீ அழுதால் என் இதயம் வெடித்து விடும் போல் துடிக்கிறது. அன்பே........கலங்காதே! பாலா கூறியது போல இனி புது வாழ்வு தொடங்குவோம். பாலாவை கூடிய சீக்கிரம் காண அவள் சொன்னது போல் வருவாள்.........பிரிவினுல் நம் பிரேமை வளர்ந்து இருக்குமேயன்றி குன்றவில்லை. ஆனல் இனி என்னை தவிக்கவிட்டு மட்டும் மறைந்து விடாதே! உம்.... இன்னும் மூன்று நாள் தீபாவளியை முன்னிட்டு விடுமுறை. என்னைவிட்டு கணம் கூட நீ அகலக்கூடாது" என்று சந்தியாவின் கரத்தைப்பற்றியபடி அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

அவனது பார்வையில் மிளிர்ந்த ஆர்வமும் அன்பும் ஊடே நின்ற குறும்பும் கண்டு நாணத்துடன் தலை குனிந்தாள் சந்தியா,

———

உறுதியாய் பழய விஷயங்கள் பற்றியோ எதுவுமே கூறத் தேவையில்லை. தயவு செய்து என்னை புண்படுத்தாதே! நீ நல்லபடியாய் பெற்றுப் பிழைத்துப் பிறகு நாமிரு வரும் வேலைக்குச் சென்று நம் வாழ்வை கழித்து விட வேண்டும். விஞய் போனதைப்பற்றி கவலைப்படத் தயா ரில்லை நான். இந்த வாழ்வுதான் இனி என் சுகவாழ்வு.. அதிகம் ஆசைப்படுவது கூடாது." என்று கடுமையாக வும் வருத்தமாகவும் பேசினுள் சந்தியா.

யாதும் கூறமுடியாத தவிப்புடன் விம்மியபடி அங்கி ருந்து நகர்ந்து விட்டாள் பாலா..........

காலம் ஓடியது. நன்ருய் தூங்கிக் கொண்டிருந்த சந்தியா துர் சொப்பனம்கண்டு விழித்த அவள் சுற்றும் முற் றும் பார்த்தாள். அருகில் பாலாவையும் குழந்தையையும் காணுது தூக்கிவாரிப் போட்டது. அருகில் கிடந்த கடிதத் தைப் பார்த்த அவள் ஏதோ வெறி பிடித்தாற்போல வாசலில் சென்ருள். கார் நின்ற சப்தம் கேட்டு வாசலில் வந்தான் குமார்.

"அத்தான் என்னை மன்னித்து விடுங்கள். பாவி நான். உண்மை உணராது இதுவரை.........." விம்மியபடி கால்களில் விழுந்தாள்.

குமாருக்கோ ஒன்றும் புரியவில்லை. ஆனுல் மனைவி யின் பிரிவால் கூற முடியாத வேதனையில் மூழ்கியிருந்த அவன் சந்தியாவைக் கண்டதும் மட்டற்ற மகிழ்வு கொண்டு அன்புடன் அவளை தூக்கி நிறுத்தி "என்ன சந்தியா! என்னை தவிக்க விட்டு இத்தனை நாள் எங்கே போயிருந்தாய்? என்மேல் உனக்கு என்ன கோபம்? நேரில் கூறி தவறிருந் தால் தண்டிக்கக் கூடாதா?.......அது போகட்டும்.....பாலா எங்கே? ஏன் அழுகிருய்? என்ன நடந்தது? கூருமல் அழுகிருயே சொல்" என்று பதறினுன் குமார்.

"அத்தான்..........அத்... ...தான்.... ....அவசரபுத்தியால் ஆராயாமல் மோசம் நடந்துவிட நானே காரணமானேன். பாலா கூறும் போது பேச விடாமல் கண்டித்து உண்மை உணராமல் தவறு எண்ணிவிட்டேன். என் அறிவுக்கண்ணை இதோ இக்கடிதம் தான் திறந்துவிட்டது....அத்தான் என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுங்கள்......" இதயம் வெடித்து விடுவது போல குமுறிய அவளை அன்புடன் தன் அருகே அமர்த்திக் கொண்டு கடிதத்தைப் பிரித்தான்.

"அன்பு சந்தியா!

மாசற்ற உள்ளமும் தூய்மையே உருவமும் களங்கமற்ற அழகும் படைத்த உத்தமரான அத்தானை நீ தவருக எண்ணி விட்டாய். மனதாலும் அவர் உன்னை யன்றி வேறு பெண்ணைத் தீண்டாத உன்னதமான குணம் படைத்தவர். உன்னிடம் உயிரையே வைத்திருக் கிறவர். அவர் என்னுடன் சகோதர அன்புடனே பழகி வருபவர்.

என்னுடன் வேலைசெய்த மோகன் என்றவரிடம் மனதை பறி கொடுத்தேன். பெண்மையை இழந்த நான் உனக்கு அதனை ஏற்பட்ட என உடல் நிலைமாற்றத்தைக் கண்டு தற்கொலைக்கு வேகச் செய்துவிட்டேன். என்னை நேசித்த மோகன் எதனாலோ என் நிலை உணர்ந்து உடனே வேறு ஊர் மாறிச் சென்றுவிட்டார். அச்சமயம் தான் நான் செய்வதறியாது தவித்தபடி நாட்கழித்தபடி இருக் கையில் கடமையற்ற கொடுங்கிப் பழகும் அத்தானைப் பற்றி தவருக எண்ணி விட்டாய். நான உண்மையைக் கூற என்னும் போதெல்லாம் நீ கண்டிப்பாக என்னை சற்றுகூடப் பேசவிடாமல் தடுத்தாய். ஒவ்வொரு நாளும் ஒரு பாவமுமறியாத அத்தானைப்பற்றி நீ எண்ணிய பழி கண்டுதான் என் நெஞ்சம் குமுறியதேயன்றி என் நிலை கண்டு கூட கலங்கவில்லை.

என் கணவர் வடதேசத்தில் வேலையில் இருக்கிருர் எனக்கூறி ஊரார் பழி சாராமல் என்னைக் காத்தாய். சந்தியா அத்தான் நிரபராதி. நீ இன்றே அவரிடம் சென்று இருண்டு கிடக்கும் அவர் மனதில் அன்பு ஒளி ஏற்றி இன்ப வாழ்க்கை நடத்து. நம் அன்பின்மீதாணையாக நீ என்னைத் தேடக் கூடாது. கவலைப்படாதே. உன் அன்பின் ஆக்கையும் குழந்தையின் பாசமும் என் உயிரைக் காக்கும். அதுமட்டுமல்ல, மோகனை என் சக உபாத்தியா யினி ஒருவளின் உதவியால் நேற்று கண்டு பிடித்து விட் டேன். அவர் அன்பற்றவர் அல்ல. எனவே என்னையும் குழந் தையையும் ஏற்றுக் கொள்ள துணிந்துவிட்டார். என்னை விட்டு முன்பு மறைந்த சமயம் அவர் தந்தை இருந்ததால் என்னை ஏற்கவில்லையென்று கூறி என்னை தன்னுடன் வாழ்வில் பங்கு கொள்ள உறுதி அளித்து விட்டார். நீ அத்தானுடன் சந்தோஷமாக வாழ்கிருய் என்று தெரிந்த பின்தான், நான் மோகனுடன் உன்முன் வருவேன். அத் தானிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட போன என்னை மன்னிக்கும்படி சொல். மன்னிக்கும் குணமும் அன்பும் பரிவும் பாசமும் அவர் உடன் பிறந்தவை. மனிதருள் மாணிக்கமான அவருடன் புது வாழ்வு தொடங்க உடனே இளம்பி அவரிடமே போ..... விடிந்தால் தீபாவளி. அத் திருநாளிலே புது மணப்பெண் போல அத்தானின் இதயத்தில் அன்பு என்ற ஒளியை ஏற்றி மகிழ்வாம் என்று நம்புகிறேன்.

இங்ஙனம் உன் நன்மையை நாடும்
பாலாமணி

நீண்ட பெருமூச்சுடன் கண்ணீர் வழிய சந்தியாவைப் பார்த்தான் குமார்.

"உன் காதல் கணவன் கயவன் என்று தவருக எண்ணி விட்டாய் சந்தியா! நீ சந்தேகிக்கிருய் என்று தெரிந்தால் கூட உடனே என் உயிர் போய் இருக்கும். உன்னைக் காணுமல் எங்கெங்கெல்லாம் சுற்றி தவித்தேன்" என்று துயருடன் கூறினுன்.

"அத்தான் நான் மகா பாவி..........எனக்கு மன்னிப்பே இடையாதா?" என்பதைத் தவிர சந்தியாவால் எதுவும் பேச முடியவில்லை.

"ஹும்........எல்லாம் விதியின் விளையாட்டு. போனது பற்றி விஞய் கவலைப்படாதே. நீ அழுதால் என் இதயம் வெடித்து விடும் போல் துடிக்கிறது. அன்பே.......கலங் காதே! பாலா கூறியது போல இனி புது வாழ்வு தொடங்குவோம். பாலாவை கூடிய சீக்கிரம் காண அவள் சொன்னது போல் வருவாள்... ....பிரிவினுல் நம் பிரேமை வளர்ந்து இருக்குமேயன்றி குன்றவில்லை. ஆனுல் இனி என்னை தவிக்கவிட்டு மட்டும் மறைந்து விடாதே! உம்.... இன்னும் மூன்று நாள் தீபாவளியை முன்னிட்டு விடுமுறை. என்னைவிட்டு கணம் கூட நீ அகலக்கூடாது" என்று சந்தியாவின் கரத்தைப்பற்றியபடி அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

அவனது பார்வையில் மிளிர்ந்த ஆர்வமும் அன்பும் கூட நின்ற குறும்பும் கண்டு நாணத்துடன் தலை குனிந்தாள் சந்தியா.

———

கருணை நிதி

(ஸத்ஸங்கி)

"பணம் வேண்டும், பணமே வேண்டும், பணம் தான் வேண்டும்" என்பதே பெரும்பாலோர் கடவுளிடம் செய்யும் பிரார்த்தனையாயிருக்கிறது. அந்தப் பிரார்த்தனையைச் செய்து வரம் பெற்ற எத்தனை பணக்காரர்கள் உலகில் உத்தமர்களாக இருக்கிறார்கள்? உத்தமர்களாக இருக்க வேண்டும் என்பது பலபேருடைய ஆசைதான். ஆனால், பணம் மாத்திரம் பெற்றிருப்பதனாலே, யாரும் உத்தமனாகி விட முடியாது. எல்லாரிடத்தும், எவ்விடத்தும் எல்லாக் காலங்களிலும் நெறி சார்ந்த முறையிலே கள்ளமின்றி உள்ளத்தன்போடு உபகாரியாயிருப்பவன்தான் உத்தமன். அப்பேற்பட்ட உத்தமர்களிடத்தில் அன்பு என்னும் சக்தி கருணை என்கிற உருவெடுக்கும்போது தான் அவர்கள் உபகாரிகளாகச் செயலில் ஈடுபடுகிறார்கள். உலகில் தோன்றிய பெரியோர்கள் யாவரும் கருணையால்தான் அரிய பெரிய காரியங்களைச்சாதித்தார்கள், கஷ்டங்களைத் தாங்களேசகித்துப் பிறருடைய கஷ்டங்களையும் துக்கங்களையும்போக்கினார்கள். தியாகமூர்த்திகளாகத் திகழ்ந்தார்கள். எனவே, உத்தமனாக வாழ்வதற்கு இன்றியமையாதது அகண்ட பெரும் கருணை. (Cosmiccompassion) உலகத்தில் எத்தனையோ நாடுகளில் செல்வமும், உணவுப்பொருள்களும், மற்ற பல பொருள்களும் மிகுந்திருக்கின்றன. லக்ஷாதிபதிகளும், கோடீஸ்வரர்களும், கல்விமான்களும், கைத்திறம்படைத்தவர்களும், ஆக்கவேலை நிபுணர்களும் இருக்கிறார்கள். ஆனால் கோடிக்கணக்கான மக்கள் பட்டினியிலும், பஞ்சத்திலும், அறியாமையிலும், நோய்களிலும் அல்லற்பட்டு மாய்கிறார்கள். பிறநாடுகளோ, சமுதாயங்களோ, மக்கள் கூட்டமோ மடியவும் துன்புறவும் பேசுகிறார்கள், கெட்ட காரியங்களைச் செய்கிறார்கள். ஏன்? செல்வமோ, திறமையோ, பிறபொருள்களோ படைத்த மனிதரோ, நாடுகளோ, சமுதாயங்களோ கருணையாகிய நிதியைப் பெற்றிருக்காத காரணத்தினால்தான். அப்படியிருந்தும், உலகில் அவ்வப்போது ஆங்காங்கு கருணைநிதி மிக்க உத்தமர்களாகிய மகான்களும் மகாத்மாக்களும் தோன்றி வாழ்ந்ததினாலே இன்னும் வாழ்வதினாலேதான்—உலகம் இப்போது உள்ள நிலையில் இருந்து வருகிறது.

உத்தமனுக்குக் கருணை நிதி தரும் ஆனந்தமே ஆனந்தம். அவன் கருணையே வடிவாகி விடுகிறான். அப்போது அவன் எண்ணத்தில் எல்லாம் கருணையே கமழும். அவன் சொல்லும், பேசும், வார்த்தையிலும் கருணையே ஒலிக்கும். செய்யும் காரியங்களில் எல்லாம் கருணையே பரிணமிக்கும். அவன் பிறந்த நாடே புண்ணிய நாடு. அவன் தன்னைப் படைத்த ஆண்டவனிடம் வேண்டுவது கருணைநிதி ஒன்றே. "புத்திரன் வரம் வேண்டும்" என்று கோரிய சாவித்திரிக்கு எமதர்மராஜன் அந்த வரத்தைத் தந்துவிட்டான். அவ்வரம் நிறைவேறப் பதிவிரதையாகிய அவளுடைய இறந்த கணவன் மீண்டும் உயிர் பெற வேண்டியதாய் விட்டது. ஆகவே அவளுடைய கணவனாகிய சத்தியவானை மீண்டும் உயிர் பெறச் செய்தான். எமதர்மராஜன் என்பது கதை. அதே போல கருணைநிதியை அருளும் கடவுள் உத்தமர்களுக்கு வேண்டிய பிறயாவற்றையும் அருளுகிறான். உலகில் தோன்றிய மகா புருஷர்களின் வரலாறுகளிலே நாம் அறியக்கிடக்கும் பேருண்மை இதுவே.

இந்த உண்மையைத் தெரிந்தும் அறிந்தும் ஆர்வத்தோடு ஆண்டவனிடம் இப்பெரும் வரத்தைக் கேட்கவாவது ஒருவனுக்குத் தெளிவான, கூர்த்த அறிவு அதாவது மதி வேண்டும். ஆகவேயன்றோ "மதிவேண்டும் நின் கருணை நிதிவேண்டும்" என்று தவத்திரு இராமலிங்க வள்ளலார் பாடி வரம் கேட்டார்.

இவ்வரத்தைக் கேட்க உள்ளத்தூய்மை வேண்டும். துணிவுவேண்டும். அசையாத பக்தி வேண்டும். உத்தமர் உறவு கொண்டு, பொய்யர் இணக்கம் விட்டு, இறைவனின் "பொருள் சேர்" புகழ் பேசி, மெய்நெறியாம் பெருநெறி பிடித்தொழுகி, பிடிவாதப் பேய்களுக்காளாகாமல், காமம் வெகுளி மயக்கம் இன்னாச் சொல் தவிர்த்து, நன்மதியோடு கேட்டால், "வேண்டுவார் வேண்டுவதே ஈவானாகிய "தனிப் பெருங் கருணையாம் அருட்பெருஞ்சோதி கருணை நிதியைத் தந்தே அருளுவான். "அட்டமாசித்தியும் மெய்யன்பருக்கருள விருது கட்டிய பொன் அன்னமே!" என்று தாயுமானவர் அகிலாண்டநாயகியைப் புகழ்கிறார்.

எனவே, பூவுலகில் நமக்குள்ள அற்ப ஆயுளில் உத்தமராக வாழ்வதற்கு நமக்கு வேண்டியது கருணையாம் நிதியே. ஆண்டவனிடம் மன்றாடி மன்றாடி உள்ளங்கசிந்து கள்ளம் கபடம் இல்லாது கேட்கக்கூடிய வரம் கருணை நிதியே.

பிள்ளைக்கதை.



"பூரம்"

பக்காத் திருடர்களான சுடலை முத்துவும் மாடசாமியும் பக்கத்து விட்டுக்காரர்கள். இருவரிலும் சுடலை கொஞ்சம் கெட்டிக்காரன். சமயோசித புத்தி அவனுக்கு உண்டு. எங்கேயாவது திருடப்போகும் இடத்தில் மாட்டிக்கொள்ளும்படி நேர்ந்தால் தந்திரமாகத் தப்பித்து வந்துவிடுவான். முன்பு ஒருதடவை ஜமீன்தார் விட்டில் திருடுவதற்குக் கன்னம் வைக்க ஆரம்பிக்கும்பொழுது ஜனங்கள் விழித்துக் கொண்டு அவனைப் பிடித்துவிட்டார்கள். சுடலை என்ன செய்தான் தெரியுமா? 'பெப்பெ'.... என்று பேந்தப் பேந்த விழித்தான், பைத்தியம் மாதிரி. 'சரிதான்! முற்றிய பைத்தியம்' என்று நினைத்துப் பிடரியில் ஒரு அடி கொடுத்து அனுப்பிவிட்டார்கள். 'தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று ஓடி வந்துவிட்டான் சுடலை!

ஆனால் இந்த மாடசாமி இருக்கிறானே, இவன் சுத்த மண்டு. தந்திர மந்திரங்கள் எல்லாம் தெரியாது. இரண்டு மூன்று தடவைகள் கூடப் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொண்டு, கம்பிகளை தினம் மூன்று தடவையாக இரண்டு வருடங்கள் எண்ணியிருக்கிறான்.

சுடலையும், மாடசாமியும் அடிக்கடி சேர்ந்து சேர்ந்து பேசுவார்கள். ஆனால் இரவு வேளைகளில் திருடப்போகும் பொழுது மட்டும் தனித்தனியாகத்தான் போவார்கள்.

சுடலை முத்துவுக்கு பூசணிக்காய் என்றால் ரொம்பப்பிடிக்கும். அந்த வருடம் எல்மனூர் பண்ணையார் விட்டுக் கூரையில் வளர்ந்திருந்த பூசணிக்கொடி அவன் கண்ணில் பட்டு விட்டது. அந்த வருடம் மட்டும், பெரிய பெரிய காய்களாகக் காய்த்துத் தொங்கியது அந்தக் கொடியில். அதைப்பார்த்தவுடன் சுடலைக்கு நாக்கில் ஜலம் ஊறியது.

அன்று எப்படியாவது அதில் ஒரு பூசணிக்காய் 'இளப்பி' விடவேண்டும் என்ற நோக்கத்துடன் தான்அவன் அந்த அமாவாசை இருட்டில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தான், நள்ளிரவு. எங்கும் நிசப்தம். பண்ணையார் விட்டுக் கொல்லைப்புறத்துச் சுவர் ஓரமாக வந்து நின்ற சுடலையின் கண்களில் ஒரு பெரிய பூசணிக்காய் 'பளிச்'சென்று கண்ணில் பட்டது.

மறு நிமிஷம், ஓசைப்படாமல் அடிமேல் அடிவைத்து நடந்தான் சுடலை. இதோ வந்தாகிவிட்டது! 'அடேயப்பா! எவ்வளவு பெரிதுடா இந்தப்பூசணிக்காய்!'. கத்தியால்அதை அறுத்தான் சுடலை. மெள்ளத் தூக்கிப்பார்த்தான். 'ஐயோ! எவ்வளவு கனம்! தூக்க முடியவில்லையே!'—சிரமப்பட்டுத் தூக்கிய அவன் கைகள் பாரம் தாங்காமல் நடுங்கின. அப்புறம் கால்கள் இரண்டும் நடுங்கின. கால் நிலை தவறியது. மறு நிமிஷம் பூசணிக்காயுடன் 'தொபுகடீர்' என்று விழுந்தான் கீழே. அவன் விழுந்த சத்தத்தில் எல்லோரும் விழித்துக்கொண்டு வந்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

'பளிச்'சென்று ஒரு யோசனை தோன்றியது சுடலைக்கு. "அடேடே! இதுதானா பூலோகம்?" என்று சொல்லிவிட்டு எழுந்திருந்து ஓட்டம் பிடித்தான். ஒருவரும் அவனைத் துரத்தவில்லை. ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்துகொண்டு 'யாரோ தேவலோகத்து ஆசாமிதான் பூசணிக்காயிலிருந்து வெளி வந்திருக்கிறான்' என்று சொல்லிக்கொண்டார்கள். உடைந்திருந்த பூசணிக்காயை விழுந்து விழுந்து கும்பிட்டார்கள்.

* * *

பின்கால்கள் பிடரியில் பட ஓடிக்கொண்டிருந்தான் சுடலை. அந்த அவசரத்தில் எதிர்த்தாற்போல் வந்துகொண்டிருந்த மாடசாமியின் மேல் மோதிக்கொண்டு விழுந்தான் அவன்.

"அண்ணே! சுடலை! என்னது ஓடியாறே! என்ன அகப்பட்டுக்கிட இருந்தியா?" என்று கேட்டான் மாடசாமி.

சுடலை இரைக்க இரைக்க விஷயத்தைச் சொல்லிவிட்டுச் சிரித்தான். எப்படி ஜனங்கள் ஏமாந்து போனார்கள் என்பதையும் சொன்னான். அன்று இரவு முழுவதும் சிரித்துத் தீர்த்தார்கள்!

அன்றிலிருந்து மாடசாமிக்கு ஒரு ஆசை வந்துவிட்டது. அந்த பூசணிக்காயைக் கொள்ளையடித்துவிட வேண்டுமென்றுதான்! ஜனங்கள் விழித்துக்கொண்டாலும் சுடலை மாதிரி தப்பித்து விடலாமே என்கிற தைரியம்.

அதே மாதிரி அமாவாசையன்று மாடசாமி பண்ணையார் விட்டுக்கு வந்தான். அடிமேல் அடிவைத்துக் கூரைமேல் ஏறிவிட்டான். சுடலை மாதிரியே, பூசணிக்காயை நறுக்கினான். அவனுக்கும் அதைத் தூக்கச் சக்தி இல்லை. அது படு கனமாக இருந்ததால் சுடலை மாதிரியே 'தடால்' என்று விழுந்துவிட்டான். ஜனங்கள் எல்லோரும் விழித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். சுடலையின் யோசனை அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. உடனே, 'இதுதானா பூலோகம்?" என்று சொல்வதற்குப்பதிலாக அதை மறந்துபோய், "இது தானா பூசணிக்காய்!" என்று அவசரத்தில் கத்திவிட்டான். விழுந்த விழுக்காட்டில் நல்ல அடிபட்டுவிட்டதால் உடனே ஓட முடியவில்லை.

"டேய்! என்னடா கதை அடிக்கிறே, திருட்டுப்பயலே! இதுதான்டா பூசணிக்காய்!...." என்று சொல்லி, ஒரு முரட்டு ஆள் சொல்லி, ஓங்கி ஒரு உதை கொடுத்தான். அதைத் தொடர்ந்து 'மடேர்' 'மடேர், என்று அடியும் குத்தும் சரமாரியாக அவன்மேல் விழுந்துகொண்டிருந்தன! பாவம் மாடசாமி!

தேர்தல் எதிரொலி!

(பரதேசி)



[குறிப்பு :— உலகம் பூராவும் வாயைப் பிளந்து வியந்தவண்ணம் பார்வையிடுவதாக வர்ணிக்கப்பட்ட "ஜனநாயக" முறைத் தேர்தல் நடைபெற்ற பின்பு, வீட்டுக்குள்ளேயும் சரி, வெளியேயும் சரி என்ன நடைபெறுகிறதென்பதைக் குறிப்பாக உணர்த்துவதொன்றுதான் என் லட்சியம்; நான் எந்தக் கட்சியையும் ஆதரிக்கவோ கண்டிக்கவோ இல்லை.]

---

1. பள்ளிகளில்

"ஏய், யாருடா அவன் தொணதொணன்னு பேசறது! ....ஏறி நில்லுடா பெஞ்சி மேலே!"

"எந்தத் தொகுதியில் ஸார் நிற்கணும்?—எத்தனை நாள் ஸார்நிற்கணும்?

∴ ∴ ∴ ∴ ∴

"மாணவர்களே! தேர்தல் பிரசாரங்களுக்கு இதுவரை கொடுத்த உங்கள் செவிகளை இனியாவது ஆண்டு இறுதித் தேர்வுக்கான பாடப்பகுதிகளின் குறிப்புக்களுக்காகச் சிறிது கொடுப்பீர்களானால் மிகுந்த நன்றியுடையவனாயிருப்பேன்!"

"ஸார்! நீங்க அன்னிக்கு (காங்கிரஸ்) தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் (மாட்டுப் பெட்டிக்காக) ஓட்டுக் கேட்கிறபோது பேசிய அதே பாணியில் பேசுகிறீர்கள் ஸார்!—நீங்கமட்டும் தேர்தலுக்கு நின்றிருந்தால் கட்டாயம் எங்கள் ஓட்டையெல்லாம் உங்கபெட்டியிலேயே போட்டிருப்போம் ஸார்!"

"ஒரு சின்னச் சந்தேகம் ஸார்! மாணவர்களெல்லாம் தேர்தல் பிரசார ஊர்வலங்களில் கலந்துகொள்ளக் கூடாதென்று சொல்கிறார்களே!—ஆசிரியர்கள் மட்டும் தேர்தலுக்காகப் பிரசாரம் செய்யப் போகலாமா ஸார்!"

"டேய், அதிகப் பிரசங்கி, வாத்தியாரைப்போய் வகுப்பு நடுவில் இப்படியெல்லாம் கேட்கலாமாடா!—மாட்டுப்பெட்டி ஜனநாயகப்பெட்டிடா!—அதுக்காக மட்டும் ஆசிரியர் பிரசாரம் செய்யலாமடா! வாயை மூடுடா.

"மாணவர்களே! கவனியுங்கள்.......எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று அம்சங்கள் ஒரு வாக்கியத்தில் முக்கியம். செயப்படுபொருள் குன்றாத வினையில் – இந்தி இலக்கணத்தில் இந்த மூன்று அம்சங்களில் அதிகாரபேதம் ஏற்படுகிறது. இதுவரை எழுவாய் சொற்படி கேட்டுவந்த பயனிலை எழுவாயோடு கூடி நட்புகொள்ளும் "நே" விகுதியின் காரணமாக எழுவாய்க்கு எதிராக வேலைசெய்கிறது. செயப்படுபொருளுக்குத் தன் ஆதரவைக்கொடுக்கிறது. ஆகையால் இறந்தகாலத்தில், செயப்படுபொருள் குன்றாத வினையின் எழுவாய்க்கு அதிகாரமில்லை. அதைப் பயனிலை அனுசரிக்காது......."

"ஸார்! இதைச் சுலபமாக இப்படி ஏன் ஸார் சொல்லக்கூடாது? ......காங்கிரஸ் கட்சி எழுவாய் போன்றது—தி. மு. "நே" விதிபோன்றது. தி. க. தொடர்பு கொண்ட காரணத்தால் காங்கிரஸ் கட்சிக்கு எப்படி மதிப்புக் குறைந்ததோ அப்படியே இங்கே எழுவாய்க்கு மதிப்பில்லாமல் போகிறது—இப்படிச் சொன்னால் எங்களுக்கு நன்றாகப் புரியும் ஸார்!"

∴ ∴ ∴ ∴ ∴

2. பலசரக்குக் கடையில்.

"என்ன தம்பி! வரவரக் கடைக்குச் சரியான நேரத்துக்கு வர்றதில்லே?"

"ஒன்னுமில்லேங்க! எங்கள் சங்கத்திலே அடுத்து வரும் தேர்தலிலே நிக்கறத்துக்காக வகுப்பு நடத்தறோம்—அங்கே கொஞ்சம் தாமதமாயிடுத்து"

"சரித்தான்டா போடா! நேரங்கழிச்சு வந்ததுமல்லாமே பதில்வேறு பேசறே?—நான் எது கேட்டாலும்

எது சொன்னாலும் (காங்கிரஸ்) எம். எல். ஏ. மாதிரி அடக்கமாக இருக்கணும்டா—இதை முதலில் கத்துக்கோ அப்புறம் தேர்தலுக்கு நிற்கலாம்டா!—போடா கழுதை!

∴ ∴ ∴ ∴ ∴

"என்ன செட்டியார்! நல்ல எண்ணெ வேண்டுமென்று கேட்டால் கலப்பட எண்ணெயைக்கொடுத்து விலையைக் கூட்டியிருக்கிறீர்களே!—இது நியாயமா?"

"நியாய அநியாயத்தைப்பத்தி என்னைக் கேட்காதீங்க! இப்பவெல்லாம் அசலைவிடக் கலப்படத்துக்குத் தான் அதிக மதிப்பு. எதிலே தான் கலப்படம் இல்லேங்கறீங்க? ஏதோ படுமோசமாக இல்லாமே சுமாராக கொஞ்சம் நல்லெண்ணெத்தோடு நல்ல எண்ணெயையும் கலந்து கொடுக்கிறேனே அதை நினைக்கணுமா?

"ஸார்! இந்த நோட்டுச் செல்லாது போலிருக்கிறது. ....வேறே கொடுக்கிறீர்களா?"

"எந்த நோட்டு ஐயா செல்லாது?......நான் என்ன கள்ள நோட்டு அடிச்சா செலாவணி செய்கிறேன்....... உழைச்சு வாங்கின காசு ஐயா!—நீங்க நம்பி வாங்கிக்கிட்டுப்போறு உங்களை நம்பி இன்னொருத்தன் வாங்கிட்டுப் போகிறான்.

∴ ∴ ∴ ∴ ∴

3 வீட்டிற்குள்ளே!

"அப்பா! அன்னிக்கு ஒரு மாமா தந்தாரே! அதே பிஸ்கோத்து வாங்கிக்கொடு அப்பா!.......?"

"எதுடா?....அந்த "எக்ஸ் நாட்" பிஸ்கத்தா?....தேர்தல் சமயத்தில் ஓட்டு வாங்கறதுக்காக அபேட்சகர்கள் வாங்கிக்கொடுப்பதையெல்லாம் மறுபடி எங்கேயாவது வாங்கித்தரமுடியுமா?......

∴ ∴ ∴ ∴ ∴

"ஏய் வஸந்தி! அங்கே என்ன பிரசங்கம் பிளக்கிறது! ....பரீட்சைக்கு வேண்டியதை வைத்துக்கொண்டு படிப்பயா இல்லை..."

"நீங்க ஏன் குழந்தையைக் கரிக்கணும்!....பரீட்சையில் பாஸ் செய்தால் தான் கல்யாணமாகுங்கறது ஒண்ணுமில்லே—நன்றுப்பிரசங்கம் பண்ணத் தெரிஞ்சால் நாளைக்கு எலக்ஷனில் நின்னுட்டு போறு—தோற்றாலும் ஜயித்தாலும் பேசத் தெரிஞ்சவளுக்குக் கட்டாயம் கல்யாணம் ஆகிவிடும்"

"ஆமாண்டி அம்மா!....உனக்கும் சரி உன் பொண்ணுக்கும் சரி . அந்தயோக்யதை நிறைய இருக்கு!

∴ ∴ ∴ ∴ ∴

"சொன்ன சொல்லைக் காப்பாத்தணும்கற எண்ணம் கொஞ்சம் கூட வேண்டாமா?"

"யாருக்கு?....இந்த எம். எல், ஏக்களுக்குத் தானே?'

"அவர்களைச் சொல்லல்லே!—உங்களைத்தான், சாயந்திரம் வருகிறபோது அந்தப்புடவையை வாங்கி வருவதாகச் சொன்னீர்களே!"

"ஓ அதுவா?....அது ஆபீஸுக்குப் புறப்படும் சமயம்...தேர்தல் சமயத்தில் சொன்னதையெல்லாம் எப்படி...."

"போறும் போறும்....மேலும் சொல்லவேண்டாம்... நானும் அந்த "ஸ்விட்" செய்யவில்லை..."

∴ ∴ ∴ ∴ ∴

"ஏய்மணி! லலிதா!—வரவர உங்கள் அப்பா செய்யற அநியாயம் சகிக்கல்லே!....இப்படியே அவர் தொடர்ந்து அடாபிடிச் செலவு செய்து குடும்பத்தைக் குட்டிச்சுவர் அடிக்கிறார்...."

"ஆமாம்! அம்மா; நாங்களெல்லாம் அப்பாமேலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கட்டாயம் கொண்டுவரப் போகிறோம்...இந்தப் "பிச்சை" மட்டும் துரோகி. அவனை நம்பக்கூடாது....அவன் அப்பா கட்சியில் தான் சேருவான்"

விளம்பர வாசகங்களிலே!

"வடக்கே இமயமலை. இருக்கிறது . தெற்கே குமரி முனை இருக்கிறது....வடக்கு உயர்ந்து நிற்கிறது....தெற்கு தேங்கி நிற்கிறது....தெற்கை வளப்படுத்த என்ன வழி?

நீங்கள் வாங்கி உபயோகிக்க வேண்டிய "குமரி முனை" மார்க் புகையிலைப் பொட்டணங்களே!

கழுதை பொறுமையின் சின்னம். ஒரு காலத்தில் கழுதைதான் போக்கு வரத்துக்கு இன்றியமையாத சாதனமாயிருந்தது—இன்றும் உங்கள் அழுக்கு மூட்டைகளைச் சுமந்து சென்று, வெளுத்துத்தருவது கழுதையே!

ஆகையால் நீங்கள் "கழுதை" மார்க் சோப்பிற்கே உங்கள் மனமார்ந்த ஆதரவை அளிப்பீர்களாகுக. ஜய் கழுதை.

5. நாடக வசனங்களிலே!

"என்னடா! எலக்ஷனுக்கு நின்னவன் எக்கச்சக்கமாச் செலவு செய்தாப்பலே நீ பாட்டிலே வாரி விடறே! எவன் விட்டுச்சொத்துடா இது?...... நான் உழைச்ச காசடா!"

"சரித்தாம்பா! என்னமோ பிரமாதமாப்பேசறே!... ஆத்திலே போறதண்ணி அப்பாகுடி ஐயாகுடி!...இந்தப் பக்கத்து எழுநூத்தம்பது ஓட்டும் அப்படியே "லாட்டா" வாங்கித்தரேன்னு ரூ ஆயிரத்தைநூறையும் நீ வாங்கி ஏப்பம் விட்டகதை யாருக்குத் தெரியாது?—இது தானே உழைப்பு!

6. பொதுஜனப் பேச்சு

"இதென்னய்யா சுத்த "நியூஸன்ஸா"ப்போச்சு!.... எலக்ஷனுச்கு நிற்கிறவன் எழவெடுக்கறமாதிரி பொழுது விடிஞ்சா அஸ்தமிச்சாத் தொல்லை கொடுக்க வந்துடறான்!"

"ஆமாம்! நீங்க "இன்ஸால் வென்ஸி" கொடுத்துடறதா மிரட்டறது தானே?"

7. மேடைப் பிரசங்கம்

"பாட்டுக்கேட்க வந்த இடத்திலே இந்த நாட்டைக் கெடுக்கும் காட்டுக் கத்தல்களை எப்படி நாம் கேட்டுச் சகித்துக்கொள்ள முடியும்? இந்த வழியில் சந்தி சிரித்து முந்திப்பிந்தி தெரியாதவர்களிடம் முன் பல்லைத் திறந்து காட்டுவானேன்? சிந்தியுங்கள்! உங்களை நான் வந்திக்கிறேன்! சிந்திக்காமல் செயல் புரிய நாம் என்ன மதியற்ற மந்திகளா! (கரகோஷம்)

முடிவுரை!

"ஆகையால்—அன்பார்ந்த வாசகரே! வாசகிகளே! நான் ஐந்தாண்டு தவமிருந்து அடுத்த தேர்தலில் நிற்க— முடிவு செய்து விட்டேன். என்பெட்டி "டச்சோந்திப்" பெட்டி. நான் நிற்கக் கூடிய தொகுதி கடைசி கட்டத்தில் எனக்கு எதிர்ப்பே இருக்க முடியாத இடம். தயவு செய்து உங்கள் ஓட்டுகளையெல்லாம் எதிர்க்கட்சிக்காரருக்கே போடுங்கள். ஏன் என்றால் என் பெட்டி "பச் சோந்தி"ப் பெட்டி!

———



விநாயகர் பூஜை

(ரஸிகா)

ஆங்கோர் பங்களா வாசல்
அருகே சிறுவர் சிறுமியர் கூட்டம்.
தேங்காயுடைந்தது போலே
தெருவில் கிடந்தது பிள்ளையார் பொம்மை.

"யாரடி அங்கே, எழுந்துவா இங்கே,
பாரடி இந்தப்பாழும் செய்கையை
எவனே ஒருவன் ஏதோ சொன்னான்
அதனால் விளைந்த அவதியைப்பாரு."

"மாமா, மாமி, ரங்கன் வந்தான்,
சாமி பொம்மை தங்கம் தந்தாள்,
சப்பரம் கட்டி ஊர்வலம் விட்டோம்"
"அப்புரம் நடந்தது? அவனைக் கேட்போம்."

"யாரோ ஒருவன் தெருவில் வந்தான்
கருப்புச் சட்டை தலையும் மொட்டை
பிள்ளையார் பொம்மையைப் பிடுங்கி
எறிந்தான்
கள்ளனைப்போலே இருளில் மறைந்தான்"

"தீயவர் வருவர் நல்ல செய்கைக்கு.
தீமை விளைக்கக் குறுக்கிடுவார்கள்.
அவரைப்பயந்து நடப்பது பிழையே.
அதனால் நமக்குத்திங்குதான் விளையும்."

பயமுமில்லை கதையுமில்லை
ரங்கனைப்போல வீரன் உண்டோ?
"கையிலிருந்ததை தட்டிப்பறித்துக்
கயவன் தரையில் வீசி மறைந்தான்.

போனால் போகுது தங்கப்பெண்ணே!
மண்ணால் செய்த பொம்மை உடைந்தது.
வெண்கலத்தாலே வெள்ளியினாலே
விநாயகர் பொம்மை அம்மா தருவாள்.

மண்ணால் செய்ததை மடையன் உடைத்
தான்
பொன்னால் செய்ததைத் திருடிப்போவான்.
ஆதலினாலே தங்கப் பெண்ணே!
அப்பா சொல்வதைச் சரியாய் கேள் நீ."

"விநாயகன் என்றால் கடவுளின் ரூபம்
கடவுளை நம்பு. கடவுளின் வடிவம்
உந்தனகத்தில் தானே தோன்றி
ஒளிவடிவாக உறுதியாய் நிற்கும்.

உள்ளத்திருக்கும் ஒளியைப்பகைவர்
கள்ளத்தனமாய்க் கொள்ளையடிக்க
எத்தனை செய்தும் பயன் பெறாது.
தாமே மாய்ந்து மடிவர் அதனால்

கடவுளை உள்ளக்கோயிலில் அமர்த்தி
காலையும் மாலையும் கடவுளைத்தொழுது
கடவுள் காட்டிய வழியே உலகில்
கவலையில்லாமல் களித்து வாழ்வாய்"

ஆங்கோர் பங்களா வாசல்
அருகே சிறுவர் சிறுமியர் கூட்டம்.
கடல் மடைதிறந்தாற் போலே
கடவுளின் நாமம் ஒலிக்குது ஆங்கே.

உடையவர்

திருலோக சீதாராம்

1

[மகா பாரதப் போர் முடிந்து நெடுங்காலத்துக்குப் பின் இந்திரப்பிரஸ்த நகரில் பாரத வெற்றிவிழாக் கொண்டாட்டம் நடைபெறுகிறது]

மாபா ரதம்முடிந்து மன்னர் பகைமுடித்துப்
பூபாரம் தீர்த்துப் புயல்வண்ணன் கோபாலன்
வந்தவழி மீண்டே வளமார் துவாரகையைச்
சொந்த மெனக் கொண்டான்.

சோதரர்கள்தாம்பொருத
போர்அரவம் ஓய்ந்து, புகைஉயிர்த்த நெஞ்சத்து
வீரர் தமைத்தாமே வீழ்த்தி அழிவுற்று
எஞ்சியதோர் மாநிலமும், ஏறும் அரியணையும்
பஞ்சம் பசிபிணியும் பாரதப்போர் வென்றியினல்
சூடியதோர் வாகை சுடுநெஞ்சும் கொண்டவனய்
வாடாத நல்லறத்தின் வாழ்வுக் கொருபுகலாய்
இந்திரமா நன்னகரில் ஏய்ந்த முடிசூடிச்
சந்ததமும் கண்ணனடி சார்ந்த மனத் தருமன்

தம்பியரின் தோள் வலியும் தான்செய் தவவலியும்
நம்பி யரசிருந்த நாளையிலே,

யாழ்பாடும்
பாணனும் பத்தினியும் பாரதர்க்கு வேந்தர்தமைக்
காண விரும்பியவர் கால்நடையாய் வந்தடைந்து
ஆசார வாசல் அணுகினர்.

அவ்வேளை
ஓசை மணிமுரசம் ஓங்கியெழ வாழ்த் தொலித்துச்
சங்கம் முழங்கச் சதுரங்க சேனைகளும்
பொங்கி அணிவகுத்துப் போவதுவும் முந்துவகை
மங்கலங்கள் பாடி மாதர் மணிவிளக்கம்
அங்கை எடுத்துவர, அந்தணர்கள் கும்பங்கள்
ஏந்தி வர, எங்கும் எழுந்தார வாரமுறப்
பூந்தோ ரணம் கொஞ்சும் பொன்னகரின் வீதியெல்லாம்
கண்டு வியந்தார். களிபேர் உவகைக்குக்
காரணமேன் என்றவரும் கருதினர்.

[வெற்றிவிழா ஊர்வலம் செல்கிறது. ஜனக்கூட்டம் வெள்ளமாகப் பெருகி ராணுவ அணிவகுப்பைத் தொடர்ந்து செல்லுகிறது]

கொட்டுபேரி கொட்டுபேரி
 கொட்டுபேரி கொட்டடா
எட்டுகின்ற திசைகள் எட்டும்
 எதிரிலா வலத்திறல்
கொட்டுபேரி கொட்டுபேரி
 கொட்டுபேரி கொட்டடா
மட்டிலாத புகழ் மணக்க
 மண்டலத்து மன்னர்கள்
கொட்டுகின்ற திறைகள் கொண்டு
 குடை நிழற்றுங் கோமகன்
தருமமே தழைத் துயிர்த்த
 தரும பூபன் ஆட்சியில்
பெருமை கொண்ட நாளிதென்று
 பெரிய பேரி கொட்டடா
கொட்டுபேரி கொட்டுபேரி
 கொட்டுபேரி கொட்டடா.

[பேரி முழக்கம் ஓயவும் யாழ்பாணனும் விறலியும் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனர்.]

பாண: பாணிநாம் இன்றைக்குப் பாக்கியமே செய்தோம்.

பாணி: பாணநாம் செய்திருக்கும் பாக்கியம்தான் என்னே?

மாண: புல்லியரைப் போர்வென்று பொன்மகளின் கூந்தல்
வில்லாளர் முடித்திட்ட வென்றிதிகழ் நன்னாள்.

பாணி: வில்லாளர் வில்லுக்கு வேகம் அளித்திட்ட
மெல்லியளின் கற்பனலே மேன்மையென்று கூறு.

பாண: காண்டிபன் வில் வலியாற் காய்ந்தபகை பெரிதே
ஈண்டவனின் புகழ் மணக்கும் இனிய திருநாளாம்.

பாணி: துண்டியதோர் தேர்நடத்தித் தூதுரைத்து மற்றை
வேண்டுவன செய்தளித்தான் வித்தகத்தைப் பேசு

பாண: வீமனெனும் மாமதத்து வேழம்ஒன்றிங் குண்டே?

பாணி: ஆம் அவனின் கதைவலியும் ஆண்டவனின் அருளே.

பாண: சத்திய மெய்ஞ் ஞானசகா தேவனெனும் மேலோன்

பாணி: முத்தியெனுங் கொடுமுடியில் முறுவலித்து
 நிற்போன்

பாண: நகுலனெனும் நற்குணத்து நம்பியவன் பெருமை?

பாணி: மிகு நேமம் காத்துயர்ந்த மேன்மையினல் பாண.

பாண: ஐவருக்கும் தலையானன் அறமுதல்வன் சீர்த்தி,

பாணி: உய்வகையே தானுணர்ந்தான் ஒச்சுவதே
 செங்கோல்.

(வேறு)

பாண: தாழ்விலாக் கோடை தரும பூபனின்
தண்ருடை நிழல் கூடுவோம்.

பாணி: யாழ்நரம்பிசை மீட்டுவோம் புகழ்
பாடியாடுவோம் பாண கேள்.

பாண. நன்று கூறினை நாயகி உளம்
நான் மறுத்திடல் ஒன்றுமோ ?

பாணி: நின்று நேரறக் கண்டு செல்லுவோம்
கேமமிக்கவன் மெய்ப்புகழ்

பாண: சென்ற நாட்களின் செய்தியும் இனிச்
சேரு நாட்களின் மீதியும்

பாணி : நன்று நாமிருந் தாய்குவோம் பின்னர்
நமது பாட்டை நடக்கலாம்.

[நகரில் புதிய மனிதர்களாகக் காணப்படும் பாணனையும் விறலியையும் வாயில் காப்போன் தடுத்துப் பேச்சுக் கொடுக்கிறன்]

காவ: யாரது ? நிற்பீர். யாவரோ நீவிர் ?

பாண: பாரதம் சுற்றும் பாத சாரிகள்.

காவல்: யாழ். அது என்ன ? அருங்கலை வாணரோ ?

பாண: எழிசை வல்ல யாழிசைப் பாணர்தாம்.

காவல்: நல்வரவு உமக்கே. நாட்டின் திருநாள்.
மல்லரும் வில்லரும் மாகவி வாணரும்
பாண்டவர் முன்றில் பரிசில்கள் பெற்று
மீண்டவர் செல்லும் மேதகு நாளிது.

பாண: அறிந்தோம் அய்யா. அகமகிழ் இன்றேம்.
குறிப்பாய் — முதலில் — குருக்ஷேத் திரத்தில்
வில்லை கழுவ வெலவெலத் திருந்த
கல்லெனும் திண்டோட் காண்டிவன் என்னும்
மன்னவரைக் கண்டு மகிழ்ந்திட விருப்பம்.

காவல: என்ன துணிச்சல் ? எளனம் புரியும்
திறமைப்புடனே இங்கு நீர் வந்திர் ?

பாண: குறைபட ஏதும் குறித்திலோம் அய்யா.
குற்றம் எனில் பொறுப்பீர். கோமகன்
சுற்றம் சொலத் துணிவிலான் ஆகி
நின்றதால் அன்றே நீதியால் கண்ணன்
நன்றுதன் நாவால் நல்லுரை வழங்கவும்
பாரத ஞானப் பழம் எனும் கீதையாம்
சாரமெய் ஞானச் சாத்திரம் கண்டது.

காவல்: போற்றிடும் போற்றுவீர்...............

பாண: ....போருன் கோடா விடினும்
தூற்றுவோம். மெய்ப்புகழ் தோய்ந்தவர் மாண்பை

காவல: பாணரே பொறுப்பீர். பார்த்தனும் வேந்தர்க்
காண விழைந்திர காதலால். ஆயினும்!

பாண: ஆயினும்? தடையேதும் அடியேற் குளதோ!

காவல்: ஐயா தடையிலை. ஆயினும் பாண்டவர்
மெய்யுயிர் என்ன மேவிடும் விசயன்
மெய்யாய் ஈங்கிலை.

பாண: ....மேவியது எங்கோ ?

காவல் பாரத வெம்போர்ப் பகைபழித்திட்ட
சாரதி தன்னூர் மீண்டபின் ஆங்கே
யாதவர் கலாம்விளைத் திட்டே தம்முள்
பேதமுற் றவராய்ப் பிழைபல புரிந்தார்.

பாணன்: புரிந்ததால்?

காவல்: புரிந்ததால் துவாரகா புரிக்கு வருகென்
விரைந்தொரு தூது விடுத்தனன் கண்ணன்

பாண: யாதவர் பிணக்கை அறுக்கவும் மற்று
மாதவன் கண்ணன் மகிழ்ந்திடப் புரியவும்
என்றே மன்னரும் எய்தினர் கொல்லோ ?

காவல்: நன்றே சொன்னீர். நாயகன் அழைப்பால்
சென்றுளார் பார்த்தனும் செயம்பெறு வீமனும்
திரும்பிடச் சின்னுள் செல்லும். ஆதலால்,

பாண: விரும்பிய விருப்பம் வீணெனச் சொன்னீர்.

காவல்: பாணரே நன்கு பகர்ந்திர் உண்மை.
காணநீர் வந்த காலமும் இனிதே.
வென்றி விழாவை, வியந்து நீர் பாடி
நன்றே பரிசில் நயந்து நீர் செல்வீர்.

(பாணன் தனித்துப் பாணியிடம் கூறல்)

பாண: அதுவா செய்தி? அப்படியானல்
இதுவும் கண்ணன் இயற்றுமோர் கபட
நாடகம் கண்டாய்.

பாணி: நல்லது பாண
பூடகம் இதனைப் பொறுத்து நாம் இருந்து
மேலும் காணலாம்.

பாண: ....மெல்லியல் வாராய்

என்றினைய சிந்தித்து ஏழிசையாழ் பாணர்
எழில் நகரின் வலம் வந்தார் எங்கெங்கும் சுற்றி
மன்றூர நிறைந்தபெரு மன்னவரும் மற்றை
மந்திரிமார் அந்தணரும் மாசனமும் சூழக்
குன்றெளிரும் சுடரென்னக் கொலுவிருந்த தருமக்
கோமகனின் வாசலினைக் கூடிவரும்போது

நின்று நெடு வீதியினில் நேரிழையார் இருவர்
நிமித்திகங்கள் கூறிவரும் நேர்த்தியினைக் கேட்டார்.

மாயக்கார னடி —கிருஷ்ணரி
மகிமைக்கார னடி —ராமாரி
பூமிபாரம் தீர்க்க —கிருஷ்ணரி
போர்நடத்தி வைத்தான் —ராமாரி
தூதுரைத்த தோழன் —கிருஷ்ணரி
தோது சொல்லித் தந்தான் —ராமாரி
காடுறைந்த போதும் —கிருஷ்ணரி
கஷ்டம் போக்கிவிட்டான் —ராமாரி
துயிலுரிந்த போதும் —கிருஷ்ணரி
துணையிருந்தவனடி —ராமாரி
தோற்றுவிட்டதெல்லாம் —கிருஷ்ணரி

தோற்றுவிப்ப வண்டி	—	ராமாரி
துணையிருப்பவண்டி	—	கிருஷ்ணரி
துணையை நாடுவானோ	—	ராமாரி
சூதிருக்கு மோடி	—	கிருஷ்ணரி
சூதருக்குள் சூதன்	—	ராமாரி
கலகம் வந்த துண்டோ	—	கிருஷ்ணரி
கவலை கொள்ளல் ஏனோ	—	ராமாரி
வெள்ளம் போல சேனை—	—	கிருஷ்ணரி
விசயன் கொண்டு சென்றான்	—	ராமாரி
வென்று மீளுவானோ	—	கிருஷ்ணரி
வில்லுங்கொண்டு போனான்	—	ராமாரி
காளை வீமன் அன்றோ	—	கிருஷ்ணரி
கதையும் கொண்டு போனான்	—	ராமாரி
கண்ணன் எண்ணம் என்ன?	—	கிருஷ்ணரி
கதை முடிய லாச்சு	—	ராமாரி
யுகம் படைத்தவண்டி	—	கிருஷ்ணரி
யுகம் முடிக்கப் போறான்	—	ராமாரி

பண்ணிசைக்கும் வேய்ங்குழலான் பார்த்தனுயிர்த் தோழன்
கண்ணன் அழைத்திடச் சென்ற காளை அருச் சுனனும்
எண்ணரிய புகழ்வீமன் ஏறனையான் உடனே
நண்ணியவர் திரும்புகின்ற நாளாகிப் போக
ஒரு குடையின் கீழிருந்து உலகாளும் வேந்தன்
தரும நெறி மணி முரசம் தானதிரும் கோலுவில்
வீற்றிருந்த கொள்கையினில் விழைவிலனுய்ப் பொன்னங்
கிற்றிசைந்த மந்திரமா மாளிகையுட் சென்றான்.

2

(சகாதேவனும் தருமபுத்திரனும்)

சகாதேவன்—அண்ணா வணக்கம்,

தருமர்—வா...சகாதேவா

சகா—துவாரகைச் சேதி?

தருமன்—தொன்மறை நாயகன்
எண்ணம் இதுவென எப்படித் தெரிவேன்?

சகா—ஏதோ மாயம் இங்கிதில் உள்ளது.

தரும—இருக்கலாம் ஆனால் என் செயக்கூடும்?

சகா—கலகச் செய்தியும் கண்ணனால் அதனை
விலக்கிட இயல வில்லை யென்பதும்

தரும—எல்லாம் புதிர்தான். ஏழையர் நாமே.

சகா—ஏனோ பின்னர் இருவர் தம்மையும்
ஏகிடச் செய்தீர்? இன்னமும் திரும்ப
வில்லையே அண்ணா

தருமன்— ......வீண் சஞ்சலத்தால்
விளையும் பயன் ஏன்?

சகா— ....விளைவதை அறிவேன்

தருமன்—அறிந்திடில் நானும் அறிந்திடக் கூறு.

சகா—யுகம் முடிவென்னும் ஊழ்வினை உற்றது.

தருமன்—உடையவன் ஒருவனே, உளனவன் கண்ணன்
உள்ளம் என்னவோ அதுவே ஊழ்வலி.

சகா—உண்மைதான் அண்ணா! உலகெலாம் அவனே
உண்பான் உமிழ்வான் உமிழ்ந்ததை உண்பான்
யாவும் அலகிலா அவன் விளையாட்டே

தரும—தோல்வியும் வெற்றியும் தோய்ந்திட நம்மைத்
தொல்லைகள் செய்ததும் தோழமை காட்டிப்
பாரத நாட்டிற் பரிவுடன் சோதரர்
வாழ்ந்த நாள் போக வாள்கொடு நம்மை
நாமே சாய்த்திட நாயகன் செய்ததும்.

சகா—மாபாரதமாய் மாயவன் புரிந்தான்.

தரு—மற்றும் ஏதோ சூழ்ந்துளான் மாயம்.

சகா—வருவது வரட்டும். வானவன் விருப்பம்
தடுத்து நாம் நிற்கத் தரமும் உண்டுகொல்?

தரு—தடுக்கும் உரிமைதான் தந்துள்ளானா?

சகா—எடுப்பான் பிடிப்பான் ஏற்றுவான் உயரக்
கொடுப்பான் பெரும்பதம். கொண்டவன் பாதம்
துணையெனப் போற்றித் துயரழிந் திருப்போம்.

தரும—துரௌபதி எங்கே? துணையென நெஞ்சில்
துய்ய சேவடியைத் தோய்த்தவள் இருப்பாள்
அவளே மாண்பொருள் அறிந்தவள் அப்பா?

சகா—தூயவன் பாதம் துணையெனக் கொண்டே
துயரொழிந்திட்ட தூய்மையின் பிழம்பு.

தரும—நமக்கும் அவன் துணை யல்லால் கதியிலை.

சகா—நான் வருகின்றேன் நாமினும் காண்போம்

3

அதே சமயத்தில் துவாரகையில்—வேய்ங்குழல்
இசை பொழிகிறது/பலராமன் கண்ணபெருமா
னைச் சந்திக்கிறான்.

பலராமன்—கண்ணா, கண்ணா.

கண்ணன்—அண்ணா...என்ன?
பலரா—இன்னுமா இன்னிசை
ஈதுனக் கழகா?

கண்—இன்னுமா என்றால்? என்ன நான் செய்ய?

பலரா—யாதவ குலத்தார் அழிவுறு கின்றார்
ஒருவரை மற்றவர் ஒறுத்து மடிதல்
பார்த்துமா இன்னும் பராமுகம் கண்ணா?

கண்—பொறுப்பீர் அண்ணா. புத்திமை மறந்து
புடைத்தவர் தம்மைத் தாமே யழித்தால்
புகுந்திடை விலக்குதல் பொல்லாங் கன்றோ?

பலரா—நன்று நன்று நன்றுநின் கொற்றம்.
நாடெலாம் நலிந்து நசித்திடும் வரையும்
நகை புரிந்திருப்பாய் நான் சகித்திடவா!

கண்—நான் செயக்கூடிய நற்செயல் இதுதான்

பலரா—நாயகன் இவ்விதம் நாடகம் ஆடினால்
நாட்டவர் துயரம்? நன்றுநின் கொள்கை.

கண்—தக்கது நடைபெறும் தருணமே காத்துத்
தமியேன் இன்னும் தயங்கி நிற்கின்றேன்.

பலரா—தாரணி மக்கள் தாமழி வுற்றபின்
தருணம் வருமுன் தயவும் கனியும்.

கண்—தருணம் வந்தே தயங்கி நிற்கின்றேன்.
தருக்குடன் செருக்கும் தாமே அழியும்
தருணம் வந்தே தயங்கி நிற்கின்றேன்.

பலரா—என்றுமுன் போக்கே இதுதான். இனிமேல்
இங்கு நான் நில்லேன் ஏகுவேன் என்வழி.

(அதிர்ச்சி)

கண்—அண்ணா.. அண்ணா...அய்யோ பாவம்....
பண்ணூர் வேய்ங்குழல் பாடுவதேன் தொழில்.

(வீமார்ச்சுனர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டே கண்ணன் திருமுன் வருகின்றனர்.)

அர்ச்சு—கண்ணா... கண்ணா. அண்ணா என்னது?

வீமன்—அர்ச்சுன அதுபார்! அறிதுயில் புரிவான்.

அர்ச்சு—ஆமாம். வீமா. அயர்வு போலும்.

(படுக்கையில் சயனித்தவாறே கண்ணபெருமான் அவர்களை வரவேற்கிறான்)

கண்—யாரது அர்ச்சுனா? அன்பனே வாராய்.

அர்ச்சு—அண்ணன் வீமனும் அடியனும் வந்தோம்.

கண்—வருவீர் வருவீர். வான்புகழ் கொண்டீர்
வருக. நும் வருகை நல்வர வாகுக.

வீமன்—நாரதன் வந்தான், துவாரகா புரியில்
யாதவர் கலகம் என்றுரை செய்தான்.

கண்—ஆமாம் அப்பா. அதனையான் அடக்குதல்
ஆகாதென்றே அன்புடன் நுமக்குச்
செய்தியனுப்பினேன்—செயல் திறம் புரிவீர்!
நலந்திகழ் உங்கள் நாயகி மற்றும்
நாடெலாம் சுகமா? நல்லறம் ஒன்றே
நாட்டும் தொழிலே நாடிடும் தரும
நாயகன் செங்கோல் நலியா துளதா?

அர்ச்சு—யாவும் யாவரும் யாதவ நின்னருள்
போற்றி வாழ்கின்றோம். புதுமையாய் ஒருசொல்
விடுத்தாய், எம்துணை வேண்டினேன் என்று.
விந்தையாம் இந்த விடுகதை உண்மை
கண்டு வரவும் கட்டளை ஏற்றுக்
கடன் புரிந்திடவும் காதலால் விரும்பி
யாதவ நின்னிடம் மன்னன் அனுப்பினன்.

கண்—நல்லது, மகிழ்ந்தேன் நண்பர்காள், உங்கள்
வில்லும் கதையும் விளைத்திடும் அச்சம்;
அதனால் யாதவர் அடங்குவர்; நாடும்
அமைதியில் ஆழும்; என்றே அழைத்தேன்.

வீமன்—கண்ண பிரானே கருணையங் கடலே,
என்ன பேச்சிது! ஈதெலாம் இந்த
ஏழைய ரிடமா! எந்தாய் வேண்டாம்.

கண்—வெற்றுரை விளையாட்டன்று காண். உங்கள்
வீரம் யானறியாததா? எனக்கோ
உடல் நலங் குன்றி உள்ளத் திட்பமும்
குலைந்தது கண்டீர். உண்மையில் உங்கள்
உதவியே எனக்கு உறுதுணையப்பா.

அர்ச்சு—கண்ணா. உனக்கும் கவலைகள் உண்டோ?
கனவேய் போர்க்களக் கவலையுற்றேனைக்
கருணையால் ஆண்ட கண்ணனே மற்றுங்
கவலுதல் எவரால், கவலையைத் தீர்க்க
வல்லவர் யாரோ?

கண்—வல்லவன் நீயே.

அரச்சு—வல்ல பெருமான். வல்லவன் நின்னினும்
யானென் றுறைந்தாய். அடியன் நின் அடிமை.

கண்—அர்ச்சுன, வீம, அன்பர்காள்! உங்கள்!
அன்புளம் யானறியாத தல்லவே. வீணில்
அலைக்கழித் திடவோ அழைப்பேன்? அய்யோ
யாதவர் கூக்குரல் கேளீர்.

(ஆரவாரம் கேட்கிறது)

.........................—........ ....நீவிர்
துவாரகா புரிநகர்ப் புறமே சென்று
யாதவர் கலகம் அமைவுறக் கண்டு
திரும்புவீர். பின்னர் ஊர் திரும்பிடலாம்.

அர்ச்சு—ஆண்டவ நினது மெய் யடியோம். ஆணை
சிரமேற் கொண்டு செல்லுவோம். நினது
பதத் துணை போற்றிப் பரதர்தங் கோமான்
கட்டளைப் படியெங் கடன் புரிந்திடுவோம்.
என்றும் என் தோழனும் இனியாய் கண்ணா,
இன்று மென் வில்லில் இருந்தருள் புரிவாய்.

கண்—செல்லுமுன் ஒன்று செய்குவீர். முதலில்
அந்தோ பாரீர் ஆதரம் இன்றி
எழுந்து நடக்கவும் இயலா தவனாய்
இங்கே கிடப்பேன் என்னரும் தோழர்காள்,
இப்படி என் மருங் கிருபுறம் வருவீர்.
கைகொடுத் தென்னைக் கட்டிலில் அமர்த்திக்
கலாம் விளைந்திட்ட களம்புகுந் தெனக்காய்க்
காதல் உரிமையைக் காட்டுவீர். உமக்குக்
கைம் மாறியற்றக் கருதவும் இயலாக்
காலமும் வந்ததே. கடியவெவ் விதிதான்.

(வீமார்ச்சுனர் திகைத்துத் தம்மில் தனித்துப் பேசுகின்றனர்)

வீமன்—அர்ச்சுனா என்ன ஆபத்தப்பா!

அர்ச்சு—அண்ணன் இப்படி வருமென்றெண்ணியே
அன்புடன் நம்மை எச்சரித்துள்ளார்.

* * * *

களவீரன் பார்த்தனுடன்
கதையேந்தும் வீமனுமே
களக்க முற்று நிற்பதனைக்
கண்ணபிரான் கண்டு கொண்டான்
கொளக் கருதி யவர் வலிமை
குறைத்திடு நற் கொள்கையினன்
விளங்காத முறுவலினன்
விளம்பிய சொல் இதுவாகும்.

கண்—என்ன தயக்கம்? என்னைத் தொடவும்
கூடா தென்ற கொள்கையா? அன்றிக்
கோமகன் உமக்குக் குறித்ததும் இதுவா?
வீமார்சுனர்காள், வீரர்காள், உங்கள்
நண்பன் யானிங்கு நலிவுற் றிருத்தல்
கண்டீர் அன்றோ? கணப் பொழுதெனக்குக்
கை கொடுப்பதற்குக் கால தாமதமேன்?
இச் சிறு துணை எனக்கு இயற்றத் தயங்குவர்
என்னரும் தோழர் என்பதை அறிந்திலேன்.

அர்ச்சு—அப்படியொன்றும் அகந்தையால் அன்று
அருமைக் கண்ணா.

வீமன்— ....ஆமாம் கண்ணா
ஆயினும் நாங்கள் ஆயிரங் காதம்
கடந்து வந்ததால்...............

கண்— ....கருத்தும் சரிதான்
தூய்மைக் குறைவுடன் தொடக் கூடாதெனத்
தூர நீர் விலகித் தொல்லைப் பட்டீர்
என்பதை அறியா திருந்துவிட்டேன்.
பாதகமில்லை பார்த்தா, வீமா.
பக்கம் வருவீர், பரிவுடன் என்பால்.
காளை அர்ச்சுனன் காண்டிபம் தருக.
வீமா—நீ கதை விக்கிப் பிடிப்பாய்.
யானே அவற்றை இறுகப் பற்றி
மெதுவாய் எழுவேன். மேலும் ஏன் தயக்கம்?

வீமன்—(தனித்து அர்ச்சுனனிடம்)
வேறு வழியில்லை தம்பி

அர்ச்சு— ....அண்ணா,
மறுத்தால் மாதவர்ப் பிழைத்தவராவோம்.

வீமன்—மற்றவன் நன்றி கொன்றவர் ஆவோம்.
கண்ணன் பால் உன் காண்டிபம் தருக.

அர்ச்சு—மற்றொரு பால் உன் மா கதை அளித்திடு.

வீமன்—மற்றென் செய்ய? மாதவன் அருளே
வாழ்வு நமக்கு

அர்ச்சு—வரப் பிரசாதம் வருவது வரட்டும்.

4

(மறுபடியும் இந்திரப்பிரஸ்தத்தில்)

தருமன்—வருவது வரட்டும் வாராம் திரௌபதி.

திரௌ—ஒரு பதினறு உருட்டுவீர் காயை.

தருமன்—வென்றேன் என்றால் வெற்றுரை தருமன்
ஒப்பிடான் பெண்ணே. உன்னிடம் வைக்க
உறுபொருள் உளதேல் உடன் அது கூறு.

திரௌ—விளையாட்டிற்கும் வேண்டுமோ பணயம்?

தருமன்—விளையாட்டெனினும் விளையாட்டெனினும்
வேந்தர்கள்சூது வெறும் பேச்சாமோ?

திரௌ—வேற்றவை தன்னில் மேலை நாள் நம்மைப்
பரிசழித்திட்ட பாதகச் சூதிது
பொல்லாங் கன்றோ? போகிறேன் வேண்டாம்.

தருமன்—போகலாம் இரு இரு.
திரௌ—போதா யிற்றுப் போதுமே நாதா.
தருமன்—போதானல் என்? போகலாம் நில்லு.
திரௌ—போங்கள் நல்ல பித்தம் உமக்கு.
தருமன்—ஆட்டம் முடிய வில்லையே அன்பே.
திரௌ—ஆடி முன் பட்ட அவதிகள் மறந்தீர்.
தருமன்—என்ன பேச்சிது? எதற்கோ இந்த
இன்ப வேளையில் இன்னல் நினைப்பு?

திரௌ—இல்லை நாதா என்னவோ இன்று
என்னுளம் சஞ்சலம் எய்துகின்றது.

தரு—சஞ்சலம் என்று சதுராய்ப் பேசிச்
சமயம் பார்த்து நழுவுகின்றாயே!

திரௌ—நாதா உண்மையாய் நங்கை என் உள்ளம்
நடுங்குகின்றது.

தரும—நடுக்கமேன் கண்ணே?

திரௌ—துவாரகை சென்ற துணைவரை எண்ணித்
தமியாள் கணந்தோறும் தவித்திருக்கின்றேன்.

தரு—தொல்லைப் படுமென் உள்ளமும் தொல்லை
மறந்திடத் தான் இம் மாற்றம் கண்டேன்.

திரௌ—நல்லது. பணயம் நவிலவா?

தரு—நவில்க

திரௌ—மன்னவர் தோற்றால் மண்டலம் முழுதும்!

தரு—உனக்கே உரிமை. ஒப்பினேன் ஆடு!

திரௌ—இல்லை இல்லை எனக்கேன் ஆட்சி?
காய்கள் உருட்டிக் காவலர் தோற்றால்
கொற்ற வெண் குடையும் குவலயத் தாட்சியும்
கண்ணபிரானின் கழலிணை சேரும்.

தரு—மற்று நீ தோற்றால்?

திரௌ—மன்னவர் விருப்பம்
எதாயினும் அது ஏற்பேன் அடிமை.
ஆட்டம் இத்துடன் அமைவோம் போதும்.

தரு—எப்படிப் போதும்? இன்னும் இங்கே
எத்தனை ஆட்டம் ஆட வேண்டுமோ
ஆடுக பகடை (காயுருட்டும் சத்தம்)
ஆ நான் தோற்றேன்........

(வீமார்ச்சுனர் வருகை)

வீமன்—ஆம் திறல் அழிந்தோம்—!

தரு—அர்ச்சுனா! வீமா!

வீமன்—ஆமாம் நாங்கள் தாம்.

தரு—அய்யோ ஏதேன்?
அந்நாள் பொழி வதனம் அடர்ந்ததேன் இருளாய்?
அர்ச்சுனனா முகமா? அது யார் வீமனா?

வீமன்—ஆமாம் அண்ணா அதுதான் முடிவு.

தரு—காண்டிபம் எங்கே? வீமா நின் கதை?
எளம்புவாய் பார்த்தா விம்முதல் வேண்டாம்

அர்ச்—அண்ணா, துவாரகைக்கு அனுப்பினீர் அன்றோ?

தரு—கண்ணபிரானின் கழலிணை சுகமா?

அர்ச்—என்ன நான் இயம்ப? என்னுயிர்க் குயிராம்
மாயக் கண்ணன் மறைந்தனன் அண்ணா?

தரு—தம்பி என்ன தலைமேல் இடியா?

அர்ச்—உலகப் பேசிடி. உண்மை, எங்கள்
உடமைகள் யாவும் உடன் கொண்டு போனான்.

வீம—கதையும் அந்தக் காண்டிவ வில்லும்
கண்ணன் கரத்தால் காதலால் பற்றி
எழுந்தான் அண்ணா, எழுந்ததும் எங்கள்
தோள் வலி யவன் பால் தோய்ந்து மறைந்தது.

அர்ச்—காண்டிப வில்லைக் கையால் சுற்றவும்
வலிமை என்பால் வற்றிடக் கண்டேன்.

வீம—கதையை அசைக்கவும் கை வலிப்பதனைக்
காண நான் அழிந்தேன், கனவாய் முடிந்தது.

அர்ச்—எங்கள் கனவின் இறுதியில் கண்ணன்
எழுந்தனன் போனான் என்பதும் கேட்டோம்.

வீம—கேட்ட மறுகணம் கேட்டதோர் செய்தியைக்
கூறிட நெஞ்சம் குமுறுகின்றது.

அர்ச்—மாதவன் சென்று மற்றவர் பூசல்
மாற்றியே அங்கோர் மர நிழல் வீற்று
ஆறுதல் கொள்ள அமர்ந்த வேளையில்
கண்ணபிரானின் காற்பெரு விரலிற்
கணையொன்றெங்கோ கதுமெனப் புகுந்து
காலம் முடிந்தது, கலகமும் ஓய்ந்தது.

வீம—ஓய்ந்தது உலகின் ஒரு பெரும் நாடகம்
ஓடோடிவந்தோம்.

தரு— ஓஹோ! உலகை
ஊதி நிறைத்தவன், உடமைகள் யாவும்
உடன் கொண்டு சென்றான். உண்மைக் கருத்தை
உணர்த்தியவாறே உணர்வோம் நாமும்.
உடையவன் நம்மை உடன் அழைக்கின்றான்.
உலகில் நல்லறம் உறுதியாய்க் காட்டி
ஒரு பெரும் திரையில் ஓவியம் தீட்டி
உலகில் மாந்தர் உவத்தலும் காய்தலும்
ஒழித்தவன் அருளே உளத்திற் கொண்டு
ஒழுகுதல் கடனென உணர்த்தினான். அந்த
உண்மை உலகிற் குணர்த்தி நம் வாழ்வை
முடித்துக் கொள்வோம். முழுமுதல் வாழி.

• • •

யுகம் முடிந்து போயிற்றென் றுணர்ந்து கொண்ட
யுதிட்டிரா தியர் உடனே வானம் சென்றார்.
இகல்வென்ற பாண்டவரின் காலத் தோடே
இப்புவியில் கலிபிறந்தான். கண்ணன் காட்டும்
வழியொன்றே வாழ்வாங்கு வாழ்வித் திந்த
வையகத்தை வானகமாய்ப் புரியுமென்றே
தொழுதுபுகழ் பாட்டெழுந்து தொலைவில் கேட்கும்
தொல்லுலகில் உடையவனைத் துணையாய்க்கொண்டே

(பின்னணியில் எங்கோ தொலைவில் கேட்கிறது)

மாயக்காரனடி —கிருஷ்ணாரி
மருமைக் காரனடி —ராமாரி.



நல்ல வெளிச்சத்தில்

(க. அமுதன்)

ஒரு நாள் இரவு எங்கள் வீட்டிற்கெதிர் வரிசையில் சற்று தூரத்தில் உள்ள பாழடைந்த வீட்டுத் திண்ணையில் நடு நிசிவரை ரிக்ஷா வண்டிக்காரக் குடும்பங்கள் தங்களுக்குள் ஏற்பட்ட வியவகாரங்களை இரைந்த பேச்சில் தீர்த்துக்கொள்ள முயன்று கொண்டிருந்தார்கள். விஷயம் ரொம்ப சாதாரணம்:—பகலில் சம்பாதித்த கூலி, சூதாட்டம் முதலியவற்றில் செய்த சிலவு அந்தியில் தெருக் கோடிக் கடையில் சாமான்கள் வாங்கினது, பணச் செலவில்லாது நடத்திய சண்டை என்பன போன்ற.......... ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டதில் என் காதில் விழுந்த சில சொற்கள்:—நியாயம், அநியாயம், தருமம், அதருமம், நல்லது கெட்டது: இவர்கள் சொல்லொணு வறுமையிலும், அழுக்கிலும்: நோயிலும் மூழ்கி இருந்தபோதிலும், இவர்களிடை நியாயம், தர்மம், நல்லது, கெட்டது என்ற வெகு மங்கிய ஒளிக்கதிர் வந்து பாய்வது பயங்கரக் காளியின் கருணை அல்லவோ?

அன்றைய நள்ளிரவில் என் மனதில்—என் நெஞ்சுக்குள்ளேயிருந்து பயங்கரமான மகா காளியை நோக்கிப்பிரார்த்தனை ஒன்று குமுறி எழுந்தது :—

தாயே, உலகத்து நாயகியே, மக்களாய்ப் பிறந்த எங்களுக்கு நீ அருளியது இவ்வளவு தானே? இவற்றில் திருப்தியை எங்களுக்கு ஏன் தந்தாய்? எங்கள் கண்ணைத் திறந்து, எங்களுக்கு அரிய வலியைத் தந்து, எங்கள் பயண முடிவைக் காட்டி, அதற்காகச் செய்யவேண்டிய வேள்வியை விளக்கி, எங்களுக்குக் கை கொடுத்து கருணை புரியாயோ—ஹே, காளி! வலிய சாமுண்டி! நின்னைச் சரண் அடைந்தேன் என்பதை அறியாயோ!

∴ ∴ ∴ ∴

ஒருநாள் பகல் எங்கள் அண்டை வீட்டிற்கு விருந்துண்ணப் போயிருந்தேன். இவ்வீட்டார் ரொம்ப பணக்காரருமில்லை. சற்றுமுன் சொன்ன ரிக்ஷா வண்டிக்காரர்போல் ஏழையுமில்லை. இவர்கள் தங்கள் நிலத்தில் விளைவதைக் கொண்டு சுகஜீவனம் நடத்தி வந்தார்கள். விருந்துண்ணும் நேரத்தில் நாங்கள் எல்லோரும் வம்பளந்தோம். இவர்கள் ரொம்ப வைதிகக் குடும்பம். வீட்டிற்குப் பெரியவர் சொல்லுகிருர். "எப்போ கலியாணம் ஆகுமென்றிருந்தேன், பகவத் கிருபையினுல் என் பெண்ணுக்கு எவ்வித குறைவுமில்லாது கல்யாணம் நடந்தேறிவிட்டது.—வீட்டைக் கட்டிப்பார்; கல்யாணத்தை நடத்திப் பார்—என்பது பழமொழி. அவ்வளவு சிரமமான காரியம்—நடத்தி முடித்துவிட்டேன். நாளைக்கே நான் கண்ணை மூடினுலும், என் மனஸில் ஓர் பூரண திருப்தி எற்பட்டுவிட்டது—என்ருர். ஈசுவரன் ஏதோ எங்கள் குடும்பத்தை ஒருவித குறைவுமில்லாது வைத்திருக்கிருர். இதைவிட எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை. இப்போ நடந்த இந்த கல்யாணத்தின் பொருட்டு என் குடும்பத்தினர் எல்லோரும் ஒன்று கூடியிருக்கின்றனர். இதைவிட ஈசுவரன் எனக்கு அளிக்க என்ன பாக்கியம் இருக்கிறது? நான் வேளையோடு ஸந்தி, ஜெபம் முதலிய செய்யத் தவறியதில்லை. ஈசுவர பூஜையும், சரியாக செய்து வருகிறேன். என் மூத்த பிள்ளை நான் செய்து வருகிறதில் எதையும் விடாது செய்து வருவான் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு" என்று சொல்லி முடித்தார்.

ஹே, அகிலாண்ட நாயகியே, எல்லாவற்றிற்கும் தாயான நீ, இப்புவி மீது மக்களாகப் பிறந்த எங்களுக்கு கண்ணைத் திறந்து வழிகாட்ட மாட்டாயோ! நினது ஆக்ஞை என்ன என்பதை அறியாது, என் பெண்ணுக்குக் கலியாணத்தையும், ஒன்றும் விளங்கா ஒரு பூஜையை கண்ணிற்படா ஈசனுக்குச் செய்துவிட்டு திருப்தி அடையும் என் உள்ளம் என்ன உள்ளமோ! இப்படி எத்தனை கோடி ஜன்மங்களைக் கழிப்போம் நாங்கள்! நல்ல வெளிச்சம் தாராயோ! தாயே உலகத்து நாயகியே, மக்களாய் இப்புவி மீது பிறந்த எங்களுக்கு அரிய வலியைத் தந்து, எங்கள் கண்ணைத் திறந்து எங்கள் பயண முடிவைக் காட்டி, அதற்காகச் செய்ய வேண்டிய வேள்வியை விளக்கி, எங்களுக்குக் கைகொடுத்து கருணைபுரியாயோ, ஹேகாளி, வலிய சாமுண்டி! நின்னைச் சரணடைந்தேன் கண்டிலையோ!

* * *

நேற்றுதான் போலிருக்கிறது.........வருஷம் மூன்ருகி விட்டது! ஒரு ஸந்யாஸி என்னிடம் வந்தார். காலக்கிரமத்தில் அவருக்கும் எனக்கும் நட்பு மேலிட்டது. இந்த நட்பினுல் தினந்தினம் சந்திப்பதும் கதைகள் பேசுவதும் தர்க்கம் செய்வதும் முறையாய் விட்டது—கண்ட வேளையில் அல்லது தினம் குறிப்பிட்ட ஒரு வேளையில்தான் ஒரு நாள் அவர் என்னைக்கேட்டார்: " நீ இன்னும் எத்தனை காலத்திற்கு இப்படியே இருக்கப்போகிருய்? உனக்கோ வயதாய்க் கொண்டு வருகிறது. உனக்கு எதற்காக இந்த உலகத்தின் மீது — வாழ்க்கையின்மேல்—அவ்வளவு மோகம்? பிரம்ம சத்யம் ஜெகன்மித்யா என்பது ஸ்ருதி வாக்கவல்லவோ? இவையனைத்தையும் விடுத்துபரஞ்ஜோதியில் ஸச்சிதானந்தத்தில் இரண்டறக்கலக்கும்வழியைத்தேடு, காலத்தை வீணபோக்காதே." என்று என்னென்னமோ வெல்லாம் நெடுக என்னிடம் காலம் செல்வதை உணராது சொல்லிக் கொண்டிருந்தார். எனக்கு அவர் சொல்வது ஒன்றுமே பிடிக்கவில்லை பின்ஞெர் சமயம் அவரைக் கேட்டேன். " உலகந்தான் பொய்——அதிலிருக்கும் நாமும் பொய் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இப்படி இருக்கும்போது நாம் செய்யும் முயற்சியும் பொய்தானே?" எல்லாம் பொய் என்னுமிடத்தில் எதுவும் மெய்யில்லை! கர்மாவினுலே ஆத்ம சுத்தி அடைந்து, தபஸ்வினுல் ஞானம் பெற்று—பெற்ற அந்த க்ஷணத்திலேயே பிர்ம்ஹவில் இரண்டறக் கலக்கலாம் முக்தனுகலாம். என்கிறீர். நீர் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை—விளங்க மாட்டேனென்கிறது. என் பிறந்தோம் என்பதும் நமக்குத் தெரியாது: ஏன் மரிக்கிறோம் என்பதும் நமக்குத் தெரியாது. இந்த அழகிலே "எல்லாம் பொய்" என்றும் வேதாந்தம! எது எக்கேடு கெட்டாலும் கெடட்டும். நாம் வேண்டியோ வேண்டாமலோ, இந்த பூமியில் ஜன்மம் எடுத்து விட்டோம். எல்லாவற்றையும் கொஞ்சம் நிதானமாய் யோசிப்போம் என்ருல் ஸந்யாஸி இடங் கொடுக்க மாட்டேனென்கிருர். அவசர அவசரமா மூட்டையை கட்டச் சொல்கிருர். நேரத்தை விண் போக்கக் கூடாதென்கிருர். வந்தவழியைப் பார்த்து திரும்பு என்கிருர். வந்தது எதற்காக? திரும்பிப் போவது எதற்காக? சகலுக்குத்தான் வெளிச்சம்!

நான் பிரார்த்திக்கிறேன் :— மண்ணும், விண்ணுந் தனிஆளும் தாயே! இப்புவிமிசை மக்களாய்ப் பிறந்த எங்கள் கண்ணைத் திறந்து, எங்களுக்கு அழியா வலியைத் தந்து, எங்கள் பயண முடிவைக் காட்டி, அதற்காகச் செய்யவேண்டிய வேள்வியை எங்களுக்கு விளக்கி, இருளில் வீழ்ந்து கிடக்கும் எங்களுக்குக் கைகொடுத்து கருணை புரியாயோ! ஹே, காளி வலிய சாமுண்டி! நின்னைச் சரண அடைந்து விட்டேன். அருள்புரிவாய் அன்பார் தாயே!

* * *

சமீபத்தில், கொஞ்ச நாளைக்கு முன் ஒரு பிராமண தனிகரிடம் வேலையாகப் போயிருந்தேன். சொந்த முயற்சியால இளம் பிராயத்திலிருந்து பணம் நிறைய சேகரித்தவர். படிப்பு விசேஷமாகக் கிடையாது—இல்லையென்றே சொல்லலாம். ஆனல் பண்பு என்ற விஷயம் இன்னது என்றே தெரியாதவர். பணத்தை தெய்வமாக எண்ணி அதை பூஜிப்பவர்களுக்கு பண்பு எங்கிருந்துவரும்? நான் அவர் வீட்டிற்குப் போயிருந்த இந்த சமயம் மஹாளய அமாவாசை, நான அவரைப் பார்க் கொஞ்சம் காத்திருக்க வேண்டியிருந்தது. இந்த அந்தணர் தன தர்ப்பணத்தை முடித்துக் கொண்டு என்னை வந்து பார்க்க சுமார் கால் மணி நேரம் ஆயிற்று. அவர் வீட்டிற்கு நான் என்றும் வராத ஒருவன் ஆனபடியாலும் அவரைப் போலும் அவர் குடும்பத்தாரைப் போலும் நான ஸாதாரண வாழ்க்கையில் ஈடுபட்டில்லாத காரணத்தாலும் வீட்டில் உள்ள எல்லோரும் மூலைக்கு ஒருவராக—பெண்டிர்கள் உள்பட—மறைவாக இருந்து கொண்டு என்னை கவனித்து வந்தார்கள். நான் ஏதோ காட்டு-விலங்கென அவர்கள் எண்ணம்!

" இப்போதுதான் தர்ப்பணம் முடிந்தது. நான் தங்களை அநாவசியமாக இவ்வளவு நாழி காக்க வைத்துவிட்டேன்: என்னை க்ஷமிக்கணும்" என்ற பண்புக்கு அணிகலமான பீடிகையுடன் ஆரம்பித்து—'நான் இன்னைய வரையில், ஸ்நானம் செய்த உடனே உலர்ந்த துணியைக் கட்டிக் கொள்ளாது ஈரத்துணியுடனேயே தப்பணம் செய்து வருகிறேன்" என்ற அஸாதாரணச் செய்தியை பெருமிதத்துடன் என்னிடம் தெரிவித்தார். " நீங்கள் மட்டும் ஆதர்ச வாழ்க்கையை நடத்துகிறீர்களில்லை: நானுந்தான் நடத்தி வருகிறேன்!" என்ருர். இவர் சேதனத்தில் இவர் உள்ளத்தில் ஈரத்துணி என்ன விசேஷத்தை அளித்தது என்பது இன்றுவரை எனக்குப் புரியாத விஷயம். இவர் நெஞ்சில் ஈரம் உதயமாகவேணும் என்பதே என் பிரார்த்தனை!

ஈரத்துணியை உடுத்திக்கொண்டே வருஷக்கணக்காக அமாவாசைக்கு அமாவாசை தர்ப்பணம் செய்ததனுல் உள்ளம் மாறுதலடையுமோ என்ற கேள்வியுடனே ஜகன் மாதாவை நினைத்து—" தாயே, இப்புவிமீது மக்களாய்ப் பிறந்த நாங்கள் இன்னம் எத்தனை காலம் அர்த்தமில்லாது வினைபுரிவோம்" என்று அவள் பாதங்களில் விழ்ந்து கதறி மறுபடியும் ஸ்ரீமாதாவிடம் வேண்டினேன். " இப் புவிமிசை மக்களாய்ப் பிறந்த எங்கள் கண்ணைத் திறந்து அதற்காக செய்ய வேண்டிய வாழ்க்கை வேள்வியை எங்களுக்கு விளக்கி, எங்கள் பயணத்தின் முடிவைக் காட்டி எங்கு செல்வது என்ன செய்வது என்பதை எங்கள் உள்ளத்தில் ஒளிரும் பத்ரகாளியே உணர்த்தாயோ! அன்பார் தாயே, அருள்வாய் ஒளி, வலி இன்பம்!"

* * *

நல்ல வயதான படித்த எனக்குத் தெரிந்த ஒருவர் என்னிடம் சொல்லுகிருர்:—' எனது சினேகிதை, கல்யாணம் ஆனவர்; அவருக்குத் திடீரென ஞானம் பிறந்து விட்டது. விடு வாசலை எல்லாந்துறந்து ஊருக்கு வெளியில் கொஞ்சந் தொலைவில், ஒரு தோப்பில் ஒரு குடிசை ஒன்றை அமைத்துக் கொண்டு வாழ ஆரம்பித்தார். சமயா சமயங்களில் கணவன் தன்னிடம் வரும்போது கணவனுக்கான மரியாதையைஒரு சிறிதும் தவராது செலுத்துவார். ஊரில்உள்ளவர்கள் தன்னிடம் வரும்போது அவர்களுக்குப்பல நன்மதி சொல்லுவார்:—' வீட்டு வேலைகளை ஒழுங்காய்ச் செய்து மீதியிருக்கும் நேரத்தில் கோவிலுக்குப் போய்' ஸ்வாமி தரிசனம் செய்து தரும சிந்தனையில் ஆழ்ந்திருங்கள்' என்று உருக்கமாய்ச் சொல்லுவார் இந்த அம்மணி. இதை நான்கேட்ட போது எனக்கு சிறிது பிரமை உண்டாயிற்று. வாழ்க்கையில் ஒரு சிறு பகுதியைக் கடவுளுக்குத் தந்து அதன் வழி சுயநல வாழ்க்கையை சிறப்பிக்க முயலுவதைத் தவிர. இது வேறென்னவாகும்? நமது உணர்வின் அடிப்படையில் எங்கும் கடவுளன்றி வேறென்றுமில்லை என்ற எண்ணம் இன்னமும் உதயமாகவில்லை: இந்த உணர்வு இல்லாதபோது அந்த நம்பிக்கையாவது வேண்டுமல்லவா? நான் கடவுளின் பிரக்ஞை உள்ள கருவி என்ற எண்ணம் வேண்டாமா? இவ்வழியில் இன்னம் எத்தனையோ சாதனை முறைகள் படிப்படியாய் இருக்கின்றன.

வாழ்க்கையை விட்டு விட்டு ஊருக்கு வெளியே தோப்புக்குடிசையில் கடவுளைத் தேட வேண்டிய அவசியமென்னவோ? எல்லாம் கடவுளாயின் கடவுள் தர்சனம் அளிக்

காத பொருள் எது? இந்தக் கேள்விகளை செவியுற்றபோது அந்த அம்மை என்னை விதண்டாவாதன் என நினைத்து மறு மொழிதராது மௌனம் சாதித்து விட்டார்!

“மனோவாக்கு காயம்,” உடல் பொருள் ஆவி என்றெல்லாம் கேட்டிருக்கிறோம். உடல், உயிர், மனம் மூன்றையும் குறுக்கும் நெடுக்கும் ஒன்றை ஒன்று இழுக்கா வண்ணம் ஸமரஸம் செய்து அவற்றை ஒருமுனைப்படுத்தி கிழ்வரும் ஒளி, வலி, இன்பம் இவற்றைப் பெற்று அவை தங்கள் திரு உரு பெறும் வழிகிடையாதோ! எவ்வளவு காலம் நாம் பொருளற்று காரியம் செய்து கொண்டிருப்போம்? ஹே, ஆதிபராசக்தியே, இப்புவிமிசை மக்களாய்ப் பிறந்த எங்கள் கண்ணைத்திறந்து, எங்களுக்கு அழியா வலியைத்தந்து, எங்கள் வாழ்க்கைப் பயணத்தின் முடிவை எங்களுக்குச் சுட்டிகாட்டி, அதற்கான வாழ்க்கை வேள்வியை விளக்கிததந்து, செய்யுமுறை சொல்லி எங்கு செல்வது என்ன செய்வது என்பதையெல்லாம் பொருள்படத் தெளிவாக்கி அருள் வாய் தாயே! நீயே கதி என நம்பி நின்பால் உள்ள முருகிக் கரைகிறோம் அன்னாய்!

∴ ∴ ∴ ∴

ஒரு பெரிய தடாகம். நிறைய தாமரைப்பூ. வட பக்கத்துக் கரை ஒரு பெரும் மணல் மேடு. படர்ந்து விரிந்த மேட்டில் வரிசை வரிசையாகப் பனைமரங்கள். அந்தி வேளை; சூரியன் மலைவாயில் விழ இன்னம் கொஞ்ச நாழிதான் இருக்கும். இதற்குள்ளாக மேற்கே வானத்தின் மேல் பாகத்தில் வெள்ளி மங்கி காணப்படுகிறன். பத்துப் பதினைந்து மாணவர்கள் இக்குளக்கரையின் வடகிழ் பாகத்தில் உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் பேச்சிலிருந்து நான் கண்டு பிடித்தது: ஒருவர் தவருது எல்லாரும் பரீட்சைக்கு கடைசியாக, எழுதி விட்டுத் திரும்பியவர்கள். பரீட்சையின் முடிவு தெரிந்ததும் சிலர் வக்கில் வேலைக்கும், வேறு சிலர் வைத்தியத் தொழிலுக்கும், இன்னுஞ் சிலர் இன்ஜனீயர்களாகவும் வாழ்க்கைத் துறையில் அமையப் போகிறவர்கள்.

இம்மாணவர்களில் ஒருவன் கனீர் என்ற குரலில் —இவன் வைத்தியனாக வேண்டியவன் என பின்னால் ஏற்பட்டது—

“நமக்கோ பள்ளி வாழ்க்கை இன்றோடு முடிந்து விட்டது. எனக்கு உடனடியாக கலியாணத்தை செய்து முடித்துவிட வேணுமென்பது எனது பெற்றோர்கள் திர்ப்பு. இவ்விஷயத்தைப்பற்றி அவர்கள் என்னைக் கலந்ததே கிடையாது. அவர்கள் பேச்சைத் தடுத்துச் சொல்ல எனக்கு மனஸே வரமாட்டேன் என்கிறது. ஆனாலோ, நகர் வாழ்க்கையால் ஏற்பட்ட தோஷம், மேனாட்டுப் புஸ்தகப் படிப்பினால் ஏற்பட்ட உள்ள குழப்பம், உங்களைப் போன்ற நண்பர்களினால் உண்டான ஸகவாசதோஷம் இவை எல்லாங் கூடி என்னை என்னென்னமோ பண்ணுகிறது; சொல்லத் திறனில்லை. பெற்றோர்கள் பேச்சைத் தட்டாது கேட்டு கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கை யெனும் மகா ஸமுத்திரத்தில் மூழ்கி விடப்போகிறேன் என்று எனக்குள்ளே ஏதோ ஒன்று சொல்லிக் கொண்டே இருக்கிறது.

இன்னோர் மாணவன் மேற் சொன்னதை எல்லாம் கேட்டுவிட்டு; “நீ படிச்சு நாசமாய்ப் போனாய்! நீ உன் தாயார் தகப்பனார் பேச்சைக் கேட்டு, அவர்கள் சொற்படி கல்யாணம் பண்ணிக் கொண்டு டாக்டர் வேலையிலே அமர்ந்து விடுகிறாய் என்றே வைத்துக் கொள்வோம். நீ நன்னு சம்பாதிக்கிறாய் என்றும் வைத்துக் கொள்வோம், இதன் பலன் என்ன? குறைவில்லாது, உன் பெற்றோர்கள் உள்பட உன் குடும்பம் பசி தணிய சாப்பிட்டு, உன் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் உடம்பை நன்றாக மூடி உடுத்தி, நல்ல வீட்டில் தங்கி வாழலாம். அதற்கு மேலே நீ செய்யக் கூடியது என்ன?”

“உன் உள்ளம் கேட்பது ஒன்று! நீ செய்வது ஒன்று! ஒன்றிற்கும், மற்றொன்றிற்கும் தொந்தார்த்தமே கிடையாது, நாம் கனவு கண்டதெல்லாம் பாழா? நாமெல்லாம் நரபலி என்று கேள்விப்பட்டிருக்கிறோமன்றோ. அந்த பழய காலத்திலெல்லாம் பலி என்றால் ஒரே வெட்டு....க்ஷண நேரந்தான் கஷ்டம்! அப்புறம்......... வெட்டுண்டவன் !...........சூன்யம் !

இப்போதெல்லாம் என்ன நடக்கிறதென்று யோசனை பண்ணிப்பார். ஊர் பேர் தெரியாத ஒரு தெய்வத்திடம் போய் நீ உன்னை காவு கொடுத்துக் கொள்ளப்போகிறாய். சமூகம், சம்பிரதாயம், ஐதிகம், பெற்றெடுத்தோர் முதலிய உன் உள்ளத்தை கொஞ்சங் கொஞ்சமாய் அரித்து உருவில்லாது செய்துவிடப்போகின்றன. உன்வீட்டிலே இருக்கிற பசுமாடு, வேலை செய்கிற ஆள். உன் பெற்றோர் எல்லாருமாய்ச்சேர்ந்து ஒருவர்க்கொருவர் சரிநிகர் சமானமாய் வாழ்வீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை!” என்று முடித்தான்.

மூன்றாம் மாணவன் ஒருவன்...........

எனக்கும் இன்னது செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும், எதை எடுத்தாலும், எதைப் பார்த்தாலும், ஒரே ஒரு எண்ணத்தான் உண்டாகிறது. எதைச் செய்தா என்ன? செய்ததற்கு முடிவென்ன? ஆதி சங்கரர், அவருக்கும் முன்னாலே கௌதம புத்தன், அவனுக்கு முன்னாலே உபநிடதங்களில் கூட சொன்னதென்ன? செய்ததென்ன? கண்டதென்ன? உலகம், அண்டசராசரங்கள், நம்முன், நாம் உள்பட, தோன்றும் யாவையும் பிரயோஜனமற்றவை, பொருளற்றவை—மித்யை, பொய், மாயை, ஓர் மயக்கம். விட்டுத் தொலைக்கணும். இவற்றை, குடும்பம், ஸம்ஸாரஸாகர் மோகம், தேச முன்னேற்றம், பரோபகார சேவை, உலகத்திற்காகவும் உலக மக்களுக்காகவும் உழைத்தல், இவையனைத்தும்—கல்வி, கலை, சாஸ்திராதிகள் உள்பட ரஸமற்றவை, பொய், மாயை. கடைசியாக பரப்பிர்மத்தில் அங்கிங்கெனாதபடி எங்குமாய் நிறைந்த நாமரூபமில்லாத அகண்டு பரந்த, இதற்கு ஒரு பேர்தான் இல்லையே, அதிலே கலந்து விடணும்! உடனே இந்த காரியத்தை செய்து விட்டா போகிறது? பிர்ம்மஸ் ஸத்யம் ஜகன் மித்யை” என்பது வழித்துணை விளக்கல்லவோ!”

“எந்த மதமானு என்ன? கடைசி முடிவு இதுதானே

நான்காம் மாணவன் உட்கார்ந்தபடியே:

“எனக்கு ஒரு அதிசயமான அநுபவம், நடந்த இரண்டாவது மகா யுத்தத்தின் முடிவுக்கு கொஞ்சம் முன்னதாக, ஏற்பட்டது.”

“காலஞ் சென்ற அமெரிக்க ஜநாதிபதி ரூஸ்வெல்ட், ஆங்கில தேசப் பிரதமர் சர்ச்சில் உடன் கூடி—உலக மக்கள் அனைவர் சேதனத்தில் ஏற்பட்டிருந்த ஒரு குழப்பத்தைத் தெளியவைக்க, மக்கள் உள்ளத்தில் ஒரு குறிக்கோளை நிர்ணயிக்கவேண்டிய அவசியத்தைக் கருதி—ஒரு பிரகடனம் செய்தார்கள். ஜனநாயகமா? எதேச்சாதிகாரமா? இரண்டில் எது வேண்டும்? ஒவ்வொரு தனி மனிதனும் நிர்மானித்தாகவேண்டும் என்று சொன்னார்கள் அந்த சமயம் ஒவ்வொரு தனிமனிதனும “ஜனநாயகமா? யதேச்சாதிகாரமா?

"என்ற கேள்வியை தனக்குள் கேட்டுக்கொண்டதாக நான் நம்பினேன்—உலகம் கதி கலங்கியிருந்த சமயம் அது. வாழ்கைக்கு வெளிச்சம், வழித்துணை, விளக்கு மிக்க தேவை என்பதை உணருமாறு கதிகலங்கிய காலம்."

"பண்டைச்சாக்குகளெல்லாம் அரித்து உளுத்துப் போன இந்த காலத்திலே மனுஷ்ய சேதனத்திலே எங்கே யாவது ஒரு மூலையிலே வழித்துணை வெளிச்சம் ஏதாவது இருக்கிறதா என்று எனக்குள்ளேயே யோசித்தேன். இது வரை சேதனத்தின் பரிணாமத்தை, ஸ்ரீ அரவிந்தரைத் தவிர வேறு எவரும் விளக்கிக் காட்டியதாகத் தெரியவில்லை. ஜடத்திலிருந்து மனுஷ்யன்வரை, படிப்படியாய் வளர்ந்து வந்த சேதனம் இத்துடன் நின்று விடப்போகிறதில்லை என்று ஆணித்தரமாய் ஸ்ரீ அரவிந்தர் சொல்லியிருக்கிறார். மனுஷ்யனுக்கப்புறம் அதிமானவன் உதயமாவான் என்பது ஸ்ரீ அரவிந்தர் தந்த உறுதி மொழி. ஆனது பற்றி, மனித வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட ஆதர்சத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை ஐயந்திரிபற ஸ்ரீ அரவிந்தர் சொல்லியுள்ளார்.

"பாரம்பரியமாக நாம் கண்டது, கண்டுவருவது ஆன் மீக வாழ்க்கை யென்றால், உலகவாழ்க்கையை அறவே விடு தல், உலக வாழ்க்கையைப்பற்றினால், ஆன்மிக வாழ்க்கை நமக்குக் கிட்டாது. ஸ்ரீ அரவிந்தர் திருஷ்டி, பார்வை ஒன் றையும் விடாது அனைத்தையும் சேர்த்துப் பிடித்துப் பார்க் கும் திறன் வாய்ந்தது.

"ஸ்ரீ அரவிந்தர், தோற்றம் யாவும் தன்னையறியாது யோகஸாதனை செய்து கொண்டு வருவதாகவும், இத்தோற் றத்தில் வளர்ச்சி அல்லது பரிணாமத்தின் விளைவாக மனி தன் தோற்றத்தின் தன்னறிவென்றும்" கூறியுள்ளார்.

"மனிதன் தன்னறிவுடன், செய்வதை இன்னதென உணர்ந்து, இலட்சியக் குறியுடன் ஸாதனை செய்வது தோற றத் தொகுதியின் பரிணாம வளர்ச்சிச் சாதனையாம்."

"ஆகவே, மனிதனின் வாழ்க்கை முற்றும்—எதுவும் எள் ளளவும் தள்ளுபடியின்றி—ஸாதனை க்ஷேத்திரம், உணர்ந்து செய்யும் ஸாதனைக்களம் ஆகிறது. மனிதன் எந்த நிலையில் இருந்த போதிலும், எதைச் செய்த போதிலும் எல்லாம் ஸாதனையின் அம்சங்களாகும், ஆதர்சத்தை எட்ட உறுதி கொண்ட காலத்து.

"மனிதன் அதிமானவன் ஆவதெனின், அவன் அடி யோடு மாறிவிடுவானா? மனிதனாய் இரானா? இதுவரை இயற்கை மாறக்கூடிய தென்று எவரும் நினைத்ததே கிடை யாது. ஆதி சங்கரர் உலகை சுருண்ட நாய் வாலுக்கு ஒப் பிட்டார்—அதாவது மாறாத ஒரு சமாசாரம், விட்டுத் தொலைக்கவேண்டிய சமாசாரம் என்றார்; நேராக்க முடியாத சுருட்டைவால் என்றார். இதற்கு நேர்மாறாக, ஸ்ரீ அரவிந்தர் இயல் மாறும் என்கிறார்—அது மாறித் திரு உருபெறும் என்கிறார்"

என்றபோது இதையெல்லாம் கேட்டுவந்த எனக்கு எல்லாம் புதுமையாய், அதிசயமாய், ஆனந்தமாய்த் தோன் றியது. மாணவர்கள் நெடுக பேசிக்கொண்டேயிருந்தார்கள், முடிவேயில்லை. நானும் பக்தி பரவசத்தில் ஆதி பராசக் தியை நினைத்துப்பார்த்து, அவள் பாதங்களை நெஞ்சில் ஊன்றி அவளிடம் மீண்டுமொருமுறை வேண்டினேன்:—

எங்களை நல்வழியில் உய்விக்க வந்த தாயே, இப்புவி மிசை மக்களாய்ப்பிறந்த எங்கள் கண்ணைத் திறந்து எங்க ளுக்கு அழியாவலிமைத் தந்து, எங்கள் வாழ்க்கைப் பயணத் தின் முடிவை சுட்டிக்காட்டி, அதற்கான வாழ்க்கை வேள் வியை எங்களுக்கு விளக்கி, எங்கு செல்வது என்ன செய் வது என்பதையெல்லாம் உணர்த்தி அருள்வாய், அன்பாந் தாயே! நீயே கதி என நினைத்து நின்பால் உள்ள முருகிக் கரைகிறோம் அன்னாய்!

★ ★ ★ ★



"பிருந்தாவனன்"

பட்டு அதோ பாரடி!
வட்ட மான வெண்ணிலா!
மொட்டுப் போல மலருதே!
தட்டுப் போலக் காணுதே!
எட்டி டாத வானிலே!
பொட்டுப் போலத் தோணுதே!
கெட்ட இருளைப் போக்கவே
இட்ட விளக்குப் போலவே

தட்டில் லாமல் ஒளியினைக்
கொட்டி வானில் நகருதே!
சுட்டி போல மேகத்தில்
வட்ட முகம் மறைக்குதே!
குட்டை யான போதிலும்
நெட்டை யான போதிலும்
தொட்டுப் பார்க்க எண்ணிநாம்
இட்டப் போக முடியுமா?

—*—

வர்த்தகத் தமிழ்

டி. துரைராஜ் பிள்ளை.

நாம் இருக்கும் நாடு நமது என்று ஆகி பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. நமது மாகாண சர்க்காரும் தமிழை ஆட்சி மொழியாக ஆக்கியிருக்கிறார்கள். நடைமுறையில் இதை அமுல் நடத்த நம் நாட்டுத் தனிப்பெரும் தலைவர் காமராசர் அவர்கள் அதற்கு ஆவன செய்து வருகிறார்கள். அதில் வியாபாரிகளின் கடமை முக்கிய பங்காக இருக்கிறது. அன்னிய ஆட்சி காலத்தில் ஆட்சி மொழியாக இருந்த ஆங்கிலத்தில் நம்மவர்களுக்கு இருந்த மோகத்தினால் நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ சாதாரணத் தமிழ்ச் சொற்கள் பல இருக்கும்போது ஆங்கிலச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களால் ஆங்கில உச்சரிப்புடன் எழுதி வந்தோம். கடை வீதிகளில் விளம்பரங்களும் தொழில் நிலையங்களில் விளம்பரங்களும், பத்திரிக்கை விளம்பரங்களும் தமிழ் எழுத்துகளால் ஆங்கில உச்சரிப்பை எழுதி வந்தோம். உதாரணமாக Store ஸ்டோர், Mart மார்ட், Medical Hall மெடிக்கல் ஹால், Lunch Home லஞ்ச் ஹோம், Cafe கபே, Vakil வக்கில், Advocate அட்வகேட், Hair Cutting Saloon ஹேர் சட்டிங் சலூன், Boarding and Lodging போர்டிங் & லாட்ஜிங் இதுபோல் எத்தனையோ ஆங்கிலப் பெயர்கள் ஆங்கில உச்சரிப்பிலேயே தமிழ் எழுத்துக்களால் எழுதியிருப்பதை இன்னும் காணலாம். இன்னும் கடைகளின் உரிமையாளரின் பெயர்கள் Sundaram & Sons என்பது சுந்தரம் & சன்ஸ் என்றும் Sundaram & Bros என்பது சுந்தரம் & பிரதர்ஸ் என்றும் எழுதியிருக்கிறார்கள். எத்தனையோ இதுபோல் காண்கின்றோம். ஆங்கில உச்சரிப்பைத் தமிழ் எழுத்தால் எழுதுவது எவ்வளவு இழிவு என்று நம்மவர்கள் கருதுவது இல்லை. நல்ல தனித்தமிழ் சொற்கள் நமதுமொழியில் மலிந்துகிடந்தும் அதை நாம் உபயோகிக்காமல் வேறு மொழியின் உச்சரிப்பைத் தமிழ் எழுத்துக்களால் எழுதுவது நமக்கும், நமது மொழிக்கும் அவமானம் தரக்கூடிய ஒரு செயல் என்பதை உணர்கிறோம் இல்லை. தமிழ் சொற்களினால் விளம்பரம் செய்தால் மக்களுக்கு நன்கு விளங்கும், மக்கள் வழக்கில் வழங்கியும் வரும், வேறு மொழிச்சொற்களை நாம் கையாளுவதால் வேற்றுமொழிச் சொற்கள் நம் மொழிச்சொற்கள் போல் வந்துவிடுகின்றன. நாளடைவில் தமிழ்ச்சொல்லா வேறுமொழிச் சொல்லா என்ற ஐயப்பாடு ஏற்படுவதுடன் வழக்கில் இருப்பதை வழங்குவதுதான் நன்று என்று ஒரு சிலர் பரிந்து பேசுகின்ற நிலைமை உண்டாகிவிடுகிறது. நமது தமிழ் மொழியில் ஏற்ற தமிழ்ச் சொற்கள் இல்லை என்றுகூட ஒரு சிலர் சொல்லவும் துணிந்து விடுகிறார்கள். காரணம் இத்தகைய கூடாத ஒரு செயலைச் செய்து மக்களுக்கு வழக்கில் வரும்படி வேறு மொழிச் சொற்களை ஆக்கிவிடுவதுதான். இது வியாபாரியிடம் மட்டுமல்ல, பட்டதாரிகளிடமும் படிந்து கிடக்கிறது. படித்தவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிக்கைகள், இவர்களைக் கவனித்துத் தனித்தமிழ் சொல்லையே கையாள வேண்டுமென்று முற்பட்டால் எங்கும் நடைமுறையில் பழக்கத்தில் வந்துவிடும். இதுபோல மற்ற மொழி நாடுகளில் உண்டா என்று பார்த்தால் எங்குமே கிடையாது. நமது தமிழ் மொழிச் சொற்களின் உச்சரிப்பை மற்ற மொழி எழுத்துக்களால் அவர்கள் எழுதுவதில்லை. இந்தத் தமிழ் நாட்டில் மட்டும் எப்படியோ இந்த இழிவான செயல் இருந்து வருகிறது. இதை இனியும் நாம் கவனியாமலிருந்தால் என்றென்றும் இந்நிலை நம்மை வெட்கத்துக்காளாக்கிவிடும். வடநாட்டுக்காரர்கள் பலர் நம் தமிழ் நாட்டில் வாணிபம் செய்துவருகிறார்கள். அவர்கள் வைத்திருக்கும் கணக்கு முதலானவை பெரும்பாலும் அவர்கள் தாய்மொழியிலேயே இருந்து வருகின்றனவே ஒழிய தமிழ் மொழியில் அல்ல. அந்த வடநாட்டு வியாபாரிகள் ஒரு சிலர் உபயோகிக்கும் கணக்குப் புத்தகம் கூட வடநாட்டுப் புத்தகமே தான். அவர்களின் நாட்டுப் பற்று, மொழிப்பற்று எத்தனை சிறந்தது என்று தெரிந்து கொள்ளுங்கள். இந்த நிலையில் நாம் இனியும் சிந்திக்காமலிருப்பது சரியல்ல.

வியாபாரிகள், சமுதாயத்தில் முக்கியமான அங்க மானவர்கள். அவர்கள் பொதுமக்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். ஒரு காரியத்தை மக்களிடம் பரப்பவேண்டுமானல் வியாபாரிகள் முற்பட்டால் ஒரே நாளில் ஊரில் உள்ள எல்லோருக்கும் அவர்கள் நடத்தும் கடையிலிருந்தபடியே வருபவர் போகிறவர்கள் மூலமாய் அறிவித்து விடுவார்கள். நாட்டின் நலம் கருதிவரும் திட்டங்களுக்கோ அல்லது வேறு எந்தக் காரியத்துக்கோ ஒரு முறையீட்டை வற்புறுத்தவேண்டுமானல் வியாபார ஸ்தலங்களை மூடிவேலை நிறுத்தம் செய்கிறார்கள். அப்படிச் செய்வது உடனே அரசாங்கத்துக்கும் எல்லா மக்களுக்கும் நன்கு தெரிந்து விடுகிறது. வியாபாரிகள் அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் மத்தியிலிருந்து ஒருவர் கருத்தை மற்றவர்க்கு அறிவிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். மேலும் நாட்டின் விடுதலைக்கும் நாட்டின் நலம் கருதிவரும் ஏனைய திட்டங்களுக்கும், வியாபாரிகள் கொண்ட பங்கு கொஞ்ச நஞ்சமல்ல. ஒவ்வொரு காரியத்துக்கும் அரசியல் வாதிகளுக்கு உறுதுணையாக இருந்து வந்தார்கள். ஆனல் சமீப காலத்தில் வியாபாரிகளை அரசியல் வாதிகள் பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கித் தூற்றி வந்தார்கள். யுத்தத்தினல் வந்த கட்டுப்பாட்டுக் காலத்தில் வியாபாரிகள் தங்கள் கடமையைத் தவறியதாயும் கொள்ளை லாபம் அடித்ததாயும் சொன்னர்கள். யுத்தத்தினல் ஏற்பட்ட பற்றாக்குறைக் காலத்தில் வியாபாரிகள் மக்களின் தேவைக்கு வேண்டிய பொருள்களை அரும் பெரும் பிரயாசையுடன் கொண்டுவந்து வைத்து குறையைப் பூர்த்தி செய்ததற்கு அவர்களைப் பாராட்ட வேண்டியதற்குப் பதில் தூற்றினர்கள். வியாபாரிக்குக் கொள்ளை லாபம் ஒன்றுமில்லை. யுத்தத்தின் காரணமாய் எல்லோருக்கும் வருமானம் அதிகமானதுபோல் வியாபாரிக்கும் அதிகம்தான். ஆனல் உற்பத்தியாளரும் உபயோகிப்போரும் அவர்கள் கடமையைச் செவ்வனே செய்திருந்தால் வியாபாரிகளும் தங்கள் கடமையைச் செய்வதில் சிரமமிருந்திராது. அவர்கள் கடமைகளைத் தவறி வியாபாரிகளைக் குற்றம் சாட்டி வந்தார்கள். வாங்குவாரின்றி விற்பவர் ஏது? போகட்டும். கட்டுப்பாடுகள் நீங்கி வெகு காலமாகியும், இனியும் ஒரு சிலர் ஏதாவது வசைமொழி சொல்லி வருகிறார்கள். அதற்கு வியாபாரிகளும் தக்க பதில் சொல்லுவதில்லை. வியாபாரிகள் தங்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க ஒன்றுபட்டு அவ்வப்போது வேண்டிய வற்றை செய்துவர வேண்டும். நாட்டுக்கு வியாபார சமுதாயம் முக்கியமானது. வியாபாரிகளின் நிலையைக்கண்டு அந்த நாட்டு மக்களையும் அரசாங்கத்தையும் பற்றித் தெரிந்து கொள்ளலாம். அரசாங்கத்துக்குவேண்டிய நிதியில் பெரும் பங்கு கொடுப்பது வியாபாரிகள். வியாபாரிகளே வரி செலுத்தி அதை வைத்து நிர்வாகம் செய்யும் அரசாங்கத்தின் சட்ட திட்டத்துக்கு வியாபாரிகள் ஒத்துழைக்க வேண்டியது மிகவும் அவசியம். சர்க்கார் ஒரு சட்டம் செய்தால் அதற்கு வியாபாரிகள்தான் உறுதுணையாக இருக்கவேண்டும். நம் நாட்டில் நமது தமிழ்மொழியை ஆட்சிமொழி ஆக்கிய பின்னும் நாம் பிறமொழி சொற்களை நமது தமிழ்மொழி எழுத்துக்களால் எழுதி விளம்பரப்படுத்துவது எவ்வளவு தகாத காரியம் என்று நமது வியாபாரப் பெருமக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். வேறு மொழிகளைப்பற்றி நமக்கு ஒரு துவேஷமில்லை. நமது மொழியில் இனிய சொற்கள் இருக்க வேற்றுமொழிச் சொற்கள் நமக்கு வேண்டியதே இல்லை. ஆனல் பழக்கத்தில் இருந்துவரும் ஒரு சில சொற்கள் தனித்தமிழ் சொல்லா அல்லது வேறு மொழி சொல்லா என்று தெரியாமலும் கையாளப்படலாம். இதற்குப் பத்திரிக்கைக்காரர்கள் தமிழ் எழுத்தாளர்கள் பெரிதும் துணை புரிய வேண்டும். ஆங்காங்கு இம்மாதிரி இருக்கும் விளம்பரங்களில் உள்ள சொற்களின் தன்மையைப் பார்த்து தமிழ்ச் சொல் அல்லாததை மக்களுக்குத் தெரியும்படி பத்திரிக்கைகளில் எழுதுவதுடன் தனித்தமிழ் சொற்களைக் கையாள வேண்டியதன் அவசியத்தையும் தன்மையையும் எழுதி வரவேண்டும்.

வர்த்தகத் தமிழ் சீர்திருந்தினல் தவிர தமிழ் ஆட்சி என்பது எளிதில் நடக்கிற காரியமில்லை. எனவே மற்றெல்லாப் பொதுநலத் துறைகளைப் போலவே எழுத்துச் சீர்திருத்தத் துறையிலும் வியாபாரிகள்தான் ஊக்கத்துடன் முதலில் முன்வர வேண்டும்.

மற்ற மொழிகளுக்கு அந்தந்த நாட்டு மக்கள் காட்டுகின்ற ஆர்வத்தையும் தியாகத்தையும் கண்டும்கூட இனியும் நாம் வாளாயிருக்காமல் நமது கடைகளிலிருக்கும் விளம்பரங்கள் கணக்குகள் முதலியனவற்றையாவது தமிழ்ச் சொற்களால் அமைத்து நடத்திவர வேண்டுகிறேன்.

* * *

புகழறியாத புண்ணியன்.

(கே. நடராஜன்.)

அவனுடைய பெயர் எனக்கு நினைவில்லை. மகத்தான அவனது வீரம் காலத்தால் கறைபடாமலும், அழியாமலும், என் நெஞ்சில் அழுத்தமாகப் பதிந்துகிடக்கும் பொழுது பெயரில் என்ன இருக்கிறது? தன்னைப்பற்றிய நினைவு ஏதுமில்லாமல், உன்னத உணர்ச்சிகளால் மட்டுமே உந்தப்பட்டு அவனுக வலிய முன் வந்து நொடி நேரத்தில் அந்த செயற்கருஞ் செயலைப் புரிந்து விட்டான்!

உம்பளம சம்பளம், மற்றும் போஷணைகளெல்லாம் கிடைக்குமென்று ஜப்பானியர் கூறிய ஆசை வார்த்தைகளில் மயங்கி தங்கள் தாயகமான ஜாவாவை விட்டுத் தொலை தூரக் கரையோரங்களில் பணிபுரிய வந்திருந்தார்களே—ஆயிரக்கணக்கான ஆண், பெண்கள்—அவர்களில் ஒருவன்தான் அவன். மணமாகாத அவ்விளைஞன், புதிய இடங்களைக் காண்கின்ற ஆர்வத்தோடும், கூடுதலாகக் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு வீட்டில் தான் விட்டு வந்திருக்கும் தாய்க்கும் சகோதரிக்கும் நல்வாழ்வு தரலாமே என்ற ஆதுரத்தோடும் வந்தவன்.

என்கீழ் வேலை பார்த்து வந்த நூற்றுக்கு மேற்பட்டவர்களில் ஒருவனுக அவன் வந்து சேர்ந்தான். அவனைப் புற்றி விசேஷமாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.கட்டு மஸ்தான தேகமும் சப்பை மூக்கும் உடையவன். மற்றபடி சாதாரணமான ஆள்தான். சொன்ன வேலையைத் தட்டாமற் செய்துவிட்டு சிவனே என்று இருந்துவிடுகிற ஆளைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதற்கு என்ன இருக்கிறது?

திறந்த வெளியில் வரிசையாய் அமைக்கப்பட்டிருந்த "கஜாங்" குடிசைகள் ஒன்றில், உடன் ஒத்த மனிதர்களுடன் அவனும் இருந்து வந்தான். அவர்கள் கூடிக் குதித்து, ஆடிப்பாடி, அழுது அரற்றி எப்படியோ அந்த அவந்தரவாழ்வையும் ரசித்துக்கொண்டுதான் இருந்தார்கள். சமயா சமயங்களில் குட்டிச் சண்டைகள் போட்டுக் கொள்வதும், எப்பொழுதாவது அபூர்வமாகக் கிடைக்கும் பெண்களின் விஷயமாக அடித்துக் கொள்வதும், விரும்பி ரசிக்கும் கோழிச்சண்டைகளை வேடிக்கைப்பார்ப்பதும் தவிர மற்றபடி, சிக்கனமாகவும் ஒழுங்காகவும் வாழுகின்ற ஜனங்கள்தான் ஜாவானியர். அவர்களுக்குள்ளே அப்படி ஒன்றும் பிரமாதமான பிணக்கோ, பகையோ ஏற்பட்டு விடுவதில்லை.

பிரசித்தமான அந்த 1945-ம் ஆண்டில், வடபோர்னியோ வாசிகளின் வாழ்வில் மகத்தான ஒரு சோதனை காலமாக வந்து மூண்டது. வருஷ ஆரம்பத்திலேயே வானத்தில் சண்டை விமானங்கள் வட்டமிடத் தொடங்கி விட்டன. இங்கே ஒரு எண்ணைக் கிடங்கு, அங்கே ஒரு குழாய்ப் பட்டறை என்று இப்பச் சில தாக்குதல்கள் நடைபெற்ற போதிலும், சாதாரண மக்களுக்கோ அவர்களின் உடமைகளுக்கோ அப்படி ஒன்றும் பெரிய சேதம் விளைந்து விடவில்லை. ஒரு பாலத்தில் நாங்கள் தைரியமாய் வேலை செய்வதைப் பார்த்தபோது அவர்களுக்கே ஆச்சர்யமாயிருந்திருக்க வேண்டும். குண்டுகளுக்குப் பதிலாக அச்சிட்ட அறிக்கைத் தாள்களை கீழே போட்டு விட்டுப் போனார்கள். பின்னால் நிலைமை இப்படி விளையாட்டாக இருக்கவில்லை. குண்டுகளை அந்தப் பிரதேசத்தில் விதை விதைப்பதுபோல ஒரு இடம் பாக்கிவிடாமல் அப்படிப் பொழிந்து தள்ளினார்கள். கண்ணில்பட்டதை யெல்லாம் பொசுக்கிவிட்டார்கள். அந்த ஜாவானியக்குடியிருப்பு முழுவதையும் துடைத்து அழித்துவிட்ட அத்தகைய பெரிய குண்டு வீச்சு ஒன்றின் போது நடந்தது அந்தச் சம்பவம். கடவுள் புண்ணியத்தால் நல்லவேளையாக இரண்டொரு கையாலாகாதவர்களும் நோயாளிகளும் தவிர, பெரும்பாலான தொழிலாளர்கள் பெண்டுபிள்ளைகள் உட்பட முன்னமேயே அந்த இடத்தைவிட்டு, வேலைமேல் வேறிடங்களுக்குப் போய்விட்டிருந்தார்கள்.

அந்தப் பயங்கரச் சோதனை நாளன்று குடிசையில் தங்கியிருக்க நேர்ந்தவன் நமது வீரன். அபாயச் சங்கு அலறத் தொடங்கியதும் குடிசையைவிட்டு, பாதுகாப்புப் பொந்துக்கு ஓடினான். ஆனால் அதற்குள் அவன் மார்பில் குண்டு தாக்கி ரத்த விளாராகிவிட்டது. வலியாலும் பயத்தாலும் குமைந்துபோய் அருகிருந்த மணற் குவியலுக்குள் தோண்டிப் புதைந்து கொண்டான். மிகவும் அருகில் ஏதோ வெடிக்கத் தயாராகும் விசிக்கும் ஓசை கேட்டது. எந்த நிமிஷமும் குண்டு வெடித்து விடப்போகிறதென்று எதிர்பார்த்துக் கொண்டே கண்களை மூடியவாறு கைகளை இறுகப் பற்றிக்கொண்டுவெட வெடத்துக் கொண்டிருந்தான். ஆனால் சிறிது நேரம் ஒன்றும் ஓசைகேட்கவில்லை பிறகு வலிதாங்காமல் முனகும் குரல் கேட்டது.அது ஒருபச்சைக்குழந்தையின் விசித்தல். கண்ணைத் திறந்து ஓசை வந்த பக்கம் திரும்பினான். இரண்டொரு மாதங்களே ஆகியிருந்த பச்சைக் குழந்தையொன்று (சைனுக் குழந்தை) மணலில் கிடந்தது. அதனுடைய விசும்பல் அவன்உள்ளத்தைஎன்னசெய்ததோ! குழந்தை ஏது, எப்படி அங்கே வந்தது என்றெல்லாம் அவன் சற்றும் சிந்திக்கவேயில்லை. போய்வாரி யெடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். ஆம். அவன் மார்பு! தீய்ந்து தகித்துக் கொண்டிருந்த அவனுடைய மார்பில் அணைத்தவாறே ஓடினான்—ஓடினான், ஒரு பித்தனைப்போல. சற்று தூரத்தில் விமானங்கள் குண்டுகளை வெடித்துக் கொண்டுதான் இருந்தன. தன்மீது குண்டு போட்டுவிடுவார்கள் என்பதைப்பற்றி அவன் நினைக்கவேயில்லை. சாலையில் வெறி பிடித்தவனைப்போல ஓடிக்கொண்டிருந்தான். அபாயமோ அச்சமோ அவன் மனதைத் தொடவில்லை. குழந்தையைப் பந்தோபஸ்தான ஒரு இடத்தில் சேர்த்துவிட வேண்டுமென்பது ஒன்றுதான் அவனுடைய ஒரே கருத்து. அப்படி ஒரு இடம்தான் அவனுக்குத் தெரியும். அது அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் வேலை செய்து வந்த அந்தப் பாலம்.

அவன் வந்தபோது நான் மட்டும்தான் அங்கு இருந்தேன். மற்றவர்கள் காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டார்கள் அல்லது பாதுகாப்புப் பொந்துகளில் சென்று பதுங்கிக் கொண்டார்கள். என் இருக்கையின் தாழ்வாரத்தில் அந்தக் குழந்தையை மெதுவாய்க் கிடத்திவிட்டு அவன் ஓய்ந்து போனான். அவனைக் கூர்ந்து பார்த்தேன். மார்பும் கரங்களும் வெந்து போயிருந்தன. எப்படித்தான் அந்த நிலையிலும் குழந்தையை வாரியணைத்து அவ்வளவு தூரம் கொண்டு வந்தானோ? என்னால் இன்னமும் அதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

இருந்த மருந்தெல்லாம் தீர்ந்து போய்விட்டிருந்த நிலையில் அவனுடைய காயங்களுக்கு சிகிச்சை செய்வது பற்றிச் சிந்திப்பதுப் பயனில்லை. என்னிடமிருந்த தேங்காய் எண்ணை தவிர அந்த நேரத்தில் வேறு எதுவும் பயனில்லை என்று தோன்றியது. சுண்ணாம்பு நீரைக்கொண்டு கொஞ்சம் லோஷன் தயாரித்தேன். உணர்ச்சி மிக்க அந்த மனிதனைத் தூக்கி ஒரு பாயில் படுக்கவிட்டு காயங்களின் மீது லோஷனை ஊற்றினேன். கந்தல் துணிகளைக் கிழித்துக் காயங்களுக்குக் கட்டுப் போட்டேன். அதன் பிறகு திரும்பிக் குழந்தையைக் கவனித்தேன். அமைதியாய் இருந்தது குழந்தை. அதற்குச் சிறு தீங்கும் நேர்ந்து விடவில்லை என்பதைக் கண்டு வியப்படைந்தேன்.

உடனேயே குண்டு வீச்சும் நின்று விட்டது. என்னுடைய ஆட்கள் அனைவரும் பொந்துகளிலிருந்து மெதுவாய் வெளி வந்து சேர்ந்தார்கள். காயமுற்ற அந்த மனிதனை அவனுடைய மனிதர்களிடமே ஒப்படைத்தேன். விசாரிக்கப் போனால் அந்தக் குழந்தையின் தாய் தந்தையர்கள் அன்றைய குண்டு வீச்சில் பலியாகி விட்டார்கள் என்று தெரிந்தது. தர்ம சிந்தனையுள்ள ஒரு "டோகே" அந்தக் குழந்தையைப் பராமரிக்க ஏற்றுக்கொண்டார். அவரிடம் குழந்தை சேர்ப்பிக்கப்பட்டது.

மருத்துவ சிகிச்சை கிடைக்காமல் அந்த இளைஞன் குண்டுக் காயங்களுக்கு ஆற்றாமல் இறந்தே போனான் என்று பிறகு அந்த ஜாவானியக்கார ஆட்கள் வந்து சொன்னார்கள். துணி கிடைப்பது குதிரைக் கொம்பு. ஆகையால் சணல் சாக்குக் கொஞ்சம் கொடுத்து அவனைக் கல்லறையில் கிடத்துமுன் அவனுடலைப் போர்த்துமாறு கூறினேன். அந்த சமயம் சகஜமாகிவிட்ட சாவு அப்படிப் பிரமாத விஷய மல்ல. ஆனால் அவன் அந்தக் கடைசி நேரத்தில் காட்டிய உன்னதமான உணர்ச்சித் துடிப்பும் செயலும் என் உள்ளத்திலே அழியாத நினைவாகப் பதிந்து விட்டன. அடிக்கடி எனக்கு இரண்டு விஷயங்கள் எவ்வளவு சிந்தித்தும் புரியவே இல்லை. மரணமே முடிவு என்ற அளவுக்குப் படு காயமுற்றிருந்த அந்த நிலையிலேயும் அந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஊக்கம் அவனுக்கு உண்டாக்கியது எது? பெற்ற தாயும் தந்தையும் போயொழிந்தபிறகு, மரணவாசலில் நிற்கும் அந்த இளைஞனைக் கொண்டு அந்தப் பச்சைக் குழந்தையை யாதொரு தீங்குமின்றிக் காப்பாற்ற எண்ணிய தெய்வத்தின் கருணையைப் பெற்ற அந்தக் குழந்தை என்ன மகத்தான காரியத்துக்காக வாழ வந்திருக்கிறது?

இந்தச் சம்பவத்திலிருந்து ஒன்று மட்டும் எனக்குத் தோன்றிற்று. சுயநலம், பேராசை, பகைமை என்ற முரட்டுத் தோல்கள் போர்த்திருந்த போதிலும்கூட மனித இதயத்தின் ஆழத்தில் ஏதோ ஒரு தெய்விக ஒளி மின்னிக்கொண்டு தான் இருக்கிறது. அந்த ஒளியின் பெயர்தானே கருணை, அன்பு, இரக்கம், உயிர்த்தத்துவம் என்பதெல்லாம்? சங்கடமெல்லாம் என்னவென்றால் இந்த ஒளியை நாம் தெரிந்து கொள்ளத் தவறிவிடுகிறோம் அல்லது காலம் தாழ்த்துத் தெரிந்து கொள்கிறோம். அந்த எனது இளைஞன் இருக்கிறானே—அனாதைப்பிணமாக எந்தக் கல்லறையிலோ அவன் தூங்கிக் கிடந்த போதிலும், இந்த உலகின் அவன் செய்யக் கூடிய சாதாரணச் செயலைவிட அதி உன்னதமான லட்சியம் ஒன்றுக்காக அவன் வேறெங்கோ அழைக்கப்பட்டுச் சென்றிருக்கிறான் என்றுதான் நான் நம்புகிறேன்.

★

ஸ்ரீ பங்கிம் சந்திர சாட்டர்ஜி.

—(டி. எஸ். பார்த்தஸாரதி. தக்ஷிண ரெயில்வே.)—

இந்திய மொழிகளின் இலக்கிய மறுமலர்ச்சியில் முதன்முதலாக மலர்ந்த மொழி வங்காளியேயாகும். தேசியத்துறையில் சுதந்திர தாகத்தை தோற்றுவித்து. மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டியாக விளங்கியது போலவே, வங்காளம் இலக்கியத் துறையிலும் வன்மையும் அழகும் ஒருங்கே பொருந்திய ஒரு பாஷையை தனக்குத்தானே சிருஷ்டித்துக்கொண்டு மற்ற மொழிகளுக்கு வழிகாட்டியது. சுதந்திர தாகத்தை அடிப்படையாகக் கொண்ட நவயுகத்தில் எழுந்த பலவித மனோபாவங்களையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் விவரிக்கும் சக்திவாய்ந்த புதுமொழி ஒன்று அக்காலத்தில் அத்தியாவசியமாயிருந்தது. வங்க மொழியை இத்தகைய ஒரு மொழியாக மாற்றிய பெருமை இலக்கிய மேதாவிகளாகிய இருவரைச் சார்ந்ததாகும் இவர்கள் மைகேல் மதுஸூதன தத்தரும். பங்கிம் சந்திர சாட்டர்ஜியுமே ஆவர். இவ்விருவருள், தம் நிகரற்ற மேதா விலாஸத்தினாலும், கற்பனைத் திறனாலும் வங்காளிகளின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தவர் பங்கிம் சந்திரரே.

பங்கிம் சந்திரர் வங்கதேசத்தில் காந்தல்பாரா என்ற ஊரில் பிறந்தவர். சிறு வயதிலேயே பால்ய மேதாவியாக விளங்கினார்: பள்ளிக்கூடத்திற்குச் சென்ற முதல் நாளன்றே வங்காளி பாஷையின் எழுத்துக்கள் அனைத்தையும் கற்று ஒப்பித்துவிட்டாராம். பிறகு ஹூக்ளி காலேஜில் சேர்ந்து படித்து வருகையில் உபாத்தியாயர்களே கண்டு அஞ்சும்படியான கூரிய அறிவு இவரிடம் காணப்பட்டது. ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்பதில் இவர் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஒரே வருஷத்தில் முக்த போதம், ரகுவம்சம், பட்டிகாவ்யம், மேகதூதம் முதலிய நூல்களைக் கற்றுத்தேர்ந்தார். வடமொழியில் அவருக்கு இருந்த இத்தேர்ச்சியே பிற்காலத்தில் அவர் சிருஷ்டித்த வங்க உரைநடைக்கு அஸ்திவாரமாக இருந்தது. ஸர்வ கலாசாலைப்பட்டம் பெற்ற பிறகு தம்முடைய இருபதாம் வயதில் சர்க்கார் உத்தியோகத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பெற்று ஜெஸ்ஸூருக்கு டெபுடி மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப்பட்டார்.

பங்கிம் இயற்கையிலேயே கலையுள்ளம் படைத்தவர். ஆகவே, உத்யோகப் பொறுப்புகள் ஒருபுற மிருப்பினும் கலை விநோதராகவே காலங்கழித்து வந்தார். சுதந்திரமே இவரது இயற்கையின் ஜீவநாடியாதலால் கல்கத்தாவில் அரசாங்கக் காரியாலயத்தில் வேலை பார்க்கும்பொழுது மேலதிகாரிகளின் கோபத்திற்கு இவர் பலமுறை ஆளாக நேரிட்டது. ஆங்கிலேயர்களை இவர் வணங்க மறுத்ததால் இவருக்குக் கிடைத்திருக்கவேண்டிய பெரிய பதவிகள் ஒன்றும் கிடைக்காமற் போயின.

அக்காலத்தில் அனைவரையும் பற்றியிருந்த ஆங்கில மோகம் மட்டும் இவரையும் பிடித்திருந்ததால் பங்கிம் முதன் முதலாக ஆங்கிலத்திலேயே எழுதவாரம்பித்தார். இவர் எழுதிய முதல் இங்லிஷ் நாவல் "ராஜமோகனின் மனைவி" கிசோரி சந்திர தத்தர் நடத்திவந்த "இந்தியன் பீல்டு" என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. ஆயினும் கூடிய சீக்கிரமே பங்கிம் பிற பாஷையில் இலக்கியம் இயற்றுவதின் பயனின்மையும் தாய் மொழியைப் போற்ற வேண்டிய தின் அவசியத்தையும் உணர்ந்து வங்காளி பாஷையிலேயே நூல்களை இயற்றத் தொடங்கினார்.

பங்கிம் தாய்மொழியில் எழுதிய முதநூல் "துர்க்கேசநந்தினி" என்ற நவீனம். இப்புத்தகத்தின் பிரசுரத்துடன் வங்க மொழியின் உரை நடையைப் பொறுத்தவரையில் ஒரு புது சகாப்தமே ஆரம்பமாயிற்று. பின்னர் இவ்வாசிரியர் "கபாலகுண்டலா" "மிருநாளினி" ஆகிய இரு நாவல்களை முடித்து, பிரசித்திபெற்ற "விஷ விருக்ஷ"த்தைச் சிருஷ்டித்தார். "வங்க தர்சனம்" என்ற மாதப் பத்திரிகையை ஆரம்பித்து விஞ்ஞான சாஸ்திரம் முதலிய பல அரிய விஷயங்களை எல்லோருக்கும் புரியக்கூடிய எளிய நடையில் எழுதி வந்தார். சந்திரசேகர், கிருஷ்ணகாந்தனின் உயில், தேவீ சௌதுராணி, ஆனந்த மடம், ஸீதாராம், இந்திரா, கமலகாந்தனின் ஆபீஸ், ரஜனி முதலிய அழகிய பல நாவல்களை எழுதியபின் ஜனங்களுக்கு அறிவூட்டும் வகையில் ஒப்புயர்வற்று விளங்கும் தமது சரித்திரக் கதையாகிய "ராஜஸிம்ம"னை எழுதினார்.

இந்திய நாவலாசிரியர்களுக்கிடையே பங்கிம் சந்திரரின் ஸ்தானத்தை நாம் நிச்சயிப்பது இலக்கியத்தின் பல துறைகளில் பிரகாசித்த அவரது மேதையின் ஒரு பகுதியை மட்டுமே காண்பதாகும். ஆயினும் அவர் உலக நாவலாசிரியர்களுக்குள் உன்னத ஸ்தானம் ஒன்றைப் பெற்றிருக்கிறார். இவருடைய நவீனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக பிரசுரிக்கப்பட்டபொழுது, வங்க இலக்கிய உலகம் அவற்றை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து வரவேற்றது. பிற்காலத்தில் அவை ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மேனாட்டு பாஷைகளிலும் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், தமிழ், ஹிந்தி முதலிய இந்திய மொழிகளிலும் ஆர்வத்துடன் மொழி பெயர்க்கப்பட்டன. தமிழில் மொழி பெயர்க்கப்படாத இவரது நாவல் ஒன்றுகூட இல்லை என்றே தோன்றுகிறது. மிகப் பிரசித்திபெற்ற "ஆனந்த மடம்" பல வருஷங்களுக்கு முன்பே பண்டிதர் திருச்சிற்றம்பலம் பிள்ளையினாலும் மஹேசகுமார சர்மாவினாலும் தனித்தனியாக மொழி பெயர்க்கப்பட்டது. ஆங்கிலத்தின் புகழ்பெற்ற நாவலாசிரியரான ஸர். வால்டர் ஸ்காட்டுடனும் இதர பிரபல ஆசிரியர்களுடனும் பங்கிம் சந்திரரை ஒப்பிடுவது வழக்கம். ஆயினும் "ஆங்கில நாவலாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் 'சிறந்து விளங்கியபோதிலும் போக்கியதாம்சங்கள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து நோக்கினால், அவர்களைக் காட்டிலும் பங்கிம் சந்திரரே சிறந்தவர்" என்பது அரவிந்தரின் துணிபு. வாழ்க்கையிலும், அதிர்ஷ்டத்திலும், குணாதிசயங்களிலும் பங்கிமை "ஆங்கில நவீனங்களின் தந்தை" என்று கருதப்படும் ஹென்றி பீல்டிங் (Henry Fielding) குடன் ஒப்பிடுகிறார் அரவிந்தர்.

படிப்பவர்களுக்கு பிரமிப்பை விளைவிக்கக்கூடிய கற்பனா சக்தி, நேர்த்தியான நடை, இதயத்தைப் பிளந்துகாட்டுவது போல் உள்ளக்கிளர்ச்சிகளை வர்ணிக்கும் திறமை, அறிவின் விசாலம், உயிர்பெற்று விளங்கும் சித்திரங்களைப்போன்ற கதா பாத்திரங்கள் ஆகிய இவையே பங்கிம் சந்திரரின் நாவல்களின் சிறந்த அம்சங்கள். உதாரணமாக "ஆனந்த மடத்"தில் வரும் காடுகளின் வர்ணனையும், வங்காளப் பஞ்சத்தில் ஜனங்கள் நரமாமிசம் புசித்த பயங்கரமும், புத்திர கோஷ்டியாரின் வீரச் செயல்களும் நமது மனதை விட்டகலா. இம்மாதிரியான கட்டங்களிலிருந்து நமது மனக்கண்ணின் முன் நிற்கும் தோற்றங்களை அடியுடன் மாற்றி சாந்தியும் பக்தியும் நிரம்பியுள்ள ஒரு அத்தியாயத்தைக் கொண்டு வந்து நிறுத்திவிடுவார். சௌந்தரியம் நிறைந்த காட்சிகளை வர்ணிப்பதில் இவருக்குத் தனிமையான ஓர் ஆனந்தமும் உற்சாகமும் உண்டு. நீரோடைகள் நிறைந்த ஆரணியங்கள், பூர்ணசந்திரனின் உதயம், இனிய கீதங்களைப் பாடும் பக்ஷிகளின் ஒலி, இனிய நாதத்தை எழுப்பும் இசைக்கருவிகளோடு ஒலிக்கும் ஸங்கீதம் முதலிய வர்ணனைகள் இவரது நூல்களில் பலவிடங்களில் வருவதிலிருந்து இவர் இவ்வுலகின் இன்பங்களின்மீது பிரியமுள்ளவரா யிருந்திருக்கவேண்டும் என்று நாம் ஊகிக்கலாம். சம்பாஷணைகள் குறுகியவையாயிருந்தபோதிலும் உணர்ச்சிப் பெருக்குடன் கூடியவையாயிருக்கும். ஆகவே இவரது நவீனங்கள் நாடக ரூபத்தில் அமைக்கப்பெற்று வங்க நாடக மேடைகளில் பல வருஷங்களாக நடிக்கப்பட்டு வந்தன. வங்க தேசத்தில் புகழ்பெற்று விளங்கிய பல உயர்ந்த நடிக, நடிகையர் இவருடைய நாடகங்களின் பாத்திரங்களாக நடித்தே புகழ்பெற்றவர்கள். பிற்காலத்தில் இவருடைய கதைகளிற் பல சினிமாப் படங்களாக எடுக்கப்பட்டன.

வாழ்க்கையின் பல துறைகளின் நுணுக்கமான விவரங்களையும், பல மதங்களின் தத்துவங்களையும், அவற்றின் தாரதம்மியங்களையும், இதிஹாஸ, புராணக் குறிப்புகளையும், ஜயதேவரின் அஷ்டபதி போன்ற கீதங்களையும் இவர் தமது நூல்களில் சகஜமாகக் கையாளுவதிலிருந்து இவரது அறிவின் விசாலம் நமக்குப் புலப்படுகிறது. கிராமிய பாஷையாக இருந்த வங்காளியை வன்மைபொருந்திய இலக்கிய மொழியாக மாற்றிய பெருமை பங்கிமைச் சேர்ந்ததாகும். பண்டிதர்களால் ஏற்படுத்தப்பட்டு, பாஷையின் வளர்ச்சிக்குத் 'தடையாகவிருந்த பலவிதத்தளைகளிலிருந்து வங்க மொழியை இவர் விடுவித்து புதுயுகப் புரட்சியை விவரிக்கவல்ல கருவியாக மாற்றினர்.

தேசத்தின் அதிஷ்டான தேவதையாகிற இந்தியத் தாயை உண்மையான சௌந்தரிய வடிவத்துடன் ஞானக் கண்கொண்டு சித்திரித்து " வந்தேமாதரம் " என்ற தாரக மகா மந்திர கீதத்தின் மூலம் தாய் நாட்டிற்கு அளித்த அவரது ஒப்பற்ற சேவைக்காக பாரத தேசம் இன்னும் அவருக்குத் தலைவணங்குகிறது. தேவமந்திரங்களை உலகிற்கு அளித்த ரிஷிகளின் மரபில் தோன்றி தேசோத்தாரக மந்திரத்தை நமக்கு அளித்த இவரை "ரிஷி பங்கிம் சந்திரர் " என்றே அரவிந்தர் குறிப்பிடுகிறார். இதன் மகிமையை அறியவேண்டுமானல் "ஆனந்த மடத்தில் " பவானந்தர் மகேந்திர சிம்மனுக்குத் தேச பக்தியை விவரிக்கும் கட்டத்தைப் படிக்கவேண்டும்.

" முப்பது கோடிவாய் நின்னிசை முழங்கவும்
அறுபது கோடிதோள் உயர்ந்துனக் காற்றவும்
திறனிலாள் என்றுனை யாவனே செப்புவன்?"
" கோடிகோடி குரல்களொலிக்கவும்
கோடிகோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கி முன்னிற்கவும்
கூடு திண்மை குறைந்தனை யென்பதென்.?"

என்பதே இவ்வற்புத கீதத்தின் அடிப்படையான தததுவம்.

கற்பனைக் கவியாயும் தேசியத்தின் நிர்மாணகர்த்தாவாகவும் விளங்கிய பங்கிம் சந்திரர் இறுதிக் காலத்தில் விரக்திமேலிட்டவராய் வேதாந்தத்தில் ஈடுபட்டு " கிருஷ்ண சரிதம் " " தர்மதத்துவம் " முதலிய நூல்களை இயற்றினர். பகவத்கீதைக்கு உரை எழுதினர். புகழின் எல்லையைக் கண்டு அமரத்துவம் அடைந்தார். இந்தியத் தாய் இவ்வரும் புதல்வனின் மூலம் தன்னுடைய உண்மை வடிவத்தை வெளியிட்டு மகிழ்ந்தாள்.

—★—

அதிசய மனிதன்

கரூர் கி. கோவிந்தராஜன்.

வானத்தி லேயொரு சந்திர கோளத்தை
மாந்தர் படைத்து உருட்டி விட்டார்
கானலைப் போலொத்த வேகத்தி லேசுற்றிக்
காசினி யெங்கும் வலம்வரு மே.

சொர்க்கம் சமைத்த முனிவனைப்போ லொரு
சுந்தர கோளத்தை சோவியத் தார்
தர்க்கத்திற் கேனும் சற்று மிடமின்றி
தான்அமைத்தே வானில் விட்டுவிட்டார்.

இத்தரை மீதினிலேயிந்த நாளினில்
எத்தனை அதிசயம் உண்டு கோலோ?
அத்தனையும் காணப் பாக்கியமும் செய்த
அதிசயமாந்தர்கள் நாமல்லவோ ?

இலக்கியம் வளர?



அகிலன்.

கவிதை

இலக்கிய வகைப் பிரிவுகளில் முதன்மை பெற்ற இந்தத் துறையில் இந்த நூற்றாண்டில் பெருங்காப்பியக் கவிதைகள் தோன்றவில்லை. சிறுசிறு காப்பிய முயற்சிகள் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருக்கின்றன. பாரதியின் 'பாஞ்சாலி சபதத்திற்குப்பின், அதைவிடச் சற்றுப் பெரிய சிறிய (அளவில்) காப்பியத் துணுக்குகள் எழுதப் பெற்றிருக்கின்றன. இவைகளை விரல்விட்டு எண்ணி விடலாம். மிகுதியாகத் தோன்றாமைக்குக் காரணம் ஆதரவுக் குறைவே. பத்திரிகைகள் காப்பிய வளர்ச்சியில் பங்கு கொள்ள முடியாது. புத்தகங்களை வாங்கிப் படிக்கக் கூடியவர்களில் பலர் இன்னும் கவிதை நயம் அறியக் கூடிய நிலைக்கு வளரவில்லை. அண்டையில் உள்ள ஆந்திர நாட்டின் கவிதை ஆர்வத்தைப் பார்க்கும்போது நாம் வெட்கப்படத்தான் வேண்டும்.

சின்னஞ் சிறு கவிதைத் துணுக்குகளுக்கு (Lyrics) எப்போதாவது ஒரு பக்கம்—அரைப் பக்கம் பத்திரிகைகள் ஒதுக்குகின்றன. கவிதை ஒன்றுகூட வெளியிடாத பத்திரிகைகளே மிகுதி. இந்தச் சிறிய முயற்சி எளிதாக இருப்பதால் பலர், குறைந்த ஆதரவிலுங்கூட, கவிதைத் துணுக்குகள் எழுதி வருகிறார்கள். இவர்களில் ஒரு சிலராவது எதிர்காலத்தில் சிறந்த பெருங் கவிதைகள் எழுதக் கூடும்.

கவிதையின் வளர்ச்சி பொதுமக்களையோ, பத்திரிகைகளையோ எதிர்பார்த்துப் பயனில்லையாதலால், அரசாங்கமே இதைத் தனியாகக் கவனிக்க முன்வரவேண்டும். தமிழ்ச் சங்கங்கள், தமிழ் வளர்ச்சிக் கழகம், எழுத்தாளர் சங்கம், இலக்கியக் கழகங்கள் யாவும் சேர்ந்து வளர்க்கவேண்டிய செல்வக் குழந்தை இது.

நாடகம்

இலக்கியம் என்ற தலைப்பின்கீழ் கவிஞர்கள் சிலருடைய பெயர்களையாவது தமிழில் கொடுக்கலாம். நாடக ஆசிரியர்களின் பெயர்களைத் தேடித்தான் பிடிக்க வேண்டும். இந்த நூற்றாண்டில் இலக்கியக் கண்கொண்டு நோக்கக்கூடிய நாடக ஆசிரியர்கள் மிக மிகக் குறைவு. பரிதிமாற் கலைஞரும், சம்பந்த முதலியார் எழுதிய (தழுவல் இல்லாத) சொந்த நாடகங்களுக்குப் பின் ஒரே நீண்ட இருள் தென்படுகிறது. மேடையில் வெற்றிபெற்ற ஒரு சில நாடகங்கள் இருக்கின்றன. அவற்றை மொழி பெயர்த்துப் பிறமொழியாளருக்கு அனுப்பி நாம் பெருமை பாராட்டிக்கொள்ள முடியாது. மேலை நாடுகள் கிடக்கட்டும்; இந்தியாவில் பிற மொழிகள் நாடகங்களில் வளர்ந்த அளவும்கூட நாம் வளரவில்லை.

நகரத்திற்கொரு நாடக அரங்காவது தனியாகக் கட்டப்படவேண்டும். நாடகங்களுக்கும் இலக்கியக் கூட்டங்களுக்கும் பயன்படும் அரங்குகள் தேவை. அத்துடன் கல்வி அறிவு பெற்றவர்கள் நகர்தோறும் தனித்தனி நாடகக் கழகங்கள் அமைத்துக்கொண்டால், அவற்றுக்கான நாடகங்கள் எழுதவேண்டிய தேவையும் ஏற்படும். மற்றப்படி கவிதைக் கலையைப் போலவே புதிய உற்சாகத்துடன் பரிவு காட்டி வளர்க்கப்படவேண்டிய இலக்கியம் இது.

கட்டுரை

சிறு கதைகள் தோன்றுவதற்கு முன்னால் தமிழில் தீவிர வளர்ச்சி பெற்று, பிறகு தீவிரமாக அருகத் தொடங்கிய இலக்கிய வகை இது. இப்போதுகூடத் தமிழில் கட்டுரைகள் வெளிவராமல் இல்லை. மிகக் குறைந்த அளவில் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் வெளிவருகின்றன. அப்படி வரும் கட்டுரைகளிலும் முக்கால் பகுதிக்குமேல் பழந்தமிழ் இலக்கிய விளக்கங்கள். சொந்தமாக எழுதப்பெறும் அறிவியல், விஞ்ஞானம், பிரயாணம், கலைக் கட்டுரைகள் மிக மிகக் குறைவு. மேல் நாடுகளில் எழுத்தாளர்கள் பலர் தங்கள் வாழ்க்கை அனுபவங்களை நேரிடையாகச் சுவைபடச் சொல்லி இலக்கியம் வளர்க்கிறார்கள். தனிப்பட்ட அறிவியல் விஞ்ஞானக் கட்டுரைகளைத் தவிர, வாழ்க்கையை ஊடுருவும் பல அற்புதமான கலைக்கட்டுரைகள் அங்கு தோன்றியிருக்கின்றன. பத்துப் பன்னிரண்டு தமிழ் எழுத்தாளர்கள் இன்றைக்கும் அத்தகைய கட்டுரைகள் எழுதி வருகிறார்கள். ஆனால் பத்து வருடங்களுக்கு முன்பிருந்த ஆதரவுகூட இப்போது அவர்களுக்கு இல்லை.

'சிறு கதையின் உருவம் தேவைக்கு அதிகமாய் வளர்ந்து, கட்டுரையின் இடத்தைப் பத்திரிகைகளில் பிடித்துக் கொண்டது' என்று கூறும் கருத்து சிந்திக்கத்தக்கது. இதை எழுதியவர் கட்டுரையாளர் 'சுகி'.

லூக்காஸ், லிண்டு, லாம்ப் போன்ற மேலைநாட்டுக் கட்டுரை ஆசிரியர்கள் தங்கள் மொழிக்குப் புதுமை இலக்கியம் சேர்த்தவர்கள். நம்மிடமும் அத்தகையோர் இருக்கிறார். விரைவில் மீண்டும் கட்டுரை இலக்கியத்திற்குத் தமிழில் சிறந்த எதிர்காலம் இருப்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன.

சிறந்த சிறுகதைகளுக்கு ஏற்படும் பஞ்சம் இத்தகைய கட்டுரைகளின் வளர்ச்சிக்குத் துணை செய்யும். தவிரவும் கவிதைகளைப் போலவோ, நாடகங்களைப்போலவோ, படிப்பவர்களுக்கு அவ்வளவு தொல்லை கொடுக்கக் கூடிய விஷயமில்லை இது!

சிறுகதை

தமிழ்ப் பத்திரிகைகளின் பக்கங்களை அதிகமாக நிரப்பிக் கொண்டிருக்கும் பெருமையைப் பெற்றிருக்கிறது. நூல்களாக வெளியிடுவதற்குப் பதிப்பகத்தார்கள் தயங்குகிறார்கள். 'பெரும்பாலான கதைகள் இரண்டாவது முறை படிப்பதற்குத் தகுதியற்றவை' என்பதே வெளி

யிட்டாளர்களின் குறை. ஓரளவுக்கு இந்தக் குற்றச்சாட்டிலும் உண்மை உண்டு. பத்திரிகைகளில் வெளிவரும் கதைகளில் நூற்றுக்குப் பத்தாவது நூல்களாக வெளிவரத்தக்க அழுத்தம் பெற்றிருக்கவேண்டும். அந்தப் பத்துக் கதைகளில் ஒன்றாவது பத்தாண்டுகளுக்குப் பின்பும் படித்து வியக்கத்தக்க கலைத்தன்மை படைத்திருக்க வேண்டும். இலக்கியத்தின் மதிப்புப் பெறும் அளவுக்கு இன்றைக்குத் தமிழில் சில கதைகள் கிடைக்கின்றன. பிறமொழிக் கதைகளுடன் ஒப்பிடக்கூடிய கதைகள் நம்மிடம் உண்டு. ஆனாலும் ஆழம் நிறைந்த கதைகள் மிகுதியாகவும், பயனற்ற கதைகள் குறைவாகவும் வெளிவரல் வேண்டும்.

சிறு கதை எழுதுவதைப்பற்றியே பல நூல்கள் தமிழில் வெளிவந்தால் பலனை இருக்கும். யாரும் இது வரையில் முயற்சி செய்யவில்லை. இன்னும் சில நல்ல சிறு கதைகளை எழுதிவிட்டு நானாவது ஒரு நூல் எழுதலாமென்று நினைக்கிறேன்!

நாவல்கள்

சிறுகதைக்கு அடுத்தாற்போல் வளரத் துடிக்கும் இலக்கியம் இது. சிறு கதையின் வளர்ச்சி அளவைக் கூட இது இன்னும் எட்டவில்லை. காரணம், நாவல்கள் எழுதுவதற்கு மிகுந்த அநுபவம், உழைப்பு, பொறுமை இவ்வளவும் வேண்டும். இவ்வளவிற்கும் தக்க பயனும் வேண்டுமல்லவா! வங்கத்திலும், ஹிந்தியிலும் பலசிறந்த நாவல்கள் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன் தோன்றியுள்ளன. இன்றைக்குக் கூடியவரையில் நாமும் அவர்களும் சமமாகவே இருக்கிறோம்! என்றாலும் மேலைநாடுகளில் 17 முதல் 19 நூற்றாண்டுவரை எழுதப்பெற்ற சிறந்த இலக்கியப் படைப்புக்கள் நமக்கு இன்றும் வழிகாட்டிகளாக விளங்குகின்றன. முதல் தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரமும் நமக்கு நாவல் இலக்கணங்களை விளக்கக் கூடியது.

இருபதாவது நூற்றாண்டின் சூழ்நிலை திரைப்படம், வானொலி, தொடர் நாவல் வெளியிடும் பத்திரிகைகள் போன்றதொரு புதிய போக்கில் அமைந்திருப்பதால், பழைய காலத்து மிகப்பெரிய நாவல்களைப்போல் நாம் எழுதவும் முடியாது. அது தேவையும் இல்லை. இலக்கியத் தன்மையின் அழுத்தம் குறையாத நாடகத் தன்மை கொண்ட நாவல்களை உருவாக்குவது நமது கடமை.

இந்தத் துறையிலும் நம்முடைய வளர்ச்சிக்கு அறிகுறிகள் நிறைந்துள்ளன, புத்தகங்களில் மிகுதியாக விற்பனையாவது நாவல்களே. புத்தகம் படிப்பவர்களின் தரம் பத்திரிகை படிப்பவர்களின் தரத்தைவிட வேறுபட்டதென்பதில் ஐயமில்லை. பத்திரிகைகளிலும் நாவல்கள் படிப்போர் மிகுதி. சிறிது சிறிதாகப் புதிய முயற்சிகளை நாம் துணிந்து செய்ய வழி இருக்கிறது.

பொதுவாக

'உரைநடையில் எழுதப்பெறும் காரணத்தாலேயே அது இலக்கியமாகிவிடாது' என்ற தவறான மனப்பான்மை பல தமிழ்ப் புலவர்களிடம இருந்து வருகிறது. செய்யுள் நடையில் எழுதப்பெற்ற ஒவ்வொன்றும் இலக்கியமாகிவிட்டவில்லை அதே போல் உரைநடையில்எழுதப்பெற்றஎல்லாமே இலக்கியமாகி விடப்போவதும் இல்லை. ஆனால் உரை நடை இலக்கியங்கள் பல நான்கு ஐந்து நூற்றாண்டுகளாக மேலை நாடுகளில் நின்றுநிலவி வருகின்றன என்பதையும் தமிழார்வம் கொண்டவர்கள் அறிய வேண்டும். இன்னும் பல ஆண்டுகள் வாழும் தன்மையை அவை பெற்றிருக்கின்றன. ஆகவே நாமும் அந்தத் துறையில் முயற்சி செய்வது தவறில்லை. தவிரவும் உரைநடையின் ஆட்சிக் காலம் இது. எதிர்காலத்தின் இலக்கியத் தராசு இதற்காகவே காத்திருக்கிறதென்று கூடச் சொல்லலாம். ஆகவே 'உரைநடை' என்ற காரணத்திற்காக மட்டும் விண் பழிப்பு வேண்டாம்.

தமிழ் இலக்கியத்தின் தரம் உயர வேண்டுமானால் மத்திய அரசியலார் ஹிந்தி இலக்கிய வளர்ச்சிக்குத் தங்கள் தொகையில் எத்தனை சதவிகிதம் ஒதுக்குகிறார்களோ அவ்வளவு சதவிகிதம் தமிழ் அரசியலாரும் ஒதுக்க வேண்டும். தொகை ஒதுக்கினால் மட்டும் போதாது; அந்தத் தொகை தமிழை விட்டு ஒதுங்கி வேஷதாரிகளிடம் பதுங்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்!

*



விளம்பரம் ஏன்?

ரா. பார்த்தசாரதி.

ஏனென்றால்,

விளம்பரம் லாபம் தரும்!

சமீபத்தில் ஒரு ஸ்தாபனம் தனது சிறிய விளம்பரம் ஒன்று பிரசுரித்தது. அறுபதினாயிரம், எழுபதினாயிரம் என்று பிரதிகள் முறையே வெளியாகிற இரண்டு ஆங்கிலத் தினசரிகளில் அது வெளியாயிற்று.

அறுபதினாயிரம் பிரதிகள் என்றால் குறைந்தது 3லட்சம் வாசகர்கள் என்று கொள்ளவேண்டும். எனவே எழுபதினாயிரம் பிரதிகளுக்கு வாசகர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 50 ஆயிரம். இந்த எண்ணிக்கையை நிர்ணயிப்பதில், தெருக்களிலும், வாசகசாலைகளிலும், ரயிலிலும், பஸ்ஸிலும், இரவல் வாங்கி படிப்பவர்களைச் சேர்க்கவில்லை. குறிப்பிட்ட விளம்பரம் என்னவென்றால், பழைய ஜீப் ஒன்றை ஏமாந்த சோணகரி ஒருவரைக் கண்டுபிடித்து அவர் தலையில் கட்டுவதற்காக, அந்தஜீப் காரில் ஹாரன் ஒன்றைத் தவிர மற்றெல்லாப் பகுதிகளும் சத்தமிடும். அது ஓடியிருக்கும் மைல்களைக் கணக்கிட்டால் செயற்கைச்சந்திரன் 20 நாட்களில் இந்தப் பூமியைச் சுற்றி வந்திருக்கும் தூரத்திற்குக் குறையாது என்பது நிச்சயம். அவ்வளவுதூரம் ஓடிய பிறகும் அதற்கு அயர்வு ஏற்படவில்லை என்பது அதைப் படைத்த பாக்டரிக்கோ பகவானுக்கோதான் வெளிச்சம். விற்கும் ஸ்தாபனத்தின் பெயரை வெளியாக்காமல் தபால் பெட்டி எண்போட்டு விளம்பரம் செய்திருந்தோம்.

அறுபதினாயிரம் பிரதிகள் வெளியாகும் பத்திரிகையைப் படித்தவர்களில் யாரோ ஒருவரிடமிருந்து, ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு விசாரிப்புக் கடிதம் வந்தது. அதில் என்ன கேட்டிருந்தார்கள் தெரியுமா? "ஐயா, தங்கள் விளம்பரத்தைக்கண்டு மகிழ்ச்சி. நாங்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஒரு அனாதாலயம் நடத்தி வருகிறோம். தாங்கள் விளம்பரம் செய்திருக்கும் ஜீப் காரை நன்கொடையாக வழங்கக் கூடுமாயிருந்தால் நலமாயிருக்கும்"என்பதுதான்.

மற்றொரு பெரிய பத்திரிகை இருக்கிறதே அதன் வாசகர்களில் இருவர் கண்களில் அது உறுத்தி விட்டிருந்தது. அவ்விருவரும், அந்த விளம்பரத்தைத் தங்கள் பத்திரிகைக்குக் கொடுக்குமாறு கேட்டு எழுதியிருந்த வேறு இரு பத்திரிகை அலுவலக விளம்பர நிர்வாகிகள் என்று கூறிவிடுகிறேன். விளம்பரத்தில் பலன் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

விளையாட்டு இருக்கட்டும். உண்மையில் விளம்பரத்திற்கு நிச்சயம் பலன் உண்டு. ஆனால் அமெரிக்க அறிஞர் ஆபிரகாம்லிங்கன் கூறியதுபோல, சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம், சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாற்றமுடியாது என்பதுதான் விஷயம். மட்டமான ஜீப் காரை ஏமாந்தவன் தலையில் கட்டவேண்டுமென்று எண்ணி விளம்பரம்செய்கிற வித்தை ஒருநாளும் பலிக்காது. அதற்கு மேலே குறித்தது போலத்தான் பலன் இருக்கும். எந்தச் சரக்கையும் விற்றுத்தரும் மந்திர வித்தையல்ல விளம்பரம். சரக்கின் தரம் நன்றாய் இருக்கவேண்டும், விநியோக ஏற்பாடுகள் வாய்ந்திருக்க வேண்டும். அப்பொழுது நிச்சயமாக விளம்பரம் லாபம் தரும்.

சாதாரணமாக நூற்றுக்குத் தொண்ணூறுபேர், விளம்பரம் செய்யப்பட்ட பொருள்களைத்தான் வாங்கிப் பயன்படுத்துகிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. காலை எழுந்தவுடனே, பிளேடு, சோப்பு, ஆடைகள் மற்றும் ஒவ்வொன்றும் நம்பிக்கையான விளம்பரங்களைக் கொண்டு அறிந்து வாங்கிப் பயன்படுத்தி அனுபவம் பெற்ற பொருள்களாகவே தான் இருக்கும்.

கொஞ்சம் வசதிகள் உள்ளவராயிருந்தால் அலுவலகத்திற்கு அவர் ஏறிச்செல்லும் காரும், நன்கு விளம்பரம் செய்யப்பட்ட ஒன்றாகத்தான் இருக்கும்.

இந்த நிலையில் ஒருவர் வியாபாரியாகவும் இருந்துகொண்டு விளம்பரத்தில் தனக்கு நம்பிக்கை கிடையாதென்று கூறுவாரானால் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிற வித்தை யல்லாமல் வேறென்ன? அல்லது பேதமையாக இருக்கவேண்டும்.

விளம்பரம் உண்மையிலேயே ஒரு சமுதாய உறவு சாதனமாகும். கட்டுப்பாட்டுப் பொருள்களான சிமிண்டு, இரும்பு, உருக்கு, பெட்ரோல் போன்ற தயாரிப்பாளர்கள் பெருவாரியாக விளம்பரம் செய்வதைப் பார்த்தால் இவர்கள் ஏன் பணத்தை இப்படி வாரியிறைக்கிறார்கள் என்றும் கேட்கத் தோன்றும்.

நாட்டின் அடிப்படையான தொழில், பொருளாதார வாணிபப் பொருள் உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கும் இத் தகைய ஸ்தாபனங்கள் தங்கள் உற்பத்தியையும் தங்க ளிடம் வேலை செய்யும் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வுக்குத் தாங்கள் உதவுவதையும், பங்குத் தொகை போட்டிருக்கும் எண்ணற்றவர்களின் லாபத்துக்கு உறுதி யையும் இத்தகைய விளம்பரங்களின் மூலம் அறிவிக்கின் றார்கள். இவ்விளம்பரங்களின் காரணமாகத்தான் பெரிய தொழிற்சாலைகள், ஆலைகள், ஆகியவை மக்களின் நம்பிக் கையாகிய மாபெரும் நன்மையைப்பெற்று அவற்றின் புகழ் மேலும் மேலும் வளர்கிறது.

சாதாரண மக்களுக்கன்றி, வியாபாரிகளுக்கே கிடைப் பது கடினமாயிருக்கும் இத்தகைய அத்தியாவசிய பண்டங் களை விளம்பரம் செய்வது இன்றியமையாததென்றால், அன்றாடம் மக்கள் வாங்கிப் பயன்படுத்துகின்ற சோப்பு, பவுடர், பேனா, பென்சில், ஆடைகள், தளவாடங்கள், நூல் கள், மருந்துகள், விளையாட்டுப் பொம்மைகள் போன்ற எண்ணற்ற பொருள்களுக்கு விளம்பரம் எவ்வளவு முக்கிய மாகுமென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

பல்வேறு இடங்களில் பல்வேறு நபர்கள் அல்லது தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களைப்பற்றிய விளம்பரங்கள், மக்களுக்கு நல்ல சரக்கை சகாயமான விலையில் கிடைக்கச் செய்யும் நல்லதொரு போட்டியாக வும் பயன்படுகிறது.

எனவே மக்களின் கவனத்தில் நல்ல பொருளையும் கிடைக்கும் இடத்தையும், வாங்கும் சக்திகேற்ற விலையை யும், தயாரிக்கும் ஸ்தாபனத்தின் பெயரை மறவாமல் காப்பாற்றிவரும் விளம்பரம் இந்த யுகத்தின் சமூக அடிப் படைக்கு மிகவும் இன்றியமையாத ஒரு சாதனம் என் பதில் தடையுண்டோ? மேலும் விளம்பரக்கலை முன்னு ளிருந்ததுபோன்று இன்றில்லை. தீர சூர என்று படாடோப மான பொருளற்ற வாசகங்களை இன்று காணமுடியாது. இந்த நாளில் விளம்பரம் புரிவதற்கென்றே அதைக் கலை யாகப் பயின்று தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் இருக்கிறார் கள். அவர்கள் தங்களுடைய கலைத் தன்மையையும் தங்கள் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும் ஸ்தாப னங்களின் புகழையும் பேணிக் காத்து வளர்ப்பதில் கருத்துடையவர்கள்.

விளம்பரம் என்பது ஏதோ 'தம்பட்டம் அடிப்பது' போன்ற இழி செயல் அன்று. வர்த்தக விளம்பரப் பணி யில் ஈடுபட்டிருப்போரில் உலகப் புகழ்படைத்த கலைஞர் கள் இருக்கிறார்கள். விளம்பர வாசகங்கள் தயாரிக்க வல்ல சிறந்த எழுத்தாளர்கள் பணிபுரிகிறார்கள்.

விளம்பரக் கலை, வியாபாரத்தை மிகவும் பெருக்கும். ஆனால் பொருள் விற்பனையை அதிகரிப்பது என்பது வியாபாரக் கலையின் மிகச் சிறிய காரியங்களில் ஒன்று தான். ஒரு வர்த்தகத்தின் நாணயத்தையும் புகழையும் ஓங்கச் செய்வதுதான் உண்மையில் விளம்பரத்தின் நிலை யான நோக்கமும், போக்கும்.

திருவள்ளுவர்



—(கே. ஆர். பசுபதி, அறிவாலயம், கருவூர்)—

உவரின் சக்தி நிரம்பிக் கிடத்தலால் கடலுக்கு உவரி என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது.

வட்ட வானத்திலே வெள்ளித் தட்டெனச் சுழலும் சூரிய னிலும், வான வெளியிலே சுழன்ருடும் கோளங்களிலும், உலகிலும், உடலிலும் உவர்ச் சத்தே நிரம்பியுள்ளது. அதுவே வாழ்வளிக்கின்றது. இந்த உண்மையை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகறிய, உலகதிர முழங்கிய உலக நல்லடியார்கள் நல்ல தமிழ் சாற்றியச் சித்தர் பெருமக்களாவர். இதை உறுதிப் படுத்தி உண்மையென ஏற்றுக் கொள்கின்றது இன்றைய விஞ்ஞானவுலகம்.

இந்தக் கதிர் சத்தையே, சூரிய கலேயின் வண்மையையே, காரமென்கின்றனர். இதையே நமதருமைத் தொல்காப்பியர் "கொடி நிலே" என்று சுட்டிக் காட்டு கின்ருர்.

இந்த உவர்ச் சத்தைப் பிரித்து, தண்ணளியுடன், ஔஷதங்களுக்கும், மூலிகைகளுக்கும் உயிரோட்டம் தருகின்ற சந்திரன் அல்லது சந்திரகலேயின் மிச்சத்தையே சாரம் என்று செப்புகின்றது சித்தர் பாடல்கள்.

இந்த உவர்ச் சத்தே இறைவனெனப் பெயரிட்டு வள்ளுவர் அழைக்கின்ருர். இந்த உவர் அல்லது உப்பே விந்துவெனக் கூறுகின்ருர். இதுவே உலகமெனக் கழறுகின்ருர்.

இந்த உண்மைகளேக் கீழ்வரும் ஞான வெட்டிச் செய்யுட்களாலறிக.

" எண்டிசை யெலாம் செனித்த இந்திரியம்
உப்பு மயம்
நின்ற உப்பு வாரியினுல் நீடு உலகமெலாம் உவரே"
என்றும்,

" பச்சை யென்ற வுப்பதும் பார்த்தாலும் தூய
வெள்ளே,
உச்சிதமாய் கொண்டுறுதி உண்ட தொரு உப்பது
காண்,
வைச்ச பொருள் ஆதியெனும் வாரியினுல் ஜெனித்த,
நற்சொரூபமாய் உதிக்கும் சங்கை யிதைக்
காண்கிலரே."

மேலும், இந்த விந்துவையே வாசி எனவும் கூறுவர், இதையே விதி என்று சித்தர்கள் கூறுவர். மதியென்பின் அறிவென்பர்! ஞானப் பாலென்பர்! மதிக்கலேயின், பதினுறு கலேயில், நான்கு கலேயின் மிச்சத்தையே, உண்பதென்பா! இதுவே மதியமுதமென்பர்! விந்தெனும், வாசியை, மதிக் கலேயால் வெல்லுவதை " விதியை மதியால் வெல்லலாம் " என்றும், " மந்திரங் கால், மதி முக்கால் " என்றும் பரிபாஷை பேசுகின்றது. இந்த சூரிய, சந்திர கலேயையே, நாத, விந்தென, காரம், சாரமென, சிவ சக்தியென, அண்டம், பிண்டமென, சரம், அசரமென, ஆணுடல் பெண்ணுடலென, விதி மதியென, அகர உகரமென எட்டுமிரண்டெனச் சாஸ்திரங்கள் கூறும். இதையே கருவூரார் வெண்பா ஓதுகின்றது.

"விட்ட குறையும் விதியும் நமக்குண்டானுல்
எட்டு மிரண்டுமிங்கு வந்தெய்தாதோ—முட்ட
விதியுள்ளாராமாகில் விந்து வசமாம்
மதியுள்ளார்க் குண்டே மணம்."

உப்பும், நீரும் உடலங்கள்! இவையின்றி உயிர்க்கு நலமில்லே. உப்புக் கடல் நீரைப் பிரித்து, உப்பையே மழையாக்கிப் பொழிகின்றது கதிர்! உப்பு மாறி இனிமையாகின்றது. மழையை அமிழ்தம் என்கிருர் செந்நாப்போதார்! அமரத் தன்மையடையச் செய்வதால் அமுரி என்கின்றனர் சித்தர்! அமுரி என்றவுடன் பலர் சிறுநீர் என்று பொருள் கூறுகின்றனர். அறிவாலயம் அதை ஏற்காது! அமுரி என்பின் வாசிப்பால்தான்! மதிப்பாலென்னும் மதியமுதம்! இது நமது உடலே இயக்கும் சக்தி! வளரும் சக்தி!

"பிருதிவியிலிருந்து ஆகாசத்தைப் பார்! ஆகாசத்திலிருந்து எல்லாவற்றையும் பார்" என்பது சட்டை முனிவரின் சட்டம்.

பிருதிவியென்பது உடல்! ஆகாசம் என்பது சகஸ்ராரம்! உடலை உறுதிப்படுத்தி, நிலைபெறச் செய்யும் தலையாய கடமையைச் செய்து, அதே வேளையிலே, அறிவுடன் எல்லா உடல், மூச்சு நிலையை உணர்கவென்பதே கருத்தாகும்!

"இதையே: தூணிலிருந்து துரும்பு: துரும்பிலிருந்து தூண்" என்றும் கூறுகின்றார்!

இந்த அமுரியை, அமிழ்தமென்றும், ஆகாசமென்றும், அதிலுள்ள சிறப்பெனவும் கூறுகின்றார் வள்ளுவர். வான் சிறப்புப் பேசுகின்றார்!

முதல் குறளைப் பார்ப்போம்!
"வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்று உணரற் பாற்று"

உலகமென்பது என்ன? காணும் பொருளே உலகம்! காணாத பொருளல்ல! காணும் பொருளென்ன? உடலுடன் உலவும் உயிர்க்குலங்கள்!

வானமென்னும் வெளியிலிருந்து உற்பத்தி நடக்கின்றதென்பது விஞ்ஞானம்! மெய்ஞானம்! ஆகாசத்திலிருந்தே காற்று பிறக்கின்றது! இது உணர்ச்சி! தேயு என்னும் அக்னிப் பிறக்கின்றது! இது உருவம்! அப்பு என்னும் நீர் பிறக்கின்றது! இது ஒழுக்கு! சாரம்! இதிலிருந்து உடல் தோன்றுகின்றது. உலகு தோன்றுகின்றது. இதுவே பிருதிவி! காணும் பொருள்! நீரின்றி உடல் வாழாது! சூட்சுமதேகமென்பதே நீர்தானென்று மாபாரதம் வரைந்த எழுத்தாளர் வியாசர் கூறுகின்றார்! எல்லாம் ஜலமயமென்றும் அறுதியிட்டுச் சொல்கின்றார். பஞ்சபூதங்களும் ஜலமென்கின்றார்! ஆகாசத்திலிருந்து நீர் ஒழுக, அதனால் உலகம் வாழ்கின்றது என்பது சாமான்யர்களுக்கானக் கருத்தாகும்! 'சித்தர் பரமான உரை, ஆகாச ஸ்தானமான உச்சிக் கண்ணில் நின்று மதியமிர்தம் பொழிவதை உண்டால்உடல் நிலைபெறும். மரணமிலா வாழ்வடையலாம் என்பதாகும்.

"உணரற்பாற்று" என்பதன் மூலம், அமிழ்தம் என்பதை காற்று என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார். ஏனென்றால், ஆகாசத்திலிருந்துப் பிரியும் முதல் பூதம் காற்று! இது உணரக்கூடியது, ஆனால் காணக்கூடியதல்ல என்று எடுத்துக் காட்டியுள்ளது! மதியமுதம் அல்லது அமிழ்தம் என்பது காற்றும்! வாசியாம்!

வானின்று, அமிழ்தமின்று உலகம் வாழாது என்பின் எல்லாம் மரணமடைந்துவிடும் என்பது சொல்லி, அதை வெல்கவென்கிறார் வள்ளுவர்.

மேலும்,

"துப்பார்க்கு துப்பாய துப்பாக்கி துப்பார்க்கு
துப்பாய தூவு மழை"

"துப்பு" என்பின் வலிமை தருவதென்பது பொருள்! வழி காட்டுவதென்றும், வழங்குவதென்றும் பொருள்.

துப்பார்க்கு—வலிமையுடையவர்களான அறிவுடையோர்களுக்கு அல்லது ஆராய்ச்சியாளர்க்கு,

துப்பாய— துணையாகிய;
துப்பாக்கி— உணவாக்கி,
துப்பார்க்கு— உண்டவர்களுக்கு
துப்பாய தூவும்—வல்லமையான சாகாமையைத் தூவும் அல்லது வழங்கும்.
மழை—அமிழ்தமாகும்: காற்றாகும்!

இவ்வாறாக அமுரியின் பெருமையைப் பேசுகிறார். வாசியும், அமுரியும், விந்தும் ஒரு பொருளென, இணைப்பெனக் கருத்தில் வைக்கவேண்டும்.

"கெடுப்பதுவுங் கெட்டார்க்குச் சார்வாய்
மற்றாங்கே எடுப்பதுவு மெல்லா மழை"

விந்து அல்லது வாசி, அல்லது மழை கெட்டால், இழந்தால், உயிருக்கும், உடலுக்கும் கெடுதி! அப்படியே கெட்டுவிட்டாலும், மீண்டும் சார்பாய், துணையாய் நின்று மறுபடி

யும் சாகாநிலையை யடையச் செய்யத் துணைபுரிவது வாசி, விந்து, அமுரி அல்லது அதே மழைதான் என்று மறை பொருளாகும்!

விந்தின், வாசியின், அமுரியின், மழையின் சக்தி குறைந்தால், உடலுக்குச் சிறப்பில்லை; வாழ்வு இல்லை என்பதைக் கீழ்வரும் குறள் உணர்த்துகின்றது!

"சிறப்பொடு பூசனை செல்லாது
வானம் வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

வானம் வறக்குமேல்—வாசி குறைந்தால்; விந்து கெட்டால், காய்ச்சலதிகமானால்;
வானோர்க்குமீண்டு— இந்த உயிர்களுக்கு
சிறப்பொடு பூசனை—சிறப்பும், வணக்கமும்
செல்லாது—நடைபெறாது.

என்ற குறளடிகளின் மூலமாக விந்தின், வாசியின் பெருமையைக் கூறிச் செல்கிறார்!

"தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகில்
வானம் வழங்கா தெனில்",

தானமென்பின் ஈதல்! யாருக்கு? தனக்கு? எதை? மூச்சை! வாசியை! கற்பத்தை!

தவமென்பின் தன்னையறிதல்! வாசி நிலையறிதல்! யோகநிலை நிற்றல்!

இரண்டும் தங்கா!—இரண்டும் நிற்காது! எப்போது? வானம் வழங்காதெனில்! நீர் வாராதெனில்! அதாவது மதியமுதமெனும் மழைப் பெறாவிடின் என்பதே பொருள்!

மேலும்,

"நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

எவருக்கும் நீரென்னும் பானம் தேவை! இதுவின்றி உயிர்க்குலம் நடவாது! அந்த அமுரி வானின்றி அமையாது! "வானின்று" என்பின் "கதிரில்லாமல்" என்பதாகும்! சூரியகலையாம் உவர்சத்தினுடைய அலையினால், உடம்பெனும், பூமி அல்லது பிருதிவி ஊறிக் களிப்படைந்து, உடல் பூராவும் தாரையாக ஒழுகி, சாகாநிலை ஏற்படுவது என்றும், அது சூரிய சக்தியில்லாமல் முடியாது என்றும் சுட்டிக் காட்டுகின்றார்!

இதையேதான்,

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை
விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு"

என்ற குறள் சொல்லுகின்றது!

ஒழுக்கத்து—வாசியை அல்லது விந்தை ஒழுகவிடாத புலனடக்கியோரின்
நீத்தார்— நீறானோர், அதாவது ஒளியானோரின் அல்லது சித்தர்களின்
பெருமை— மகிமையை, மார்க்கத்தையடைய
விழுப்பத்து—பற்றொழித்துவிடவேண்டுமென்பது!
பனுவல்— பெரியோர்களின்வாக்கியம்,
துணிவு— முடிவாகும்,

மேலும்,

"இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றிவ்வுலகு"

இருமை— சூரிய, சந்திர கலைகளின் (பிறப்பிறப்பின்)
வகை தெரிந்து—போக்கு வரவுணர்ந்து,
ஈண்டு— இவ்வுடலில்,
அறம்— யோகநெறி, சாகாக்கலையை
பூண்டார்— ஏற்று நடத்துவோரின்
பெருமை— மகிமையால்
இவ்வுலகம்— உடல் (உலகு)
பிறங்கிற்று— விளங்கியது; (ஒளிபெற்றது) பெருமையுறுகின்றது;

இந்தப் பக்கத்தின் தொடர்ச்சியை 107ஆம் பின்னர் 106னும் பார்க்க.

"வாயு" — மகேசன் - பதினாறுஇதழ் - அல்லது சோடச இதழ் — விசுத்தி அல்ல கழுத்து — கருவெழுத்து "வ"! இதன் கூறு — ஆடல், ஓடல், இருத்தல், நிற்றல், உளத்தல்; அறுகோணம்!

ஆகாசம் அல்லது வானம் — இது ஆக்கினை ஸ்தானம்; புருவமையம்; இரண்டிதழ் - தெய்வம் சதாசிவம்; கருவெழுத்து "ய"! காம, குரோத, லோப, மோக, மத, மார்ச்சரியமாகும்; இந்த ஐம்பூதங்களின் கருவெழுத்துக்களைக் கூட்டிப் படித்தால் "நமசிவய" வெனும் ஐந்தெழுத்துப்படி கிடைக்கின்றது.

இந்த உண்மைகளையே, உயிரெழுத்தின் உவரையே, முற்கூறிய கலை யொளியெனத் தொடங்கும் குறள் உள்ளடக்கி நிற்கின்றது! வள்ளுவரின் கோட்பாடு சாசாக் கல்வியென்பதைக் குறள்களில சிலவற்றை எடுத்துத் தொட்டுக் காட்டப்பட்டுள்ளது, மேலும் ஆராய்வோர் ஆராய்க!

வள்ளுவர் பாலவர்க்கத்தைச் சார்ந்தவர், தலைவர் அகத்தியர்!

"அண்ட பிண்ட நிறைந்து நின்ற வயன் மால் போற்றி
யகண்ட பரிபூரணத்தி னருளைப் போற்றி
மண்டலஞ்சு ழிரவிமதி சுடரைப் போற்றி
மதுரதமி ழோதுமகத் தியனைப் போற்றி
எண்டிசையும் புகழு மெந்தன் குருவைப் போற்றி
யிடைகலை பின்கலை சுழி முனையின் கமலம்போற்றி
குண்டலிக்கு ளமர்ந்தவிநாய கனைப்போற்றி
குகனடியின் தாளிணையைப் போற்றி;

"நிலவு பொழி யிரவிமதி யருளினாலே
நின்றிலங்கி நாத விந்திவிரவிகாப்பு
வலமிடமாய் சூழ்ந்து வருங் காரசாரம்
வழலையெனு மாமது வாணி காப்பு
உலகமதில் கடல் சூழ்ந்த புவனை வாலை
யோங்கார மூல கணபதியே காப்பு
தலமதித சனகாதி ரிஷிகள் பாதஞ்
சடாதார சூக்ஷ்ம சடாதாரங் காப்பாம்"

என்று வள்ளுவர் பாயிரப் பாடல் கூறி முடிப்பாம்! வாழ்க வள்ளுவர் நெறி!

—*—



ஆகாசத்திலிருந்து தோன்றிய பூதங்களின் தன்மையை, சக்தியை உணர்வதே சித்த மார்க்கம் என்ற உண்மையை விளக்குகின்ருர் வள்ளுவர்.

" சுவை ஒளியூ றோசை நாற்ற மென்றைந்தின்
வகைதெரிவான் கட்டே வுலகு "

சுவை = காரம் ; ஒளி = வடிவம் ;

ஊறு = உணர்ச்சி ; ஓசை = ஒலி ;

நாற்றம் = வாசனை ; என்று = எனக் கூறப்பட்ட ;
ஐந்தின் வகையும் ;

வான் கட்டே = ஆகாசத்தின் ; வளியின் வடிவமே என்று

தெரி = அறிந்து கொள் ; என்கிருர். மேலும், முற்கூறிய ஐந்தையும் தெரிந்தால், உலகெனும் உடல் நிலைக்குமெனவும் பொருள்படும். இதையே அவ்வையார்,

" ஓசை பரிசம் உருவம் சுவை நாற்றம்
ஆசைப் படுத்து முலகு " என்கிருர்.

இதுவே, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்பதின் கரு !

முன்பு கூறியதுபோல, "பிருதிவியிலிருந்து ஆகாயத்தைப்பார்; ஆகாசத்திலிருந்து சகலத்தையும் பார்" என்பதையே ராமதேவர் என்னும் சித்தர் "பரை ஞான கேசரி" என்னும் நூலில் கீழ் வருமாறு பாடியுள்ளார் ! இவைகளின் தன்மையை உணர்ந்தவரே லோக குருவாவார் ! இந்த ஐம் பூதங்களின், அவைகளின் கருவின்நிலையைக் கண்டவரையே " குருபதங்கண்டவர் " என்றும், ஜகத்குருவெனவும் அழைக்கிறோம் !

பாடலைப் பார்மின்!

" பாரப்பா பிருதிவியை யறியவேணும்
பண்பான அப்பினிடஞ் சேர வேணும்
கூரப்பா தேய்வுதனைக் காணவேணும்
குறிப்பாக வாய்வுதனைக் கொள்ளவேணும்
நேரப்பா யிது நாலு மறிந்து கொண்டு
நேர்மையுடனுகாசம் புக்க வேணும்
பேரப்பா ஆகாசந் தன்னில் நின்று
பிலமான பிருதிவியைப் பேணிப்பாரே. "

இதே யுண்மைகளை மேலும் விளக்குகிருர் யூகி முனிவர்; ஐந்து பூதங்களுண்மையையும், விரிவையும் ஆராய்ந்து செல்கிருர். அது முற்கூறிய குறளுக்கு விளக்கமான பாங்கிலமைந்துள்ளது காணலாம்!

"நிகழ்ந்த சிர்ப்பிருதிவியு மப்பு தானும்
நேரான தேயுவோடு வாய்வுமாகும்
அகழ்ந்த வாகாயத்தோடு ஐந்துபூதம்
அரிதான பிருதிவி மண்ணுமாகும்
தகழ்ந்த வப்பு சலமாகும் நெருப்பும் தேயு
தாக்கான வாயு காற்றுமாகும்
இகழ்ந்த வாகாயமது சத்தமாகும்;
ஏற்ற பிருதிவி பொன்னிறமதாமே!

மேலும் ராமதேவரின் கருத்துக்களைக் காண்க !

அப்பு அல்லது தண்ணீரின் நிறம் பளிங்கு. அக்னி அல்லது தேயுவின் நிறம் சிவப்பு. வாயுவின் நிறம் கறுப்பு; ஆகாயத்தின் நிறம் கார்மேகப் புகைநிறம் என்றும், பிருதிவியின் நிறம் பொன்னிறமென்று வண்ணங் கூறுகிருர்.

இவற்றிற்குத் தெய்வமும் கூறுகிருர். பிருதிவிக்கு பிரம்மா ! ஆதாரம் சுவாதிஷ்டானம் அல்லது கருவாய்! இதற்கு கருவெழுத்து " ந " ! இந்த பீடத்துக்கு ஆறு இதழ் ! இதன் உடற் கூறு மயிர், நரம்பு, தசை, தோல், எலும்பாம் !

அப்புக்கு விஷ்ணு தெய்வம். பீடம்மணிபூரகம் அல்லது நாபிக்கமலம்! பிறைபோல பத்திதழ்கள்! கருவெழுத்து " ம " ! இதன் உடற்கூறு உதிரமும், சீயும்; மூளையும், மச்சையுமாம்.

" தேயு " — ருத்திரன் - முக்கோண வீடு - பனிரண்டிதழ் — கருவெழத்து " சி " . இதன் பண்பும், கூறும்ஆவது என்னவெனில், ஆகாரமெடுத்தல், துஞ்சல், போகம், பயம், சோம்பலாம்.



ரெட்டியார்

ஜலதரங்கம் நீங்கள் பார்த்திருக்கலாம். கவியரங்கமும் கேட்டிருக்கலாம். உங்களுக்குக் கருத்தரங்கம் ஒன்றை அறிமுகம் செய்துவைக்க எனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புக்காக மிகமிக மகிழ்ச்சியுடன் பூரித்துப் பெருமிதம் அடைகிறேன்.

உலகத்தில் தோன்றிய மேதைகள் உதிர்த்த கருத்து முத்துக்கள் பற்பல. காலம், தேசம், வர்த்தமானம், அனைத்தும் கடந்து கருத்துக்கள் மட்டும் ஒருமைப்பாட்டோடு உலகமெங்கும் சாளரம் திறந்து வைத்திருப்போரின் மன வீட்டில் வந்து குவிகின்ற காட்சியை நான் அனுபவித்துப் பார்த்திருக்கிறேன்.

நான் சிந்திப்பது போலவே உலகமேதைகள் ஒவ்வொருவரும் சிந்தித்திருக்கிறார்கள் என்ற உண்மையை நான் இன்று அறியும்போது அவர்களுக்குப் பின்னால் பிறந்த என் பாக்கியத்தை நினைத்து நினைத்துப் பெருவகையடைகிறேன்.

'ஷா'வைப்போல, மார்க்ஸைப்போல, சாக்ரட்டீஸ் மாதிரி, நான் சிந்திக்கிறேன் என்று சொல்ல எனக்கு இருக்கும் வாய்ப்பு. ஷாவுக்கோ, சாக்ரட்டீஸுக்கோ, மற்ற எவருக்கோ இல்லை. என்னைப்போல் சிந்திப்பதாக "ஷா"வோ, சாக்கிரட்டீஸோ, சொல்லிக்கொள்ள முடியுமா? இதனை நினைத்துப் பார்க்கும்போது எனக்குக் கர்வம் ஏற்படுகிறது. அந்த கர்வத்தோடு கௌரவமாக இந்தக்கருத்தரங்கத்தைத் தொடங்கி வைக்கின்றேன்,

இங்கு, கருத்தாளர் பலர் தங்கள் தங்கள் கருத்தைக் கொண்டுவந்து அரங்கேற்றுவார்கள். அவர்களது பெயரைக் கூறியோ, பெருமைகளைப் பேசியோ என் காலத்தை நீட்டப் போவதில்லை. இங்கு இந்த அரங்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நேரம் கருத்தாளர்களின் பெயர் பட்டியல் படிக்கக்கூடப்போதாது. நேரமிருந்தாலும் இன்னார் இனியார் என்று உங்களுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்துவிட்டால் இந்தக் கருத்து, கருத்தாளரின் சொந்தக் கருத்தா? இரவல் கருத்தா? என்ற சந்தேகம் எழும். அத்துடன் இந்த வாக்கியம் அவருடைய அருள்மொழியா? இவரது பொன்மொழியா? என்ற ஐயப்பாடு கிளம்பி எழுந்து இந்தக் கருத்தரங்கத்தின் கருத்தே சிதைந்துவிடும். இவர்கள் பேச்சை தமிழ்நாட்டுப் பிரசங்கிகளைப் பற்றிய காட்டுக்கூச்சலைப் போல், காதுக்கும், தொண்டைக்கும் இடையூறு செய்வதுமாதிரி.

எனவே கருத்தரங்கத்தில் கலந்துகொள்பவர்களின் பெயரைக்கூறாமல், வரிசை கோர்த்து ஒவ்வொருவராக அழைப்பேன். அவர்கள் வந்து கருத்தைக் கடை விரித்து வைப்பார்கள். கொள்ளுபவர் கொள்ளுங்கள், தள்ளுபவர் தள்ளுங்கள். ஆனால் கேட்டு முடிவு செய்யுங்கள்.

இதோ முதல் கருத்தாளர் வருகிறார். அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்போம். அடுத்த வரிசைக் கிரமமாக கருத்தைக் கேட்டுப்படித்து ரசித்து பரம திருப்தியுடன் திரும்பும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(1)

காதல் என்னும் போதை கணவன் மனைவியரிடை அறுபது வயதுக்கப்பால் உதிக்கின்ற தெளிவு.

(2)

உலகத்தைப் பார்த்துக் சிரிக்கின்றேன். உங்களைப் பார்த்துச் சிரிக்கின்றேன். ஏன் என்னையே பார்த்துச் சிரிக்கின்றேன். உண்மையை உணரும்போது ஏதைப் பார்த்தாலும் சிரிக்கத் தோன்றுகிறது. சிரிக்கத் தெரிந்தவனே சிறந்த ஞானி.

(3)

காசுக்கள் தாருங்கள் என்று கதறியழுதாலும் போதனையைத் தந்து போவென்று கூறும் பிரபல பிரபுக்கள் நிறைந்தது இந்த உலகம்.

(4)

பிறர் சொல்லும் வார்த்தைகளுக்கு, உண்மை, பொய் என்ற மெருகு பூசி, நம்மை அலட்டிக்கொள்வது நம்முடைய பேதைமை.

(5)

தானும் ஒருநாள் சாகப்போகிறவன் என்ற உண்மை அடிக்கடி மறந்து போவதால் தான், மனிதன் கொலைக் காரன் ஆகிறான்,

(6)

பிறரைப் புகழ்ந்து நான் தாழவில்லை. இகழ்ந்து பேசி உயரவில்லை.

(7)

மௌனம் மகா மேதை: வாய் திறந்தால் சுத்தக் கோழை.

(8)

இன்ப துன்பங்களைப் படைப்பவன் என் வரையில் நானேதான்.

(9)

உழைப்பதில் இருக்கும் இன்பம் உண்பதில்கூட இல்லை

(10)

புத்தனுக்கும் போதி நிழல் தந்த ஞானம், பித்தனுக்கும் சித்த நிழலில் சித்தியாகும்.

(11)

உண்மையில் நான் நல்லவன், ஊரைப் பார்த்துக் கெட்டவன்.

(12)

வாழக் கிடைத்த ஒவ்வொரு நிமிடத்தையும் ஆனந்தமாக்கிக் கொள்வது என் கொள்கை.

(13)

பதவிகள் மனிதனை வெளிப்பார்வைக்கு உயர்த்துகின்றன. ஆனால் உள்ளத்திலோ தாழ்த்துகின்றன.

(14)

என்னுடைய சர்வ வல்லமை சந்தேகத்தாலும் கோபத்தாலும் படபடப்பாலும் சிதறிப் போவதால் மனிதப் பிராணியாகி விடுகிறேன்.

(15)

பிறரைப் பகைக்க எனக்கு விருப்பம்தான், என் பகைமையைத் தாங்க வலிவுள்ள மனிதன் இன்னும் பிறக்கவில்லையே!

(16)

பிறர் காட்டும் அன்பைத் தாங்கக்கூட வலியிழந்து நிற்கும் மானிடர்களை நினைக்கும்போது எனக்கு அழுகைதான் வருகிறது.

(17)

மனிதன் நினைத்து மக்களைப் பெறுவதில்லை. வறு முந்தமையாலே மக்கள் பிறக்கிறார்கள்.

(18)

உலகப் படைப்பில் அழகுடையதென்பதெதுவும்இல்லை அழகற்றது அழிந்து போனதால்.

(19)

பசி அழிந்தால் பாவமழியும். பாரின் பகைவன் பசியே. யாகும்.

(20)

உன்னைப் பகைப்பவனைப் பார்த்து பச்சாதாபப்படு அவன் உன் அருமை நண்பன் என்பதை அறிவாய் இனி

முத்து முத்தான கருத்துக்களை உங்கள் முன்பு வைத்து கருத்தரங்கத்தில் கதைத்த கருத்தாளர்களின் பேச்சைக் கேட்டீர்கள்.

இத்தனையும் மாரீசமோ, வாலியமோ அல்ல. பச்சைத் தமிழ்க் கருத்துக்கள், பாங்குடன் கேட்டு மகிழ்ந்த உங்களுக்கும், இங்கு உதிர்ந்த கருத்து முத்துக்களுக்கும், [illegible] சித்த மூளைக்கும் நன்றி.

கருத்தாளர்களுக்கு நன்றி சொல்லவில்லை என்கிறீர்களா? எனக்கு நானே நன்றி சொல்லிக்கொள்ளக் கூடிய ஆள் பஞ்சம் வந்து விடவில்லை. நன்றிகூற நீங்கள் இருக்கும் போது நடுவில் எனக்கென்ன வேலை? வணக்கம் பலவே.. வாழ்க தமிழ், வளர்க கருத்துக்கள், ஓங்குக சிந்தனை.

ஒழிக நிந்தனை.

ஓம், ஓம், ஓம்.



நன்றி

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

ஒரு சாதனையின் முடிவில், முயற்சியின் ஒரு பகுதி முடித்துவிட்டோம் என்ற நிறைவில், உடன் இருந்து உதவிய அனைவர்க்கும் நன்றி கூறுவது நம்முடைய மரபு. இந்த மரபை ஒட்டி நின்று நாம் சாதித்தது என்ன என்பதையும் எண்ணிப் பார்ப்பது நன்று.

வருடா வருடம் எல்லாப் பத்திரிகைகளும் பலருடைய சிந்தனைகளை ஒன்று சேர்த்துக் கலையழகுடன் மலர் என்ற பெயரில் வெளியிட்டு வருகிறார்கள். இந்த மலர்களில், மனித ஜாதியின் சிந்தனைகள், எண்ணங்கள், தாபங்கள், வேதனைகள், பரிசோதனைகள், கனவுகள் அனைத்தும் உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை நமது சித்த வலிமையின் எடுத்துக்காட்டாக நின்று விளங்கும் தன்மையுடையன.

"எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் இங்கு யாவர்க்கு மொன்றெனல் காணீர்" என்ற உண்மையும், அந்த உண்மையை அழகுற எடுத்துக்காட்டி, பல்வேறு பிரிவுகளாக தோற்றத்தில் சித்திரிக்கப்படும் நமது இலக்கிய சித்திகளும் நமது அனுபவத்தின் பிரதிபலிப்பாக விளங்குகின்றன; என்றாலும், இவை அனைத்திலும் ஊடுருவி நிற்கும் உண்மை, "தாழ்ந்தவரை மேம்படச் செய்தல், சாதாரண சுவைக் கருட நிலைக்கு உயர்த்துவது" என்பதன்றி வேறில்லை.

மக்கள் அனைவருக்கும் அறிவிலே ஒரு தெளிவுண்டாக்குவதும், அறிவை வளர்ப்பதும், அத்தனை பேரும் சரிநிகராக வாழ, மனப்பான்மையில் மாறுதல்கள் ஏற்படுத்துவதும் இலக்கியத்தின் குறிக்கோளாக இருக்கிறது.

இந்தக் கட்டுக்கோப்பை இந்த ஆண்டு, மலரில் பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்கள் தங்கள் அனுபவத்தைக்கொண்டு சமைத்த கலைக்கோயிலில் உண்மையைப் பிரதிஷ்டை செய்து, உபயமாக மக்களுக்குக் காட்டியிருக்கிறார்கள்.

இந்தப் படைப்புக்கள் காலத்தால் சிதையாமல் நின்று விளங்கும் வலிமையுடையன என்பதை இனி வருங்காலந்தான் நிர்ணயிக்க வேண்டியிருப்பதால் அதனைப்பற்றிய கவலை படைத்த கலைஞனுக்கோ, நமக்கோ, இல்லை. "சிறியரை மேம்படச்செய்தால் பின்பு தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்" என்ற தெய்வ வாக்கியம் நமக்கு வழி காட்டுகிறது.

விலை உயர்ந்த கருத்துக்களை மலிவுப் பதிப்பில் வெளியிட்டு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் புதிய சமுதாயங்களுக்கு நமது காணிக்கையாக இந்த மலரை வெளியிடுவதில் நமது சாதனை இருக்கிறது.

இந்தப் புனித சேவைக்கு மனமுவந்து ஒத்துழைத்த கலைஞர்களுக்கும் அதனை ஏற்று மகிழும் வாசகர்களுக்கும் உளம் கனிந்த நன்றி.

வாழ்க தமிழ். வளர்க சிந்தனை.

.: .: .: .:

தெய்வ ஒளி

சாத்திரங் களிலே தெய்வம்
தோற்றமுற் றெழுந்த தில்லை
சமயநன் னெறிகள் தம்மில்ச்
சைதன்யம் காண்ப தில்லை
ஆத்திரத் தோடு மக்கள்
அறிவிலா வாதம் கூறி
அதுஇது என்று நாட்டும்
அதனிலோர் பலனும் காணேம்
குழவியின் மழலை தன்னில்க்
குமைவிலா உள்ளந் தன்னில்க்
குணமெனும் குன்றில் ஏறிக்
கோபுரம் போல் உயர்ந்த
எழில்மிகு அன்பில் அந்த
இறையவன் விளங்கக் கண்டே.
எண்ணத்தால் செயலாய் என்றும்
இன்பொருள் கண்டுய் வோமால்!

—ஹா. [illegible] பார்வதி.